# இந்து தருமம்



## 2015

**இந்து மாணவர் சங்கம் 2015 / 2016**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்து தருமம்

## இந்து மாணவர் சங்கம் 2015 / 2016

## பேராதனைப் பல்கலைக்கழகம்



# HINDU DHARMAM - 2015

***Hindu Student's Union - 2015/2016***

***University Of Peradeniya***

**காப்பு**

**முப்புரம் எரிசெய்த அச் சிவன்**

**உறை ரதம் அச்சது**

**பொடி செய்த – அதிதீரனுக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்


| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம் : 2015 |
| இதழாசிரியர்கள் | : | ஸ்ரீ.சரத்பவன் |
| | | பா.பாலினி |
| | | வை.கிருசாந்தி |
| வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம் 2015 / 2016 |
| | | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | | பேராதனை |
| பிரதிகள் | : | 250 |
| பக்கங்கள் | : | 10 (A-J) + xiv + 204 = 230 |
| தாள் | : | 70g/m$^2$ (இந்தோனேசியா) |
| அச்சுப்பதிப்பு | : | தேவி Printers |
| | | 140/1 மானிப்பாய் வீதி, |
| | | யாழ்ப்பாணம் |
| | | 021 300 3030 |

| | | |
|---|---|---|
| *Title* | : | *Hindu Dharmam 2015* |
| *Editors* | : | *S.Sarathbhavan* |
| | | *B.Balinee* |
| | | *V.Kirushanthi* |
| *Published By* | : | *Hindu Student's Union 2015/ 2016* |
| | | *University of Peradeniya* |
| | | *Peradeniya* |
| *Copies* | : | *250* |
| *Pages* | : | *10 (A-J) + xiv + 204 = 230* |
| *Paper* | : | *70g/m$^2$ (Indonesia)* |
| *Printed By* | : | தேவி *Printers* |
| | | *140/1, Manipay Road,* |
| | | *Jaffna* |
| | | *Deviprinters@live.com* |
| | | *021 300 3030* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**பேராதனை உறைந்து பேணி**
**நம்மைக் காப்பதற்கு**
**கூரான வேல் தாங்கும்**
**குறிஞ்சிக் குமரனுக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றில் குடியமர்ந்து

பேராதனைப் பல்கலைக்கழகம்

50

இந்து மாணவர் சங்கம்

1966 - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

பேராதனைக் குன்றின் மீது வீற்றிருக்கும் பழமையும் பெருமையும் வாய்ந்த குறிஞ்சிக்குமரன் திருவருளால் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்து மாணவர் சங்கமானது ஆலய ஆன்மீகச் செயற்பாடுகளை வளர்த்து ஆத்மபலத்தை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்து மாணவர்கள் ஆலயத்திலே சிரமதானம், பூஜை ஒழுங்குகளை செய்தல் போன்ற தொண்டுகளில் கல்வி கற்கும் காலத்திலே இறையர்ப் பணத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இந்து மாணவர் சங்கத்தினரால் ஆற்றப்படுகின்ற பணிகளில் ஒன்று 'இந்து தருமம்' என்ற இந்து மதத்தினதும் வாழ்வின் தரும வழியினதும் முற்போக்கு சிந்தனையை முன் வைக்கும் இவ் நூல் வெளியீடாகும். அந்த வகையில் இவ் வருடமும் ஐம்பத்தொன்பதாவது மலராக இந்நூல் வெளியிடப்படுகிறது. இம்மலர் வாழ்த்தியல், படைப்பியல், ஆய்வியல், செவ்வியியல், மீள்பதிப்பியல் , பதிவியல்,விளம்பரவியல் ஆகிய ஏழு இயல்களை உள்ளடக்கி உள்ளது. இவ்வித ழானது இந்து சமயக் கருத்துக்கள், உண்மைகள் என்பவற்றை பரிமாற்றம் செய்யும் தோணி போலவும் மாணவர்களது எழுத்தாற்றலை வளர்க்கும் ஏணியாகவும் அமையும் என்பது எமது திடமான நம்பிக்கை.

இந்து தருமம் - 59 ஆனது மேலும் ஆலய 50 வருட அடிக்கல் நாட்டிய சிறப்பை தாங்கியதாக அமையப் பெற்றள்ளது *(1966- 2016)*. இது வரை வெளிவந்த இந்து தருமங்களின் நூல் முகப்புக்களை தாங்கியதாக எமது நூல் முகம் காணப்படுவதும் எம் நூலின் சிறப்பாகும். எமது நூலில் இந்து மதத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி மற்றும் பண்டிதை தங்கம்மா அப்பாக் குட்டி இருவரையும் நினைவுகூரும் வகையாய் இதுவரை வெளியான இந்துதரும முதல் பதிப்புக்களில் இருந்த இரண்டு கட்டுரை மீள்பதிப்பு செய்துள்ளோம்.

அத்துடன் இச் சந்தர்ப்பத்தில் எமது முன்னாள் ஆலய பிரதம சிவாச்சாரியார் பா.நித்தியானந்தக்குருக்களை நினைவு கூரும் வகையில் அவரின் நேர்காணலையும், இதுவரை இந்து தருமத்தொகுப்பின் ஆய்வினையும் வெளியிடுவதில் பேருவகை அடைகின்றோம்.

இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு தனிப்பட்ட முறையில் உதவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருள்ளங்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இவ்வி தழுக்கு ஆக்கங்களை அளித்தோரிற்கும் இதழ் அழகுற வெளிவர பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்விதழில் வெளிவந்த ஆக்கங்களுக்கு அதன் ஆக்கத்திற்கு உரியவரே பொறுப்பு.

இவ்விதழ் வழமையான இதழ்களை விட சிறப்புற அமைவதற்காக பல மாற்றங் களை செய்துளோம். அத்துடன் இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை கள் சபையில் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் காலதாமதத்தினால் *ISBN* பதிவாக்கல் எண் எமது நூலில் அச்சிடப்படவில்லை என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்து மாணவர் சங்கத்திற்கான இலட்சினையை இவ்விதழில் முதன்முதலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவ்விதழ் மேலும் வரும் வருடங்களில் சிறப்புற அமைய இதழாசிரியர்களின் சேவை மேலும் தேவை என்பதை தெரிவித்துக் கொண்டு இவ்விதழில் ஏதேனும் குறைகள் காணப்படின் அவற்றை பெருமிதத்துடன் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டு இவ்விதழை குறிஞ்சிக்குமரனின் பாதார விந்தங்களில் சமர்ப் பிக்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

இதழாசிரியர்கள்
**ஸ்ரீ.சரத்பவன்**
**பா.பாலினி**
**வை.கிருசாந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## வாழ்த்தியல்

1. ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி *i*

2. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி *ii*

3. இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய ஆசிச்செய்தி *iii*

4. பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி *v*

5. பெரும் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி *vi*

6. குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின்வாழ்த்துச்செய்தி *vii*

7. யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி *viii*

8. இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து *ix*

## படைப்பியல்

9. சிவலிங்க வழிபாடு 01

10. அர்த்தமுள்ள இந்து மதம் 05

11. யோகாசனமும், நாடிச்சுத்தியும் 10

12. குறிஞ்சிக்குமரன் 15

13. தியானம் 17

14. தீட்சை 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. தைப்பூசம் 22

16. மனித வாழ்வியலில் சைவ சமயம் 24

17. வாழ்வில் தியானம் 27

18. விஞ்ஞானத்தின் மூலம் தொன்மையான இந்துமதம் 30

19. மெய்ஞ்ஞானத்துடன் இணைந்த விஞ்ஞானம் 34

20. கடவுள் வழிபாடு 38

21. இந்து சமயத்தின் தோற்றம் 41

22. இந்துக்களின் பாரம்பரியமும் விஞ்ஞானப் பின்னணியும் 44

23. சைவசமயம் கூறும் நெறிகளைக் கடைப்பிடிப்போம் 48

24. சைவ சமயமும் எமது கலைகளும் 51

25. இந்துக்களின் சிற்பக் கலை 55

26. இந்து மதம் போதிக்கும் விஞ்ஞானம் 57

27. 108ன் சிறப்பு தெரியுமா? 61

28. ஆன்மீக நுண்மதி 63

29. உயிர்களின் பரிணாமத்தை விளக்கும் தசாவதாரம் 65

30. கௌமார நெறியின் தோற்றம் 68

31. சிறப்புமிக்க ஆடிப்பூரம் 70

32. செல்வச் சிறப்பைத் தரும் வரலக்சுமி விரதம் 72

33. மங்கலம் தரும் மகா சிவராத்திரி விரதம் 74

34. முருகப் பெருமானும் வழிபாட்டு சிறப்புகளும் 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. வள்ளுவர் காட்டிய வாழ்க்கைநெறி 78

36. அழகன் முருகன் 82

37. ஆலயங்களும் நாமும் 84

38. குன்றத்து நாயகன் குமரன் 89

39. "சாமி" யார்? 92

40. இந்துமதத்தின் அறிவியல் உண்மைகள் 97

41. இந்து இளைஞரின் பார்வையில் இன்றைய உலகம் 102

42. இருக்கு ஆனால் இல்லை... 105

43. மெய்ஞ்ஞானத்தின் வழியில் விஞ்ஞானம் 109

44. குறிஞ்சியில் உறைந்திடும் குமரனே கடவுள் 113

45. ஓவியம் 115

46. குறிஞ்சிக்குமரா 118

47. விடியலுக்கு ஓர் விடையாய்... 119

48. காத்திடுவாய் முருகா 120

49. குருதிக்கு நன்றி 121

50. Muruga! My Lord! 124

51. கண்டி, பேராதனை அருள்மிகு குறிஞ்சிக் குமரன் திருப்பொன்னூஞ்சல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, மங்களம் முதலியவை 125

## ஆய்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வவுனியாவும் பாரம்பரிய கண்ணகை அம்மன் வழிபாடும் 131

53. வர்ணக்கோட்பாடும் அதன் சமூக விளைவுகளும் 138

54. யாழ்ப்பாண மக்கள் பண்பாட்டில், வல்லிபுர ஆழ்வார் கோயில் 150

55. காலவோட்டமும் இந்து தருமமும் 158

56. பதினோராந் திருமுறையில் விநாயகர் 167

## செவ்வியியல்

57. எமது ஆலய முன்னைநாள் பிரதமகுரு காலஞ் சென்ற சிவஸ்ரீ பா.நித்தியானந்தக் குருக்கள் அவர்களுடன் நேர்காணல் 179

## மீள்பதிப்பியல்

58. ‘தணிகாசலமும் என் கண்ணுற்றதே’ 187

59. சமயமும் சமுதாயமும் 189

## பதிவியல்

60. 2015-2016 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்கம் 199

61. 59 வது செயற்குழுவின் ஆண்டறிக்கை 199

62. இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் 202

63. நன்றியுரை 204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

**"திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவார்தம் கை"**

2016 ம் ஆண்டு இந்து தர்மம் இதழுக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகிறேன். மலை சார்ந்த "குறிஞ்சிக்குமரன் " எனும் நாமத்தோடு கலியுக வரதனாய் அருளாட்சி புரியும் முருகப்பெருமானின் ஆலயத்தில் வருடா வருடம் பல சமய கருத்துக்களையும் , விடயங்களையும் தாங்கி இந்து தர்மம் இதழ் வெளி வருவது காலத்தின் சிறப்பம்சமாகும். பேராதனை பல்கலைகழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார்ந்த மாணவர்களின் கூட்டு உழைப்பும் ,ஈடுபாடும் இவ்விதழ் தொடர்ந்து வெளிவர காரணமாக அமைகின்றது . இவ்வாண்டு இந்து தர்மம் சிறப்பாக வெளிவரவும் அனைவருடைய கைளினூடாக இல்லங்களில் முருக மணம் கமிழவும் குறிஞ்சிக் குமரன் திருவருளோடு நல்லாசிகளையும் , நல்வாழ்த் துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்

**க.வரதராஜசர்மா**
ஆலய பிரதம குரு
குறிஞ்சிக் குமரன் ஆலயம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

அன்புடையீர்,

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர் வருடாந்தம் வெளியிடுகின்ற "இந்து தருமம்" மலர் இம்முறையும் வெளிவருவதனையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலர் வழமைபோல சிறப்பான அறக்கருத்துக்களையும், பயன்தரு ஆக்கங்களையும் தாங்கி வருவது போற்றுதற்குரியது.

சமயம் ஒவ்வொன்றும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டியாக உள்ளது. அந்த வகையில் சமய, கலை, கலாசாரங்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு இளந் தலைமுறையினரிடமே உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை மையமாகக் கொண்டு பல சமய நிகழ்ச்சிகளையும், வெள்ளிக்கிழமை தோறும் பஜனைகளையும் நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே 'இந்து தருமம்' நூல் வெளியீடும் அமைந்துள்ளது. சிந்தனைகளைத் தூண்டும் ஆன்மீக கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கிவரும் இம்மலரை வெளியிட்டு வைக்கும் இந்து மாணவர் சங்கத்தினருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலர் சிறப்புற வெளிவந்து அனைவருக்கும் பய னுள்ளதாக அமைய இறைவன் ஆசீர் வதிப்பாராக.

என்றும் இறவாத இன்ப அன்பு வேண்டும்
சுபமஸ்து

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
2 வது குருமஹா சந்நிதானம்,
நல்லூர். யாழ்ப்பாணம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய ஆசிச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்திலே எழுந்தருளி அருள் பாலிக்கும் குறிஞ்சிக் குமரன் ஆலயத்திலே மகாசிவராத்திரி அன்று 'இந்துதருமம்' என்ற இந்து மதம் தொடர்பான ஆக்கங்களைக் கொண்ட நூல் ஒன்று வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வுற்றேன். மேற்படி நூல் வெளியீடு சீரும், சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் தன் அருளையும், ஆசியையும் வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதோடு என் அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனிமனிதனின் வாழ்க்கையில் விஞ்ஞான, பொருளாதார வளர்ச்சிகளினால் உடலைப் பொறுத்தவரை ஓரளவு சௌகரியங்களைக் கொடுத்திருந்தாலும், உள்ளத் தளவில் அமைதியும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும், நல்லெண்ணங்களையும் மனிதாபிமானத்தையும் கொடுக்கவோ அல்லது வளர்க்கவோ அதனால் வழியேதும் காட்ட முடியவில்லை.

எந்த ஒரு சக்தியையும் புதிதாக உண்டாக்க முடியாது. ஏற்கனவே மனிதனின் மனதில் ஆழத்தில் புதைந்துள்ள சக்தியைத்தான் வேறு ஒருதிசைக்குத் திருப்பி விட முடியும். எனவே நமது கைகளில் ஏற்கனவே உள்ள அந்த மாபெரும் ஆற்றல்களை ஆன்மீகத்தின் மூலமாக மனதில் வலிமைகளைக் கொண்டு ஆக்கபூர்வமான சக்தியாக மாற்ற உதவுவதே மதமாகும்.

அப்படிப்பட்ட வாழ்க்கையை இந்தச் சஞ்சிகை வெளியிடுவதன் மூலம் கொடுக்க முடியும். அப்பணியை மேற்கொண்டுள்ள மாணவர்கள் மென்மேலும் வளரவும், அந்த பணிக்காக உழைத்த அனைவருக்கும் இறைவன் என்றும் உற்ற துணையாக இருந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்ட வேண்டுமென்று வேண்டுகின்றேன்.


இறைபணியில்

**சுவாமி சர்வரூபானந்த**

தலைவர்

இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு - 6




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE OF THE VICE-CHANCELLOR

*It is with great pleasure that I extend my greetings to the Hindu Students' Union on the occasion of releasing its annual publication "Hindu Dharama Book - 59"*

*The Hindu Students Union has a long history of offering various cultural activities for its members, This I consider, a unique opportunity for the members to exchange their views and opinions on matters of mutual interest leading to foster good relations and understanding. I highly value and appreciate the efforts made by the HSU in encouraging its members to show their talents in social and cultural activities which would immensely help them to sharpen their skills.*

*Finally, I congratulate the members of the hindu students. Union for their achievements and wish them every success in their future endeavours,*

**PROF UPUL B.DISSANAGAKA**
VICE-CHANCELLOR
UNIVERSITY OF PERADENIYA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி

இந்து மதம் அனைத்து மதங்களினதும் தாய். கீழைத்தேய மதங்கள் அனைத்தும் இந்து மதத்தின் இனிய குழந்தைகளே. அன்பால் அனைவரையும் அரவணைத்து, அருள் நிறைத்து, ஆன்மீகம் பரப்பி உய்வுக்கு உதவும் உயர் சமயம். இந்து மதத்தின் உயர் தனிச் சிறப்பு அதன் தருமக் கொள்கையே ஆகும். இறைவன் தரும வடிவினன் என்பதை ஆழமாகவும் அழகாகவும் அகலமாகவும் சொல்லி வைத்த மதம் இந்து மதம். ஒவ்வொரு இந்துவினதும் வாழ்வின் நாதமும் ஆதார சுருதியும் தருமமே என்று வரையறுத்த தலையாய சமயம் இந்து மதம். இத்தகைய மதத்தின் அடிப்படைச் சிறப்பான "இந்து தருமம்" எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வருடந்தோறும் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங் குவதற்குக் கிடைத்த வாய்ப்பு இறையருள் கைகூடியுள்ளது.

கல்விச்சூழல் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். "கற்றதனால் ஆய பயன் என் கொல் வால் அறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. கற்றலின் ஆரம்பமும் அந்தமும் கடவுள் வழி பாட்டுடன் தொடர்புடையது. இன்றைய கல்விச் சூழலில் இதனை மறந்து வரும் நிலை காணப்படுகின்றது.

கல்விச் சூழலில் அமைந்த ஆலயத்தில் மாணவர்கள் சரியைத் தொண்டில் ஈடு படுவது குறைவு. அறிவியல் உலகில் ஆன்மீகத்தை நாடுவது குறைவு. கற்பவர்களும் கற்பிப்பவர்களும் ஆலய முன்னேற்றத் திலும் சிறிதளவு நேரத்தைச் செலவு செய்து இறையருளை வரவு வைத்தால் இந்த வையகத்தில் உயரலாம். இதை உணர்ந்து அனைவரும் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

"இந்து தருமம்" இதழ் சிறப்புற வெளிவந்து ஆன்மீக ஒளியையும் அறிவொளி யையும் பரப்ப வேண்டும் என வேண்டுவதோடு இறைவனை இறைஞ்சி இதழாசிரி யர்களுக்கும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**வடிவேல்முருகன் தர்மதாசன்**
பெருந் தலைவர்
இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

குறிஞ்சி மலையில் வள்ளி, தெய்வானை சமேதரராய் வீற்றிருக்கும் குமரனின் பாதங்களைப் போற்றிப் பணிந்து இவ்வாழ்த்துரையைத் தொடங்குகின்றேன். குறிஞ்சிக்குமரன் ஆலயமும் இந்து மாணவர் சங்கமும் பிரிக்கமுடியாத தொழிற்படு அலகுகளாகும். பலத்த கல்விச் சுமையின் மத்தியிலும் இந்து மாணவர்கள் ஆலயத்திற்கு ஆற்றிவரும் சேவை மகத்தானது. ஆலயத்தின் விசேட பூசைக் காலங்களில் எந்தவித தடங்கலும் ஏற்படாமல், பலரும் பாராட்டும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வதில் இந்து மாணவர் சங்க அங்கத்தவர்கள் சளைத்தவர்கள் அல்லர் எனப் பலமுறைகள் எடுத்துக்காட்டியவர்கள். இவர்கள் பதித்த சுவடுகள் வரலாறு கண்டவை.

இவ்வாறு ஆலயத்தின் கருமங்களில் பக்தியுடனும் பணிவுடனும் ஈடுபடும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்து தர்மம் என்றென்றும் தழைத்துநிற்க கோலமயிலில் கொலுவுற்று வீற்றிருக்கும் குமரனின் அருளை வேண்டி பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

**பேராசிரியர் த. சிவானந்தவேள்**
பெரும் பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் பலதரப்பட்ட கற்கை நெறிகளுக்கு மத்தியிலும், ஆன்மீக வழிபாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவது சிறப்புக்குரியதொன்றாகும். இவர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்து தர்மம் சஞ்சிகையை வருடாவருடம் வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய காலகட்டத்தில் இந்து மதத்தை மேலும் வலுவடையச்செய்து, பாது காப்பது இளந்தலைமுறையினரான மாணவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இம்மாணவர்கள் திறம்படச் செய்து வருகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நான் பெரிதும் மனம் மகிழ்வதுடன், இச்சேவையை சமூகத்தின் மத்தியில் எடுத்துச்செல்வதற்கு இந்து மக்கள் தமது ஆதரவையும் ஒத்து ழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாணவர்களின் பணி மேலும் மேலும் தொடர்ந்து, அவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் முன்னேறக் குறிஞ்சிக்குமரனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**பேராசிரியர் வை.நந்தகுமார்.**
தலைவர்
பொறுப்பாண்மைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் 'இந்து தருமம்' எனும் மலரை வெளியிடுவதையிட்டு உவகையடைகிறேன்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் இந்து மாணவர்கள் சமயத் தொண்டை ஆற்றுவதற்கும் ஆன்மீகத்தில் நாட்டம் கொள்ளவும் குறிஞ்சிக் குமரன் ஆலயம் அமைந்திருப்பது பெரும் பேறாகும். இறையச்சமும், இறைபக்தியும் ஓர் மனிதனின் வாழ்வை நெறிப்படுத்த இன்றியமையாதவை . ஒழுக்கமும், ஆன்மீக நாட்டமும் கொண்ட கல்விமான்களையே சமூகம் வேண்டி நிற்கிறது. இவர்களே நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கிறார்கள். இவ் இலக்கை எய்த குறிஞ் சிக்குமரன் பேராதனையைப் பல்கலைக்கழகத்தில் குடிகொண்டிருப்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும் காலங்காலமாக இங்கு பயிலவரும் இந்து மாணவர்கள் இவ் ஆலயத்தை சிறப்பாக பரிபாலித்து வருவது பாராட்டுவதற்குரியது. அதன் ஓர் அங்கமாக இம் மலர் வெளியீடு இடம்பெறுகிறது. பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் இம் மாணவர்களை சீரிய முறையில் வழிகாட்டி ஒத்துழைப்பும் ஊக்கமும் அளித்து வருவது பெருமைக்குரியது. தனித்துவம் மிக்க இக் குறிஞ்சிக்குமரன் ஆல யம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலைமதிப்பற்ற சொத்தாகும் . குமரனின் பெயரால் வெளிவரும் இம்மலர் தாங்கிவரும் கட்டுரைகளும் கவிதைகளும் எல் லோரையும் சென்றடைய குமரனைப் பிரார்த்திக்கிறேன்.

**ந.தெய்வேந்திரராஜா,**

வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

(பழைய மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து

மலையும் மலை சார்ந்த இடமாகிய கண்டி மாநாகரின் ஹந்தானை மலைச்சாரலில் குன்றின் உச்சியிலிருந்து அருள்பாலிக்கும் குறிஞ்சிக்குமரனைப் பணிந்து இந்த குறிஞ்சிக் குமரன் ஆலயம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இந்து மாணவர்களின் வழிபாட்டுக்குரிய இடமாக விளங்குகிறது. இவ் ஆலயத்தை பேரா தனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமும் சிறப்பாக நெறிப்படுத்தி வருகின் றனர். இவற்றில் இந்து மாணவர் சங்கமானது ஆலயத்தின் பெரும்பாலன தொண்டு களில் செயலாற்றிவருகிறது. எமது 59 வது இந்து மாணவர் சங்கத்தின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டமையானது குறிஞ்சிக்குமரனின் பேரருளாகவே கருதுகி றேன். நான் எனது பல்கலைக்கழக வாழ்வில் குறிஞ்சிக்குமரனுக்கு தொண்டு செய்தமை யானது எனது வாழ்வின் பெரும் பேறாகும் எமது இந்து மாணவர் சங்கமானது முன்பு இருந்ததைவிட ஆலயத்தின் சில முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபட் டமை குறிப்பிடதக்கது.

தற்காலச் சூழலில் மாறிவரும் சமூக கலாசார விழுமியங்கள் காரணமாக ஆல யத்திற்குச் செல்லும் பண்பு அருகி வருகிறது. இது நமது பல்கலைக்கழக மாணவரி டையே காணப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வெள்ளிக்கிழமைகள் மற்றும் விசேட நாட்களிலாவது குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு வருகை தந்து கூட்டுப் பிரார்த்தனைகள் மற்றும் ஆல யச் செயற்பாடுகளில் கலந்துகொள்வது முக்கியத்துவமான ஒன்றாகும்.

எமது 59 வது இந்து மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளை சிறப்பாக செய்வதற்கு எமக்கு பெரிதும் உதவி புரிந்த ஆலயபிரதமகுரு , பொறுப்பான்மைக்குழு, இந்துப் பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் எனது மனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. இதனைவிட எனது எல்லாச் செயற்பாடுகளும் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தோளோடு தோள் நின்ற எமது செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் எனது உள்ளம் பெரும் உவகை அடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது செயற்பட்டு வரும் 60 வது இந்து மாணவர் சங்கமானது எமது சங்கச் செயற்பாடுகளை மேலும் முன்னேற்றகரமாக செயற்படுத்தி ஆலயத்தின் முன்னேற் றத்திற்கு பங்களிக்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன். இந்து மாணவர் சங்க மானது. வருடாந்தம் மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமாக திகழ்வது " இந்து தருமம்" மலர் வெளியீடாகும். அத்தோடு 59 வது இந்து மாணவர்சங்கத்தின் தலை வராக இருந்து இந்நூலை வெளியிடுவது குறிஞ்சிக்குமரனின் பேரருளாக கருதுகி றேன். இந்நூல் சிறப்புற குறிஞ்சிக்குமரன் பாதர விந்தங்களை பணிந்து வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

***" சரணம் சரணம் சரவணபவ ஓம்***
***சரணம் சரணம் சண்முகா சரணம்"***

**தி.தர்ஷன்**
தலைவர், இந்து மாணவர் சங்கம்
இறுதி வருடம், பொறியியற்பீடம்
பேராதனைப்பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்
# 59 ஆவது செயற்குழு
# 2015/2016

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | திரு.வ.தர்மதாசன் |
| பெரும்பொருளாளர் | : | பேராசிரியர் த.சிவானந்தவேள் |
| கௌரவக்கணக்காய்வாளர் | : | திரு.ந.அகிலன் |
| தலைவர் | : | செல்வன் தி.தர்ஷன் |
| உபதலைவர் | : | செல்வன் செ.தாரங்கன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் ம.அர்ச்சயன் |
| | | செல்வன் இ.நிதர்சன் |
| இளம்பொருளாளர் | : | செல்வன் வீ.கஜரூபன் |
| இதழாசிரியர் | : | செல்வன் ஸ்ரீ.சரத்பவன் |
| | | செல்வி வை.கிருசாந்தி |
| | | செல்வி பா.பாலினி |
| நூலகர் | : | செல்வன் சி.சிவராம் |
| பண்டக முகாமையாளர் | : | செல்வன் தே.பிரசன்னா |
| | | செல்வன் த.கஜன் |
| நிர்வாக அலுவலர்கள் | : | செல்வன் பு.டிசாந் |
| | | செல்வன் செ.சுவேதரன் |
| | | செல்வன் ம.அனுஜன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இணைப்பாளர் | : | செல்வன் ந.பார்த்திபன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் தி.கோபிராஜ் |
| | | செல்வன் த.தர்ஷிகன் |
| | | செல்வன் தே.தேலக்ஷன் |
| | | செல்வன் ப.சுஜீந்திரன் |
| | | செல்வன் ச.மருதராஜன் |
| | | செல்வன் கு.யசோதரன் |
| | | செல்வன் மு.கதிர்காமத்தம்பி |
| | | செல்வன் நா.சுஜீவன் |
| | | செல்வன் யோ.ஸ்ரீபிரணவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்
# 60 ஆவது செயற்குழு
# 2016/2017

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன் த.வெங்கடேஷ்வரன் |
| உபதலைவர் | : | செல்வன் ஸ்ரீ.சுஜீந்திரன் |
| இணை செயலாளர்கள் | : | செல்வன் கு.கீர்த்தனன் |
| | | செல்வன் கு.கஜானனன் |
| இளம் பொருளாளர் | : | செல்வன் ப.கௌஷிகேஷன் |
| நூலகர் | : | செல்வன் க.தனுஷன் |
| இதழாசிரியர் | : | செல்வன் ச.சந்தோஷன் |
| | | செல்வி பா.ஆரணி |
| | | செல்வி செ.சாருஜா |
| பண்டக முகாமையாளர் | : | செல்வன் ஆ.றோய்பானுசந்தர் |
| | | செல்வன் சி.துளஜிகன் |
| இணைப்பாளர் | : | செல்வன் ம.பிரசாந் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் தி.வசீகரன் |
| | | செல்வன் ஞானக்குமரன் |
| | | செல்வன் துவாரகன் |
| | | செல்வன் சயந்தன் |
| | | செல்வன் சிறிகாந் |
| | | செல்வி தயாளினி |
| | | செல்வன் ரகுகரன் |
| | | செல்வன் சசிகாந் |
| | | செல்வன் கௌரிசங்கர் |
| நிர்வாக அலுவலர் | : | செல்வன் க.கேதீஸ்வரன் |
| | | செல்வன் ஜெ.யனுசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலயம்
# பொறுப்பாண்மைக் குழு
# 2015/2016

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பேராசிரியர் வை.நந்தகுமார் |
| பொதுச் செயலாளர் | : | இரா. மகேஸ்வரன் |
| நிர்வாக செயலாளர் | : | பேராசிரியர் த.சிவானந்தவேள் |
| பொருளாளர் | : | திரு.வ.தர்மதாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | பேராசிரியர் செ.சிவயோகநாதன் |
| | | பேராசிரியர் வ.மகேஸ்வரன் |
| | | திரு.ச.விஜயச்சந்திரன் |
| | | திரு.து.சிவசுப்பிரமணியம் |
| | | திரு.அ.அரியரத்தினம் |
| | | திரு.வ.கதிர்காமநாதன் |
| | | செல்வன் தி.தர்ஷன் |
| | | செல்வன் ம.அர்ச்சயன் |
| | | செல்வன் வீ.கஜரூபன் |
| | | செல்வன் த.வெங்கடேஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் அழகிய தோற்றம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவலிங்க வழிபாடு

**கமலநாதன் சாய்ஸ்கந்தன்**
விலங்கு மருத்துவ விஞ்ஞான பீடம்.

உலகின் மிகத் தொன்மையான மதம் சைவம் என்பது வெளிப்படையான உண்மையாகும். வரலாற்றாசிரியர்களின் ஆய்வுகள் இதற்கு சான்றாகும். இத்தகைய சிறப்பைக் கொண்ட சைவத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாடு சிவலிங்க வழிபாடாகும். சைவமத வழிபாடுகளில் மிக எளிமையான வழிபாடு சிவலிங்க வழிபாடு என்றால் அது மிகையாகாது. ஒரு பிடி மண்ணை எடுத்து லிங்கம் போல் செய்து வழிபடக் கூடியளவுக்கு எளிமையான வழிபாடு இதுவாகும். சிவலிங்க வழிபாடு உலகின் அனைத்து மதங்களுக்கும் தோற்றுவாயாக அமைந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் சிலரின் கருத்தாகும். அத்துடன் உலகத்தின் தோற்றத்தைக் குறிக்கின்ற வகையில் அதன் அமைப்பு அமைந்திருக்கின்றது. சைவசமயம் ஆனது சிவபெருமான், பிரம்மா, நாராயணர் என பல இறைவர்களை வழிபடும் மதம் என்கின்ற மாயையை உடைத்து அனைத்தையும் தன்னுள் அடக்கி சிவலிங்கம் அமையப்பெற்றிருக்கின்றது. அத்துடன் சைவ சமயத்தின் தொன்மையை நிரூபிக்க அதிகளவு பயன்பட்ட சான்றுப் பொருள் சிவலிங்கமாகும். அத்தகைய பெரும் செல்வாக்கை பண்டைய காலத்தில் அது கொண்டிருந்தது. சிவலிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டினால் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்; என்பது ஐதீகம். அதற்குச்சான்றாக பல வரலாற்றுக் கதைகள் உண்டு.

### சிவலிங்க அமைப்பு

சிவலிங்கம் ஆனது தம்பம், ஆவுடையார் என இரண்டு பகுதிகளைக் கொண்டது. தம்பம், புருச தத்துவத்தையும் ஆவுடையார் சக்தி தத்துவத்தையும் குறிப்பதாக வேதங்கள் கூறுகின்றன. சிவலிங்க அமைப்பு பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சைவசமயத்தின் கருத்துப்படி லிங்கமானது மூன்று பாகங்களைக் கொண்டது. அடிப்பகுதி பிரம்ம மூர்த்தத்தையும், நடுப்பகுதி நாராயண மூர்த்தத்தையும், மேற்பகுதி சிவமூர்த்தத்தையும் கொண்டு காணப்படுகிறது. ஆகவே இம் மூன்று மூர்த்திகளையும் ஒருங்கே கொண்ட ஒரே ஒரு வழிபாட்டு வடிவம் சிவலிங்கமாகும்.

மேலும் இலிங்கமானது ஆதியும், அந்தமும் இல்லாத ஒரு ஒளிப்பிளம்பான உருவவடிவான வெளிப்பாடாகவும் கருதப்படுகிறது. நாராயணரும், பிரம்மாவும் முறையே அவ் ஒளிப்பிளம்பின் முடியையும், அடியையும் தேடிச் சென்றதாகவும் எனினும் அவர்களால் அடியையும், முடியையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனும் புராணக்கதை உள்ளமை குறிப்பிடத்தக்கது. சிவன் கோவிலில் கருவறையின் பின்புற சுவரில் இலிங்கோற்பவ மூர்த்தத்தில் இக்கருத்து தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இப் பிரபஞ்சமானது சக்தியும், பதார்த்தமும் இணைந்ததால் உருவானது. சைவசமயத்திலுள்ள அர்த்த நாரீசுவர வடிவம் இதை உணர்த்துகிறது. சிவன் பதார்த்தமாகவும், பார்வதி சக்தியாகவும் கொள்ளப்படுகின்றனர். சிவலிங்கத்தில் தம்பம் சிவனையும், ஆவுடையார் சக்தியையும் குறித்து நின்று பிரபஞ்ச தோற்றத்தை வெளிக்காட்டுகிறது எனவும் நாம் கொள்ளலாம். மேலும் இவ்வாறான விளக்கமும் சிவலிங்க வடிவத்திற்கு கொடுக்கப்படுகிறது. அதாவது அருவமான நிலையிலுள்ள இறைவனும், ஆன்மாவும் ஒன்றிணைவதை குறிப்பதாக சிவலிங்கம் அமைந்துள்ளது.

எனினும் சில மேற்கத்தய ஆய்வாளர்களின் கருத்துப்படி சிவலிங்கம் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான புணர்ச்சியை குறிப்பதாக கூறுகின்றனர். அதாவது தம்பம் ஆனது ஆண்குறியையும் ஆவுடையார் யோனி வழியையும் குறிப்பதாக அவர்கள் கூறுகின்றனர். அபிஷேகம் செய்யும் போது தம்பத்தின் மீது ஊற்றப்படும் பால் ஆனது புணர்ச்சியையும் சுக்கில விடுவிப்பையும் காட்டுவதாகவும் கூறுகின்றனர். பண்டைய காலத்து பாரத மக்கள் மரங்களை வழிபட்டது போன்று ஆண் பெண் புணர்ச்சியையும் வழிபட்டதாகவும் இதன் போது தான் சிவலிங்வழிபாடு உருவானதாகவும் கூறுகின்றனர். எனினும் இதன் உண்மைத்தன்மையை அவர்களால் நிறுவமுடியாதுள்ளது. சுவாமிவிவேகானந்தர் இதற்குரிய பதிலை பாரிசு நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் வழங்கியிருந்தார். அதாவது ஆதி அந்தமற்ற ஊழியின் விவரண வடிவமே லிங்கம் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தார். அதற்கு ஆதாரமாக பழமையான அதர்வண வேதத்தில் வரும் ஒரு வாக்கியத்தை அவர் எடுத்துக் காட்டியிருந்தார்.

### சிவலிங்க வழிபாட்டின் தொன்மையும் பரம்பலும்

சிவலிங்க வழிபாட்டின் தொன்மையானது இலங்கையின் வரலாற்றை கற்றாலே வெளிப்படுத்தப்படும் இலங்கையில் விசயனின் வருகைக்கு முன்னரே பஞ்ச ஈச்சரங்கள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பிரதானமாக திருக்கோணேச்சரத்தில் இராவணனால் சிவலிங்கம் வழிபட்டதாக கூறப்படுகின்றது. இத்துடன் இலங்கையின் தென்பகுதியில் தெய்வேந்திர முனையில் கண்டெடுக்கப்பட்ட பண்டைய சிவலிங்கமானது பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான தொண்டேச்சரத்தினுடையது எனக்கருதப்படுகின்றது. பாரதத்தில் சிந்து வெளிநாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட இலிங்கம் அங்கு சிவலிங்க வழிபாடு நடந்ததை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு பல வழிபாட்டாதாரங்கள் சிவலிங்க வழிபாட்டின் தொன்மையை பறைசாற்றுகின்றன. எனினும் இச் சிவலிங்க வழிபாடு இலங்கையிலும், பாரதத்திலும் நின்றுவிடாமல் உலகம் முழுவதும் பரந்து காணப்பட்டது. இந்தோனேசியாவில் யோக்யகாரடா எனும் இடத்தில் சிவலிங்கத்தைக் கொண்ட ஒரு பழைமையான கோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனாவில் உள்ள குவோங்சு எனும் மாநிலத்தில் இவ்வாறான சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் வழிபாட்டிடமாகக் கருதப்படும் கபா என அழைக்கப்படும் மசூதி சவுதிஅரேபியாவில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இது ஒரு சிவன் கோவிலாக இருந்திருக்கலாம் என்றும் பின்னர் முகம்மது சல் அவர்களின் வருகையின் பின்னர் அது மசூதியாக மாறியிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. சிவலிங்கம் தவிர பல உருவங்களை வைத்து அரேபிய மக்கள் வழிபட்டு வந்ததாகவும் பின்னர் முகம்மது சல் அவர்களின் வருகையால் அவர்கள் அனைவரும் மதமாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும் கபாவில் சிவலிங்கம் உள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

### சிவலிங்க வழிபாட்டின் நன்மை

சிவலிங்க வழிபாடு ஏனைய வழிபாடுகளைப் போல் அல்லாமல் விரைவாக அதிகளவு பயன்களைத் தருமென சைவ நூல்கள்கூறுகின்றன. சிவலிங்கவழிபாட்டை எம்மையறியாமல் செய்தாலும் அதற்கு பலன் கிடைக்கும். கண்ணப்ப நாயனாரின் வரலாறு சிவலிங்க வழிபாட்டின் உச்ச நிலையைக் காட்டுகின்றது. மார்க்கண்டேயர்சிவலிங்கத்தைவழிபட்டதால் இயமனை வென்றார். மேலும் இராமாயணத்தில் இராமரும் சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டு சிவனின் ஆசிகளைப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இராவணேஸ்வரன் உலகம் முழுவதையும் தன் ஆளுகைகுள் வைத்திருந்ததாக புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறான சக்தியை பெறுவதற்கு அவன் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டிருந்தான். சிவராத்திரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலிங்கத்தை வழிபட்டால் மேலும் பயன்களைத் தரும். சிவலிங்கத்தை வழிபட வில்வமிலை சிறந்ததாகும். வில்வமிலை சிவனுக்குகந்த அர்ச்சனைப் பொருளாகும் சிவலிங்கத்தை வில்வமிலை கொண்டு பூசிப்பவர்கள் சொர்க்கத்தை அடைவார்கள் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே சிவலிங்க வழிபாடு அனைத்து மக்களுக்கும் நன்மை தரக் கூடியதாகும்.

**"சிவலிங்கம் கண் காது கால் கை**
**எதையும் கொண்டிருக்கவில்லை**
**எனினும் இது தான் புனிதத்தின்**
**அடையாளம்**
**இதுதான் அனைத்திற்கும் அடிப்படை"**

- சத்ய சாயி பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமுள்ள இந்து மதம்

**த.தேலக்ஷன்**
விவசாயபீடம்

இந்து தர்மத்தில் எதுவுமே மூடநம் பிக்கை இல்லை என்பதை பலமுறை பல விளக்கங்களுடன் அறிஞர்கள் விளக்கி இருக்கிறார்கள். அவற்றை நாத்திகர்களாக இருந்தவர்களே பிற்பாடு அனுபவபூர்வ மாக வாழ்ந்து பார்த்து ஒத்துக்கொண்டு பின்னர் முழு ஆத்திகர்களாக மாறியிருக்கி றார்கள். இந்து தர்மம் என்பது வாழ்வி யல் வழிகாட்டு முறையே அன்றி இது ஒரு தனி நபர் ஸ்தாபித்த அடையாள மார்க்கமாக இருக்கவில்லை. இந்து தர்மம் என்பது அறிவியலும் மனோவியலும் சேர்ந் ததே ஆகும்.

இந்தக் கருத்து இன்று அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சி கழகமான நாசா மூல மாகவே நிரூபணம் ஆகியிருக்கிறது. தொலை நோக்கு அறிவியல் கருவிகள் எதுவும் இல் லாமலே சூரியன் உதிக்கும் நேரமும், சந்திரன் மறையும் நேரத்தையும் கூட ஆராய்ந்து சொன்னது இந்து தர்மம். எந்த மதமும் தனிநபர் சொத்தல்ல. வானளாவப் புகழ்வதும், வசை பாடுதலும் நம்பிக்கை யும் தூற்றலும் மனம் சார்ந்த தனி சுதந் திரம். ஆனால் ஒழுக்கம் என்பது யாவ ருக்கும் பொதுவானது.

**“ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்’**
என்கிறார் வள்ளுவர்.

ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பாகும்; அதன் தன்மை யாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப் பிறப்பின் தன்மையாகிவிடும். எனவே எங்கும் எதிலும் ஒழுக்கம் முன்னிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்க வேண்டும். இந்து மதம் எந்த சமய வித்தகரையும் வைத்து தொடங்கப் படவில்லை. நியூட்டன் புவியீர்ப்பு சக்தியைப் பற்றிய விதியினை எப்படி படைக்கவில்லையோ, அப்படித் தான் வேதத்தையும் எவரும் படைக்கவில்லை. வேத உண்மைகள் யாவும் கண்டு கொள்ளப் பட்டவையே தவிர உண்டாக்கப்பட்டவை அல்ல வெளிப்படுத்தப்பட்டவையே தவிர படைக்கப்பட்டவை அல்ல. எனவே அவை தனிநபர் தொடர்பற்றவை. காலத்திற்குட்பட்டு கடந்து போகும் விதிகளைப் போலில்லாமல், வேத உண்மைகள் யாவும் ஆன்மீகத்துறையைச் சார்ந்தவை. அவற்றுக்கு என்றுமுள்ள தன்மையும் (நித்யம்) மதிப்பும் உண்டு. "வேதம்' என்ற சொல்லுக்கு "அறிவு' அல்லது "ஞானம்' என்பது பொருள். வேதங்கள் நான்கு. இவற்றுள் முதலாவது வேதமான ரிக் வேதம் முக்கியமானது. ஏனென்றால் அதன் மந்திரப் பாடல்கள் பலவற்றை மற்றைய வேதங்களுக்கு அது தந்துள்ளது. அதுதான் தொன்மையான தொகுப்பு.

ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளைக் கொண்டது. மந்திரங்கள், பிரமாணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் என்பவையே அவை. மந்திரங்கள் என்பது தெய்வங்களுக்கென்று அமைக்கப்பட்ட துதிப் பாடல்கள். இம்மையிலும், மறுமையிலும் சுபீட்சம் பெறுவதற்கென்று தெய்வங்களிடம் செய்யப்படும் பிரார்த்தனைகள் அவை. பிரம்மாணங்கள் என்பவை யாகங்கள் செய்வதற்கு அனுஷ்டிக்கப்பட வேண்டிய சடங்குகள் பற்றிக் கூறுவது. வேதத்தின் இறுதிப் பகுதிகளான உபநிடதங்கள் (வேதாந்தம்) தத்துவ ஆராய்ச்சிகள் ஆகும். மந்திரங்கள், பிரமாணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் என்று பிரிக்கப் பெற்ற வேதமானது- பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் மனித வாழ்க்கையின் நான்கு நிலைகளுக்கும் பொருந்துமாறு உள்ளது.

வேதத்தில் அடங்கியுள்ளவற்றை வேறு ஒரு வகையாகவும் பிரிக்கலாம்.

- கர்ம காண்டங்கள் அல்லது மத ஆச்சாரங்கள் பற்றியவை.
- உபாசனைக் காண்டம் அல்லது தியானத் திற்குரியவை.
- ஞான காண்டம் அல்லது அறிவு தரும் பகுதி.

மந்திரங்களும் பிரமாணங்களும் கர்ம காண்டத்தைச் சேர்ந்தவை. ஆரண்யங்கள் உபாசனைக் காண்டத்தைச் சேர்ந்தவை. உபநிடதங்கள் ஞான காண்டத்தைச் சேர்ந்தவை. சமயக் கொள்கைகள், வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறும் நூல்கள் ஆகமங்கள் ஆகும். இந்து மதத்தின் முப்பெரும் பிரிவுகளான சைவம், சாக்தம், வைணவம் ஆகியவை ஆகமங்களை அடிப்படையாக அமைத்துக் கொண்டவை. குரு தத்துவம் என்பது மனதில் இருளை நீக்கி ஒளியை ஏற்ற வேண்டும் என்பதே. அவ்வாறு ஒளி ஏற்றினால் கடவுள் நம் மனதில் குடிபுகுந்து விடுவார். நம் மன சுத்தத்தைப் போல் சமூக சுத்தத்தையும் இந்து மதம் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசன இலக்கியம், பாமர இலக்கியம், சடங்கின் வகைகள், வேதகால வேள்விகள், ஆகம வினைமுறைகள், மதச் சடங்குகளோடு கூடிய இறை வழிபாடு, திருவிழாக்கள், மதச் சின்னங்கள், பண்பும் நடத்தையும், கருமம் என்னும் கொள்கைகள், மறுபிறவி பற்றிய கோட்பாடுகள், அறப் பண்புகள், தன்னலமற்ற சேவை மார்க்கம், பக்தி யோகம், ஞான யோகம், நியாயம், வைசேடிகம், சாங்கியம், வேதாந்தம், அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், வைணவத்தின் கோட்பாடுகள், சைவக் கோட்பாடுகள், தத்துவ சிந்தனையின் சிறப்பு, தந்திரங்கள், காணாபத்திய நெறி, கௌமார நெறி, சௌர நெறி, குண்டலி எனும் அனுபூதி நெறி, இன்னும் இவை சார்ந்த உட்பிரிவுகள் என நீண்டதொரு செய்திகளை உள்ளடக்கியதுதான் இந்து மதம்.

ஈச, கேன, கட, பிரசன்ன, முண்டக, மாண்டூக்ய, ஸ்வேதாஸ்வர, மைத்ரீய, சுபால, ஜாபால, பைங்கல, கைவல்ய, வஜ்ரசூசிக, கௌஷீதக, தைத்ரீய, ஐதரேய, சாந்தோக்ய, பிரஹத் என பதினெட்டு உபநிடதங்கள் உள்ளன. இதிலுள்ள தத்துவங்களைக்கற்றாலே மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.

**கடல் போன்றது இந்து மதம். அதிலிருந்து சில எளிய விதிகளைக் காண்போம்.**

- விபூதியை நீரில் குழைத்துப் பூசிக் கொள்ளல் கூடாது. கருமம் சார்ந்தவை செய்யும்போது மட்டும் நீரில் குழைத்துப் பூசிக்கொள்ள வேண்டும்.
- புண்ணிய தீர்த்தங்களில் சென்று நின்றவுடன் காலை நனைப்பது கூடாது. முதலில் தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொண்டபின் காலைக் கழுவலாம்.
- மயானம் சார்ந்த சடங்குகளுக்குச் சென்று வந்தபின் வெந்நீரில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். சோப்பு, ஷாம்பு போன்ற வாசனைப் பொருட்களை உபயோகிக்க கூடாது. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், தலையில் சிறிது தண்ணீரைத் தெளித்தபின் போகலாம்.
- ஆண்கள் தான் பிறந்த நட்சத்திர நாளில் மருந்து உட்கொள்ளல், தாம்பத்தியம், திருமணம், பயணம் புறப்படுதல், எண்ணெய் தேய்த்துக் குளித்தல், புதுத் துணி உடுத்துதல், பெரியவர்களுக்கு திதி கொடுத்தல் போன்றவற்றைச் செய்யக் கூடாது. தலைக்கு எண்ணெய் தேய்த் துக் குளித்தபின் வெளியூர் பயணம் செய்வது கூடாது.
- பெண்கள்தலையில் எண்ணெயை வைத்துக் கொண்டு யாரையும் வழியனுப்பக் கூடாது. கணவன் வெளியூர் சென்றபின் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் தவிர்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட வேண்டும்.

- தெய்வ காரியங்களுக்கு கணவன் முதலில் செல்ல வேண்டும். இறப்பு, தீட்டு சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு மனைவி முதலில் செல்வது நல்லது.

- உரல், அம்மி, உலக்கை, வாயிற்படி, முறம் ஆகியவற்றின்மீது உட்காரக்கூடாது.

- சாப்பாடு, உப்பு, நெய் ஆகியவற்றை கண்டிப்பாக கையால் பரிமாறக்கூடாது. கரண்டியை உபயோகப்படுத்த வேண்டும். சாப்பிடும் போது தவிர மற்ற நேரங்களில் இடது கையால் தண்ணீர் அருந்துதல் கூடாது.

- கணவனின் அனுமதி இல்லாமல் மனைவி தான- தர்மம், விரதம் கடைப்பிடித்தால், கணவனின் ஆயுளில் ஒருநாள் குறையும்.

- குரு, ஜோதிடர், நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி ஆகியோருக்கு ஆபத்து காலத்தில் உதவ வேண்டும் புண்ணியம் பெருகும்.

உலக அல்லது சமூக தர்மம் *(Rules, regulations and laws)* இது தன்னலத்தை மையமாகக் கொண்ட தர்மமாகும். இன மத பேதமின்றி எல்லோருக்கும் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் பொருந்தக்கூடிய தர்மம் இது. இதை வர்ணாசிரம தர்மம் என்று சைவம் கூறும். பலர் நினைத்துக்கொண்டிருப்பதுபோல இது பிறப்பு ரீதியான சாதி பேதங்களைக் குறிப்பதல்ல. வர்ண தர்மம் என்பது அந்தணர் என்னும் புத்திஜீவிகள், க்ஷத்திரியர் என்னும் அரசு மற்றும் படை சார்ந்தோர், வைசியர் என்னும் வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள், சூத்திரர் என்னும் பல்வேறு வகையான தொழிலாளர்கள் ஆகிய சமூகத்தின் நான்கு பெரும் பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்குரிய அடிப்படை கடமைகளையும், தர்மங்களையும் கூறுகின்றது.

உலகில் எந்த நாட்டை அல்லது சமூகத்தை எடுத்துக்கொண்டாலும் இந்த நான்கு பிரிவுகளையும் நீங்கள் அங்கு காணலாம். இது பிறப்பினால் மட்டும் வருவதும் இல்லை. இவற்றுக்குள் ஏற்றத்தாழ்வு காண்பது தவறு. சமூகம் என்னும் வண்டி இயங்குவதற்கு இந்த நான்கு சக்கரங்களும் அவசியம். இவற்றில் எந்த ஒரு பகுதியினரையும் புறக்கணித்தோ அல்லது அழித்தோ எந்த ஒரு சமூகமும் வாழ முடியாது. நாம் விரும்பி முயன்று சமூகத்திலுள்ள எல்லோரையும் புத்திஜீவிகளாகவோ அல்லது அரசாட்சியாளர்களாகவோ அல்லது உற்பத்தியாளர்களாகவோ ஆக்க முயன்றாலும் அதுவும் முடியாத காரியமே. இன்றைய மேற்கத்திய நாடுகளும் இவற்றை அடிப்படையாகக்கொண்டே அரசியல் தஞ்சம் கோருபவர்கள், படித்தவர்கள், முதலீட்டாளர்கள், மற்றும் தொழிற்திறன் வாய்ந்தவர்கள் என்ற பிரிவுகளிலேயே புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடி பெயர்பவர்களை தெரிவு செய்கி றார்கள்.

ஆசிரம தர்மம் என்பது ஒவ்வொரு தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் வரு கின்ற பிரமச்சரியம் என்னும் மாணவப் பருவம், கிருஹஸ்தம் என்னும் குடும்ப வாழ்க்கை, வானப்பிரஸ்தம் என்னும் ஓய்வு வாழ்க்கை, சந்நியாசம் என்னும் ஆன்மீக வாழ்க்கை ஆகிய நான்கு பகுதிகளுக்கும் உரிய அடிப்படைக் கட மைகளையும், தர்மங்களையும் கூறுகின் றது.

ஒருவர் கல்வி கற்கும் மாணவப் பருவத்தில் அவருடைய உணவு, உடை, உறையுள், கல்வித்தேவைகளை அவரது பெற்றோரும், குடும்பமும், சமூகமும் வழங்குகின்றது. இக்காலத்தில் தனது வாழ்வாதாரத்துக்கான அடிப்படைக் கல் வியை முறையாகக் கற்றுத்தேறுவது பிரமச்சரியம் என்னும் மாணவப்பருவத் தினரின் கடமையும் தர்மமுமாகும். இவ்வா றில்லாமல் தான் மற்றவரில் தங்கியிருந் துகொண்டு, தனது கல்வியிலும், பயிற்சி யிலும் கவனம் செலுத்தாதவர்களும், தனது தனிப்பட்ட இன்ப நுகர்ச்சிகளிலும் வசதி களிலும் மூழ்கி இருப்பவரும் சமூகத்தி லும் குடும்பத்திலும் உறிஞ்சி வாழு கின்ற ஒட்டுண்ணியாகவே கருதப்படு வார். இவ்வாறு தானே மற்றவரில் தங்கியிருக்கும் மாணவப்பருவத்தில் காதல் என்றும், குடும்பம் என்றும், பிள்ளைகள் என்றும் வந்தால் இவர் அவர்களைக் காப்பாற்றுவது எப்படி? ஆனபடியால்தான் பிரமச்சரியத்தை அவர்களது தர்மமாக வைத்தது வர்ணாசிரம தர்மம்.

இதே போல இல்லறத்தார் தமது மனைவி பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டும் இது அவர்களுக்குரிய அடிப்படை கிருஹஸ்த ஆசிரம தர்மம்.

இவ்வாறே வானபிரஸ்தத்தில் இளைப் பாறி தனது பொறுப்புகளிலும் கடமைகளி லும் இருந்து விலகி மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்து தான் தனது உடல் மற்றும் ஆன்மீக நலங்களில் கவனம் செலுத்தல் வேண்டும்.

தனது குடும்ப உறவுகளை முற்றாக விடுத்து ஆன்மீக சாதனைகளிலும், பயிற்சி களிலும், ஆராய்ச்சியிலும் முழுநேரப் பணியாக ஈடுபடுதல் சந்நியாச தர்ம மாகும்.

இந்த நான்கு வகையான சமூக தர்மங் களும், நான்கு வகையான தனிமனித தர்மங்களும் தம்மையே மையமாகக் கொண்ட அடிப்படை தர்மங்களாகும். எந்த ஒரு சமூகத்திலும், எந்த ஒரு தனி மனிதனிடத்திலும் இந்த நான்கு பிரிவு கள்தான் உள்ளன. சிந்தித்துப் பார்த்தால் இவற்றிலே நாம் புதிதாக ஒன்றைச் சேர்க்கவும் முடியாது; உள்ளதில் ஒன் றைக் குறைக்கவும் முடியாது. ஆகவே தான் நாம் வர்ணாசிரம தர்மத்தை உலக தர்மம் என்று கூறுகின்றோம். இவற் றைப்பற்றிய தெளிவு இல்லாதபோது தனிமனித வாழ்க்கையிலும், சமூகத்தி லும் குழப்பங்கள் விளைகின்றன.

இந்து தர்மம் எடுத்துரைப்பவை எல் லாம் நல்ல வழிகாட்டல்களே. அதனோடு இணைந்து ஆனந்த வாழ்வைப் பெறு வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யோகாசனமும், நாடிச்சுத்தியும்

**புலேந்திரன் நேசன்**
நான்காம் வருடம்,
மெய்யியல் உளவியல் துறை, கலைப் பீடம்,

*5000* ஆண்டுகளுக்கு முன்பே யோகாசனங்கள் இந்தியாவில் பிரபலமாக இருந்ததென்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்து வந்த சிந்துவெளி நாகரிகமான மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சியின் பயனாக அங்கே வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையில் யோகாசனம் ஒரு முக்கிய அம்சமாக இருந்திருக்கின்றது.

பதஞ்சலி முனிவர்தான் யோக சூத்திரங்களை உலகிற்கு அளித்தவர். ஆதிசேடனின் அவதாரமாகக் கருதப்படுகின்றார். 'யோகா' என்றால் ஆத்ம அனுபவம், சாந்தம், அமைதி, ஒழுக்கம் என்று பொருள் கொள்ளலாம். இறைத் தன்மையை அறிய உதவும் அற்புதமான பயிற்சி தான் யோகாசனமாகும்.

இன்றைக்கு யோகா கலை அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. உலக அளவில் பலதரப்பட்ட நோய்களுக்கும் யோகாசனங்கள் நிவாரணியாக மருத்துவர்கள் பரிந்துரை செய்கின்றார்கள். யோகாசனப் பயிற்சி மனதை அமைதிப்படுத்துகின்றது. மன இறுக்கத்தைப் போக்குகின்றது. நோயின் தாக்கம் கணிசமான அளவிற்குக் குறைகின்றது.

மேலை நாடுகள் யோகாவின் சிறப்பம்சத்தை நன்கு புரிந்து யோகாசனங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலத் தொடங்கியுள்ளன. ஜேர்மனியில் எட்டுப் பேரில் ஒருவர் யோகாசனங்களைச் செய்பவராக இருக்கின்றார்கள். நோர்வே, சுவீடன் உட்பட இன்னும் பல நாடுகளில் மருத்துவமனைகளிலும் உடற்பயிற்சிக் கூடங்களிலும் யோகா பயிற்றுவிக்கப்படுகின்றது.

உடலும் உள்ளமும் யோகாசனத்தில் ஒன்றுபடுத்தப்படுகின்றன. உடலை மாத்திரம் அதாவது கை, கால்களை மாத்திரம் விருப்பம் போல அசைப்பதற்காக அல்ல உடலுடன் உள்ளமும் சேர்ந்து இயங்கச் செய்வது தான் யோகாசனம். அதை வேறு வழிகளில் செல்வதிலிருந்து தடுக்க முடியும். மனதை ஒருநிலைப் படுத்திக் கூறப்படும் முறை கேட்பதற்குச் சுலபமாகத் தோன்றலாம். செயலில் இறங்கும் போது தான் அதனுடைய கஷ்டங் கள் தெரியவரும்.

## யோகாசனங்கள் பழகுவதால் கிடைப்பது என்ன?

1. உயிர்க் கருவிகளான இருதயம், சுவாசப்பைகளை நேராகத் தாக்கி வீரிய நிலையில் வைக்கிறது.

2. இரத்த ஓட்டத்தை சுறுசுறுப்பாக்கி அசுத்தத்தை எளிதாக முற்றிலும் போக்குகிறது.

3. குழலற்ற சதைக்கோள ரசங்களை ஒழுங்கான முறையில் கக்கச் செய்கிறது, இரத்தத்தில் கலக்கச் செய்கிறது.

4. நோய்க் கிருமிகளைக் கொன்று உயிர்ப்பிக்கும் சக்தியை எண்ணற்ற மடங்கு அதிகரிக்கச் செய்கிறது.

5. வளர்ச்சி, ஆண்மை, பெண்மை உன்னதம் பெற உதவுகின்றது.

6. உடலை வனப்புறச் செய்கிறது.

7. ஊளைச் சதை பற்றாது தடுக்கிறது.

8. ஆயுளை அதிகரிக்கச் செய்கிறது.

9. மூளையை அபிவிருத்தி செய்கிறது.

10. நரம்புகள், நரம்பு வலைகள், நரம்புச் சக்கரங்களை விழிப்பித்து வீரியப்படுத்தி நன்கு வேலை செய்யத் தூண்டுகிறது.

11. மனதிற்கு சாந்தி அளிக்கிறது.

12. பிராணனை உடலில் சமாதானமாக இயற்கைக்கு உகந்தவாறு பரவி நினைத்த வேலையைச் செய்யத் தூண்டுகின்றது.

13. சளைக்காது அதிக வேலை, அதிக சிந்தனை செய்ய உதவுகிறது.

14. ஒவ்வொருவரையும் அவரவர் தொழில், வாழ்வில் வெற்றி பெறப் புத்தி சாதுரியத்தை அளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடி சுத்தி

முதலாகத் தொடங்குவதாயின் பத்மாசனத்தில் அமரத் தெரிய வேண்டும். அதனைச் செய்ய முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும். இடது காலை வலது தொடையிலும் வலது காலை இடது தொடையிலும் மாற்றி மாற்றிப் போடவும். கால் இரண்டும் தரையைத் தொட வேண்டும். குதிக் கால்கள் இரண்டும் வயிற்றின் அடிப் பாகத்தைத் தொடும்படி அமைக்கவும். முதுகு எலும்பு நேராக நிமிர்ந்து கம்பீரமாக உட்கார வேண்டும். இரண்டு கைகளையும் சின் முத்திரையுடன் வைத்துக் கண் பார்வையை மூக்கின் நுனியில் செலுத்தவும்.

முதன் முதலாக பழகும் பொழுது சிலருக்கு இலகுவில் வராமல் இருக்கலாம். நாளாக தொடையில் போட்டு வரத் தானாக வந்து விடும். அவசரம் வேண்டாம். ஊக்கம் வாய்ந்த முயற்சி தேவை.

பத்மாசனமிட்டு அமர்ந்து கொள்ளுங்கள். வலது மூக்குத் துவாரத்தை வலதுகைப் பெருவிரலால் அமுக்கி அடைத்து இடது நாசி வழியாக மூச்சை மெதுவாக உள் இழுக்கவும். முழுவதும் மார்பு அகன்று விரிந்தவுடன் வலது மோதிர விரலால் இடது மூக்கை அடைத்து, வலது பெருவிரலை மூக்கிலிருந்து அகற்றி திறக்கப்பட்ட துவாரம் வழியாக மெதுவாக வெளிவிடவும். மூச்சை வெளி விட்டதும் வலது மூக்குத் துளையால் உள்ளிழுக்கவும். முடிந்த வரையில் முழுவதும் மூச்சை உள்ளிழுத்து மார்பில் நிரம்பியவுடன், வலது நாசியை முன் போல் அடைத்து இடது நாசி வழியாக மூச்சை அதிநிதானமாக விடவும். இவ்வாறு இரு நாசிகளுக்கும் மாற்றி மாற்றிச் செய்தவுடன் ஒரு எண்ணிக்கையாகும்.

ஒரு எண்ணிக்கையானவுடன் துன்பமாயிருந்தால் கையைக் கீழே தணித்து, இரு நாசிகளாலும் இயல்பான மூச்சுக்கள் இரண்டு மூன்று இழுத்து விட்ட பிறகு அடுத்த எண்ணிக்கையைத் தொடக்கவும். சக்தி இருப்பின் இவ்வோய்வின்றி முடிந்த எண்ணிக்கையைச் செய்து இயல்பாய் மூச்சிழுத்து விட்ட பிறகு அடுத்த எண்ணிக்கையைத் தொடக்கலாம். இது சாதகனின் உடல் அமைப்பையும் சக்தியையும் பொறுத்தது. ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் கழித்து, இன்னொரு ஐந்து சேர்த்துக் கொள்ளவும். இது போல் சுய புத்தியை உபயோகித்து ஒரு வேளைக்கு இருபது, முப்பது வரைக்கும் செய்யலாம்.

தினமும் காலையில் மட்டும் செய்யலாம். பின் மாலையிலும் பழகலாம். ஒரு நாளைக்கு மூன்று, நான்கு வேளை கூடச் செய்யலாம். எப்பொழுது செய்தாலும் சிற்றுண்டிக்குப் பிறகாய் இருந்தால் இரண்டு மணி நேரத்திற்குப் பிற்பாடும், பெரும் சாப்பாடாயிருந்தால் நான்கு, ஐந்து மணிக்குப் பிறகு செய்வது உசிதம்.

நாடி சுத்தியினால் விளையும் நன்மைகளையும் அதனால் உண்மையில் உடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் என்ன நடைபெறுகின்றது என்பதையும் இங்கே கவனிப்போம்.

நம் உடலில் நிறைய நாடிகள் உள்ளன. இவையே நம் உடலின் அனைத்து இயக்கங்களுக்கும் காரணம். இவற்றில் மிக மிக முக்கியமானது சூரிய மற்றும் சந்திர நாடி. இவை இரண்டுமே நம் நரம்பு மண்டலத்தின் இயக்கத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கின்றன.

நாம் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு உதவும் பரிவு நரம்புத் தொகுதி சரிவர இயங்கச் செய்வது சந்திர நாடி. ஓய்வில்லாமல் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது நல்லதல்ல. சதா சர்வ காலமும் ஓய்வெடுப்பதும் சரியானதல்ல. ஆகவே இங்கு இரண்டு செயற்பாடுகளும் சமமாக நடைபெற வேண்டும். முறையான மூச்சுப் பயிற்சியால் இவை இரண்டையும் சீராக இயங்க வைக்க முடியும்.

### பலன்கள்

அடி வயிற்றுப் பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிகமாகும். நன்றாகப் பசி எடுக்கும். வாத நோய் நீங்கும். உடலுக்குச் சுகத்தையும் மனதிற்கு அமைதியையும் கொடுக்கும். வழிபாடு, ஜபம், தபம், மன ஒருமைப்பாடு இவற்றிற்குச் சிறந்தது.

### பவனமுக்தாசனம்

இதன் பின்னால் கொடுக்கப்பட்ட 45 பவனமுக்தாசனங்கள் ஆண், பெண், வயதானவர், சிறுவர் யாவரும் செய்யக்கூடிய மிக இலகுவான ஆசனமாகும். உடல் முதுமை அடைந்து இறுகுவதைத் தடை செய்யும். பலவீனமானவர்கள், நோயாளிகள், உடல் கனமானவர்கள் யாவரும் செய்யக்கூடிய மிக எளிமையான யோகாசனம். இரத்த அழுத்த நோய்க்கு மிகச் சிறந்த பயிற்சி.

பவனமுக்தாசனம் மனிதனை அமைதிப்படுத்திட ஒரு சிறந்த நல்ல ஆரோக்கிய பாதைக்கு அழைத்துச் செல்லும். யோகாசனத்தைப் பற்றியோ பிறவிரைவு பயிற்சியைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் கூட இப்பயிற்சியை வெகு எளிதாகப் பயிலலாம். பிற கடினமான யோகாசனங்களைப் பழகும் முன்பாக இவ்வாசனத்தைப் பழகுவது மிகவும் நல்லது. பெருவாரியான நோய்களைக் குணப்படுத்தும் சக்தி இவ்வாசனத்திற்கு உண்டு. உடல் முதுமையடைவது தடைப்படும். ஒவ்வொரு ஆசனத்தையும் 2 முதல் 3 முறை செய்தால் போதுமானது.

இவ்வாசனத்தைப் பழகுகின்றவர்கள் ஆரோக்கியமாகவும், தெளிந்த அமைதியான சிந்தனையுடனும், முகப் பொலிவுடனும், எப்போதும் சந்தோஷமாகவும் இருப்பர் என யோக நூல்கள் கூறுகின்றன.

நீரிழிவு, இருதய நோய், ஆஸ்த்துமா போன்ற கொடிய நோயுள்ளவர்களும் இவ்வாசனத்தினால் பயன் அதிகம் அடையலாம். வயோதிபர்களுக்கு ஏற்ற ஆசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் உள்ள அத்தனை நாடி நரம்புகளும் தூண்டப்பட்டு இரத்த ஓட்டம் சீரான நிலையில் இருக்கும் வகையில் இவ்வாசனங்கள் அமையப் பெற்றிருக்கின்றது. இவ்வாசனம் செய்யும் போது உடலின் எல்லாப் பகுதியையும் தளர்ந்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். எப்பகுதியையும் இறுக்கமாக வைக்கக் கூடாது.

**இவ்விளக்கத்தைத் தொடர்ந்து 12 மிக இலகுவான ஆசனங்கள் தரப்படுகின்றன.**

1. அமைதியாக உட்காரவும். *(Sit calmly .)*
2. கால் விரல்களை மட்டும் முன்னே வளைக்கவும். *(Toes forward.)*
3. கால் விரல்களை மட்டும் பின்னே வளைக்கவும். *(Toes backward.)*
4. கால் பாதங்களை மட்டும் முன்னே வளைக்கவும். *(Stretch feet forward.)*
5. கால் பாதங்களை மட்டும் பின்னே வளைக்கவும். *(Bend feet backward.)*
6. வலது காலை இடது தொடை மீது வைத்து பாதத்தை மட்டும் கைகளால் முன்னும் பின்னும் மெதுவாகத் திருகவும். அதே போன்று வலது காலையும் திருகவும். *(Rolling the feet clockwise and anti clockwise.)*
7. கால்களை இடது பக்கமும் வலது பக்கமும் மெதுவாகத் திருப்பவும். *(Roll feet clockwise and anticlockwise.)*
8. இடது காலையும் வலது காலையும் மாறி மாறி மெதுவாக இழுக்கவும் *(Pull out the leg one by one.)*
9. கால்கள் ஒவ்வொன்றையும் மெதுவாக மாறி மாறித் தூக்கி இறக்கவும். *(Stretch out the leg one by one.)*
10. கால்களை அகலமாக விரித்துக் கொண்டு கைகளைப் பக்கவாட்டில் நீட்டி இடது கால் பெரு விரலை வலது கையால் தொடவும். *(Touch the left toe with right hand and viceversa.)*
11. கைகளை நேராக நீட்டி கை விரல்களை பின் பக்கம் வளைக்கவும். *(Extension of fingers.)*
12. விரல்களை இறுக மூடவும். *(Close the fingers.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறிஞ்சிக்குமரன்

**க.கவிப்பிரியா,**
மருத்துவ பீடம்.

வங்கக்கடல் கொஞ்சித் தழுவிவர: பருவப் பெண்களைப் போல் வளைந்து தலைசாய்ந்து நிற்கும் நெற் களனிகளும், தென்னைமரச்சோலைகளும், தேன்கதலித் தோட்டங்களும், அல்லியும் ஆம்பலும், அழகுதாமரையும் எழில் கொஞ்சுகின்ற இலங்கையின் மத்தியபகுதியில் இயற்கை எழிலாடும் கண்டி மாநகரில் தமிழ்மறைபோற்றும் கலியுக தெய்வம் முருகப் பெருமான் பக்த அடியார்களை இரட்சித்துக் காக்கும் பொருட்டு எழுந்தருளியுள்ளார்.

மலையும் மலைசார்ந்த இடமுமான ஹந்தானை எனப்படும் குறிஞ்சி மலையில் வள்ளி,தெய்வானை நாயகிகளுடன் காட்சிதருகின்றார். இவ்வாலயம் கண்டி மாநகர பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களாலும் ,சக ஊழியர்களாலும் நிர்மாணிக்கப்பட்டதுடன் இன்றும் அவர்களால் முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.வருடந் தோறும் நிகழும் விஷேட பண்டிகைகள், விழாக்கள் மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தபட்டு வருகிறது.

இங்கு நந்தி பகவானுடன் அமையப்பெற்ற முருகப்பெருமானின் கருவறையும், வள்ளி,தெய்வானை தாயாரிற்கான கருவறையும், நவக்கிரக நாயகர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு, திங்கள். செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகியோரிற்கான கருவறையும் வேண்டுவதெல்லாம் வாரி வழங்கும் சண்டேசுவரரிற்கான சந்நிதானமும் அமையப் பெற்றுள்ளன.

மனிதன் ஆத்மஞானம் பெறும் பொருட்டு ஆணவம், கன்மம், மாயை எனும் இருள் நீங்கப்பெற்று முத்திநிலை எனும் பிறவிப்பேற்றை பெறும்முகமாக ஆன்மீக சொற்பொழிவுகள், இறைநாட்ட சிந்தனை மற்றும் ஆன்ம ஈடேற்றம் நல்கும் நிகழ்வுகள், விழாக்கள், பற்றற்ற வாழ்வை நல்கும் முருகப்பெருமானின் அடிபற்றி போற்றி எழுதப்பட்ட பஜனைப்பாடல்கள், மற்றும் பஞ்சபுராணம் என்பன முறையாக ஓதப்படுகின்றன.

**" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேராதார்"**

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க யாக்கை எனும் இப்புழுவுடலை நீக்கி இறைவனடி சேரும் புகழுடம்பைப் பெற மனமானது எண்ணி செயலாற்றும் வேளையில் ஆன்மாவை லயப்படுத்தி இறை பற்றை ஏற்படுத்தும் ஆலய தரிசனத்தை பெற்று ஆத்மஞானம் உய்யவேண்டும்.

இதற்கான சிறந்த பாதையை இவ்வாலயம் நல்குவதுடன் முருகப்பெருமானுடைய பாதார விந்தங்களைப் பணிந்து எண்ணிய கருமம் கைகூட வழிசமைக்கின்றது.

**"தங்கமயில் ஏறிவரும் வேலவா**
**நீ தமிழர் வணங்கும் தெய்வமல்லவா**
**சூரர்குலம் அழியவந்த சண்முகா உன்**
**சொந்த இனம்**
**உய்வுற வழிதனைத்தா"**

**உடலும் உயிரும் நீயே முருகா...**
**உடலோடும் உதிரமும் நீயேமுருகா...**
**உறவாகும் நட்பும் நீயேமுருகா...**
**உண்மை உறைவிடமும் நீயேமுருகா...**
**உற்றசுற்றம் நீயேமுருகா...**
**உலகேழும் போற்று நாயகா முருகா...**
**உனைநாடிவந்த எம்மை உய்விப்பாய்**
**முருகா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியானம்

**ச.சஜீவன்**
பல்மருத்துவ பீடம்.

தியானம் என்றால் அமைதி என்று பொருள் பிறக்கும் . அது நம் காதில் விழ தொடங்கிய அழுகை என்ற ஓசையை தொடர்ந்து நம்முடைய அமைதியான வாழ்க்கைப் பயணம் தொடங்குகிறது. 10 மாதங்கள் வயிற்றில் குழந்தையாக இருந்த நாமெல்லோரும் அடுத்து வரும் நாட்களில் அந்த அமைதியை தொலைத்து நின்றிருப்போம்.

தியானம் என்பது உண்மையில் ஒரு மிகப் பெரிய சமுத்திரம் ஒரு பல்கலைக் கழகம் . தியானத்தில் பல படிகள் இருக்கின்றன. பொருளாதார பிரச்சனை, மன அமைதியின்மை , நோய் உள்ளிட்ட பல் வேறு துன்பங்களில் சிக்கிக் கொண்டு வாழும் வழி தெரியாமல் அல்லாடு பவர்களை தியானம் அமைதி என்னும் பிரம்மாண்ட பல்கலைகழகத்தின் வாசலில் கொண்டுபோய் விடும்.

உங்களால் முடியும் நீங்கள் நினைப்பது அத்தனையும் சாதிக்கும் ஆற்றல் உங்களிடம் உள்ளது என்று உறுதி கொள்வோம். அதற்காக தியானம் தான் செய்கின்றோம், இனி எல்லாம் நடந்து விடும் என்ற மனப்பான்மையும் கூடாது. ஆனால் நீங்கள் தான் அதில் நடந்து செல்ல வேண்டும். உங்கள் லட்சியங்களுக்காக நீங்கள் வழக்கமாக செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி ,உழைப்பு அவை அத்தனையும் இருக்கட்டும் அவை விழலுக்கிறைத்த நீராகப் போகாமல் பார்த்தக்கொள்வது தியானத்தின் கைகளில் இருக்கிறது. எனவே தான் தியானம் செய்பவர்களுக்கு அனைத்தும் கை கூடுகிறது.

அரசமரத்தை சுற்றிவந்த உடனே ஞானம் பிறந்ததா என்ற கதையாக ஒரிரு நாட்கள் தியானம் செய்து விட்டு பலனை எதிர்பார்க்கக்கூடாது.தியானத்தின் பலன்கள் தெரிய குறைந்த ஆறு மாதங்களாவது ஆகும். சிலருக்கு ஒரு வருடம் கூட ஆகலாம்.ஆனால் உறு தியான பலன் நிச்சயம் உண்டு. அதை நீங்களே கண்கூடாக உணர்வீர்கள்.

எந்த சூழ்நிலையிலும் தியானத்தை நிறுத்தாதீர்கள்.தினசரி *10-15* நிமிடங்கள் போதும். சாப்பிடுவது, குளிப்பது போன்று அன்றாட கடமைகளில் ஒன்றாக தியானம் ஆகிவிட வேண்டும்.*5* நிமிடத்தில் தொடங்கி *10,15,30* நிமிடம் என்று உங்களால் எவ்வளவு நேரம் தியானத்திற்கு ஒதுக்க முடியுமோ ஒதுக்குங்கள்.கூடுமானவரை ஒரே நேரத்தில் தியானம் செய்வது சிறந்தது. ஆனால் ஒரே நேரம் ஒதுக்கமுடியாதவர்கள் போகப் போக அதாவது ஓரிரு வாரங்கள் கழித்து அதற்கு என்று ஒரு நேரத்தை ஒதுக்குங்கள்.

மனித வாழ்வில் மகத்தான இடத்தை பிடித்துள்ள தியானத்தை மாணவர்கள் சிறந்த முறையில் கைக் கொண்டால் வெற்றி அவர்களுக்கே.

பலர் மனதை வெறுமையாக்கிக் கொள்வதை தியானம் என்று நினைக்கிறார்கள். அப்படி அல்ல ஒரு குறிப்பிட்ட விம்பத்தை, உருவத்தை கடவுளைக் குறித்து நமது சிந்தனையை செலுத்துவதே தியானம்.

1. தியானத்திற்காக ஒரு நாளில் இரண்டு நேரங்களைத் தேர்வு செய்து கொள்ளுங்கள். உங்கள் இஷ்ட தெய்வத்தை எடுத்து கொள்வோம் அது உங்கள்குலதெய்வமாகவோ, உங்களுக்கு பிடித்த தெய்வமாகவோ இருக்கலாம்.

2. வீட்டின் ஒரு இடத்தை தியானத்திற்கு ஒதுக்குங்கள்.

3. அங்கு ஆசனத்தை விரித்து அமரவும் தலை கழுத்து மற்றும் முதுகெலும்பு நேராக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும் கைகள் மடி மீது இருக்கட்டும். கண்களை மூடிக் கொள்ளவும்.

4. சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், மேகங்கள் எதுவும் இல்லாத பரந்த எல்லையற்ற ஆகாயம் மங்கிய ஒளியில் இருப்பதாக கற்பனை செய்யவும். இது உங்கள் உடலையும் உள்ளத்தையும் தளர்வுபடுத்தும்

5. இப்பொழுது உங்கள் உணர்வு மையத்தை இதயத்திற்கு எடுத்து செல்லவும். பன்னிரண்டு இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்கொண்ட சிவப்பு தாமரையை அங்கு கற்பனை செய்யவும் உங்கள் இஷ்ட தெய்வம் அங்கு இருப்பதாக எண்ணவும்.

6. இப்பொழுது இஷ்ட தெய்வத்திடம் மனமுருகி பிரார்த்திக்கவும்.

7. மனம் அங்கும் இங்கும் ஓடினாலும் இழுத்து வந்து தியானிக்கவும் குறைந்த பட்சம் 108 முறையாவது பிராத்திக்கவேண்டும்.

தியானத்தின் நன்மை பல மாணவர்களுக்கு தெரிந்திருந்தாலும், தியானத்தை எப்படி செய்வது என்று தெரியாததும் அதை ஒரு மிகப்பெரிய கடினமான விஷயமாக நினைப்பதாலும், மாணவர் கள் தியானம் பற்றி நினைத்தாலே சோர்ந்து விடுவார்கள்.

உங்களின் மூச்சை நீங்கள் கட்டுப் படுத்திப் பழகவேண்டும். இந்தப் பயிற்சியை நீங்கள் ஒய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் செய்யலாம். இரவு தூங்கும் முன்புகூட செய்யலாம் அதேசமயம், மூச்சுப் பயிற்சியை, சற்று குளிர்ச்சியான வெளிச்சம் குறைந்த இரைச்சலற்ற இடத்தில் செய்வது சிறந்தது. இந்த பயிற்சியில் உங்கள் கவனம் முழுவதும் மூச்சில் தான் இருக்க வேண்டும் . மூச்சு உள்ளே வருவதையும் வெளியேறுவதையும் கவனிக்க வேண்டும்.

பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய்யுங்கள். ஊற்றிலிருந்து நீர் பெருகி வருவது போல் உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும் தீர்வுத்தன்மையும் சக்தியும் பொங்கி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்சை

**ரிசாந்தினி புண்ணியராசா**
மருத்துவ பீடம்.

குரு தன் சீடனுக்குச் செய்யும் அருள் உபகாரம் தீட்சை ஞானத்தை அருளி பாசத்தைப் போக்குவது என்பது இதன் பொருள். சைவர்களுக்கும் தீட்சை பெறுவதே சமயப்பிரவேசம் ஆகும். சமய தீட்சை பெற்றபின்னரே சைவ சமய அனுட்டானங்களை மேற் கொள்ளலாம். இதுவே அடிப்படைத்தீட்சை. யாகம் வளர்த்துத் தீட்சை வைப்பதே முறை.

தீட்சை வைபவத்தின் போது குருவின் அருட் பார்வையாற் சீடன் ஆணவ மலத்தினின்று விடுபடுகிறான். குரு ஆசீர்வதித்துத் திருநீற்றைக் கையிற் கொடுக்கும் போது கெட்ட எண்ணங்கள் நீங்குகின்றன. அவர் தர்ப்பையினால் தீண்டி ஆசீர்வதிக்கும் போது நல்ல எண்ணங்கள் உண்டாகின்றன. அதன் பின் தீட்சை மந்திரத்தை குரு சீடனுக்கு உபதேசித்து அருளுகிறார்.

ஆகவே தீட்சை பெற்றுச் சைவர்களாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக் கோளோடு தான் தீட்சை வைபவங்களை நடாத்துகிறார்கள்.

1. சமய தீட்சை – சரியை மார்க்கம் தொடங்கமுன் செய்யப் பெறுவது. அக்கினி காரியம் செய்து சமய தீட்சை செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விசேஷ தீட்சை - கிரியா மார்க் கத்திற்கு உரியது.

3. நிர்வாண தீட்சை- யோகத்திற்கும் ஞானத்திற்குமுரியது

4. ஸ்பரிஸ தீட்சை- குரு தன் திருக் கரங்களாற் சீடனைத் தொடுவது.

5. நயன தீட்சை - குரு தன் அருட் பார்வையாற் சீடனை நோக்கு வது.

6. மானா தீட்சை - குரு தன் மனத் தால் சீடனது மனத்தைத் தன்வயப்படுத்துவது.

7. வாசக தீட்சை - குரு உபதேசம் நல்ல அருள் வாக்குகளைச் சொல் வது .

8. சாத்திர தீட்சை - குரு, சீடனுக்கு இறைவனோடு சேர வேண்டிய முறைகளைச் சொல்லித் தருவது.

9. யோக தீட்சை - குரு சீடனுக்கு பதி, பசு, பாசத் தொடர்பை உப தேசிப்பது.

10. ஔத்திரி தீட்சை - அக்கினி காரி யத்தோடு செய்து சீடனைத் தூய் மைப் படுத்துவது.

**குறிப்பு:-** இவற்றைக் குருவின் மூலம் அறிந்து கொள்வதே சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைப்பூசம்

**இ.ஜானகி**
மருத்துவபீடம்

சைவமக்களால் சிறப்பாக அனுட்டிக் கப்படும் முருகனுக்கான விரதநாளாக தைப்பூசவிரதம் அமைகின்றது. பஞ்சாங் கம் குறிப்பிடும் 27 நட்சத்திரங்களில் 8 ஆவதாக விளங்குவதே பூசமாகும். இத் தைப்பூசநாளினை இந்துக்கள் புண்ணிய நாளாகக் கருதுகின்றனர்.

தைப்பூசநாளானது பெரும்பாலும் பௌர்ணமியுடன் கூடிய நாளாக இருக் கும். தேவர்களின் குருவாக விளங்கும் பிர கஸ்பதி பூச நட்சத்திரங்களின் அதிபதி யாக விளங்குகிறார். அவர் அறிவின் தேவ தையாகவும் இருப்பதனால் தைப்பூச தினத் தில் விரதமிருந்து அவரை வணங்குவது மிகுந்த பயனை தரும்.

தைப்பூசதினமானது முருகனுக்கு மட்டுமல்லாது நடராஜப்பெருமான் மற் றும் அம்பிகைக்கும் உகந்த நாளாக போற் றப்படுகிறது. இந்நாளானது சிவசக்தி ஐக் கியத்தை காட்டும் நாளாக கருதப்படு கிறது. இது மட்டுமல்லாது தைப்பூச தினம் உலக சிருஷ்டியின் ஆரம்ப நாளா கவும் பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் காணும்படி நடராஜப் பெரு மான் சிவதாண்டவம் ஆடிய நாளாகவும் வாயு வருணன் அக்கினி ஆகிய தேவர் கள் சிவபெருமானின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் குறிப்படப்படுகி றது.

தைப்பூசத்திருநாளில் நடராஜப் பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் சிவகாமி சுந்தரியம்மையோடு ஆனந்த தாண்டவம் நடனமாடுவதாக புராணங்கள் கூறுகின்றன.

தைப்பூசநாளின் சிறப்புப்பற்றி ஆறு முகநாவலர் குறப்பிடுகின்ற போது நட ராஜப்பெருமான் கனகசபையான ஞான சபையிலே உமையம்மையுடன் ஆனந் தத் தாண்டவம் செய்த இத் தைப்பூச திரு நாளிலே அன்று வியாழக்கிழமையும் கூடிவரின் அச்சித்த யோக தினத்திலே ஆயிரம் தோள்களை உடைய வானசுரன் குடமுழா ஞானசபை தன்னிலே சிவ பெருமான் உமையம்மையுடன் ஆனந்த நிருத்தம் செய்தருளினார் என்றார்.

தைப்பூச நன்னாளின் சிறப்புப்பற்றி திருஞான சம்பந்தப் பெருமான் தனது தேவாராப் பாடலில் குறிப்பிடும் போது

**"மைப்பூசும் ஒண்கண் மட நல்லார் மாமயிலைக்**
**கைப்பூசும் நிற்றான் பாலீச்சரம் இமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒன்புழுக்கல் நிழை யார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என்றார்.**

இந் நாளிலே அதிகாலையிலே துயி லெழும்பி புனித நீராடி ஆசாரத்துடன் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். காலை உணவை விடுத்து நண்பகல் வேளையிலே புது நெல்லரிசிச்சாதம் உட்கொள்ள வேண்டும்.

இந் நன்நாளிலே விரதம் அனுட்டித்து புண்ணிய நதிகளிலே நீராடினால் பாவம் நீங்கி மிகுந்த நற்பயன் கிட்டும் என் பார்கள்.

தைப்பூச நன்னாளிலே அத்தினத் தினை விசேட நாளாகக் கொண்டு ஏடு தொடக்குதல், புதிரெடுத்தல், புதி துண் ணல், பெண்குழந்தைகளுக்கு காது குத் துதல் போன்ற நற்காரியங்களில் சைவ மக்கள் ஈடுபடுகின்றனர்.

இத்தினம் முருகன் ஆலயங்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரு கின்றமை சிறப்பம்சமாகும். இத்தினத் தில் விரதம் அனுட்டிப்பதனூடாக இம்மை மறுமை இன்பங்களை பெற்று உய்யலாம். தைப்பூசதினத்தினை புண் ணிய தினமாகக் கொண்டு விரதமிருந்து எம்பெருமானாகிய இறை பரம் பொருளினை வணங்கி வாழ்வின் சுகங் களை பெற்றுக்கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வாழ்வியலில் சைவ சமயம்

**த.ஆரணி**
பல்மருத்துவ பீடம்.

உலகத்தில் ஓராயிரம் மதங்கள் உண்டு அவ் மதங்களுள் தலயாய மதம் நம் இந்து மதமாகும். இது ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியான சிவனை முழு முதற்கடவுளாக கொண்டுள்ளது. சமயமானது மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. சைவசமய வாழ்வியல் காட்டும் ஒழுக்கம்என்று உலகத்தவர்களால் ஒப்புயர்வற்றதாகப் போற்றப்படுகின்றது "காலையில் எழுவோம் கடவுளைத் தொழுவோம்" எனப் பள்ளிப் பிள்ளைகள் தொட்டு வழிகாட்டும் நம் சைவசமயம் மனிதனின் ஒவ்வொரு பழக்க வழக்கங்கள் வாயிலாகவும் உயர்ந்த விழுமியங்களைப் போதிக்கின்றது. மனிதர்கள் சமூகங்களில் கூடிவாழும் போது சகிப்புத்தன்மை, பொறுமை, விட்டுக் கொடுத்து நடத்தல், புரிந்துணர்வு, கைகியம், இன்சொல் பேசுதல், நேர்மை, மூத்தோரை கனம் பண்ணுதல், பிறர் நலனில் ஆர்வம், பணிவு போன்ற மனித விழுமியங்களை அறிந்து கடைப்பிடிக்க இது வழி கோலுகின்றது.

இன்று விஞ்ஞானம் கண்டறிந்து சொன்ன உண்மைகளை அன்றே மெய்ஞ் ஞானத்தின் வழி விளம்பிய நம் சைவ சமயம், சைவசமய முறைப்படி ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யும் போது அது உடற்பயிற்சியாக அமைவது டன் பெண்களின் கருப்பை வலுவடை யும் விதத்திலும் உதவுகின்றது. நம் முன் னோர்கள் சடங்குப் பொருட்களாக மஞ் சளையும் வேப்பிலையையும் பாவித்த னர். அவற்றில் கிருமி கொல்லும் தன்மை உள்ளதென ஆராய்ச்சி வாயி லாக கண்டுகொண்டோம். அதேபோல் விரத அனுட்டானங்கள் மேற் கொள் வதால் அநாவசிய கொழுப்புகள் குறைந்து உடல் ரீதியாக உள ரீதியாகவும் புத்து ணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

மேலும் சைவ சமயமானது அன்பே சிவம்எனும்தத்துவத்தைஅடிப்படையா கக் கொண்டது. இதனை திருமூலர் "அன் பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவதாரும் அறிகிலார்" எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது அன்பு வேறு சிவம் வேறு என பிரித்துப் பார் பவர்களை அறிவே இல்லாதவர்கள் என்கிறார். உடலை வருத்தி எதைச் செய்தாலும் இறைவனை அடைய இயலாது மாறாக நெஞ்சம் உருகி அன்பு மயமாய் தொழுதால் மட்டுமே இறை நிலையினை அடைதல் சாத்தியம் என்பது தெளிவாகிறது. இதனை சைவ சமய ஆதார நூல்களான வேதம், உபநி டதம், பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்தம், புராண இதிகாசங்கள் போன் றவற்றின் வாயிலாகவும் அறிந்து கொள் ளலாம்.

சைவசமயமானது சிவசின்னங்கள் வாயிலாக வாழ்வை செம்மைப் படுத்துகின்றது. சிவ சின்னங்களாக உருத் திராக்கம் அணிதல் திருநீறு அணிதல் திருவைந்தெழுத்து ஓதுதல் என்பன கரு தப்படுகின்றது. இவற்றுள் திருநீறணிதல் முப்பொருள் உண்மையை உணர்த்து கின்றது. மூன்று விரலால் திருநீறணிதல் சிந்தனை, சொல், செயல், என்ற திரி சத்தியங்களை உணர்த்துகின்றது. மேலும் தூய்மையும் வெண்மையுமான நீறு போல் நம் உள்ளமும் தூய்மையாகவும் ஞான ஒளி உடையதுமாக இருத்தல் வேண்டும் என்பதைக்காட்டுகின்றது.

மனித வாழ்வை மேம்படுத்தலில் தீட்சை பெறுதல் பெரும் பங்கு வகிக் கின்றது. தீட்சை பெறுதல் மூலமாக ஆன்மா தூய்மை அடைவதுடன் உடல். ரீதியாக பல நன்மைகள் கிடைக்கின்றன. அதாவது உரோம துவாரங்கள் வழியாக உடலின் நச்சுப் பதார்தங்கள் வெளியா கின்றன வாதம், பித்தம் போன்ற நோய் கள் நீங்கக்கூடும். மூப்பு, பிணி போன் றவற்றில் இருந்து நாம் விடுபட முடியும்.

இவ்வாறு மனித வழ்வியலில் இன்றி யமையாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள சைவ சமயத்தை பிரதிபலிப்பதில் ஆல யங்கள் பெரும் பங்குவகிக்கின்றன. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஒளவையார் "ஆ" என்றால் ஆன்மா "லயம்" என்றால் அடங்குவதற்குரிய இடம் எனப் பொருள்படும். எங்கும் நீக்க மற நிறைந்துள்ள இறைவனை ஆலயங் களில் மட்டும் ஏன் வழிபட வேண்டும் என சிலர் கருதுவதுண்டு. இறைவன் எங் கும் நிறைந்துள்ளான் என்பதில் ஐய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை ஆனால் இறையருள் எல்லா இடங்களிலும் விளங்குவதில்லை. எனவே ஆலயங்களில் உள்ள மூர்த்திகளை வழிப டுதல் வாயிலாக இறையருளைப் பெற் றுக் கொள்ள முடிகிறது. இதே போன்றே கிராமங்களில் நாட்டார் வழிபாடு முக்கி யத்துவம் பெறுகின்றது. உதாரணமாக கண்ணகி வழிபாடு, பத்தினி வழிபாடு என்பன இதில் கூற முடியும்.

மேலும் விரத அனுட்டானங்களும் மனிதவாழ்வை செம்மைப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்புடன் வழிபடுதல் விரதம் எனப்படும். விரதத்தைக் கடைப் பிடிப்பவர்கள் ஐம்புலன்களை அடக்கி திரிகரண சுத்தியுடன் இருத்தல் வேண் டும். விரதம் அனுட்டிப்பதால் மனம், புத்தி என்பன தூய்மையடைவதுடன் உடல் ஆரோக்கியம் மேம்படும்..

எனவே இவ்வாறு உயர் மனித விழு மியங்களை உள்ளடக்கிய நமது சைவ சமயத்தை என்றும் போற்றி அதன் வழி நடந்து வாழ்வில் உயர்வு பெறுவோ மாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வில் தியானம்

**பிரஷ்ணவி பத்மநாதன்**
மருத்துவபீடம்.

ஞானிகள், தத்துவமேதைகள், ஆன்மீகவாதிகள் முதலானவர்களின் தேடுபொருள் நான் என்பது என்ன? தன்னை உணர்ந்து கொள்ளுதல் எவ்வாறு? என்பதேயாகும். காடுகளிலும், மலைகளிலும் திரிந்து, வேதங்களையும், மறைநூல்களையும் ஐயம் திரிபுற கற்றறிந்த இக் கேள்விகளுக்கு விடைகாண வேண்டியதன் முக்கியத்துவம்தான் என்ன? இதனால் கிடைக்கப் போவது தான் என்ன? எம்மில் பலருக்கு எழும் கேள்வி இதுதான்.

உண்மையில் நம்மை அறிந்து கொள்ளும் போதுதான் நமது இருப்பிற்கான நோக்கத்தையும் வாழ்வின் உண்மையையும் உணர்ந்து கொள்ள முடியும் வாழும் நொடிகளை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியும் இல்லையெனில் தற்செயலான ஒரு வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டி ஏற்படும். உதாரணமாக நாம் வைத்திருக்கும் கணனி பற்றி நுட்பமாக அறியும் போது அதனை கையாளுதல் இலகுவாவதுடன், உச்சப் பயனையும் அடையமுடியும். அதே போல் நம்மைப்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையைப் பற்றி ஒரு தெளிவு ஏற்படும் போது சிறப்பான முறையில் வாழமுடியும்.

நம்மை அறிய நிதானமும், விழிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம். இவை பல விஷயங்களை கற்றுக்கொள்ள இடமளிக்கும். தியானமே இந் நிலைக்கு இட்டுச் செல்கிறது. எந்நேரமும் வேலை செய்து கொண்டிருக்கும் மனதிற்கு ஓய்வை அளிக்கும் முறைதான் தியானம். இன்னொரு வகையில் நமக்குள் இருக்கும் பேராற்றலை நாம் அறிந்து கொள்ளச் செய்யவும் ஒரு தொழில்நுட்பந்தான் தியானம். தியானம் செய்வதன் மூலம் உடலிற்கும் மனதிற்கும் ஓய்வு கிடைக்கிறது. மனதை ஒரு முகப்படுத்துவதால் மனஆற்றல் அதிகரிக்கிறது. தன்னம்பிக்கையும் மனவலிமையும் அதிகரிக்கிறது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடிவதுடன் உடல் ஆரோக்கியத்தையும் பெருக்கிக் கொள்ள முடிகிறது.

தியானம் இரண்டு வகைப்படும் குறிப்பிட்ட உடல்மன நிலைகளை உண்டாக்கிக் கொண்டு குரு வழிகாட்டி சொன்னபடி செய்வது ஆன்மீக நிலையங்களில் செய்யும் தியானம் மூச்சுப் பயிற்சிகள் யோகாசனம், ஈஷா யோகா, ராஜயோக தியானம் போன்றவை இவ்வகையினுள் அடங்கும். குறித்த உடல்நிலையில், அமைதியான ஒரு சூழலில், மந்திர ஜபங்களைச் சொல்லி இதனை மேற்கொள்ளலாம். மந்திர ஜபங்களை திரும்ப திரும்ப சொல்லும் போது ஆழ்மனதிற்கு செல்லும் முறை இலகுவாக்கபடுகிறது. காயத்திரி மந்திரம், மகாகணபதி மந்திரம் போன்றவை உகந்த மந்திரங்களாகும்.

தியானத்தில் இன்னொரு வகை நாம் செய்யும் எந்தவொரு வேலையையும் தியானமாக்கி கொள்வது. இதற்கு உதாரணமாக ஓஷோவின் கதை ஒன்றைக் கூறலாம். தியானம் செய்யும் போது சிகரெட் பிடிக்கலாமே? என்று ஒரு சீடன் குருவிடம் கேட்டான். அதற்கு குரு திட்டி அனுமதி மறுத்துவிட்டார். இன்னொரு சீடன் சிகரெட் பிடிக்கும் போது தியானம் செய்யலாமா? என்று கேட்டான் அவனை பாராட்டி அனுமதியளித்தார் குரு இக் கதையிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளக்கூடிய உண்மை விழிப்புணர்வோடு நாளாந்த வாழ்வில் செய்யும் எந்தவொரு செய்கையையும் தியானமாக்கி கொள்ளலாம். அமைதியான மனநிலையில் விடயத் தெளிவுடனும், அர்ப்பணிப்புடனும் செய்யும் எந்த காரியமும் ஒரு வகை தியானமாகும். வாழ்வே தியானமாகும் போது மிக உன்னத நிலையை அடைய முடியும். இவ்வாறு எந்நேரமும் தியான மனநிலையை ஏற்படுத்த முடியாவிடினும் அவ்வப்போது தியானப்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் நம்மையும், நாம் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தையும் உணர்ந்து இப்பிறவியினைப் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ளலாம்.

## சில தியான மந்திரங்கள்

**காயத்திரி மந்திரம்**

ஓம் பூர் புவ ஸ்வ
தத் ஸவிதூர வரேணயம்
பர்கோ தேவஸ்ய தீமஹீ
தியோ யோந பரசோதயாத்

**ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி மந்திரம்**

ஓம் சஷம் பகஷ ஜ்வாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிஷ்வே காரள தம்ஷட்ரே
காளராத்திரி பிரத்யங்கிரே
சஷம் ஹரீம் ஹீம் பட்

**மகா கணபதி மந்திரம்**

ஓம் ஹிம் ஹிரீம் கலீம் கவெளம் கம்
கணபதயே
வர வரத ஸ்ர்வஜனம் மே வசமானய
ஸ்வாஹா

**காயத்தி விநாயகர் மந்திரம்:-**

ஓம் ஏக தந்தாய வித்மஹே
வக்ர துண்டாய தீமகி
தன்னோ தந்த ப்ரஜோமயாத்

**குரு பகவான் மந்திரம்:-**

தப்த காஞ்சன வர்ணாபம்
சதுர புஜ சமந் விதாம்
தண்டாகஷ சூத்ர ஹஸ்தம்ச
கமண்டலு வரான்விதாம்
பீதாம்பர தரம் தேவம்
பீத கந்தானு லேபனம்
புஷ்பராக மயாபூஷம்
விசித்ரமகு டோஜ் வலம்
ஸ்வர்ணா ஸ்வர தமாரூடம்
பீத்த்வஜ ஸிலோபிதம்
மேரோ பரதகஷிணம்
ஸம்யகா சாந்தம் ஸிஸோப நம
அபிஷ்ட வரதம் தேவம்
ஸாவக்ஞம் ஸிரபூஜிதம்
ஸர்வகாமார்த்த ஸித்தியர்த்தம்
பரணாம் குருஸதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத்தின் மூலம் தொன்மையான இந்துமதம்

**மோ.மோகனலக்ஸன்**
மருத்துவபீடம்

ஆதிகாலம் தொட்டு இந்துமத வழக்கங்கள் மூடநம்பிக்கைகளாகவே கருதப்பட்டன. இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சி, இந்துப் பாரம்பரிய வழக்கங்களை விஞ்ஞான ரீதியானவை என ஆதாரபூர்வமாக, ஓர் நம்பிக்கை நிரூபித்துள்ளது. ஆனால் இந்துமக்கள் இதன் விஞ்ஞானப் பின்னணியை அறியாமல், ஓர் நம்பிக்கை சார்ந்த கலாச்சார விழுமியங்களாகப் பேணி வருகின்றனர் எனவே இங்கே நாம் இந்துமதம் சார்ந்த வழக்கங்களையும் அவற்றின் விஞ்ஞான ரீதியான தத்துவங்களையும் ஆராய்வோம் .

### 1. கைகூப்பி நமஸ்காரம் செய்தல்

கை கூப்பி வணக்கம் செலுத்துதல் ஒருவருக்கு மதிப்பளிக்கும் வழக்கமாகவே காணப்படுகிறது. ஆனால் விஞ்ஞான ரீதியாக நோக்கும் போது விரல்களின் நுனிகளில் காணப்படும் கண், காது மற்றும் மூளைக்கான அழுத்தப் புள்ளிகள் கை கூப்புதலின் போது தூண்டப்படுகின்றன. இது அவரை நீண்ட நாட்கள் ஞாபகம் வைத்திருப்பதற்கும் நோய்த் தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்கும் உதவுகிறது.

### 2.பெண்கள் மெட்டி அணிதல்

மெட்டி அணிதல் திருமணமானதன் அடையாளமாகவே கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் இது அந்தப் பெண்ணுக்கான ஆரோக்கியத்துடன் சம்மந்தப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதாகும். காலின் இரண்டாவது விரலில் இருந்து புறப்படும் நரம்பு கருப்பை யையும், இதயத்தையும் இணைக்கிறது. மெட்டி அணிதல் இந்த நரம்பைத் தூண்டுவதன் மூலம் அவற்றைப் பலப் படுத்துவதுடன் மாதவிடாய்ச் சக்கரத் தையும் சீராக்குகிறது. மேலும் மெட்டி பூமியின் முனைவுசக்திகளை உடலுக்குக் கடத்துகிறது.

### 3.நெற்றியில் திலகமிடுதல்

நெற்றியின் இமைகளுக்கிடையில் காணப்படும் புள்ளியில் முக்கியமான நரம்பு மையம் காணப்படுகிறது. இந்தப் புள்ளியில் திலகமிடுதல் சக்தியிழப்பைத் தடுத்து சக்தியைச் சேமித்து வைக்கிறது. குங்குமமிடுதல் அக்கினிச்சக்கரத்தைத் தூண்டி மனதை ஒரு நிலைப்படுத்தலுக்கு உதவுவதுடன் முகத்துக்கான இரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது.

### 4.ஆலயமணி அடித்தல்

இதன் ஓசை கெட்ட சக்திகளை விரட் டுவதாகவே நம்பப்பட்டு வருகிறது ஆனால் இதன் கூர்மையான சப்தம் மூளையின் இரண்டு மூளைய அரைக் கோளங்களையும் இணைத்து ஒரு நிலைப் படுத்துகிறது மேலும் இது எமது உட லில் காணப்படும் ஏழு குணப்படுத்த மையங்களைத்தூண்டி எமது சிந்தையில் உள்ள கெட்ட எண்ணங்களை அகற்ற உதவுகிறது.

### 5.துளசிச் செடி வளர்த்தல்

துளசிச் செடியானது தாய்க்கு நிகரான தெய்வமாக பேணி வணங்கப்பட்டு வருகிறது. இதன் சஞ்சீவனிக்கு நிகரான முக்கியத்துவத்தை உணர்ந்த மூதாதையர்கள் துளசிச் செடியைப் பராமரிப்பதை மக்களின் அன்றாட கடமையாக மாற்றியுள்ளனர். துளசி பல மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது.

1. குறிப்பிடத்தக்க எதிர் உயிர் மருந் தாகத் தொழிற்படுகிறது
2. நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்டு கிறது.
3. உடல் தொகுதிகளை சமநிலைப் படுத்துகிறது.
4. பூச்சிகள், முக்கியமாக நுளம்புகள் வீட்டிற்குள் வருவதைத் தடுக்கி றது.

### 6.அரசமரத்தை வணங்குதல்

வைரமான தண்டுகளையோ அல்லது சுவைதரும் பழங்களையோ கொண்டி ராமல் நிழலை மட்டும் நல்குவதாகக் கருதப்படும் அரசமரத்தை எமது முன் னோர்கள் போற்றி வழிபட்டதற்கான காரணத்தை இதுவரை பலரும் அறிய வில்லை. இது இரவிலும் பிராண வாயுவை வெளிவிடும் தனித்துவமான பண்பினைக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.மருதாணி இடுதல்

கைகளுக்கு நிறத்தையும் அழகையும் மட்டுமே தரும் மருதாணி உண்மையில் மூலிகைக் குணங்கள் கொண்டது. திரு மண நாட்களின் போது ஏற்படும் மன அழுத்தங்களிலிருந்தும், உடல் உபாதை களிலிருந்தும் இது நிவர்த்தியளிக்கிறது ஏனெனில் கைவிரல்களும் கால் விரல் களுமே அதிகளவில் நரம்பு முடிவிடங் களைக் கொண்டுள்ளது.

## 8.வடக்குத் திசையை நோக்கிக் தலை வைத்து உறங்காமை

வடக்குத் திசையில் தலை வைத்து உறங்குவது துஸ்ட ஆத்மாக்களை வரவ ழைக்கும் செயற்பாடாகக் கருதப்பட் டது. ஆனால் காரணம் உண்மையில் அது அல்ல. வடக்குத் திசைநோக்கி தலை வைத்து உறங்கும் போது எமது உடலின் காந்தப்புலம் பூமியின் காந்தப்புலத்துக்கு சமச்சீரற்ற தன்மையைக் கொண்டிருக் கும். இது இரத்தவழுத்தத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் இதயத்தின் வேலைப் பளுவையும் அதிகரிக்கின்றது. அது மட் டுமல்லாது நாம் இவ்வாறு தூங்கும் போது எமது உடலில் காணப்படும் இரும்பு மூளையில் திரளும் .இதனால் கடுமையான தலைவலி போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

## 9.சூரியநமஸ்காரம் செய்தல்

இந்துக்கள் அதிகாலையில் சூரியனுக்கு வணக்கம் செலுத்தும் வழக்கத்தைக் கொண் டுள்ளனர். சூரியன் உதிக்கும் போது நீரினூடாகவோ, நேரடியாகவோ நோக்கு வது கண்களுக்கு நன்மை பயப்பதாகும். மேலும் அதிகாலை நேரமே ஓர் நாளின் வினைத்திறன் மிக்க நேரமாகக் கொள் ளப்படுவதால் இந்த வழக்கம் உடலுக் கும் மனதுக்கும் நன்மை தருவதாக அமை கிறது.

## 10. காது குத்துதல்

இந்துமத வழக்கத்தில் பரவலாகக் காணப்படும் காது குத்தும் நிகழ்வானது பல்வேறு பலன்களை நல்குகிறது.

1. அறிவாற்றலை மேம்படுத்துகிறது.
2. சிந்தனை மற்றும் முடிவெடுக்கும் திறனை வளர்க்கிறது.
3. மிகுதியாகப் பேசுவதை கட்டுப்ப டுத்தி ஆத்மசக்தி வீணாவதைத் தடுக்கிறது.
4. செவிக் கால்வாய் குறைகளை நீக்கு கிறது.

## 11.உச்சித்திலகமிடுதல்

உச்சித்திலகம் எமது அனைத்து உணர் வுகளையும் மையப்படுத்தும் இடத்தி லேயே இடப்படுகிறது. இதனால் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்துவதுடன் பாலி யல் உணர்வும் தூண்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12.விரதமிருத்தல்

சந்திரனின் ஈர்ப்பு விசைகள் எமது உடலின் திரவ நிலைகளைப் பாதிக்கிறது. இது உணர்வுச் சமநிலைகளைப் பாதிக்கிறது. மேலும் இது எமது உடலின் அமிலத்தன்மையைக் குறைத்து எமது நல்லறிவு நிலையை மீட்க உதவுகிறது.

இவ்வாறு பல மகிமைகளைக் கொண்ட எமது இந்து மதத்தைப்புறந்தள்ளி மேலைத் தைய நாகரிகத்தில் எமது மோகத்தை இட்டுச் செல்கின்றோம். ஆகவே இந்து மக்களாகிய நாம் இதன் முக்கியதுவத்தை வருங்கால சந்ததியினருக்கு உணர்த்தி இந்து மத வளர்ச்சியை நிலை நாட்டுவது எமது தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெய்ஞ்ஞானத்துடன் இணைந்த விஞ்ஞானம்

**அபிராமி துரைசிங்கம்**
பொறியியற் பீடம்

உலகிலுள்ள சமயங்களில் காலத்தால் முற்பட்டது இந்துசமயம். இந்து சமயம் அனாதியானது, விஞ்ஞான பூர்வமானது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். பிரபஞ்ச உண்மைகளையும் உயிரின் இயக்கங்களையும் அழகாக உணர்த்துவது இந்து மதம். இது ஆன்மீகத்தைப் பற்றியும் பௌதீகத்தைப் பற்றியும் விளக்குகின்றது. நவீன விஞ்ஞான யுகத்தின் கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் நம் முன்னோர்கள் எப்போதோ சொல்லி வைத்த மெய்ஞ்ஞான உண்மைகளே ஆகும். இந்து சமயத்தில் பல சாஸ்திரசம் பிரதாயங்கள் பண்டைய காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்படுகின்றது. முன்னோர் ஏதாவது நம்மை நம்ப வைத்துள்ளனர் என்றால் அதற்குப் பின்னால் தெளிவான அறிவுரைகளும் விஞ்ஞான விளக்கங்களும் இருக்கும்.

இதற்கு உதாரணமாக நெற்றியில் குங்குமம் வைப்பதன் அறிவியல் உண்மையை நோக்குவோமானால் மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு கலந்த கலவையே குங்குமம். இவை கிருமி நாசினிகள் ஆகும். எமது நெற்றியில் தெய்வசக்தி உண்டு. இதை நெற்றிக் கண் உள்ள பகுதி என்பர். இதில் குங்குமம் இடுவதால் அமைதி நிலவும். உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகள் இவ்வழியாகவே செல்லும். இந் நரம்புகள் உஷ்ணமாகாமல் இருப்பதற்காகவே இங்கு சந்தனம், குங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமம் வைக்கப்படுகின்றது. சூரிய ஒளி குங்குமத்தில் தெறிப்பதால் அதிலுள்ள மூலிகைகள் மூலம் விற்றமின் "டி" உடலுக்குச் செல்கிறது. குங்குமம் நெற்றியிலுள்ளபோது 'ஹிப்னாடிசம்' போன்ற எந்த சக்தியாலும் வளைக்க முடியாது.

காலை சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுதல் வேண்டுமென்றும் மாலை நேரம் படுத்தல் கூடாது என்றும் கூறுவார்கள். இருள் விலகி ஒளி அரும்பும் காலத்திலும் ஒளி மறைந்து இருள் சூழும் காலத்திலும் பூமியிருலிருந்து ஒரு வகை நச்சு வாயு வெளியேறும். இதிலிருந்து எம்மைக் காப்பதே இதன் நோக்கம். ஆலயங்களில் வீதி வலம் வருதல் அங்கப் பிரதட்சணம், தோப்புக் கரணம் என்பவற்றில் மறைமுகமான உடற்பயிற்சி உள்ளடக்கம் பெற்றுள்ளது.

திலகமிடுதல், விநாயகரை சிரசில் குட்டி வழிபடல் போன்றவற்றில் 'அக்குப்பஞ்சர்' சிகிச்சை முறையில் நாடி, நரம்புகளை அழுத்தி நோய் தீர்க்கும் முறை தொக்கி நிற்கிறது. தூபமிடல், கற்பூரமிடல் முதலான நிகழ்வுகளில் வளி சுத்தமடைந்து ஆலயம் நிறைந்த பக்தர்கள் சுவாசித்தலை எளிமை ஆக்குகின்றன. அரோஹரா கோசமிடுதல், பஜனைப் பாடல் பாடுதல் போன்றவற்றால் எமது நாடி, நரம்புகள் விரிவடைந்து இரத்தோட்டம் அதிகரிக்கிறது.

சாணம், மஞ்சள் தெளித்தல் கிருமி நீக்கும் செயற்பாடாகிறது. பஞ்சகௌவியம், அறுகு ஊறிய செப்புப்பாத்திர நீர் முதலியவை தீர்த்தமாக அருந்தும் போது எமது குருதி சுத்திகரிக்கப்படுகிறது. யாகப் புகை, ஓமப்புகை சுவாசித்தலால் எம்மை விட்டு நோய்க்கிருமிகள் விட்டோடுகின்றன. பாதணிகளை கோயிலினுள்ளே கொண்டு செல்லாதிருக்க காரணம் மனிதனின் உடல் நலத்திற்கு உத்தமம் எனக் கண்டறியப்பட்ட பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு பாதம் தரையில் பதியும் போது உடலுக்கு செலுத்தப்படுகின்றது. அது மட்டுமல்ல மூலிகை மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால் கோயில் மண்ணுக்கு மருத்துவ குணமிருக்கலாம்.

மோதகம், சுண்டல், பஞ்சாமிர்தம் என்பன உட்கொள்வதால் உடலுக்குத் தேவையான பல் வகைச் சத்துக்களையும் அனைவரும் பெறுவது சாத்தியமாகிறது. ஆலயம் செல்லும் போது நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிவது எமது சுய சுத்தத்திற்கு வழிகோலுகிறதல்லவா? சந்தனம், பூசுவது உடலை குளிரச் செய்கிறது. சந்தியா வந்தனஞ் செய்யும் போது வீபூதி தாரணமும், உருத்திராக்கம் 16 இடங்களில் தரித்தலும் இதற்காகவே எனலாம். இரவில் தயிர், நெய், பாகற்காய், இலை வகை உணவுகளை உண்பதைத் தவிர்க்கும்படி கூறுவது சமிபாட்டை குறித்த நோக்கத்திற்கேயாகும். விரதம் இருப்பதும் உண்டி சுருங்கவே ஆகும்.

ஆலயங்களில் கோபுரங்கள் மிக உயர்வாகக் கட்டப்படுவது பற்றியும் விஞ்ஞான விளக்கங்கள் உள்ளன. ஆரம்ப காலங்களில் இடி, மின்னல் தாக்கங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து பாதுகாப்பைப் பெற தற்கா லத்தில் உள்ளது போல இடிதாங்கிகள் காணப்படவில்லை. ஆகவே கோபுரங் களை உயரமாகக் கட்டி உச்சியில் கலசம் வைக்கப்படும். இக் கலசத்திலுள்ள தானி யங்களுக்கு இடி, மின்னலை தாங்கும் சக்தியுண்டு. எனவே கோயிலைச் சுற்றி யுள்ள பகுதிகள் பாதுகாப்பைப் பெறும். அதுமட்டுமல்லாது அத்தானியங்களின் வீரியம் 12 வருடங்களில் குறைந்துவிடும் என்பதால் 12 வருடங்களுக்கு ஒரு முறை ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டு புதிய கலசம் வைக்கப்படும். இதனால் தான் பண்டைய காலத்தவர்கள் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண் டாம்' என்று கூறியுள்ளனர் போலும்.

அதிகாலையில் முற்றம் கூட்டி நீர் தெளித்த பின் அழகாக கோலமிடுவதில் தனிப்பட்ட சிறப்புகள் எதுவும் இல் லையானும் இதில் ஓர் பௌதிக உண்மை அடங்கி உள்ளது. நாம் உணவருந்தும் முன் எறும்பு முதலிய சிறு பிராணிக ளுக்கு உணவளிப்பது என்ற மனித தர் மத்தின் பாகமே கோலம் வரைதல். ஆனால் கோலம் வரைந்த இடத்தில் எறும்புகள் முதலியவை புகுந்து மாவை உண்பததை நாம் காண்பதில்லை. இந்து மதத்தவரின் முக்கிய அடையாளமான திருநீறு அணிதலால் உடல் வெப்பம் குறைவதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

படுக்கையை விட்டு எழும் போது தோத் திரம் சொல்லி எழும்ப வேண்டும் என்று கூறி கேள்விப்பட்டு இருப்பீர்கள். இர வில் தூக்கம் நீடித்திருக்கும் போது மனித னின் இரத்த ஓட்டத்திற்காக இருதயம் மிகக் குறைவான சக்தியை பயன்படுத் துகின்றது, திடீரென குதித்தெழுந்து செல் லும் போது இருதயம் மிகக் கடினமாக செயற்படவேண்டி வரும். இது இதயத் துடிப்பை நிலைதடுமாறச் செய்கிறது. அதனால் படுக்கையை விட்டு எழுந்த தும் தோத்திரம் சொல்வதால் நம் இரத்த ஓட்டம் நிலை நிறுத்தப்படுகிறது என்கி றது விஞ்ஞானம்.

இந்து மதத்தின் தத்துவங்கள் மேலை நாட்டவரை வியப்படைய வைத்தது. நாம் என்ன என்ன செய்கிறோம் அதற்குத் தக்கதாக பலன் பெறலாம் என்று இந்து மதம் தெளிவாகக் கூறுகிறது. இந்துமதம் போற்றிவரும் புராணக் குறிப்புகள் விஞ் ஞான வானியல் அடிப்படையில் அமைந் தவையே அன்றி கட்டுக்கதையல்ல. இதை இன்னும் ஆழமாக ஆராய்ச்சி மூலம் அணு குவோமானால் நம் உடல் நலத்திற்கும் ஆரோக்கிய வாழ்விற்கும் தேவையான அனைத்தும் இந்து மதத்திலிருப்பதை நம்மால் உணர முடியும்.

ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகளும், ஜி.யு.போப் போன்ற பாதிரியார்களும், ஜோன் மார்ஷல் போன்ற சரித்திரப் பேரா சிரியர்களும் சைவசித்தாந்தத்தின் உயரிய தத்துவக் கொள்கைகளை மிகப் பெரிதும் பாராட்டியுள்ளனர். கொள்கை அளவோடு நில்லாமல் அனுபவத்திலும் நலம் பயப் பதாய் உள்ளது. இத்தகைய இந்து சமயம் வளர்ந்தும் தளர்ந்தும் வந்திருப்பதை வரலாறு உணர்ந்தோர் நன்கறிவர். சைவம் பரவுதலால் அதற்கு ஒன்றும் பயனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதனை மேற்கொள்ளும் மக்கள் அதிகமான பயனை அடைவார்கள்.

உலகில் இடம்பெறும் எந்த ஒரு செயலுக்கும் காரணம் உண்டு. காரணமில்லாமல் காரியமில்லை. அதுபோல எமது சமயம் கூறும் பற்பல காரியங்களில் விஞ்ஞான ரீதியான காரணங்கள் இலைமறை காய் போல உள்ளன. பல வழிகளில் மெய்ஞானத்துடன் இணைந்து விஞ்ஞானம் ஊடுருவி இருப்பதால் முன்னோர்களது பழக்க வழக்கங்களை பழைய பஞ்சாங்கம் என ஒதுக்காது பின்பற்றிப் பெருவாழ்வு பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் வழிபாடு

**ஜெயராசா கபிலானந்**
பொறியியற் பீடம்

**" அண்டப் பகுதி யினுண்டைப் பிறக்கம்
அளப்பெருந் தன்மை வளப் பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்றுநின் றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் நுண்ணணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்"**

அதாவது ஆகாயத்தை இராக்காலத்தில் அண்ணார்ந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந் நட்சத்திரங்கள் வெகுதூரத்திலே இருத்தலால் சிறியவைகளாக தோன்றுகின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவை. ஆதலால் இந்தப் பூமியையும் சூரியனையும் எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார் தான் சொல்ல வல்லவர்.

இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

**'அன்பும் சிவமும் இரண்டென்பார்
அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

ஆதலால் அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாது இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வ ளவு அன்புடையவளாய் இருக்கின்றாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன் பிலும் கோடானு கோடி மடங்கு அதிக மாய் இருக்குமல்லவா? தாயைக் காணும் போது குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடைகின்றது. ஆதலால் தாயினும் பார்க்க அதிகமான அன்புடைய கடவுளை நினைக் கும் போதும் அவரைக் கோயிலிலே காணும் போதும் நாம் எல்லையில்லாத ஆனந்தம் அடைய வேண்டும். நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

**"மெய்தா னரும்பி விதிர்விதித்**
**துன் விரை யார்கழற் கென்**
**கைதான் றலை வைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதுப்பியுள்ளமை**
**பொய்தான் றவிர்ந்துன்னை போற்றி**
**சயசய போற்றி யென்னும்**
**கைதா னெகிழ விடேனுடை**
**யாயென் னைக் கண்டு கொள்ளளே"**

கடவுளுடைய திருவடிகளை அடைவ தற்கே பிறவி எடுத்தோமாதலால் அத்தி ருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும் மனம் நயப்படுதற்கு கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப் படுவதற்கு கடவுள் வழிபாடு வேண்டப் படும். உடம்பும் மனமும் பூசித்தலா லேயே ஆன்மா நயப்படமுடியும். திருக் கோயிலை வலம் வந்து சுவாமிக்கு பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை என்கிறார் நாவுக்கரசர். கடவுளுடைய திருவடிக ளைத் தொழுதற்கு துணையாய் நில்லாத கல்வியினால் பயனில்லை என்றார் திருவள்ளுவ நாயனாார்.

**கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.**

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங் கள் காலையும் மாலையுமாம். சிலர் தேவாரம், திருவாசகம், முதலிய அருட் பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்தி ரம் செய்து தியானித்து சிந்தித்து வணங் குவர். சிலர் சிவலிங்க பூஜை செய்வர். சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர். கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்ப டுத்தக் கூடியது. தீய சிந்தனைகள், தீய ஆசைகள் எழும்போது சிவசிந்தனை செய்தால் இவற்றை சுருக்கி மீள விடா மல் அழித்து விடும். அது மனத்தை தூய தாக்கி இறைவன் எழுந்தருள தகுதி வாய்ந்த இடமாக்கும்.

இன்றைய காலத்தில் சில இளை ஞர்கள் கடவுள், கடவுள் வழிபாட்டை மறந்து விடுகின்றனர். மேலும் இவை மூடநம்பிக்கைகள் என்று சொல்லித் திரிகின்றனர். ஆனால் இந்த ஆன்மீகத்தி னுள் புதைந்து காணப்படும் விஞ்ஞான உண்மைகள் யாருக்கும் தென்படுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. அதாவது கோயில்லில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறுவதற்கான காரணம் ஓர் ஊரில் கோயில் இருப்பின் கோயில் கோபுரமே அவ்வூரின் மிக உயரமான இடமாக இருக்கும். மேலும் கோபுர உச்சியில் காணப்படும் கலசத்தினுள் கும்பாபிஷேகத்தின் போது இடப்படும் தானியங்களினால் மின்னல் தாக்கத்தை அகத்துறிஞ்சும் ஆற்றல் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஆண்கள் கோயிலுக்கு மேலாடையின்றி செல்ல வேண்டும் என கூறப்படுகிறது. ஏனெனில் சிலைகள் செய்ய பயன்படும் கருங்கற்களிலிருந்து வீசப்படும் கதிர்ப்புக்கள் உட லில் படும் போது எமது உடலில் நோய் ஏற்படுவதைதடுக்கும்ஆற்றலிருப்பதாக கூறப்படுகிறது. மேலும் நாம் விநாயகரைக் கும்படும்போது தலையில் குட்டி தோப்புக்கரணம் போட்டு வணங்குகின்றோம். இதன்போது மூளை அருட்டப்படுகிறது. மூளைக்கான இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. இதனால் ஞாபகசக்தி விருத்தி அடைகிறது. மேலும் மூளை தொடர்பான நோய் வராமல் பாதுகாக்க முடியும்.

இவ் வகையாக எமது சமயத்தில் காணப்படும் சிறுசிறு சம்பிரதாயங்களில் கூட விஞ்ஞான ரீதியான விடயங்கள் புதைந்து காணப்படுகின்றது. இளைஞர்களாகிய நாம் எமது உடல், உள ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு எமது சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாக வாழ்வது மட்டுமன்றி நல்லதொரு சமுதாயத்தையும் உருவாக்க முயற்சி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து சமயத்தின் தோற்றம்

**நவரட்னம் இசைப்பிரியன்**
பொறியியற் பீடம்

இந்து சமயம் இந்தியாவில் தோன்றிய காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஏறக்குறைய *850* மில்லியன் இந்துக்களை கொண்டு உலகில் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது. பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலும் நேபாளத்திலும் வசிக்கின்றார்கள். இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், பிஜிதீவுகள், அமெரிக்கா, கனடா மற்றும் பிரபல நாடுகளிலும் இந்துகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வசிக்கின்றார்கள்.

பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தை தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனை நெறிப்படுத்த கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள் சமய நூல்கள் என்பவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம். ஆகக் குறைந்தது கி.மு.*1700* ஆண்டுகளுக்கு முன் வேத காலப் பண்பாட்டில் தோற்றம் பெற்றது. சுமார் *5000* ஆண்டுக்கு முன் கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டுக்களில் இந்து சமய கடவுள்களில் ஒருவரான சிவனின் உருவ அமைப்பு கொண்ட சிலைகள், ஓவியங்களின் ஆதாரங்கள் கண்டறியப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக நம்பிக்கை, அன்பு, உறுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எல்லாவிதமான சமய செயற்பாடுகளும் இறுதியாக ஒரே தன்னுணர்வுடன் நிலைக்கே இட்டுச் செல்கின்றன. அதனால்தான் இந்து சமய சிந்தனைகள் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத் தன்மையை கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கின்றன. ஒரு இந்துவுக்கு நிலையான தருமம் என்பதை வரையறுப்பதில் இந்த எண்ணமே உந்து சக்தியாக உள்ளது.

இந்து என்ற சொல் சிந்து என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து பாரசீக மொழி மூலமாக உருவான சொல்லாகும். இந்து என்ற சொல் முதன்முதலில் பாரசீகத்தினரால் ஒரு புவியியற் சொல்லாக சிந்து நதியின் கிழக்கு பக்கம் வசிக்கும் அனைவரையும் சேர்த்து குறிக்கப்பயன்படுத்தப் பட்டுள்ளது. அப்படி பாரசீகர்களால் பயன் படுத்தப்பட்ட காலத்தில் இந்து என்ற சொல் ஒரு மதத்தைக் குறிக்காமல் ஒரு இடத்தைக் குறிப்பதாகவே இருந்தது. ஜவகர்லால் நேரு *1946* இல் தான் இயற்றிய இந்தியாவின் கண்டுபிடிப்பு எனும் நூலில் இதைக் குறிப்பிடுகிறார்.

ஐரோப்பிய மொழிகளில் இந்து என்ற சொல் பாரசீகமொழி மூலமாக அரேபிய மொழியில் உருவான சொல் வழக்கமான அல் - ஹிந்த் என்பதிலிருந்து உருவானது. *13* ஆம் நூற்றாண்டில் தற்கால இந்தியத் துணைக் கண்டத்தின் நிலப் பகுதியைக் குறிக்க இந்துஸ்தான் எனும் சொல்வழக்கு மிகவும் பிரபலமடைந்தது. பின்னர் இந்துக்கள் என்ற சொல் சிற்சில சமஸ்கிருத நூல்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. உதாரணமாக பிற்காலத்தில் இயற்றப் பட்ட கஷ்மீரின் இராஜதரங்கினிகள் *16* நூற்றாண்டுகள் முதல் *18* நூற்றாண்டுகள் இயற்றப்பட்ட சிற்சில வங்காள கௌடிய வைணவ நூல்கள் இவ்விடயங்களில் இந்து என்ற சொல் இந்திய நிலத்தில் வாழ்பவர்களை யவனரிடமிருந்தும் மிலேச்சர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காட் டவே பயன்படுத்தப்பட்டது. *18* ஆம் நூற்றாண்டு இறுதியில் ஐரோப்பிய வணிகர்களும் ஐரோப்பியக் குடியேறிகளும் சிந்து நதிக் கப்பால் உள்ள அனைத்து மதத்தினரையும் சேர்த்துக் குறிக்க இந்தூசு என்ற சொல்லைப் பயன்படுத்தி *19* ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் இந்து சமயம் என்ற இந்திய நிலப்பரப்பில் தோன்றிய அனைத்து சமயம், மெய்யியல் மற்றும் கலாசார மரபுகளை சேர்த்து குறிக்க அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் இந்து என்ற சொல் இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், சைனர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைத் தவிர பிறரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. தற்காலத்தில் சமயம் மற்றும் மெய்யியல் சார்ந்த ஆய்வுகளில் இந்து என்ற சொல் இந்திய நிலப்பரப்பில் தோன்றிய அனைத்து சமய மெய்யியல் மற்றும் கலாசார மரபுகளைச் சேர்த்து குறிப்பதாகவே பொருள் கொள்ளப்படுகிறது.

இயற்கையின் நிகழ்வுகளான இடி, மின்னல், காட்டு நெருப்பு போன்றவற்றினை கண்டு பயந்த ஆதி மனிதன் அவற்றைக் கடவுளாக வழிபட தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய தேவன், சந்திரதேவன். அக்கினி தேவன், வருண தேவன் என இயற்கையே முதல் கடவுளாகவும் இவற்றை இயக்குகின்ற சக்தியான பரம்பொருளாகவும் உணரப்பட்டது. இவை சிந்து நதிக்கரையில் நிகழ்ந்ததாகவும் இவர்களில் ஒரு பிரிவினரே தற்போதைய ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவர்களை வரலாற்று ஆசிரியர்கள் ஆரிய இனத்தவர் என்று அழைக்கின்றனர்.

பல்வேறு முனிவர்களாலும் முன்னோர்களாலும் செவி வழியாக கடத்தப்பட்ட வேதம் எனும் வாழ்வியல் முறை நாகரீகம் வளர்ந்த பின் ஓலைச் சுவடியில் பதியப்பட்டது. இந்த வேதங்களில் உள்ள ரிசா, குபா, காமு போன்ற ஆறுகள் ஆப்கான் தேசத்தினை சேர்ந்தவை என்பதால் சிந்துவெளி நாகரீகம் அதுவரை பரவியிருந்ததாக கூறப்படுகிறது. இவ்வாறான வேதத்தினை முன்நிறுத்துகின்ற மதம் வேதமெனவும் அழைக்கப்பெறுகிறது.

வேதத்தின் உட்பொருளைக் கொண்டு எளிமையாக மக்களுக்கு கூறுவதற்காக உபநிடதங்கள் உருவாயின. அதனினும் எளிமையாக கதை வடிவில் வேதம் மற்றும் உபநிடதங்களை விளக்குவதற்காக புராணங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இவற்றில் பதினெட்டு புராணங்கள் மகாபுராணங்கள் என்றும் சில உபபுராணங்கள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

ஆரியர்களின் வருகைக்கு முன்பு, ஏறத்தாழ 450 மதங்கள் இந்தியப் பகுதியில் இருந்துள்ளன. அவற்றோடு வேதமதம் இரண்டறக் கலந்து தற்போதுள்ள மதமாக அறியப்பெறுகிறது.

இந்து சமயம் வேதங்களையும் தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாக பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மீக அடிப்படையில் தங்கியுள்ளது. வேத - தத்துவஞானப் பிரிவுகள் பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், மற்றும் யோகா தந்திர ஆகம பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனையோட்டங்கள் அனைத்தும் இந்து சமயம் என்கின்ற ஒரே சமுத்திரத்தில் சங்கமமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துக்களின் பாரம்பரியமும் விஞ்ஞானப் பின்னணியும்

**ஸ்ரீஸ்கந்தராஜா தனுஜன்**
பொறியியற் பீடம்

இந்து மதத்தில் உள்ள மரபுகள் மூட நம்பிக்கைகளாக பலராலும் கருப்படுகின்ற போதிலும் அவை எம்முன்னோர்களினால் அறிவியலுடன் இணைத்தே கருப்படுகின்றன. அவற்றுள் ஒரு சில மூடநம்பிக்கைகளும் காணப்படுகின்றன. பரம்பரை பரம்பரையாக பேணிப்பாது காத்துவரும் இந்துக்களின் பாரம்பரியங்கள் பல வற்றில் விஞ்ஞானப் பின்னணி இருக்கின்றது. இதனை சாதாரணமக்கள் அறியத் தவறுகிறார்கள். சாதாரண மக்கள் இவற்றின் பின்னணியில் இருக்கின்ற விஞ்ஞானத்தை அறியாத பொழுதிலும் இவற்றை உண்மையுடன் பின்பற்றி வருகிறார்கள். அவற்றுள் சில பாரம்பரியங்கள் பற்றியும் அவற்றின் பின்னணியில் உள்ள விஞ்ஞானம் பற்றியும் பார்ப்போம்.

## ஆலயங்களில் மணி காணப்படுதல்

கோயிலுக்கு வரும் நபர்கள் கருவறைக்குள் நுழையும் முன் மணி அடித்தல் வேண்டும். கருவறையில் தான் முக்கிய சிலைகள் வைக்கப்படுகின்றது. தீய சக்திகளை விலக்கி வைக்கவும் மணியோசை கடவுளுக்கு பிடித்தமானது என்பதாலும் கோயில் கருவறைக்குள் நுழையும் முன் மணியை ஒலிக்கச் செய்யப்படுவதாக ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியை ஒலிக்கச் செய்யப்படுவதன் பின்னால் விஞ்ஞான காரணங்கள் சில இருக்கின்றன. அவையாவன மணியின் ஓசையானது மனதை சுத்தமாகப் பேணவும் புத்தி கூர்மையுடன் செயற்படவும் தெய்வீக சிந்தனையில் முழுக் கவனத்தைப் பேணவும் உதவுகின்றது. கோவில் மணிகள் ஒலிக்கச் செய்யப்படும் போது நம் மூளையின் இடது மற்றும் வலது பாகங்களுக்கிடையில் ஒரு ஒற்றுமையை உருவாக்கும் வகையில் செய்யப்படுகின்றன. நாங்கள் மணியை ஒலித்த கணத்திலிருந்து ஒரு கூர்மையான மற்றும் நிலையானதுமான ஒலி உருவாகும். இது எதிரொலி முறையில் குறைந்தபட்சம் ஏழு செக்கன்களுக்கு நீடிக்கும் இந்த எதிரொலி காலமானது நம் உடலில் உள்ள அனைத்து ஏழு சிகிச்சை முறை மையங்களையும் செயற்படுத்தப் போதுமானது. இதன் விளைவாக நமது மூளை அனைத்து எதிர்மறை எண்ணங்களிலிருந்தும் விடுபடுகிறது.

## துளசிச் செடியை வழிபடுதல்

இந்த துளசிச் செடிக்கு ஒரு இந்து தாயின் நிலையை வழங்குகின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல துளசி ஒரு மத அங்கீகாரமாகக் கருதப்பட்டு வந்தது. வேதமுனிவர்கள் துளசிச் செடியின் நன்மைகள் பற்றி தெரிந்திருந்ததால் துளசிச் செடியினை தெய்வ சக்தியுடன் தொடர்பு படுத்தி ஒட்டுமொத்த சமூகத்தையும் அதனைப் பாதுகாக்க செய்தனர். துளசிச் செடி மனிதனுக்குச் சஞ்சீவனி போன்றது. துளசிச் செடியானது பெரிய மருத்துவக் குணங்களை தன்னகத்தே கொண்டது. இது ஒரு நோய் எதிர் பொருளாக பயன் படக் கூடியது. தினந் தோறும் தேநீருடன் துளசி இலையைச் சேர்த்து பருகின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும். குடிப்பவர்களின் நோய்களை தடுக்க உதவும். சுகாதார நிலைகளை உறுதிப்படுத்தும் உடல் நிலை களை நடுநிலையாக்கும், வாழ்க்கையை நீடிக்க செய்யும். துளசிச்செடியினை முற்றத்தில் நடுவதன் மூலம் பூச்சிகளும் நுளம்புகளும் வீட்டினுள் நுழைவதை தடுக்கலாம். பாம்புகளையும் விலக்கி வைக்க துளசிச் செடி பயன்படுகின்றது.

## அரச மரத்தினை வழிபடுதல்

அரசமரமானது ஒரு சாதாரண நபருக்கு கிட்டத்தட்ட பயனற்றது. இம் மரம் நிழலுக்கு மட்டும் எதிர்பார்க்கப்படுகிறது. அரச மரம் சுவையான பழங்களை கொடுக்காததாகவும் இதன் பலகை உறுதியற்றவையாகவும் இருக்கின்றபோதிலும் அந்தக் காலத்தில் சாதாரணமக்கள் அரச மரத்தினை வழிபாடு செய்திருக்கின்றனர். ஏனென்றால் அரசமரமானது இரவு நேரத்திலும் ஒட்சிசன் வாயுவை வெளிவிடும் மரங்களில் ஒன்றாகும் என்பதை அறிந்திருந்தனர். எனவே அவர்கள் இந்த மரத்தினை பாதுகாக்கும் பொருட்டு அதனைத் தெய்வீக சக்தியுடன் தொடர்புபடுத்தி வழிபட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்துபசாரத்தினை காரத்துடன் தொடங்கி இனிப்புடன் முடிவுசெய்தல்

நம் முன்னோர்கள் நமது உணவுகள் காரத்துடன் தொடங்கி இனிப்புடன் முடிவடைய வேண்டும் என்று கட்டாயமாக வலியுறுத்தி உள்ளனர். இந்த உணவு நடைமுறையின் முக்கியத்துவம் என்னவெனில் காரமான பொருட்களை உண்ணும் போது அவை செரிமான பொருட்களையும் அமிலங்களையும் செயற்படுத்துகின்றன. இதனால் சுமூகமாகவும் திறமையாகவும் செரிமானச் செயற்பாடு நடைபெறும். இனிப்புக்களும் மாப்பொருள் உணவுகளும் செரிமான செயற்பாடுகளைக் குறைக்கும். எனவே இனிப்புப் பண்டங்களை எப்போதும் இறுதியாக பரிமாறுவதற்கு வலியுறுத்தப்படுகிறது.

## ஆற்றினுள் காசு போடுதல்

இதன் பொதுவான காரணம் என்னவெனில் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பதாகும். ஆனால் இதன் பின்னணியிலும் ஒரு விஞ்ஞான ரீதியான காரணம் இருக்கின்றது. இக்காலத்தில் செய்யப்படும் உருக்கு நாணயங்களைப் போல் அல்லாது அக்காலத்தில் பெரும்பாலான நாணயங்கள் செப்பு உலோகத்தில்தான் செய்யப்பட்டன. செப்பு உறுதியான உலோகமாகும். இது மனித உடலுக்கு மிகவும் உதவி கரமானது. ஆறுகள் செல்லும் பகுதிகளில் அவை தண்ணீரின் ஒரு பகுதியாக செப்பினை எடுத்துச் செல்கின்றன. இதனால் ஆற்றுநீர் சுத்தி கரிக்கப்பட்டு ஆறுகள் சுத்தமான குடிதண்ணீர் ஆதாரமாக விளங்கின.

## இருகரம் கூப்பி வரவேற்றல்

இந்து கலாசாரத்தில் மக்கள் மற்றவர்களை வரவேற்பதற்காக இருகரம் கூப்பி வணங்குகின்றனர். இந்த செயற்பாட்டை நமஸ்காரம் என்று அழைக்கின்றனர். இருகரம் கூப்பி வணங்குதலின் பின்னணியில் உள்ள விஞ்ஞான காரணம் என்னவெனில், இரு கரம் கூப்பி வணங்கும்போது இரு கரங்களில் உள்ள விரல்களின் நுனிகள் நிச்சயமாக ஒன்றாக இணையும் விரல்களின் நுனிகளில் கண்கள், காதுகள் மற்றும் மூளையின் அழுத்தப் புள்ளிகள் காணப்படுகின்றன. எனவே கைகளைக் கூப்பி வணங்கும்போது அழுத்தப் புள்ளிகள் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றன. இதனால் நீங்கள் வரவேற்கும் நபரை நீண்டகாலத்திற்கு ஞாபகப்படுத்தி வைத்திருக்க உதவுகிறது. மேலும் மற்றவர்களின் கரங்களை தொடாதவாறு வரவேற்பதனால் மற்றவர்களிடம் இருந்து நோய்க் கிருமிகள் தொற்றும் வாய்ப்புக்கள் தவிர்க்கப்படுகிறது.

## தரையில் அமர்ந்து உணவு உண்ணுதல்

இந்த பாரம்பரியம் வெறும் தரையில் இருந்து சாப்பிடுவது பற்றியல்ல. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுகாசன்'' நிலையில் உட்கார்ந்து உணவு உண்ணுவது பற்றியது. 'சுகாசன்' நிலை என்பது நாங்கள் சாதாரணமாக பயன் படுத்துகின்ற யோகாசனங்களில் ஒன்றா கும். கதிரையில் கால் தொங்க இருக்கும் போதும் காலின் உதவியுடன் நிற்கும் போதும் செரிமான அமைப்புக்கு வழங் கப்படும் இரத்த ஓட்டத்தை காட்டிலும் தரையில் அமர்ந்து இருக்கும் போது செரிமான அமைப்புக்கு வழங்கப்படும் இரத்த ஓட்டம் அதிகமாகும். எனவே கதிரையில் இருந்து உணவு உண்ணுவ தைவிட தரையில் அமர்ந்து உணவு உண் ணும் போது செரிமான அமைப்புக்கான இரத்த ஓட்டம் அதிகரிக்கச் செய்யப்பட்டு செரிமான செயற்பாடுகள் இலகுவாக்கப் படுகிறது.

## தலையை வடக்கு திசையில் வைத்து தூங்காமை

இதில் உள்ள கட்டுக் கதை என்ன வென்றால் வடமுனைவில் தலை வைத் துப் படுத்தல் மரணம் உங்களை நெருங் கும் என்பதாகும். விஞ்ஞானம் இதனைப் பற்றி விளக்குவதாவது, மனிதனுடைய உடல் தனக்கென ஒரு காந்தப் புலத்தைக் கொண்டிருக்கிறது. இது இதயக் காந் தப்புலம் என அழைக்கப்படுகிறது. ஏனெ னில் இந்தக் காந்தப்புலம் இரத்த ஓட் டத்தின் காரணமாக உருவாக்கப்படுகிறது. மேலும் பூமி ஒரு வலிமையான காந்த மாகும். நாங்கள் வடக்கே தலை வைத்து தூங்கும் போது பூமியின் காந்தப்புலமும் நம் உடலின் காந்தப்புலமும் முற்றிலும் சமச்சீரற்றதாக காணப்படும். இதன் விளை வாக இரத்த அழுத்தம் அதிகரிக்கும் இதயம் இயங்குவது கடினமாக்கப்படும் என்பதனாலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவசமயம் கூறும் நெறிகளைக் கடைப்பிடிப்போம்

**விக்னேஸ்வரன் கஜகரன்**
பொறியியற் பீடம்

மனிதன் மனதில் பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவற்றுள் அறிவு (ஞானம்) உணர்ச்சி (இச்சை), செயல் (கிரியை) என்பவை முதன்மையானவை அவனது மண வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும். இந்த நிகழ்ச்சிகளால் நிறைந்துள்ளது. அவன் பண்டம், ஆடை போன்ற பொருட்களை அறிகிறான். அவன் தான் உற்சாகமாய் இருப்பதையும் சோர்வுற்றிருப்பதையும் உணர்கிறான். இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்யக் கூடாது என்று தீர்மானித்து செயற்படுகிறான். இவ்வாறு செயற்படுகின்ற மனம் தன்னலம் கருதியோ அல்லது தீயவழிகளில் செல்லவிடாது காப்பாற்றுவதற்கு மனிதனுக்கு மதம் எனும் கோட்பாடு தேவைப்படுகிறது. அவ்வகையில் சைவ சமயிகளாகிய நாம் எமது கோட்பாடுகளை மதித்து நடத்தல் வேண்டும். எனவே எமது சமய கோட்பாடுகளின் அர்த்தங்களைப் புரிந்திருப்பது நன்று.

கடவுள் உலகத்தை உருவாக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் அசைவற்றவராகவும் மாறுதலே இல்லாதவராகவும் இருக்கும் போது எப்போதும் அசையும் மாறிவரும் உலகத்தை பற்றியும் தந்திர சாஸ்திரம் விரிவாக கூறுகிறது. சர்வ வல்லமை படைத்த கடவுள் அசைவற்ற மாறுதல் இல்லாத பண்புகள் உடையவர் என்றாலும் அசைவும் இயக்கமும் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கே உரியவை. அசைவற்று அந்த மாபெரும் சக்தியின் கவனிப்பின் கீழ் இன்னோர் அம்சம் சுற்றி சுழன்று நீண்டு விரிந்து அழகும் ஒளியும் கலைநயமும் கொண்ட வேறுபாடுகளை உருவாக்கின் றன. இந்த விரிவு எல்லையில்லா நிலைக்கு பரந்து அடங்கிய பின் மெல்ல மெல்ல சுருங்கி மறைந்துவிடுகிறது. அதுவே ஆரம்பநிலை அதுவே உலகின் முடிவுமாகும்.

இத்தகைய அடங்கி சுருங்கி மறையும் நிலையை ஸ்ரீசக்கரம் என்று சைவசமயம் கூறுகிறது. இறைவன் காமேஸ்வரனாக இருந்து அசைவற்று கவனிக்க, இறைவி பரதேவதை லலிதா, எல்லையில்லா ஆனந்தம் பொங்க அசைந்தாடுகிறாள். அவர் பிரகாசமாகவும் அவள் விமர்சையாக வும் பங்கு பெற இது நடைபெறுகிறது. ஒன்றே இரண்டாகவும் இரண்டும் ஒன் றாகவும் இணைபிரியாத தம்பதிகளாக தரிசனம் தருகிறார்கள். இருவரும் ஒன் றாக ஸ்ரீசக்கரத்தின் மையத்தில் அமர் கிறார்கள். அவர் பார்த்தாலொழிய அவள் அசைவதில்லை. அவள் அசைந்து விரிந் தால் ஒழிய அவர் பார்வை கலைவ தில்லை. இரு நேர்எதிர் கோணங்களில் நின்று இருவரும் உலகத்தையும் அதன் இயக்கத்தையும் உருவாக்குகிறார்கள். குறைவு ஏதும் இல்லாத லயக்கட்டுப்பாட்டுடன் இயங்கக் கூடிய உலகத்தை அவர்கள் படைக்கிறார்கள்.

இப்படி இது உருவாகும் போது முந் தையபடைப்பில் இடம்பெற்ற உயிர் கள், இப்போது மீண்டும் தத்தமது பண் புகளுக்குரிய முந்தைய வாசனைகளுடன் அங்கே இடம்பெறுகின்றன. அவரவர் குரிய குறைநிறைகளுடன் அன்னை பராசக்தியின் இயக்கத்திற்கு இசைந்து அவை ஒவ்வொரு விதமான பிறவியை அடைகின்றன. இதற்கேற்ற பின்னணியை கொடுக்கவும் விளைவுகளை ஏற்படுத்த வும் புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற கொடிய சக்திகளையும் இயற்கை யின் மூலமே தோற்றுவிக்கிறாள். அன்னை, இத்தகைய உலகத்துக்குள் ஒவ்வொரு உயிரும் தமக்குரிய வாசனையுடனும் நுழைகின்றன. அவருடைய பிராப்தம் என் னவோ அதற்கேற்றபடி ஒரு சூழ்நிலை யிலும் இடத்திலும், பருவத்திலும் குறித்த உருவிலும் பிறந்து தமக்குரிய வாசனைகள் தீரும்வரை வாழ்க்கையை கழிக்கிறார்கள். இப்படி செய்யும் போது புதிய ஆசைகளின் மூலம் புதிய வாச னைகள் அந்த உயிரைப் பிடிக்கின்றன. அவை கழிவதற்கு மீண்டும் பிறவி எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்வாறு பிறப்பதும் மரிப்பதும் ஆன சுழற்சி மாறி மாறி நிகழ்கிறது.

அன்னையின் சக்தி இயக்கம் தொட ரும் வரை இந்த சுழற்சியும் தொடர்கிறது. அன்னையின் இயக்கம் முடிந்து அடங் கும் போது உலகமும் முடிவின் எல் லையை அடைகிறது. எல்லா உயிர்களும் முடிந்து உருவழிந்து மறைகின்றன. மீண் டும் புதிய உருவமும் புதிய இயக்கமும் தொடங்குகின்றன. இதுவே பிரளை யமும் புதிய தோற்றமும் ஆகும்.

இந்த சுழற்சியில் மனிதன் வருந்தி வேதனைக்கு ஆளாகாமல் இருக்க அன்னை பராசக்தியை வழிபட வேண்டும். அவளு டைய லீலைகளைப் புரிந்துகொண்டு பக்திப் பரவசத்துடன் அடிபணிய வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். அன்னை அருள் தந்து ஆட்கொண்டால் ஈசனின் அருளும் கிடைக்கும் எல்லையில்லா பேரானந்தத்தால் உணர்ந்து அடையவும் முடியும் இதைத் தருவதே ஸ்ரீசக்கர வழிபாடு.

இந்து சமயிகளாகிய எங்களுடைய வழிபாடுகளில் *108* தடவை உச்சரிப்பதும் ஜெபம் செய்வதும் ஏன்? அது ஏன் வேறு எண்ணாக இருக்கக்கூடாது எனும் சந்தேகம் அவர்கள் மனதில் இருக்க கூடும். ஆஞ்சநேயருக்கு *108* பெயர்கள் உண்டு என்பார்கள். பொதுவாக எந்தக் கடவுளை துதிக்கும் போதும் *108* பெயர்களை கூறி துதிப்பது வழக்கமாகி விட்டது. அது போல ஜெபம் செய்வதற்கும் *108* தான் அது ஏன் *108* ஆக இருக்க வேண்டும் *110* அல்லது *112* ஆகவோ ஏன் இருக்கக் கூடாது. *108*க்கு தனிமையான மகிமையுண்டு அதனால் தான் சைவர்கள் *108* என்று விதித்திருக்கிறார்கள்.

ஒரு மனிதன் ஒரு மணி நேரத்துக்கு *900* தடவை வீதம் *21600* தடவைகள் ஒரு நாளில் மூச்சு விடுகிறான். இதில் *10800* தடவைகள் காலநேரத்தில் மூச்சு விடுகிறான். ஒவ்வொரு தடவை மூச்சு விடும் போதும் அவன் இறைவனை எண்ணி நான் அவரே தான் என்று தெய்வத்தை தன்னுள் உணரவேண்டும். இதுவே சோஹரம் எனப்படுவது. ஆகவே *216* அல்லது *108* என்பது இந்த உணர்வின் முக்கிய அங்கமாக விளங்குகிறது.

இதில் *9* என்பது பிரமனைக் குறிக்கும் எண்ணாகும். அது எப்படி பெருக்கினாலும் கூட்டினாலும் மாறாமல் வருகிறது. *(9*12 =108 : 1+8=9, 9*9=81, 8+1=9)* இப்படி வந்து விடும் தவிர *12* என்பது சூரியனை குறிப்பது அது *12* இராசிகளின் வழியே சஞ்சரிக்கிறது.

ஒவ்வொரு ராசியும் ஒவ்வொரு மாதம் என்பது கணக்கு ஒன்பது என்பது பிரமத் தைக் குறிப்பது. அது *12* இராசிகளின் வழியே சஞ்சரிக்கிறது.

ஒவ்வொரு ராசியும் ஒவ்வொரு மாதம் என்பது கணக்கு ஒன்பது என்பது பிரமத்தை குறிப்பது அதேபோல *8* என்பது மாயையைக் குறிப்பது *8* இன் பெருக்கங்கள் குறைந்து கொண்டே தான் போகும். எட்டை இரண்டால் பெருக்கினால் *16* வரும் *(1+6=7)* எட்டை மூன்றால் பெருக்கினால் *24* வரும் *(2+4=6)* எட்டை நான்கால் பெருக்கினால் *32 (3+2=5)* எட்டை *5* ஆல் பெருக்கினால் *40* வரும் *(4+0=4)* எட்டை ஆறால் பெருக்கினால் *48* வரும் *(4+8=12, 1+2=3)* எட்டை ஏழால் பெருக்கினால் *56* வரும் *(5+6=11, 1+1=2)* எட்டை எட்டால் பெருக்கினால் *64* வரும் *(6+4=10, 1+0=1)* இப்படி மாயையின் வடிவமான எட்டு போகப்போக குறைந்து கொண்டேபோகிறது. ஆக இப்படி உள்ள எட்டை உண்மையே வடிவமான பரப்பிரமத்துடன் இணைக்கும் போது எட்டு ஏகம் இடையில் நான் ஒன்றும் இல்லை. என்பதை உணர வேண்டும். இதுவே *1-0-8=108* என்பதாகும்.

ஒவ்வொன்றுக்கும் ஒரு பொருள் உண்டு அதை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் அதிலிருந்து பெரிய கருத்துக்கள் கிடைக்கும். சாதாரண கல்லேயானாலும் இறைவனின் பாதம்பட்டதினால் தான் அகலிகை தனது சுயரூபத்தை அடைய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ சமயமும் எமது கலைகளும்

**அருள்யோதீஸ்வரன் இளங்கீரன்**
பொறியியற் பீடம்

அமிழ்தினும் இனிய தமிழோடு மிக இறுக்கமாக பின்னிப் பிணைந்தது எமது சைவ சமயமாகும். மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது எமது சைவ சமயமாகும். முடியுடை மன்னர்கள் கொடியோடும், கொற்றமும் படையோடும் நாடாண்டு கொண்டிருந்த போது புதிய புதிய நாடுகளையும் பொருள் பண்டங்களையும் தேடி அலைந்தோர் எமது நாடுகளிலும் வேரூன்றிச் சில காலம் தமது தடங்களைப் பதித்தனர். எமது வளங்கள் ஒழிந்தும், வம்சங்களை அழித்தும் கொடுமைகள் செய்தது மட்டுமல்லாது. தமது மதங்களை பரப்புவதற்காக எம்மவர்களையும் தம்வயப்படுத்தினர். கல்வியும், காசும், வசதிகளும், பதவிகளும் தருவதாக ஆசை காட்டி வாக்களித்தனர். இந்த ஆசைகளில் மயங்கினோர் அன்றிலிருந்தே அவற்றிற்கு அடிமையாகி விட்டனர். ஆனால் அப்படிப்பட்டவர்களால் கூட எமது சைவ மதத்தோடு இறுக்கமாகப் பிணைந்திருக்கின்ற மொழியையும், கலைகளையும் இன்று வரை புறக்கணிக்க முடியவில்லை. பிறமொழிகளைக் கற்றாலும் பிற மதங்களைத் தழுவினாலும் எமது தலைமுறையினருக்குக் காலங்காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்கள் எமது கலைகளேயாகும்.

ஆன்மாக்கள் இறைவனிடம் ஒன்றி இலயித்து நிற்கும் இடம் ஆலயம். ஆன போதும் இசைக்கு அங்கே தனியிடம் உண்டு. இசையானது எமது வாழ்க் கையோடு ஆரம்பம் முதல் வாழ்வின் இறுதிவரை இரண்டறக் கலந்துள்ளதும் கண்கூடு. தாலாட்டில் ஆரம்பித்து. அம் மனை, துதிப்பாடல், நலங்கொடு தொடர்ந்து ஒப்பாரியில் முடிகிறது. மனித வாழ்க்கை சங்க காலப் புலவர்களால் இசைக்கு இலக்கணம் கண்டபோதும் தமிழிசை யின் வளர்ச்சிக்கு இறைவன் வாழும் ஆலயங்கள் இசைச் சூழலை வளர்த்துக் கொடுத்தன. என்பது வரலாறு கண்ட உண்மை.

சமய குரவர்களால் பாடப்பட்ட தேவாரப் பண்களிலிருந்து ஆரம்பித்ததே தமிழிசை. அதன் பின்னர் எத்தனையோ நாயன்மார்களும், ஏனையோர்களும் இறை வன் மேலுள்ள பக்தி மேம்பட இசை யோடு கூடிய ஆராதனைகளையே செய்த னர். இவர்கள் பாடிய பாடல்களையே அன்று முதல் இன்று வரை ஆலயங்களில் அவ்வப்போதும், ஆராதனைகளின் போதும் கேட்கின்றோம். இறைவன் கூட சில பக்தர்களை சோதித்தபோது தமிழில் பாடுக என்று பணித்ததாகவே படித்திருக் கின்றறோம்.

இசையோடு பாடல்களைப் பாடியும். பல வகைப்பட்ட ஆடல்களை ஆடியும் மக்கள் இறைவனைப் பணிந்து அழைத்து வழிபட்டனர். சிவனைக் கூத்தன் நடன மாடுவன் என்றும் அழைப்பர். நடராஜன் தில்லையிலே ஆடுவான். இடுகாட்டிலேயும் ஆடுவான் என்றும் படித்திருக்கின்றோம். சிவனின் பெயரிலேயே நடனமிடுபவன் என்பதும் கலந்திருக்கின்றது. சிவன் உல கைப் படைத்த போதும் இயங்க வைக்க ஆனந்தத்தாண்டவமும், மாயையை அழிக்க அரோகரத் தாண்டவமும் ஆடுவதாகவும் திருவிளையாடல்கள் தெளிவுபடுத்து கின்றன. இதனை விட இடதுபுறம் அமர்ந் திருக்கும் நடனமிடும் மலைமகள், நர்த் தன தாண்டவம் ஆடும் விநாயகப் பெரு மான் என்றெல்லாம் நடனக் கலையை நமது தெய்வங்களுடன் தொடர்புபடுத் திய புராணக் கதைகள் ஏராளமாக இருக் கின்றன.

இசைக் கருவிகளில் முக்கியமாக அறு பத்து நான்கு கலைகளை உணர்த்திய சரஸ்வதியின் கைகளில் வீணையும், கோகு லக் கண்ணனின் கைகளில் புல்லாங்கு ழலும் நந்தியின் கழுத்தில் மத்தளமும் இருப்பதை எங்கும் காணலாம். சமய குரவர் களின் கைகளில் தாளம் இருப்பதையும் காணலாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப் பட்ட பெரிய கோயில்களிலும், சிறிய கோயில்களிலும் அமைக் கப்பட்டுள்ள கோபுரங்கள், மதில்கள், விமானங்கள் என்பவற்றில் காணப்படும் சிற்பங்களில் தாளமிட்டுப் பாடுவோரையும் பதமெடுத்து ஆடுவோரையும் பக்குவமாக பக்க வாத்தியங்கள் இசைப் பவரையும் அருகிருந்து கேட்போரையும் இன்னும் பலரையும் அழகாகச் சிலை களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடித்திருக்கின்றார்கள்.

ஆதியிலிருந்தே ஆண்டவன் சந்நிதிகள் எமது கலைகளை வளர்த்து வந்துள்ளன என்பதற்கு ஆலய அமைப்புக்களும் சான்றுகளாக விளங்குகின்றன. இறைவன் வீற்றிருக்கும் கருவறை தவிர, பல பெரிய மண்டபங்களையும் ஆலயங்களில் அமைத்தனர். இவை நம் கலை, கலாசாரங்களை வளர்க்கப் பயன்பட்டன. கலைகளை வளர்ப்பதற்கு விசாலமான மண்டபங்கள் தேவையென அறிந்த அரசர்களும், செல்வந்தர்களும் அற்புதமான அழகிய ஆலயங்களை அமைத்ததோடு, மண் மண்டபம், கலாமண்டபம், ஆஸ்தான மண்டபம், வசந்த மண்டபம் போன்றவற்றை அமைத்து அங்கே இசை, கதா, காலாட்சேபம், நடனம், நாடகம், கூட்டுப்பிரார்த்னை போன்றவற்றை நடத்தினர் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன.

பல்லவ, சோழ மன்னர்கள் ஆலயங்களில் நாட்டிய மகளிரைக் கலை பரப்ப அமர்த்திக் கலைகளை வளர்த்திருக்கிறார்கள். இம்முறை பிற்காலத்தில் பாண்டிய, நாயக்க மன்னர்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. அரசரை மகிழ்விக்கப் புலவர்களும், இசைவாணர்களும் சென்று இனிய பாடல்களைப் பாடி, பரிசில்கள் பெற்றுச் சென்றதாக வரலாறுகள் கூறுகின்றன. தமிழோடு விளையாடி மகிழ வந்த இறைவன் நக்கீரனோடு வாதஞ்செய்து தருமிக்குப் பொற்கிழி பெற்றுக் கொடுத்த கதை யாவரும் அறிந்திருந்ததொன்றே அல்லவா.

இப்படியாக இன்று ஆலயங்களிலே அத்திவாரமிடப்பட்ட எமது கலைகள், காலத்திற்கு காலம் தோன்றிய கலை வல்லுனர்களால் விருத்தி செய்யப்பட்டு இப்போது சிறப்புற்று விளங்குகிறது. ஆதியிலே இவற்றைக் கற்போரைச் சமுதாயத்திலிருந்து தள்ளி வைத்திருந்தனர். ஆனால், தற்போது இவற்றைக் கற்பவர்கள் சமுதாயத்திலேயே உயர்ந்தவர்களாக கருதப்படுகிறார்கள். வேற்று நாட்டினரும், பிற மதத்தினரும், அயல் இனந்தவரும் விலை மதிப்பற்ற எமது கலைகளை சாத்திர முறைப்படி கற்கிறார்கள். இவற்றைக் கற்பதனால் மனம் மென்மையும், மேன்மையும் இனிமையும் அடைகின்றது. அதனால் எமது வாழ்வு நன்மையடைகிறது. மொத்தத்தில் எமது சமுதாயமே மேன்மை அடைகிறது.

புலம்பெயர்ந்த நாடுகளிலே ஏராளமான இளம் பருவத்தினர். சமூகத்தினர் இக் கவின் கலைகளைக் கற்கின்றனர். தமிழ்ப் பாடசாலைகள், தனியார் இடங்கள், ஆலயங்கள் என்பவற்றில் இவை தவறாமல் கற்பிக்கப்படுகின்றன. பெரும் ஆராவாரங்களுடன் இவற்றைக் கற்றோரில் பலர் அரங்கேற்றம் செய்கின்றார்கள். அதன் பிறகு அவற்றை அப்படியே மூடை கட்டி வைத்து விடுகின்றார்கள். அவற்றை சொல்லிக் கொடுக்கும் நிலையங்களும், ஆசிரியர்களில் பெரும்பான்மையானவர்களும் வியாபார நோக்குடனேயே செய்வதாகச் சொல்லப்படுகிறது. அதுவுமல்லாமல் அரங்கேற்றத்தின் பின்னர் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கொடுப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமானோர் முன்வருவதில்லை. தமக்குத் தெரிந்தவர்கள், நண்பர்கள், சிறிய பிரபல்யமானவர்கள், அவர்களது மாணவர்கள், பிள்ளைகள் போன்றவர்களுக்கே சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. இவைகளும் இதற்கொரு காரணமாக அமையலாம். இந்நிலை மாற வேண்டும்.

ஆலய விழாக்களில் இயல், இசை, நாடக, நடன நிகழ்ச்சிகள் நடைபெறுவது, இப்போதெல்லாம் இன்றியமையாததாகின்றது. இப்போது ஆலய நிர்வாகிகளும் அவற்றை ஒழுங்குபடுத்துபவர்களும் சகலருக்கும் சமமாக சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். எமது கலைகளை எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் கற்றவர்களுக்கும் கற்பித்தவர்களுக்கும் அவற்றை தொடர்ந்து பயிற்சி செய்வதற்கு இவை மேலும் மேலும் வழி வகுக்க வேண்டும்.

ஆதியில் அரங்கேற்றங்கள் எல்லாம் சைவ ஆலயங்களிலே, ஆண்டவன் முன்னிலையிலேதான் நடந்தேறின. ஆனால் இப்போது மக்கள் தொகை இடவசதிகள் போன்ற பல காரணங்களால் அப்படி நடைபெறுவதில்லை. எப்படியிருந்தபோதும் சைவ ஆலயங்களிலே ஆரம்பித்த எமது கலைகள் இப்போது உலகம் முழுவதும் பரந்த சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன. உலகம் முழுவதும் பரந்திருக்கின்ற பல்வேறு வகைப்பட்ட ரசிகர்களின் இரச னைக்கு உரியதாகவும் வளர்ச்சி கண்டிருக்கின்றன. இந்த வேளையில் இவற்றை வளர்க்க மேலும் மேலும் ஊக்குவிப்பது சைவ மக்களாகிய எமது தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துக்களின் சிற்பக் கலை

**சுபாகரன் ஹரிவர்த்தன்**
பொறியியற் பீடம்

இந்துக்கள் இன்று நேற்றல்ல இற்றைப்படுத்த இயலாத பண்பாட்டுப் பழமையையும் பாரம்பரியத்தையும் கொண்டவர்கள். இப்பண்பாடு உணர்வு, சமயம், கலை, தத்துவம் என்பவற்றின் கூட்டுருவாக்கம் எனலாம். இந்துக் கலை என்பது வெறும் காட்சிப் பொருளே அன்றி கற்பனைப்பொருள் அல்ல. இந்துக்கள் தம் ஆத்ம தேடலின் ஆத்மீக தாகத்தின் வடிகால்களாகவே கலைஞானத்தை தம் எதிர்கால தலைமுறையினருக்கு விட்டுச் சென்றனர். இந்துக் கலைகள் 64 என்பது மரபு. இவற்றுள் சிறந்தவை நுண்கலைகள். இவை கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பன ஆகும். இவை ஒரு கலைஞனின் உள்ளார்ந்த ஆற்றலாக வெளிப்படுபவை. இந்திய மக்கள் மிகத் தொன்மையான காலந்தொட்டே கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் ஆகிய நுண் கலைகளை பொன் எனப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர்.

இக் கலைப் படைப்புக்கள் உலகையே வியக்க வைக்கும் அளவுக்கு கலைத்துவம் மிக்க அற்புதமான படைப்புக்களாக விளங்குகின்றன. மனிதன் படைத்த கலைகளுள் மிகச் சிறந்தது சிற்பக் கலை என்பர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரிகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் சான்றுகளில் சிற்பக் கலையை விட சிறந்தது எதுவும் இல்லை.

கண்ணால் கண்ட உருவங்களையோ கற்பனை உருவங்களையோ வடிவமைத்து செய்வது சிற்பம் எனப்படும். அதனை வடிப்பவன் சிற்பி எனப்படுவான். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம் கண்ட சருக்கரை, மெழுகு என்பன சிற்பம் வடிக்க ஏற்றவை என பிங்கல நிகண்டு கூறும். கல்லில் கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக்கல் என்பனவும் உலோகங்களில் பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு ஆகியன ஏற்றனவாக கருதப்பட்டன.

வடிவம் முழுவதையும் முன்புறம் , பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களை முழுவடிவ சிற்பங்கள் என்றும் வடிவத்தின் ஒருபுறம் மட்டும் காட்டும் சிற்பங்களை புடைப்பு சிற்பங்கள் என்றும் வகைப்படுத்துவர். கோயில்களில் காணப்படும் முதன்மை தெய்வத் திருமேனிகளும் உற்சவ திரு மேனிகளும் முழுவடிவ சிற்பங்கள் ஆகும்.

சிற்பாசாரியாரால் செதுக்கப்படுபவை சிற்பம் - அவற்றிற்கு சிவாசாரியர்கள் மந்திர தந்திர யந்திர அனுஷ்தானங்களை செய்து இறை நிலைப்படுத்தும் போது எழுபவை விக்கிரகம் எனப்படும்.

வட இந்திய வரலாற்றில் சிற்பக் கலையின் உன்னத வளர்ச்சிக்கான சான்றுகளை குப்தர் கால சிற்பங்களில் காண முடியும். குசானர் கால லிங்க வழிபாட்டின் தொடர்ச்சியாக லிங்கத்தை ஒரு முகத்துடனும் நான்கு முகத்துடனும் படைத்து வழிபடும் மரபினை குப்தர்கள் பேணினர். மேலும் திருமாலை அவதாரச் சிற்பமாக வடிக்கும் மரபு இங்கேயே தோற்றம் கண்டது. வட மதுரையில் உள்ள திருமாலின் சிற்பம் உதயகிரி புடைப்புச் சிற்பம் ஆகும். பித்தரக் கோள் கோயிலில் குகைவாயிலில் உள்ள திருமாலின் வராக அவதார புடைப்புச் சிற்பம். பித்தரக் கோன் கோயிலில் காணப்படும். புராணக் கதை கூறும் சுடுமட் சிலைகள், தசாரதாரக் கோயிலின் நுழைவாயிலின் இருபுறமும் உள்ள கங்கை, யமுனை சிற்பங்கள் என்பன குப்தர்களின் சிற்ப கலைக்கு தக்க சான்றெனலாம்.

பண்டைய காலம் தொட்டே இந்துக்களின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக கோயில் கோபுரங்களையும் உருவச் சிலைகளையும் கோயிற் தேரையும் சிறந்த சான்றாகக் கருதலாம். இதிலிருந்து இந்துக்கள் சிற்பக் கலையில் பண்டைய காலம் தொட்டே சிறந்து விளங்கினர் என்ற முடிவுக்கு வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மதம் போதிக்கும் விஞ்ஞானம்

**புஸ்பகுமார் வைஷ்ணவன் ,**
பொறியியற் பீடம்

உலகின் மிகவும் தொன்மையானதும் மூன்றாவது பெரிய சமயமாகவும் இந்து சமயம் விளங்குகின்றது. பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தைத் தோற்று வித்தவர் என்று யாருமில்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம் ஆகும். இந்து மதம் என்பது விஞ்ஞானம், வானியல் என்பவற்றில் அக்காலத்திலேயே பல பரிமாணங்களை கொண்டு அமைந்திருந்தது.

இன்றைய மேல்நாட்டு அறிவியல் சிந்தனையின் சுவடுகூடப் படாத சங்க காலத்தமிழரிடையே இருந்த அறிவியல் அறிவும் உணர்வும் அதிலும் குறிப்பாக வானியல் பற்றிக் கொண்டிருக்கும் கருத் தும் சிந்தனையையும் நம்மை வியக்க வைக்கின்றது. அவை பற்றி விரிவாக நோக்குமிடத்து....

மரத்தில் இருந்து விழுந்த அப்பிள் பழத்தை கண்ட நியூட்டன் புவியீர்ப்பு விசையை கண்டறிந்தார். பின்பு கிரகங்க ளுக்கு இடையிலான ஈர்ப்பு விசையை அவர் கண்டதன் விளைவாக பல முன் னேற்றகரமான கண்டு பிடிப்புக் களை கண்டு பிடித்தார். ஆனால் இந்து மதத் தின் பிரஸ்தின உபநிஷாதம் என் கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேதாந்த நூலில் இது பற்றி ஏற்கனவே குறிப்புக்கள் இடப்பட்டுள் ளன. பிராணா சக்தி, அபனா சக்தி என்ற இரண்டு சொற்கள் மூலம் இது விளக் கப்படுகின்றது. அபனா சக்தி என்பது ஈர்ப்பு சக்தி பிரணா சக்தி என்பது எதிர் ஈர்ப்பு சக்தி ஆகும்.

கணிதவியலில் இந்து மதம் பெரும் நுட்பங்களை உலகில் தந்தது என்பதும் வியக்கத்தக்க விடயம். பைதகரஸ் எனும் கிரேக்க விஞ்ஞானிக்கு முன்பு வாழ்ந்த (கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில்) ஆபஸ் தம்பர் தனது தீர்க்கஸ்யாஷ்ணா ரஜ்ஜி பார்ஜ்வமானி எனும் செய்யுளில் வர்க்க மூலம் இரண்டுக்குரிய துல்லியமான பெறுமானத்தை 1.4142156 என்பதை துல்லியமாக கணித்துள்ளார்.

உயிரியல் கொள்கையாக விளங்கும் டார்வின் கோட்பாட்டை விளக்குவதா கத் திருமாலின் 10 அவதாரங்கள் அமைந் துள்ளன. நீரில் வாழும் உயிராக மச்சா வதாரம், நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மையுடையதாக கூர்ம அவதாரம், நிலத்திலே மட்டும் வாழ்கின்ற வராக அவதாரம் பிறகு விலங்கு மனிதனுமாக நரசிம்ம அவதாரம் அதன் பின்னரே வளர்ச்சி அடைந்த முழு மனிதன் கிருஷ் ணன் இராமன் அவதாரங்கள் அதே நேரம் விஷ்ணுவின் வாமன அவதாரம் என்பது விஞ்ஞான ரீதியான பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கிய கட்டமாகும். அதாவது உயிரியலின் வளர்ச்சிப் படிக ளில் குறிப்பிடப்படும் குள்ளமான வாமன அவதாரத்தை குறிப்பிடலாம்.

இந்துக்களின் ஆலய அமைப்புக்கூட பாரிய விஞ்ஞான உண்மைகள் பொதிந் திருக்கும் ஓர் உன்னத படைப்பு ஆகும். ஆலய கோபுரத்தில் ஏழு நிலைகள் உள்ளன. இந்த ஏழு நிலைகளும் நம் உடலில் உள்ள ஏழு சக்திச் சக்கரங்களைக் குறிக்கும் கோபுரத்தின் உச்சியில் தங்கத் தினால் அல்லது வெள்ளியினால் அல் லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கல சங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதன் அடியிலும் வைக்கப்படும் தானியங் களும் உலோகங்களும் மின்காந்த அலை களை ஈர்க்கும் சக்தியினை கலசங்களுக்கு கொடுக்கின்றன. இத்தானியங்களும் உலோ கங்களும் 12 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றப்படுவது வழக்கம். ஏனெனில் இவை 12 வருடங்களில் தமது சக்தியை இழந்து விடுகின்றன. அதனால் தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபி ஷேகம் செய்து இவை புதுப்பிக்கப் படுகின்றன. இச் சக்தியை பெறுகின்ற கலசங்கள் இடி, மின்னல் தாங்கும் வலு வைப் பெறுகின்றன. அறிவியல் வளர்ச் சியுடைய காலப் பகுதிகளில் கோயில் கலசங்களே இடி தாங்கியாக தொழிற் பட்டன. இதன் காரணமாகவே ஊருக்கு ஓர் கோயில் என நம்முன்னோர்கள் மர பினை ஏற்படுத்தி இருந்தார்கள்.

கோபுர வாகனமானது ஊடுருவிக் கதிர் ஆய்வு கருவி போல அமைக்கப்பட் டிருக்கிறது. நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்கு புலப்படாத ஊடுருவிக் கதிரானது காந்த அலைகளாக நம் உடல் மீது செல்கின்றது. இதனால் தான் நாம் கோயிலுக்குள் நுழையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பாக கை, கால்களைச் சுத்தம் செய்வது வழக்கம். குதிக்கால்களை மேலிருந்து கழுவுவதற்குரிய விஞ்ஞான விளக்கம் என்னவென்றால் குதிக்காலில் தான் நமது மூளையில் அமைந்துள்ள "பிட்யூட்டரி" சுரப்பியுடன் தொடர்புள்ள முக்கிய நரம்பு அமைந்துள்ளது. நாம் உட்பிரகாரத்தில் செல்லும் பொழுது வேகத்தை குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில் படிகளை ஈரக்கால்களுடன் தொட்டுச்செல்லுதல் வேண்டும். அப்படிக் குனிந்து தொடும் போது ஏற்கனவே கோபுர கலசங்களின் ஊடாகச் சேர்க்கப்பட்ட மின்கதிர்களின் முழுப்பயனையும் அடைய முடியும்.

பௌதீகவியலின் ஒரு பிரிவான அணுவியலில் அண்மைக் காலத்தில் புதிய கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது அணுவைப் பிளக்க இயலும் என்ற கொள்கையாகும். ஆனால் தொன்மை காலத்திலேயே 'அணுவை துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்பதன் மூலம் இச் சிந்தனையை சான்றோர்கள் கொண்டிருந்ததை அவதானிக்க முடிகிறது. அவ்வாறே நீர் பொருளுக்குச் சுருங்கும் தன்மை இல்லை. நீர்பொருளின் இவ் சுருங்கா இயல்பை அறிவியல் பூர்வமாக கண்டறிந்து கூறியவர் பஸ்கால் என்னும் அறிஞர். பஸ்காலின் விதிக்கு சான்றாக "ஆடி அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது" என்று ஔவையின் பாடலில் ஆழத்தை பொறுத்து அமுக்கம் மிகுகின்றது என்ற மற்றொரு விஞ்ஞான உண்மையும் எடுத்துரைக்கப்படுகின்றது.

இந்து சமயத்தில் குறிப்பிடப்படும் நடைமுறைகள் இக்காலத்தில் மூட நம்பிக்கைகளாகவே கருதப்படுகின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றிலும் விஞ்ஞான உண்மைகள் பொதிந்துள்ளன. அதாவது ஒருவரை முதன்முதலாக சந்திக்கும்போது நமஸ்கரிப்பது இந்து சமய பண்பாடாகும். ஆனால் இன்றோ மேல் நாட்டவர்கள் போல் கைகுலுக்கிக் கொள்கின்றனர். நமஸ்காரம் என்பது இரண்டு உள்ளங்கைகளை சேர்த்து மரியாதையின் பொருட்டு குலுக்கப்படுவதாக இருப்பினும் அறிவியல் ரீதியில் பார்க்கும் போது இரு கைகளின் விரல் முனைகளுக்கு அழுத்தம் தரப்படுகின்றது. இது கண்கள், காதுகள் மற்றும் மனம் என்பவற்றுடன் தொடர்புடைய புள்ளிகளை அழுத்துகிறது. இதனால் நமக்கு அறிமுகமாகும் நபர் நீண்ட நேரம் நினைவில் இருப்பார் என்பதுடன் கைகுலுக்கலில் உண்டாகும் கிருமித் தொற்று இங்கு தவிர்க்கப்படுகின்றது.

இந்துக்களின் முதல் வணக்கமாகிய விநாயகருக்கு தலையில் குட்டிதோப்புக் கரணம் போடுவது வழக்கமாகும். இதற்கு இதிகாச கதைகளைக் காரணமாக கூறினாலும் உடற்செயன் முறையுடன் தொடர்புடைய விஞ்ஞானம் யாதெனில் தலையில் குட்டும் போது மூளை நரம்புகள் சுறுசுறுப்பாக இயங்குவதுடன் ஞாபக சக்தியும் அதிகரிக்கின்றது. தோப்புக் கரணம் போடுவதால் இரத்த ஓட்டம் சீராக்கப்படுகின்றது.

நம் முன்னோர்கள் உணவு உண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் ஒரு முறைமையை வகுத்துள் ளனர். அதாவது காரமான உணவுகள் செரிமான அமிலங்களைச் செயற்படுத்த உதவுகின்றது. அதேநேரம் இனிப்புக்கள் மாச்சத்து செரிமான செயலாக்கத்தை ஏற்படுத்துகின்றது பாரம்பரிய முறைப் படி தரையில் உட்கார்ந்து உண்ணும் போது பத்மாசன முறையில் அமர்கின் றோம். இந்நிலை அமைதியான உணர்வை ஏற்படுத்துவதுடன் செரிமானத்திற்கு ஏற்புடையமதாகவும் அமைகின்றது.

தூங்கும் போது வடதிசையில் தலை வைத்து உறங்கினால் மரணம் நிகழும் அல்லது இறைவனின் சக்தி வலுவற்று போய் விடும் என பல கதைகள் நில வினாலும் அதன் அறிவியல் உண்மை யாதெனில் வடக்கு நோக்கி தலை வைத்து நாம் தூங்கும் போது நம் உடலில் காந்த புலமும் பூமியின் காந்த புலமும் சமச்சீரற்ற நிலையில் காணப் படும். இதனால் இரத்த அழுத்தம் தொடர்பான நோய்கள் ஏற்படுவதுடன் பகலில் நாம் இச்சமச்சீரன்மையை சரி செய்யும் நோக்கில் கடினமான வேலை களை செய்ய வேண்டும். இது தவிர இந்த நிலையில் தூங்கும் போது நம் இரத்தத்திலுள்ள இரும்பு மூளைக்குள் அதிகரிப்பதால் தலைவலி அல்சைமர் நோய், மனநல வீழ்ச்சி நோய் மற்றும் மூளைச் சீரழிவு என்பன ஏற்படும். இதனாலேயே வடதிசையில் தலை வைத்து உறங்குவது உகந்ததல்ல எனக் கூறப்படு கின்றது.

இவ்வாறு இந்து மதத்தில் கூறப்படும் திலகம் வைத்தல், அணிகலன்கள் அணி தல், விரதம் அனுட்டித்தல் துளசிச்செடியை வணங்குதல் என அனைத்து நடைமுறை களுமே விஞ்ஞான பின்னணியைக் கொண் டதாகும்.

இந்து சமயம் வெறும் ஆன்மீகம் சார்ந் தது மட்டுமல்ல அறிவியல் கருத்துக்க ளையும் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்ட இன்றைய அறிவியலுக்கு சவால் விடுக்கக் கூடிய புனித மதமாகும். அந்த வகையில் இந்து மதம் காலத்தால் முன் தோன்றியது மட்டுமல்ல நமது காலத் தில் இருக்கும் அனைத்து விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் அதுவே முன் னோடியும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 108ன் சிறப்பு தெரியுமா?

**வை.கிருஷாந்தி**
3ம் வருடம்
பொறியியற்பீடம்

*படைத்த கடவுளுக்கும் அவனது படைப்புக்கும் உள்ள தொடர்பை விளக்கும் எண்ணாக 108 நிகழ்கிறது என்கிறார்கள் பிரார்த்தனை வேண்டுதல் என்று அன்றாடம் நாம் 108 என்ற எண்ணைப் பயன்படுத்துகிறோம். அதற்கு இதோ ஒரு சில உதாரணங்கள்.*

- *வேதத்தில் 108 உபநிடதங்கள்*
- *பஞ்சபூதத்தலங்கள், அறுபடை வீடுகள் என்பது போல சைவ வைணவ திவ்ய ஷோத்திரத்திரங்கள் 108*
- *நடராஜரின் கரணங்கள் 108 தாளங்கள் 108*
- *அர்ச்சனையில் 108 நாமங்கள்*
- *அரச மரத்தையும் பல தெய்வங்களையும் வலம் வருவது 108 முறை*
- *பிரபஞ்ச அமைப்பில் , பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் சந்திரனின் விட்டத்தைப் போல 108 மடங்கு*
- *பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் சூரியனின் விட்டத்தை போல 108 மடங்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சூரியனின் விட்டம் பூமியின் விட்டத்தைப் போல 108

- தாவோ தத்துவத்தின் 108 தெய் வீக நட்சத்திரங்கள்

- உத்தரா கண்டில் ஜோகேஸ்வரர் சிவன் கோவிலில் 108 சிவ சந்நி திகள்

- சீக்கிய குருமார்கள் 108 முடிச்சுக் கள் உள்ள கம்பளி பை மாலை யையே பயன்படுத்துவார்கள்.

- 108 சக்திநாடிகள் உடலின் பல் வேறு பாகங்களிலிருந்து இருதய ஸ்தானத்தில் குவிவதாக தந்திர சாஸ்திரம் கூறுகிறது.

108 என்பது வரையறைக்குட்பட்ட எண்ணாக இருந்து கோண்டு வரம்பற்ற நிலையை உணர்த்துகிறது "1" என்பது கடவுளை அல்லது உயர் உண்மையை யும் "0" என்புது எட்டுத் திக்குகளிலும் உள்ள எல்லையற்ற ஆகாயத்தையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக நுண்மதி (Spritual Intelligence)

**இ.கேஷங்கி,**
1ம் வருடம்
பொறியியற் பீடம்

விளங்குவதற்கான ஆற்றல், அறிவைப் பிரயோகிப்பதற்கான ஆற்றல் காரணங் காட்டுவதற்கான ஆற்றல், சூழலை ஏற்ற வகையில் மாற்றியமைப்பதற்கான ஆற்றல் போன்று பலவகை மாற்றங்களை உள் ளடக்கியதே நுண்மதியாகும். நுண்மதி தொடர்பான ஆய்வாளர் ஹவாரட் கார்ட்னரின் *(1993)* ஆய்வுகளின்படி நுண் மதியின் பல்வேறு வகைகள் ஒன்றில் ஒன்று சாராவண்ணம் விருத்தியடை கின்றன. அத்துடன் ஒரு நுண்மதி வகை யில் கொண்டுள்ள தேர்ச்சி மற்றைய நுண்மதி வகையின் தேர்ச்சியில் செல் வாக்குச் செலுத்தவில்லை. உதாரணமாக மொழிசார்திறன், தர்க்க ரீதியான கணித ஆற்றல்களின் தாக்கம் செலுத்தவில்லை மேலும் உடலியக்க நுண்மதி *(kinesthetic intelligence)* ஆளிடை நுண்மதி *(Inter per sonal intelligence)* என்றவாறு பலவகைக ளைக் காணலாம். இவ்வித்தியாசமான வகை நுண்மதிகள் மூளையின் பல்வேறு பகுதிகளுடன் காணப்படுகின்றது என கோல் மேன் என்பவர் கூறுகின்றார்.

உலகத்தில் நாம் நற்பிரஜையாக வாழ் வதற்காக ஆன்மாவினதும் உள்ளத்தின தும் உள்ளார்ந்த வாழ்க்கை தொடர்பு பட்டதே ஆன்மிக நுண்மதியாகும். மெய் மைநிலை சார்ந்த விளக்கங்கள் உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையின் பல்வேறு மட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஆன்மீக நுண்மதி அளிக் கின்றது. எனவே ஆன்மீக நுண்மதி என் பது ஒருவருடைய உள ஆற்றலை விட வும் அதிகமானதாகும். ஆன்மீக நுண்ம தியானது இருதயத்தைத் திறந்து உள் ளத்தை ஒளிபெறச்செய்து, ஆன்மாவை மனிதனாக வாழ வழிவகுக்கின்றது.

வெறுமனே கோயில்களுக்குச் சென்று விடுவதன் மூலமோ அபிஷேக ஆராத னைகள் மூலமோ எமது ஆன்மீக நுண் மதி விருத்தியடைந்துவிட்மாட்டாது. இறை சிந்தனைகள் அலை தொடர்புபட்ட பயிற் சிகள் அவசியமானவை.

ஆன்மீக நுண்மதியைத் துல்லியமாக் குவதற்குப் பொருத்தமானதொன்றாக தியானம் கருதப்படுகின்றது. இதற்கு கூர்ந்து ஆராய்தல், பகுத்து உணர்தல், புலனுர்வு பெறல் என்பன தொடர்புபடு கின்றது. யோகா பயிற்சிகளும் இவற்றிற் குப் பங்களிப்பைச் செலுத்துகின்றன. கவனப் பயிற்சி, ஒழுக்க விழுமியங் களைச் விதைத்தல் போன்ற பல்வேறு பயிற்சிகளின் மூலம் இந்நுண்மதியை விருத்தி செய்யலாம்.

உண்மை யதார்த்தத்தை உணர்தல் பொய் சொல்லாமை, பணிவு, தருமம் செய்தல், மெய்யான நடத்தை, சேவை மனப்பான்மை போன்ற தனியாள் பண் புகள் ஆன்மீக நுண்மதியுடன் சேர்ந்த காணப்படுகின்றன. வாழ்க்கையை அர்த்த முள்ளதாக ஆக்குவதற்கு மேற்கூறிய பயிற் சிகள் பண்புகள் என்பவற்றை விருத்த செய்வதோடு எமது ஆன்மீக நுண்மதி யையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்களின் பரிணாமத்தை விளக்கும் தசாவதாரம்

**பா.பாலினி**
பொறியியற் பீடம்,
3ம் வருடம்

உலகில் அதர்மம் அதிகமாகும் பொழுது தர்மத்தினை நிலைநாட்டுவதற்காக திருமாலால் எடுக்கப்பட்ட பல அவதாரங்களில் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமண அவதாரம், ராம அவதாரம், பரசுராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் ஆகிய பத்து அவதாரங்கள் மட்டும் தசாவதாரங்கள் என்று பெருமையாக அழைக்கப்படுகின்றன. இவற்றை உற்று நோக்குமிடத்து இதில் ஒளிந்திருக்கும் பரிணாமக் கொள்கையை அறிய இயலும்.

முதல் ஐந்து அவதாரங்களும் உயிர்களிலிருந்து மனிதனாக மாற்றம் அடைந்ததை விவரிக்கின்றன. அடுத்த ஐந்து அவதாரங்களும் மனிதனின் படிவளர்ச்சியை விவரிக்கின்றன.

1. ***மச்ச அவதாரம்:-*** மீனாக திருமால் அவதாரம் எடுத்து பிரளய காலத்தில் உலகை காப்பாற்றியதாக அறியப்படுகிறது. இதுவே தசாவதாரத்தின் முதல் அவதாரமாகும். பரிணாமவியல் கொள்கைப்படி நீரில் வாழும் உயிரான மீனிலிருந்தே உயிரங்களின் தோற்றம் ஆரம்பித்ததை குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **கூர்ம அவதாரம்:-** பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடையும் போது மேரு மலையை தாங்கி பிடிக்க திருமால் ஆமை ரூபத்தில் அவதாரம் எடுத்தாக புராணம் கூறுகிறது. பரிணாமக் கொள்கைப்படி நீர் வாழும் உயிர், நீர்நிலம் வாழும் உயிராக மாற்றம் அடைந்த்தை குறிக்கிறது.

3. **வராக அவதாரம்:-** இரணியாசுரன் எனும் அரக்கனிடமிருந்து பூமியை காப்பாற்ற பன்றி வடிவில் அவதாரம் எடுத்த்தாக புராணம் விளக்குகின்றது. பரிணாமவியல் கொள்கைப் படி நீர்நிலம் வாழ்பவை நில வாழ்பவையாக மாறியதை குறிக்கிறது.

4. **நரசிம்ம அவதாரம்:-** "நரன்" என்பது மனிதனைக் குறிக்கும் சொல் மனிதன் பாதியாகவும் மிருகம் பாதியாகவும் இருக்கின்ற திருமாலின் அவதாரம் இரணியனை கொல்ல எடுக்கப்பட்டதாக புராணம் கூறுகிறது. நில வாழ்பவைகளாக இருந்த மிருகம் சிந்தனை திறன் பெற்று மனிதன் பாதி மிருகம் பாதியாக இருந்த தொடக்க நிலையை இவ் அவதாரம் குறிக்கிறது.

5. **வாமண அவதாரம்:-** முழு மனிதனாக திருமால் எடுத்த அவதாரம் என அறியப்படுகின்றது. பரிணாமக் கொள்கைப்படி முழு மனிதனை இந்த அவதாரம் குறிக்கிறது.

6. **பரசுராம அவதாரம்:-** மிகவும் மூர்க்க மனிதனாக இவ் அவதாரம் சித்தரிக்கப்படுகிறது. கோடாரி ஆயுதத்தினை சிவனிடமிருந்து பெற்ற மனிதனாக பரசுராமர் புராணங்கள் வாயிலாக சித்தரிக்கப்படுகிறர் மனிதனாக மாற்றமடைந்த பின்பு மிருகங்களை மூர்க்கத்தனமான வேட்டையாடியதை இந்த அவதாரம் குறிக்கின்றது.

7. **ராம அவதாரம்:-** இராவணனை அழிப்பதற்காக ராமராக அவதாரம் எடுத்ததாக புராணங்கள் விளக்குகின்றன. மனிதன் குழுக்களாக இணைந்து தலைவனை தேர்ந்தெடுத்து வாழ்ந்தமையை ராம அவதாரம் குறிக்கிறது.

8. **பலராம அவதாரம்:-** கிருஷ்ணனின் அண்ணனாக திருமால் அவதரித்தாக புராணம் கூறுகிறது. இவ் அவதாரம் கைகளில் ஏர் கலப்பை ஏந்தி விவசாயம் செய்யும் மனிதனைக் குறிக்கின்றது.

9. **கிருஷ்ண அவதாரம்:-** கிருஷ்ணன் கம்சன் எனும் அரக்கனை அழிக்க அவதரித்ததாக புராணங்கள் குறிப்பிடுகின்றன. கிருஷ்ணன் ஆடுகளையும், மாடுகளையும் மேய்க்கும் சிறுவனாக இருந்து கால்நடைகளை தங்களின் வேலைகளுக்கு பயன்படுத்திக் கொண்ட மனிதர்களின் பரிணாமத்தை குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **கல்கி அவதாரம்:-** கலியுகத்தின் இறுதியில் திருமால் எடுத்த இறுதி அவதாரமாக அறியப்படு கிறது. ஆயதங்களும், வாகனமும் கொண்ட அவதாரமான கல்கி தினம் தினம் சிந்தனையில் வளர்ந்து கொண்டிருக்கும் மனி தன் மகாசக்தியாகமாறு வதை குறித்து நிற்கிறது.

உலகில் உள்ள பிறமதங்கள் அறிவி யலை மறுப்பதாகவும், எதிரானதாகவும் இருக்கின்ற போது இந்துமதம் மட்டும் அறிவியலோடு இணைந்த மதமாக இருப்பதை இதன் வாயிலாக அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌமார நெறியின் தோற்றம்

**செ.சாருஜா**
2ம் வருடம்
பொறியியற் பீடம்

வேதாந்தக் கோட்பாட்டினை பரப்பியவர்களில் முதன்மையானவராகக் காணப்படுகின்றவர் சங்கரர் ஆவார் இவர் இந்து சமய நெறிகளை ஆறு ஆக வகுத்து தந்துள்ளார், அவற்றுள் ஒன்றே கௌமார நெறியாகும்.

முருகனைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடப்படும் ஒரு நெறியாகும். இந்நெறிக்குரியவர்கள் கௌமாரர்கள் எனப்படுவார்கள் முருக வழிபாடானது தொன்மைச் சிறப்புடையதாகும். காந்தாரம், தொடக்கம் கன்னியாக்குமாரி வரை இந்நெறி பரவியிருந்தாக அறியமுடிகின்றது.

இந்த வகையில் இச் சமய நெறியின் தோற்றத்தினை பார்க்கையில் இந்து சமயத்தின் முதல் நூலாகிய வேதங்களின் பிராமணப் பகுதியில் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. வேதகால ரிஷிகள் யாகத்தின் முடிவிலே சுப்ரமணியோம் சுப்ரமணியோம் சுப்ரமணியோம் என மும் முறை அழைத்ததாக நைத்திரியக ஆரணியம் குறிப்பிடுகிறது. மேலும் பிரமணிய சுப்ரமணிய சடைய பதி எனவும் அழைத்தனர்.

சமய வரலாறு கூறும் புராணங்களில் முருகனின் தோற்றம் தோற்றப் பொலிவுகள் வர்ணணைகள் மூர்த்திச் சிறப்பு, அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் திறன் என்பன கூறப்பட்டுள்ளன. சான்றாக முருகன் சரவணப் பொய்கையிலே தோன்றியமை, கார்த்திகைப் பெண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் வளர்க்கப்பட்டமை சூரனை வதம் செய்தமை போன்ற வரலாற்றுப் புரா ணக் கதைகள் உள்ளன. கந்தபுராணத்தில் "சல்ரசல்கிதை" எனும் பகுதியில் முரு கனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

இவ்வாறாக வேதங்களிலும் புராணங் களிலும் கூறப்பட்ட கருத்துக்களை அடிப் படையாகக் கொண்டு 8ம் நூற்றாண்டில் சமய சீர்திருத்தம் செய்த சங்கரரால் ஷண்மதங்களில் ஒன்றாகக் கௌமார நெறி பிரஸ்தாபம் செய்யப் பெற்றது.

## முருகக் கடவுளின் திருவுருவத் தத்துவம்

இந்து சமயப் பிரிவுகளுக்கு காணப் படுவது போன்றே இந்நெறிக்கும் திருவுரு வத் தத்துவக் கருத்துகள் உள்ளன அவ் வகையில் முருகனுக்குரிய திருவுருவமா னது நின்றநிலையிலோ அல்லது இருந்த நிலையிலோஅமைக்கப்படுகின்றனஅவை தனி யாகவோ விநாயகக் கடவுளுடனோ அம் மையப்பருடனோ அல்லது வள்ளி தெய் வானையுடனோ அமைக்கப்படு கின்றன.

ஆறுமுகம், பன்னிரு திருக்கரங்கள், கரங் களிலே படைக்கலங்கள், மயில், பாம்பு, சேவற்கொடி, ஞானவேல் என்பவற் றுடன் கூடியதாக அமைக்கப்படும்.

தத்துவக்கருத்துக்கள் என்று பார்க்கும் போது முருகனுக்குரிய ஆறுமுகங்களும் ஆறு குணங்களைக் குறித்து நிற்கின் றன.. சுலதந்திரம்- தன்லயந்தனராத, சகல ர்ஞதை - முற்றறிவுடைமை, அலும் தசக்தி - பேரருள் உடைமை, திருப்தி - வரம்பிலின் பமுடைமை, அதந்தசக்தி - முடிவில்லா தந்தல் உடைமை, அனாதி பேதம் - இயல்பாக பாசங்களில் நின்றும் நீங்குதல்,

மேலும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், வசுத்தி, ஆக்ஞை எனும் ஆறு ஆதாரங்களையும் ஆறுசு வைகளையும் ஆறுமுகங்கள் குறித்து நிற் கின்றன. இதனை அருணகிரிநாதர் 'ஏறு மயில் ஏறி விளையாடு...' என திருப்புகழி னுடாக சிறப்பித்துள்ளார்.

முருகனுடைய பரம்பொருள் தத்து வத்தை உணர்த்தும் நூலாகிய கந்தபுரா ணத்தில் முருகப் பெருமான் சூரபத்மன், சிங்கமுகாசூரன், தாரகன் ஆகியோரை அழித்தமையை தத்துவரீதியில் குறிப்பிடு கின்றது. ஆணவம், கன்மம், மாயை எனப் படுகின்ற மூன்று மலங்களை அழித் தமையைச் சுட்டி நிற்கின்றது,

முருகனுடைய திருவுருவமானது அரு வமே உருவமாக இருக்கும் மூர்த்தமா கும். இங்கு வள்ளியம்மை-இச்சாசக்தி , தெய்வானை- கிரியாசக்தி ஞானவேல்-ஞானாசக்தி என்றவாறு குறிக்கின்றது. முருக மூர்த்தத்தில் பஞ்சகிரதியங்கள் அல்லது ஐந்தொழில்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது சேவல்-படைத் தல் மயில்-காத்தல், வள்ளியம்மை-அழித் தல், வேல் மறைத்தல் தெய்வானை அருளள்.

மேற் கூறப்பட்டவாறு சிறப்பு பெற்ற முருகக் கடவுளின் திருவுருவமானது தென் ஆசிய நாடுகள் மட்டுமல்லாது மேற்கத் தேய நாடுகள் தென்கிழக்கு நாடுகள் என உலகம் முழுவதிலும் வியாபித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறப்புமிக்க ஆடிப்பூரம்

**ஜசிதா சற்குருநாதன்**
பொறியியற் பீடம்
1ம் வருடம்

ஆடிப்பூரம் என்னும் விழா ஆடி மாதத்திலே பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படுவது. இது தேவிக்குரிய திருநாளாகும். இந்த நாளில் தான் உமாதேவியும் தோன்றியதாக கூறப்படுவதுண்டு. உலக மக்களை காக்க உமா எதேவியும் தோன்றியதாக கூறப்படுவதுண்டு. உலக மக்களை காக்க சக்தியாக அம்மாள் உருவெடுத்தாள். சித்தர்களும், யோகிகளும் இந்த நாளில் தவத்தை தொடங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அனைத்து உலகத்தையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் அகிலாண்ட கோடி அன்னைக்கு மஞ்சள் காப்பு, சந்தனக்காப்பு, குங்குமக்காப்பு நடத்துவார்கள். அந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகிக்கு வளைகாப்பு நடக்கும் நாள் தான் ஆடிப்பூரம் அன்னை உளம் மகிழ்ந்து மாந்தர்கள் அனைவருக்கும் தன் அருளை வழங்கும் நாள் பல்வேறு விதங்களில் அன்னையைக் கொண்டாடும் நாள் ஆடிப்பூரம்.

பல்வேறு ஆலயங்களில் ஆடிப்பூரம் அம்மனுக்குரிய பிரம்மோற்சவமாக பத்துநாள் திருவிழாவாக வாகன சேவையடன் –சிறப்பாக நடை பெறுகின்றது. ஆடிப்பூரம் மிகப்பெரிய பண்டிகையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனுக்கு கஞ்சி வார்க்கும் பண்டிகையாக சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. ஆடிப்பூரத்தன்று அம்பிகைக்கு சிறப்பு வழிபாடு நடக்காத கோவிலே இல்லை வைணவத் திருக்கோவில்களிலும் ஆடிப்பூரம் பத்துநாள் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. ஏனென்றால் ஆண்டாள் இந்த நட்சத்திரத்தில் அவதரித்தாள். ஆண்டாளின் இயற்பெயர் கோதை சில இடங்களில் ஆடிப்பூரம் முளைப்பாலிகை திருவிழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. ஒரு வாரத்திற்கு முன்னரே அவரவர் முளைப் பாலிகையை தயார் செய்கின்றனர். ஆடிப் பூரத்தன்ற அவை அம்மன் சந்நிதியில் சோக்கப்படுகின்றன. முளைவளர்த்துள்ள விதத்தில் இருந்து வருடம் எவ்வளவு செழிப்பாக இருக்கும் என்பதை உணர்த்துகின்றது என்பது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வச் சிறப்பைத் தரும் வரலக்சுமி விரதம்

**கோபிதா கிருஸ்ணபிள்ளை**
1ம் வருடம்
பொறியியற் பீடம்

பவிஷ்யோத்தர புராணத்திலே சிறப் பித்துக் கூறப்படும் இந்த வர லக்சுமி விரதம் ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமை யிலே அனுஷ் டிக்கப்பட வேண்டியது.

ஒரு சமயம் உமாதேவியார் சிவ பெருமானை நோக்கி ஐயனே பூவுலகில் சகல செல்வபோகங்களையம் சௌக்கி யங்களையும் புத்திரசம்பத்தையும் வழங் கக்கூடிய விரதம் எது? என்று வினாவி யபோது அவர் உமாதேவியாருக்கு இந்த விரத மகிமையைக் கூறினார்.

முன்பு குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் இருந்தாள் அவள் நல்ல தெய்வ பக்தியும் தூய்மையும் ஆசார அனுஷ்டானமும் உடையவளாக இருந்தாள் ஒருநாள் அவள் கனவிலே வரலக்சுமி தேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள் அவளும் உடனே சகல பெண்களையும் அழைத்து இப்புதுமை யைக் கூறினாள்.

குறித்த விரத நாளிலே சகல பெண் களுமாக நகர் முழுவதும் அலங்கரித்து முறைப்படி இவ்விரதம் அனுஷ்டித்து வரலாயினர். என்றுமில்லாதவாறு அங்கு சகல செல்வமும் பொலிந்து விளங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்களாலே அலங்கரித்த மண்டப நடுவிலே மேடையொன்றில் நெல், அரிசி முதலியவற்றை முறைப்படி பரப்பித் தாமரைக் கோலத்தை அதன் மேல் இட்டுக் கும்பத்தை அதன் மீது வைக்க வேண்டும். ஏனைய பூஜைகளுக்கு நீர் நிரம்பிய கும்பம் வைப்பது வழக்கம் ஆனால் வரலக்சுமி விரத பூஜைக்குப் பச்சையரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்க வேண்டும்.

நல்ல கழிநூலிலே மஞ்சள் தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுக்கள் முடிந்து இந்தக் காப்பினைக் கும்பத்தில் வைத்துப் பூஜையை ஆரம்பிக்கவேண்டும்.

வழக்கம் போல சங்கல்ப பூர்வமாக புண்ணியாகவாசன முதலியபூர்வாங்க பூஜைகளுடன் விசேஷ உபசார அங்க பூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து அதனை வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும் பொதுவாக விரதங்களுக்குக் காப்புக் கட்டும்போது ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டுவது வழக்கம். ஆனால் வரலக்சுமி பூஜைக்கு மட்டும் இது பெண்களுக்குரிய விரதம் என்பதால் வலது கையிலேயே காப்புக் கட்டிக் கொள்ள வேண்டும். ஸ்லோகத்திலேயே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றது. காப்பினைக் கையிலே கட்டும் போது சொல்லும் ஸ்லோகம் இது.

**ஸரவ மங்கல மாங்கல்யே ஸ்த்வப்ரீ தா**
**ப்ரணாலினீ**
**தோரகம் ப்ரகி க்ருஹணாமி ஸீப்ரீதா பவ**
**ஹவதா**
**பத்னாமி தஷிணே ஷஸ்தே நவகசூத்ரம்**
**சுப்ப்ரதம்**
**புத்ர பௌத'ரபி வருத்திம்ச**
**ஸௌபாக்கயம் தேஹிமேரேமே**

ஒன்பது முடிச்சுக்களுக்கும் உரிய நாமங்கள் வருமாறு கமலா, ராம, லோகமாதா, விஸ்வஜன்னி, மஹாலக்சுமி, ஷிராப்திதி நயா, விஸ்வஸாசஷணீ, சந்த்ரஸஹோதரீ , ஹரிவல்லபாஇவை ஒவ்வொன்றுக்கும் முன்னால் ஓங்காரமும் பின்னால் நம என்றும் சேர்த்துப் பூஜை செய்க .

விசேட நைவேத்தியமாக நெய்யுடன் கூடிய ஹவிஸ் (நெய்ச்சாதம்) சொல்லப் பட்டிருக்கின்றது. வரலக்சுமி பூஜைக்குரிய விசேஷ அர்ச்சனைப் பொருள் அறுகு.

உபவாசம் போன்று கடுமையான விதிமுறைகள் இந்த விரதத்துக்கில்லை. மத்தியானம் ஒரு நேரம் போசனம் செய்யலாம் இரவு பலகாரபட்சணங்கள் ஏதாவது உட்கொள்ளலாம். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்ய லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கலம் தரும் மகா சிவராத்திரி விரதம்

கீதாஞ்சனா கணேசமூர்த்தி
1ம் வருடம்,
பொறியியற்பீடம்.

இராத்திரி என்ற பெயரோடு அழைக்கப்படும் விரதங்களில் சிவனை துதித்து வணங்கப்படும் விரதமே சிவராத்திரியாகும். சிவராத்திரி நித்ய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மகா சிவராத்திரி, யோக சிவராத்திரி என்றெல்லாம் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சிவராத்திரிகள் பல இருந்தாலும் மாசி மாதத்தில் கிருஷ்ண பட்சத்தில் வரும் புண்ணிய தினமே மகாசிவராத்திரி ஆகும். இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை எண்ணி முழு நாளும் வழிபடும் சிறப்பான விரதம் இந்த சிவராத்திரி ஆகும்.

நமது ஐம்புலன்களையும் அடக்கி இறைவனது சிந்தனையோடு இறையன்பில் மூழ்கியிருக்கும் போது இந்த உலகின் இடையூறுகள் நம்மை எதுவும் செய்வதில்லை. உலகினில் உள்ள எல்லா பொருட்களுமே மாயையிடம் ஒடுங்கும் உலகம் எத்தனை காலம் இருக்கின்றதோ அத்தனை காலமும் பிரளயமும் உண்டு . இந்த காலத்தில் தான் உமாதேவி நான்கு காலமும் சிவனைப் பூஜித்தார். முழுமுதற் கடவுளான சிவபெருமான் மனம் இரங்கி உமாதேவியை நோக்கி உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார் அதற்கு அம்மையார் நான் தங்களை மனமுவந்து பூஜித்த இந்த நாள் சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத்திரி எனப் பெயர் பெற வேண்டும் எனக்கேட்டார். இதனால் சிவராத்திரி சிவ பூஜைக்கு சிறந்த நாளாகக் கொள் ளப்படுகின்றது.

சிவராத்திரி பற்றி பல கதைகள் மூல மாகவும் சிவராத்திரி மகிமை கூறப்ப டுகின்றது. சிவராத்திரியன்று நான்கு ஜாமங்களுக்கும் தனித்தனியான பூஜை முறைகள்சிவபுராணத்தில்கூறப்பட்டுள் ளன. அதைக் கடைப்பிடித்தால் அனைத் துப் பலன்களையும் பெறமுடியும். சிவ ராத்திரி அன்று முக்கியமாக சில விஷயங் களை கவனித்தல் வேண்டும் முதலாவது அபிஷேகம் இது ஆன்மாவைத் தூய் மைப்படுத்துவதற்குரியது. அடுத்த லிங்கத் துக்கு குங்குமம் அணிவித்தல் இது நல்லி யல்புகளையும் பலன்களையும் குறிக்கி றது. மூன்றாவது பல்வேறு வகையான உணவுகளை சிவனுக்கு நைவேத்தியமா கப் படைப்பது இது வாழ்க்கையில் நீண்ட ஆயுளையும் நம்முடைய விருப் பங்களை நிறைவேற்றவதையும் குறிக் கும்.

சிவராத்திரி நாளில் ஒரே ஒரு நேரம் மட்டும் சாப்பிட்டு தூய்மையான மனது டன் சிவனை வணங்க வேண்டும் அன்று இரவு முழுவதும் சிவனை நினைத்து மந் திரம் ஒதியோ, புராணங்கள் படித்தோ வணங்க வேண்டும். கோவிலில் நான்கு காலங்களிலும் நடைபெறம் பூஜைக ளைக் கண்டு சிவனை வணங்க வேண் டும். தேன், பால், தயர், நெய் ஆகியவற் றால் அபிஷேகம் செய்வது எண்ணற்ற பலன்களைக் கொடுக்கக் கூடியது. வெண் பொங்கல், வடை, அன்னம், தோசைபோன் றவற்றை நிவேதனமாகப் படைக்க வேண் டும். சிவனுக்கு மிகவும் விருப்பமானது வில்வம், விலக்க வேண்டியது தாழம்பூ மகா சிவராத்திரி அன்று விரதமிருந்து சிவனை வழிபட்டால் இவ்வுலக சுக மும் மறுமையில் கைலாசமும் கிடைக் கும் என்பது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகப் பெருமானும் வழிபாட்டு சிறப்புகளும்

**யுவாகினி விஜயலிங்கம்**
1ம் வருடம்
பொறியியற்பீடம்

முருகக்கடவுள் பண்டைக் காலந் தொட்டு தமிழ் மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வரும் தெய்வமாகும். சங்கத் தமிழ் இலக்கிய இலக்கண நூல் களில், முருகன் , குறிஞ்சி நிலக்கடவுள் என குறிப்பிடப்படுகிறார். மலையும் மலையைச் சார்ந்த இடங்களைக் குறிஞ்சி நிலம் என்பர் "சேயோன் மேய மைவரை உலகம்" என்கிறது தொல்காப்பியம். சேயோன் எனும் சொல் முருகனைக் குறிக்கிறது.

தமிழும் முருகனும் வேறல்ல, தமிழே முருகன், முருகனே தமிழ். தமிழ் என்றால் இனிமை யென்றும் அமிழ்து என்றும் இளமையுடன் திகழ்வது என்றும் கூறப்படுகிறது. அத்தகைய தமிழை எமக்குத் தந்தவன் முருகன் அவனும் இளைஞன் குமரனாகவே என்றும் விளங்குபவன்.

'முருகு' என்றால் அழகு என்ற பொருள் கொள்ளப்படுகிறது இயற்கை அழகில் இறைவனைக் கண்டு தரிசித்தவர்கள், பண்டைத்தமிழர்கள் அந்த அழகு தெய்வத்தை ஒரு கட்டிளைஞனாக செந்நிறத்தனாக, அழகனாக உருவகித்து பார்த்து மகிழ்ந்தனர். தெய்வயானை, வள்ளி எனும் இரண்டு சக்திகளை முருகனுடன் இணைத்து அழகு பார்த்தனர். அச் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இச்சாசக்தி, கிரியாசக்தி என விளக்கமும் தந்தனர். முருகன் கையில் உள்ள வேல் ஞான சக்தியாக விளங்குகிறது. ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் கொண்டு ஒரு திருமுருகனான , வள்ளி தேவசேனா சமேதராய் மயில் மீது அமர்ந்து அருளாட்சி புரியும் காட்சியை அமைத்தனர் இவ்வாறு அழகுத் தெய்வமாக ஞானத்தின் திருவுருவாக முருகனைக் கண்டு திருக்கோயில் அமைத்து வழிபடலாயினர்.

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளும் தமது உடம்பிலேயுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்கள் ஆகும் ஆறுமுகக்கடவுள் எம்மிடமுள்ள ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருக்கின்றார். இந்த வகையில் நம் அகக் கண்ணினால் நாம் ஆறுமுகனை தரிசிக்கலாம். அதேவேளை நம் புறக் கண்ணினால் முருகக் கடவுளை கண் குளிரக் கண்டு தரிசிக்க வழி செய்யும் வகையிலே ஆறுபடை வீடுகளிலும் ஆலயங்களிலும் முருகன் எழுந்தருளி அன்பர்களுக்கு காட்சியளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவர் காட்டிய வாழ்க்கைநெறி

**ச.கார்த்திகாயினி**
விவசாயபீடம்

உலகின் செம்மொழியாம் தமிழ் மொழியின் தொன்மையையும் அதன் செம்மையையும் பறைசாற்றி நிற்பன இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்க்கை நெறியை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றன. அன்று தொட்டு இன்று வரை ஆற்றல் மிகுந்த இலக்கியங்களை தமிழ் மொழியானது உருவாக்கி வருகின்றது. இத்தகைய இலக்கியங்களிலே அள்ளக் குறையாத ஊற்றுப் பெருக்குடன் உலகை உய்வித்துக் கொண்டிருப்பது வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறியாகும்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று தொடங்கி ஈரடிக்குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் "திருக்குறள்" என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக் குறளைப் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ் மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலை பெறச் செய்தவர். இதனாலே தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியர் வள்ளுவரை "வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு எனப் புகழ்ந்து பாடியுள்ளார். திருவள்ளுவர் எழுதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் வாழ்வியலில் எல்லா அங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருத் துவது போல் கூறியுள்ளதால் திருக்கு றளை சிறப்பிக்கும் விதமாக " உலகப் பொதுமறை, முப்பால், ஈரடிநூல், உத்தரவே தம், தெய்வநூல், வாயுரை வாழ்த்து" போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கப்படுகின்றது.

உலகின் பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்ட இந் நூலானது யார் யார்க்கு எவ்வெவ் விடயங்கள் வேண் டுமோ அவ்விடயங்களை மிகவும் நுணுக் கமாக அறிவதற்கு வழி செய்கிறது. முப்பால் என போற்றப்படும் இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினையும் 1330 அருங்குறள்களிலே எடுத்தியம்பி நிற்பதே உலகப் பொது மறையாக விளங்குவதற்கு ஏதுவாகின் றது.

அறம் பற்றிய திருக்குறளின் விளக்க மானது "அறமாவது யாது? அதனை செய்வது எப்படி? எதனை நோக்கி செய் யப்படுகிறது? என்பதை அறத்துப்பால் விடை பகர்கின்றுது. பாயிரவியல், இல் லறவியல், துறவறவியல், ஊழியல் என் னும் நான்கு இயல்களைக் கொண்டு 38 அதிகாரங்களுடன் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்லறமே மேலானது, இல்லறமே நல்லறமாக நுகர்ந்தவருக்கு வீடுபேற்றினையும், இன்பங்களுக்கு முதற் காரணமாகிய விதியின் வலிமையையும் சிறப்புற எழுத்துக்கூறி அறத்துப்பாலை நிறைவு செய்திருக்கின்றார்.

பொருட்பாலிலே இம்மை, மறுமை ஆகிய இல்லறத்தின் இன்பங்கள் இரண் டையும் எடுத்துக்கூறி பொருளே மேலா னது என முதலில் பொருள் பற்றி பேசுகின்றார். அரசியல், அங்கவியல், ஒளியியல் என மூன்று இயல்களாக வகுத்து 25 அதிகாரங்களில் அரசியல் நடத்துவதற்கு துணையான ஆறு அங்கங் களையும் அடுத்த 32 அதிகாரங்களில் கூறியிருக்கின்றார். அடுத்த 13 அதிகாரங் களில் ஒளியியல் பற்றியும் எடுத்தியம் புகின்றார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் வாக்குக்கு முதன்மை அளித்த வள்ளுவர் பொருளாதாரம் இன்றி இவ்வையத்தில் வாழ்வது கொடிது என அறிந்து 70 அதிகாரங்களிலே பொருட் பாலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

இன்பம் என்னும் காமத்துப்பாலிலே களவியல், கற்பியல் என இரு இயல் களை அமைத்து 7 அதிகாரங்களிலே ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான காதல் மற்றும் இன்பத்தை தெளிவாக வரையறுத்துமுள்ளார்.

இவ்வாறு வாழ்வியலை சிறப்புற எடுத்துக்கூறிய தவப்புதல்வர் வள்ளுவர் இத்தெய்வநூலை அருளிச்செய்துள்ளார். காலத்துக்குக்காலம் பல்வேறு புலவர் கள் இலக்கியப்பெருமைகளை எடுத்துக் காட்டுகின்றனர். இவை மாத்திரமின்றி எண்ணில் அடங்கா சந்தர்ப்பங்களிலே எண்ணிறைந்த நூல்களில் உரிய எடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்காட்டுகளை திருக்குறள் எடுத்துக் காட்டுகின்றது.

உலகியல் இன்பங்களையும் ஆசா பாசங்களையும் துறந்து வாழும் தவ வாழ்வே மேலானது என்னும் அறக்கருத் துகளை மறுத்து இல்வாழ்க்கை, வாழ்க் கைத்துணைநலம், புதல்வர் பேறு போன் றனவும் வாழ்க்கை வாழவேண்டியதன் அவசியத்தையும் தனது கருத்தாக ஆணித் தரமாக வலியுறுத்துகின்றார். தனக்கென வாழாது பிறருக்கென வாழ்வ இல்லறம் என்றும் இல்லறத்தார்க்குரிய கடமை களை வலியுறுத்துகின்றார் பொய்யா மொழிப்புலவர்.

நன்றியறிதல் பற்றி எடுத்துக்கூறும் திருவள்ளுவர் தினையளவு நன்றியை யும் பனையளவாக போற்றவேண்டும் என்றும் நன்றி மறப்பது நற்செயல் அல்ல என்றும் விளக்கியுள்ளார். மற்றும் பெற்றார் தம் பிள்ளைகளை அறிவிலும் பண்பிலும் நல்லவராகவும் வல்லவரா கவும் வளர்க்க வேண்டும் என்பதற்கு " தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநி லத்து மண்ணுயர்க் கெல்லாம் இனிது" என்னும் குறப்பா மூலம் விளக்கினார். நட்பு பற்றி வள்ளுவர் எடுத்துக் கூறு கையில் " முகநக நட்பது நட்பன்று நெஞ் சத்து அகநக நட்பதே நட்பு என அகமும் மலர அமைவதே நட்பு என்கிறார்.

கல்வி கற்றலையும் கல்வி கற்பதன் பலனையும் கற்ற கல்வியை கற்றபடி ஒழுக வேண்டும் என்றும் கற்க கசடற கற்க வேண்டும் என்றும் விளக்கியுள் ளார். உழவனின் சிறப்பைப்பற்றி தெய்வப் புலவர். எடுத்துரைக்கையில் உயிர்வாழ் வதற்கு இன்றியமையாத உணவை உற் பத்தி செய்யும் உழவனையும் அவனது கடினமான உழைப்பு பற்றியும் உழவத் தொழிலின் சிறப்பம்சம் பற்றியும் எடுத் துரைக்கின்றார்.

இவ்வாறு உலகியல் வாழ்வுடன் பின் னிப்பிணைந்திருக்கும் திருக்குறள் அகரத் தில் தொடங்கி "ன்" கரத்தில் முடிவதால் எக்காலப் பகுதியிலும் தமது வாழ்நெ றியை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண் டும் என்னும் விளக்கத்தை எப்பொழுதும் புதிதுபுதிதாக வாரி வழங்குகின்றது.

நீதியை நிலைநிறுத்துவதிலே திருக்குற ளுக்கு ஈடாக எந்தவொரு நூலும் இல்லை "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்நயம் செய்துவிடல்" என்றும் "இன்னா செய்தர்க்கும் இனி யவே செய்யாக்கால் என்ன பயத்த்தோ சால்பு" என்றும் குற்றம் செய்தவரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி நீதியை நெறிப்படுத்துவதை உணரக்கூடி யதாக உள்ளது.

"குழலினது யாழனிது என்பர் தம் மக்கள் மழலை சொற்கேளாதவர்" என் னும் குறளிலே இனிமையான இசைக் கருவிகளான யாழும், குழலுமே தோற்று விடக்கூடிய அளவுக்கு மழலை மொழி இனிமையானது என்பதை அழகுறக் கூறியுள்ளது. இதேபோன்று அணிநயங் களை கையாள்வதில் சளைத்தவர் அல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லர் வள்ளுவர் என்பதற்கு இணங்க " ஊருணி நர்நிறைந்தற்றே உலகலாம் பேரறி வாளன் திரு" என்றும் " தலையினிழந்த மயிரினையா மாந்தர் நிலையினிழந்தக் கடை" என்னும் இக்குறள்களிலே அரிய உவமைகளை கையாண்டுள்ளார்.

அரசியல் பற்றி பெருமான் எடுத்துக் கூறும் கருத்துக்களுள் தமிழர் நாகரீகத் திற்கு ஏற்றதாக அமைகின்றன. நாட்டிற்கு அரசர் இன்றியமையாதது என்றும் நாடு நாடாக விளங்குவதற்கும் நாடு வளமு டையதாய் மிளிர வேண்டும் என்றும் பசியும் பிணியும் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் எடுத்துக்கூறுகின் றார். "குடிதழக் கோலோச்சு மாநில மன்னன் அடிதழ நிற்கும் உலகு" என் னும் குறள் மூலம் குடிகளை பாது காக் கும் அரசனின் கடமைகளை எடுத்து ரைக்கின்றார்.

"கடுகைத்துழைத்து ஏழ்கடலைப் புகழ்ட்டி குறுகத்தறித்த குறள்" என சிறப்பிக்கப் பட்ட திருக்குறளானது தான் தோன்றிய காலம் முதல் இன்று வரை பாலர் முதல் விருத்தர் ஈறாக எல் லாப்பராயத்தரும் கடைப்பிடிக்க வேண் டிய அரிய பல அறங்களை கூறி மங்காப் புகழ் உடைய தாய் விளங்குகின்றது.

"தக்கர் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தற் காணப்படும் என்னும் வள்ளு வரின் வாக்கை நினைவு கூர்ந்து இவ்வாறு அனைவர்க்கம் இன்பம் பயக்கும் திருக் குறளை நாமும் கற்று வாழ்வியல் நெறி யைச் செவ்வனே கடைப்பிடித்து வாழ்வை வளமாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகன் முருகன்

**சங்கீதா ஜெயதாசன்**
1ம் வருடம்
பொறியியற்பீடம்

வேலுண்டு வினை இல்லை மயில் உண்டு பயம் இல்லை குகனுண்டு குறையே இல்லை அவன் சிந்தையை கவர வைக்கும் சிங்கார வேலன் அவன் திருநாமம் சொன்னால் தேடி வந்த வினையும் தெரியாமல் ஓடும்.

நீல கண்டனின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிவந்த நெருப்புகள் ஆறி னையும் வாயுபகவான் தாங்கி சரவணப் பொய்கையிலே இட்டார். அந்த நெருப் புகள் ஆறும் அழகிய குழந்தைகளாகி கார்த்திகைப் பெண்களின் கவனிப்பில் வளர்ந்தனர். ஆறு அழகிய குழந்தைக ளையும் ஒரு சேரப் பார்த்த சந்தோசத்தில் அன்னை பார்வதிதேவி அறுவரையும் அணைத்தார் அப்போது ஆறுகுகனாக வடிவம் கொண்டார் அழகு முருகன்.

சந்திரனின் அழகை மிஞ்சிய விக்கி னங்கள் அனைத்தையும் விரட்டும் பேரழ கன் கணபதியை அண்ணனாகவும் வைண வர்களின் கடவுள் திருமாலை மாமனா கவும் பெற்றுள்ள பெருமைக்குரியவரும் ஆவார்.

முருகப் பெருமானின் அழகினைப் பாட தமிழில் வர்த்தைகள் போதாது. பெண்களையும் பொறாமைப்பட வைக் கும் அழகன் அவன் மணிமுடி தரித்த முகங்கள் ஆறும் திருநீறு அணியும் அழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய நெற்றியும் நீண்ட புருவமும் கூரிய வேல் போன்ற பன்னிரு கண்களும் பவளச் செவ்வாயும் தன்னகத்தே அமை யப் பெற்றவர் ஈராறு செவியும் இலகு குண்டலமும் பட்டுத்துணியால் அலங் காரம் செய்து பதக்கமும் தரித்து காட்சி தரும் வேளையில் முருகனின் அழகினை ரசிக்க கண்கள் ஆயிரம் வேண்டும். முருகு என்றால் அழகு இளமை இதன் காரணத் தினாலேயேதான் அடியார்களால் முருகன் என அழைக்கப்படுகிறார்.

பன்னிரு கரங்கள் கொண்ட எம் பெரு மானின் ஒவ்வொரு கரத்திற்கும் ஒவ் வொரு பணிகள் உண்டு முதல் இரு கரங் களும் எம்பெருமான் அவதரித்த நோக் கமாகிய சூரபத்மனிடம் இருந்து தேவர் களைக் காத்து அருள்வது மூன்றாவது கரம் அங்குசத்தினை செலுத்துகின்றுது. மற்றொரு கை எம் பெருமானின் ஆடை உடுத்திய அழகு தொடையில் பதித்து காணப்படும்.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் உல கைக் காத்து அருளும் வேலினை சுழற் றுகின்றது. ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது. எட் டாவது கை எவராலும் எட்டாத அதா வது எம் பெருமானின் மார்பில் உள்ள மணிமாலையோடு விளங்குகிறது. ஒன் பதாவது கை வளைகளோடு சுழன்ற வேள் வியை ஏற்கிறது. பத்தாவது கை மணியை ஒலிக்கிறது. பதினொராவது கை மழையை அருள்கிறது. பன்னிரண்டாவது கை மணி மாலை காட்டுகிறது.

**"சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமில்லை சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை"**

சுப்பிரமணியன் அறுபடை வீடுகளைக் கொண்டு இப் புவிக்கு அருள் பாலிக் கின்றார் திருப்பரங்குன்றம், திருச்செந் தூர், பழனி, திருத்தணிகை, பழமுதிர்ச் சோலை, சுவாமிமலை, இவை ஒவ்வொன் றிலும் தனிச் சிறப்பம்சம் கொண்டு அருள் பாலித்து வருகின்றார் எம் பெருமான்.

"திருத்தணி முருகன் வழித்துணை வரு வான்" என்ற பழமொழிக்கு இணங்கித் தன்னையே சரணம் என நினைத்து வழி நடப்பர்களுக்கு துணையாக வருவான் முருகன்.

சங்க இலக்கியத்தில் முருக வழிபாடு பற்றிக் கூறப்படுவது யாதெனில் ஆரம் பத்தில் அவருக்கு நிலையான ஆலயமோ, வழிபாட்டுஇடமோ இல்லை மலைக ளிலும் அதாவது குன்று மற்றும் பழமுதிர் சோலை, இங்கு வாழ்ந்த குரவர் என்ற சமூகத்தினரால் வழிபாடு அல்லது விழா என்று கொண்டாடப்பட்டு வந்தது இது பற்றி பல இலக்கிய நூல்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் வந்த நாகரிக மற்றும் சமஸ்கிருத மொழிக் கலப்பினால் ஆலயங் கள் நிறுவப்பட்டு சமஸ்கிருத்தில் மந் திரங்கள் ஓதி முருகனை வழிபடும் முறை கொண்டுவரப்பட்டது.

"சிந்தை கலங்காமல் சரவணபவனைத் தியானிப்பவர்கள் ஒருநாள் சரவணபவ னின் பூரண அருளைப் பெறுவர்" கந்தன் துணை இருக்க கஷ்டம் ஒன்றும் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலயங்களும் நாமும்

**சுலக்ஷனா சிறிஸ்கந்தராசா**
4 ம் வருடம்
பொறியியற்பீடம்

**உங்கள் சிந்தனைக்கு**

காலத்திற்குக் காலம் ஆலயங்கள் பல தோன்றிக் கொண்டு இருக்கின்றன. பழைய ஆலயங்கள் புனர்நிர்மாணம் செய் யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழுகின் றன. மக்களும் தாராளமாகவே ஆலயங் களுக்குச் சென்று வருகின்றார்கள். எனி னும் நமது சமுதாயம் துன்பத்தையும் துயரத்தையும் சந்தித்து அழிந்து கொண்டு செல்வது ஏன் இதனை நாம் ஒவ்வொ ருவரும் மிகவும் ஆழமாகவே சிந்திக்க வேண்டும்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் ஆலயம் எனவும், கோயில் எனவும் எம்மால் அழைக்கப்படுகின்றது. எமது ஆன்மாக்கள் இறைவனிடம் இலயிக் கும் இடமானதால் ஆலயம் எனவும், எல்லா உயிர்களுக்கும் அரசனாக இறை வன் வாழும் இல்லமாகையால் கோயில் எனவும் இறைவன் எழுந்தருளி இருக் கும் இடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

இறைவன் அருவமாக எங்கும் நீக்க மற்று நிறைந்து காணப்படுகிறான் அவ்வா றாக எங்கும் நிறைந்து நிற்கும் இறை வனை வணங்குவதற்கு கோயிலுக்கு தான் செல்ல வேண்டுமா? என்று எம்மில் பலர் கேட்கக்கூடும் அருவமாக இருக்கும் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனை மனக்கண்ணில் இருத்தி, சிந்தை யெல்லாம் அவனை விட்டகலாத வண் ணம் எம்மால் அவனைத் தியானிக்க முடியுமாயின் அதுவே போதும் ஆனால் அவ்வாறு தியானிக்க எம்மால் முடியுமா என்பது தான் கேள்வி? "சரண கமலா யத்தை அரைநிமிட நேரமட்டில் தவ முறை தியானம் செய்ய தெரியாதவன்" என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளாரெனின், நாம் எங்கே? அருவ மான இறைவனை வழிபட ஞானிகளி னால் மட்டுமே முடியும் நாளும் பொழு தும் உலக இன்பங்களை மட்டும் நினைத்துக் கொண்டிருக்கும் நாம் நிர்ம லமான சிந்தனையுடன் இறைவனைச் சிந்திக்கும் திறமையற்றவர்கள் ஆகையி னால் தான் எமது எண்ணங்களை ஒரு முகப்படுத்தி எமது மனதை இறைவன் பால் ஈடுபடச் செய்வதற்கு எம்முன்னே ஒரு உருவம் தேவைப்படுகின்றது. அதற் காகத் தான் இறைவனை நாம் சிவன், சக்தி, விநாயகர், வைரவர், முருகன், என உருவங்கள் கொடுத்து வழிபடுகின்றோம்.

மனிதனென்பவன் மிருகத்திலிருந்து தான் தோன்றினான் என்று விஞ்ஞானம் சொல்லுகின்றது. அதனால் தானோ ஒவ் வொரு மனிதனிடத்திலும் மனிதக் குண மான அன்பு, இரக்கம், விட்டுக்கொ டுப்பு, மதித்தல் என்பவற்றுடன் மிருகக் குணமான கோபமும் குரோதமும் குடி கொண்டுள்ளன, ஒருவன் இவ்விரண்டு குணங்களில் எதனைத் தன்னில் வள ர்த்துக் கொள்கின்றானோ அதற்கேற்ப அவன் நல்லவனாகவோ தீயவனாகவோ தன்னை உருவாக்கிக் கொள்கின்றான்.

இவ்வாறு மனிதனொருவன் நல்ல வனாகவோ தீயவனாகவோ வளர்வ தற்கு அவன் மட்டும் காரணமல்லன் அவன் வளர்ந்த சூழல், அவனுடைய குணத்தில் மிகப்பெரிய ஆதிக்கத்தைச் செலுத்துகின்றுது. நல்ல மனிதர்களை உருவாக்குவதில் சமயங்கள் பெரும்பங் காற்றுகின்றன. சமயங்கள் யாவும் முறைப்படி பின்பற்றப்படும் பொழுது மனிதனிடத்தில் அன்பு, அடக்கம், புரிந் துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, கலாச்சாரம், பேணல் போன்ற நல்ல பண் புகள் வளர்ச்சியடையும் இதனால் அவன் நல்லவனாக வளர்ச்சியடைகின்றான். அவ னிடத்திலுள்ள மிருக குணங்கள் அடங்கி ஒடுங்கி அற்றும் போய்விடுகின்றன. எம் முன்னோர்கள் இவற்றை யெல்லாம் நன்கு உணர்ந்திருந்தமையினால் தான் ஆலயங்களை அமைத்து வழிபாடியற்றி, மனிதர்களை நல் வழியில் இட்டுச் சென்றார்கள். "கோயில்லா ஊரில் குடியி ருக்க வேண்டாம்" என்றும் கூறினார்கள்.

அவர்களின் சொற்கள் பிறழா வண் ணம் ஊர்தோறும் ஆலயங்கள் அமைக் கப்பெற்றது மட்டுமன்றி, பெருமளவு பணத் தினைக் கொட்டிக் குவித்து புதுப்பொலி வுடன் ஆலயங்களை விளங்க வைத்த போதிலும் மனித குணங்கள் குறைவ டைந்து மிருக குணங்கள் மேலோங்கிக் காணப்படுகின்றனவே அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பவற்றால் மனித சமுதாயம் சொல்லொணாத் துயரங் களுக்கும் முகம் கொடுத்துச் சீரழிந்து செல்வது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் துயரங்களினின்று நீங்கவும் சமுதாயம் செழிப்புறவும் ஆலய வழி பாட்டின் சிறப்பினை நன்கறிந்து உரிய முறைப்படி பின்பற்றுதல் அவசியமா கின்றது.

ஆலய வழிபாடு பற்றி அந்தணப் பெரு மக்களும் கற்றறிந்த பெரியோருமே விரி வாக எடுத்துக் கூறமுடியும் எனினும் எமக்குத் தெரிந்தவற்றை எம்மிடையே பரிமாறிக் கொண்டாலே நாம் பல விட யங்களை அறிந்து கொண்டு எமது சமு தாயத்தை அழிவினின்று மீட்கலாமல்லவா.

ஆலயத்திற்கு செல்வதன் நோக்கம் எமது எண்ணங்கள் சிந்தனைகள் யாவும் அங்கு இங்கு என சிதறாத வண்ணம் இறைவனை நினைத்து வழிபடுவதற் கேயாகும். ஆகையால் இறைவழிபாட் டுக்கெனச் சென்று, வேறு விடயம் பேசுவது, குசலம் விசாரிப்பது கதைப்ப வர்களை மட்டு மல்ல , அருகில் உள்ள அடியவர்களின் சிந்தனையும் சிதறடித்து அவர்களுடைய வழிபாட்டினையும் குழப்பி விடும். இதனால் ஆலயத்தில் வழிபாட் டில் ஈடுபட்டுள்ள போது கதைப்பவர் தான் இறைவனை வணங்காதது மட்டு மின்றி, ஏனையவர்களின் வழிபாட்டிற்கு ஊறுவிளைவித்த பெரும் பாவத்திற்கு ஆளாவார். இதனால் கோயில் சென்றும் பாவம் தீராதவராகின்றார். ஆலயத்திற்கு சென்றுவிட்டால் ஆண்டவனை மட்டுமே நினைக்க நாம் பழக வேண்டும். அவ னுடைய புகழை மட்டுமே பேசவும் பாடவும் வேண்டும். இதனால் எமக்கு இறையருள் கிடைப்பது மட்டுமல்லது எமது நாளாந்த வாழ்க்கையில் கூட நாம் முயற்சிக்கும் காரியங்களில் மனம் ஒன்றி நின்று செயற்பட்டுக் காரிய சித்திய டையக் கூடிய திறமையும்எம்முள் வளர்க்கப் படும்.

இது போலவே ஆலயத்தில் ஒருவர் இறைவன் முன் அமர்ந்து அவ் இறைவ னிடத்து இலயித்திருக்கும் போது இடை யில் செல்வது அவரிடம் சிறு சலனத்தை ஏற்படுத்தலாம். அதே போன்று பூசை நேரங்களில் பக்தர்கள் பக்தி மேலீட்டி னால் இறைவனைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புக்கள் விடுவதும் வேறு ஒலிகள் எழுப்புவதும் வழிபாட்டினைக் குழப்பும் செயலாகும். ஆகையினால் வழிப டுவோர் மற்றவர்களின் வழிபாட்டிற்கு இடை யூற எற்படாவண்ணம் வழிபடுவதுடன் மற்றையோருக்குஇறை தரிசனம் பெறும் வகையில் நடந்நது கொள்வது இறை வனருள் கிடைக்க ஒரு வழியாகும். என் பது மட்டுமல்ல ,சமுதாயத்தில் பிறரை யும் மதிக்கப்பழகுதல், விட்டுக்கொடுக் கும் மனப்பாங்கு, இரக்ககுணம் என்பன எம்மிடத்தில் வளர்வதற்கு உதவும். இத னால சமுதாயத்தில் எல்லோருடனும் இணங்கிப் போவது மட்டுமின்றி படிப் படியாக ஒரு சமுதாய அந்தஸ்து கூட கிடைக்கும்

ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் எல்லாம் சமஸ்கிருத்திலே நடைபெறு வதனால் எல்லோராலும் அதனை விளங்கி கொண்டு இறைவனிடத்தில் ஒன்றுபட முடி யாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அழகுத்தமிழில் எமது சமய குரவர்களும் மெய்யடியார்களும் பாடிய பஞ்சபுராணங்கள் ஓதப்படும் பொழுது பக்தர்கள் தம்மை மறந்து இறைவனிடத்து லயித்திருப்பார்கள். அந்நேரத்தில் நாம் அங்கு இங்கு என அசைவது கூட பக்தர்களின் பிரார்த்தனையைக் குழப்பி விடும் ஆகையால் பஞ்சபுராணங்கள் ஓதப்படும் பொழுது எக்காரணம் கொண்டும் அசையாது நின்று வழிபடுதலே எமக்கு நல்லது ஓதுபவர்கள் சொற்பிழை, எழுத்துப்பிழைகளின்றி பாடலில் பொருளைச் சரியாக விளங்கி அதை ஏனையோரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் ஓதுவதனால் அடியார்கள் எல்லோரையும் இறைவனிடத்தில் லயிக்கச் செய்யலாம் பாடலின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ளாது சொற்பிழை, எழுத்துப்பிழை, கருத்துப் பிழைகளுடன் ஓதுவது மிகவும் பாவமான செயலாகும் அதனிலும் பார்க்க ஓதாமல் இருப்பதே மேலானது பூஜையின் பொழுது பஞ்சபுராணம் ஓதப்படுகின்றதேயொழிய பாடப்படுவதல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எமது ஆலயங்களில் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் பழக்கம் அருகிக் கொண்டே குழந்தை பேற்றுக்காகவும் உடலைக் கட்டுக்குலையாமல் பேணுவதற்காகவும் பல வைத்தியர்களையும் அழகுகலை நிபுணர்களையும் பணம் கொடுத்து தேடி யோடும் நாம் எம் முன்னோர்கள் சொல்லித் தந்த நமஸ்காரங்களின் பலன்களைப் பற்றி அறிந்து இருக்கவில்லை. ஒரு பெண் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் போது தசைகள் வலுப்பெறுகின்றன. கருப்பை முன்னோக்கி அசைவதனால் குழந்தை பேறுக்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன. செலவற்ற, சிக்கனமான இவ்வழக்கங்களைக் கைவிட்டுப் பணச்செலவு உண்டாகும் வழிகளைத் தேடிச் செல்வது முன்னயோரின் திறமைகளைப் புரிந்து கொள்ளாமையாகும்.

தூய்மையுள்ள இடத்தில் தான் இறைவன் குடியிருப்பான் என்பதுநாமறிந்த உண்மை. எமது மனம் தூய்மையாக இருந்தால் தான் எம்மால் இறைவனை முழு மனதுடன் வழிபடமுடியும் . அது போன்றே ஆலயமும் தூய்மையானதாக இருந்தால் தான் அங்கே இறையருள் பெருகும்.

பலர் ஒன்று கூடும் இடங்களில் தூய்மை பேணப்படாவிடின் தொற்று நோய்கள் அபாயம் அதிகரிக்கும். எம்முன்னோர்கள் கற்பூரம் எற்றி வழிபட்டார்கள், ஏனெனில் கற்பூரத்தில் இருந்து எழும் புகை காற்று மண்டலத்தில் உள்ள நோய் கிருமிகளை அழித்தொழிக்கின்றது. இது போன்று ஹோமம் வளர்க்கப்படும் பொழுது சரியான முறையில் அதனுள் இடப்படும் திரவியங்களினால் எற்படும் புகையானது நோயினின்று எம்மைப் பாதுகாப்பது மட்டுமன்றி புத்துணர்வையும் கொடுக்கவல்லதாகும்.

இதைப் போன்றே ஆலயங்களில் நடைபெறும் கிரியை முறைகளுக்குள்ளும் வழிபாட்டு முறைகளுக்குள்ளும் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பாகவும் விஞ்ஞான ரீதியாகவும் எமக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் மறைந்திருப்பதை நாம் இன்னும் முற்றாக அறிந்து கொள்ளவில்லை யெனினும் முன்னோர்களின் அறிவும் புத்திக்கூர்மையும் வியக்க வைப்பனவாகவே உள்ளன.

ஆலயத்தின் குருவானவர் அடியவர்களானஎமக்கும்இறைவனுக்குமிடையில் ஒரு தொடர்பாளராகவே செயற்படுகின்றார். நாம் புலனடக்கம் பெற்று இறைவனைத் தியானம் செய்யவே குருவானவர் பூசைகளைச் செய்கின்றார். இவ் வகையில் வழிபடுவோரையும் வழி நடத்துபவர்களும் அவர்களே. அது மட்டுமின்றி தன் ஆலயம் சார்ந்த சமுதாயத்தின் ஒற்றுமை சமூக மேம்பாடு, கலாசாராம் பேணுதல் போன்ற சமூக நலன்களில் மிகுந்த அக்கறையுடன் தன்னலம் கருதாது தூர நோக்கோடும் நேர்மையுடனும் எல்லோரையும் நேசிக்கும் பண்புடனும் கலங்கரை விளக்கம் போல் இருக்கும் குருவை எல்லோரும் கொண்டாடுகின்றோம். குருவெனப் போற்றி பூசிக்கின்றோம். சிறந்த குருவைக் கொண்ட கோயில் மட்டுமின்றி, அக் கோயில் சார்ந்த சமுதாயம் மனித பண்புகள் மேலோங்கச் சிறப்படையும் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே ஆலய வழிபாட்டு முறைகளையும் ஆலயம் சார்ந்த செயற்பாடுகளையும் குருவினிடத்து கேட்டறிவது மிகவும் நல்லதே.

ஆலயமும், அதன் வழிபாட்டு முறைகளும் உருவாக்கப்பட்டமை மனிதன் மன அமைதியுடன் நல்வழி நின்று, நல்லொழுக்கமுடையசமுதாயமொன்றைக் கட்டியெழுப்பி இன்பமாக வாழ்வதற்கேயின்றி கேளிக்கைகளுக்கும் கொண்டாட்டங்களுக்குமாக அல்ல என்பதனை நாம் ஒவ்வொருவரினது மனதில் ஆழப் பதித்து , இறை வழிபாட்டின் மூலம் எமது சமுதாயத்தை அழிவினின்று காத்து உயர்வடையச் செய்வோமென்று திடசங்கற்பம் கொள்வோமாக .

**“ நாம் மனிதர்களாக வாழ்வோம்
இறைவன் மனம் மகிழ்ந்து அருள்
தருவான்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றத்து நாயகன் குமரன்

**தயாளினி குமாரசாமி**

சமயங்களிலே முதற்சமயம் சைவ சமயம் முதலும் முடிவும் இல்லாதது. இதனாலேயே,

**"ஆதியும் அந்தமும் இல்லா**
**அரும்பெருஞ்சோதி"**

என்றார் மணிவாசகர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ நெறியிலே சிவமூர்த்தங்கள் பல அருவம், உருவம், அருவுருவம் எனப் பல வடிவங்களிலும் வேறு பல மூர்த்தங்களிலும் எம்பெருமான் அருள்புரிகின்றான் இதனையே வாதவூரர்.

**"ஏகன் அநேகம் இறைவனடி போற்றி"**

என்றார் சிவமூர்த்தங்களிலே அநேக கோயில் கொண்டதும் , அநேக அடியார்களாலும் வழிபடப்படுவதுமான தெய்வங்களுள் முதன்மையானவன் முருகன் இவன் அருவமும் உருவமும் ஒன்றானவன் அநாதியாய் பலவாய் உள்ளவன் பிரம்மமாய் நின்ற சோதி பிழம்பாகிய சிவனே கருணை புரியும் கண்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகனாக உலகம் உய்வதற்காக உதித்தான் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

உலகம் உய்ய ஒரு திருமுருகன் தோன்றியமை மூலம் எவ்விதம் உல கத்தை உய்ய வைத்தான் என்பது கேள்வி மகேந்திரபுரியை ஆட்சி செய்த காசிப முனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் மக்களாகிய சூரபத்மனும், சகோதரர்களின் தவ வலிமையினால் ஒப்பற்ற வரங்களை எம்பிரானிடம் வேண்டினார்கள் அவ்வரங்களின் மூலம் தேவர்களையும் மக்களையும் வாட்டி வதைத்தனர் வானவர்களைச் சிறையில் அடைத்தும் வதைத்தும் பல கொடூரங்களைச் செய்து வந்தனர் இதனைப் பொறுக்கமுடியாத தேவர்கள் தங்களைக் காப்பாற்றும் படி எல்லாம் வல்ல சிவனிடம் சரணாகதி அடைந்தார்கள் சூரனின் கொட்டத்தை அடங்கித் தங்களையும் மக்களையும் இரட்சித்த உய்விக்குமாறு எம்பிரானிடம் வேண்டினார்கள்.

தேவர்களின் வேதனையைக்கேட்ட சிவன் வெஞ்சினம் கொண்டார் வெகுண்டார் அவரின் நெற்றிக் கண்களில் இருந்த ஆறு தீப்பொறிகள் வெளிவந்தன. உமையவள் உட்பட அனைவரும் கனவின் வெப்பம் தாங்காமல் ஓடினர். ஆறு பொறிகளும் சரவணப் பொய்கையிலே ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட ஆறு குழந்தைகளும் அன்னை உமையவளின் அணைப்பால் ஒரு உருவம் பெற்றன. ஆறு முகமும் பன்னிரு கண்களும் பன்னிரு கரங்களும் கொண்டு உலகத்தை உய்விப்பதற்காக இவ்வாறு அழகானகத் தோன்றினான்.

முருகன், மால் மருகன், தேவர்கள்துயர் துடைத்த தேவசேனாதிபதி, சூரர்கள் கொட்டமடக்கிய சூர சங்காரி; அழகுக்கோர் அழகன்; ஆறுபடை வீடு கொண்ட நாயகன்; குஞ்சரி தெய்வயானை வள்ளி மணாளன்; கந்தன், வேலன், கடம்பன், சண்முகன், குமரன், சுப்ரமண்யன், மயில் வாகன்ன், மயூரன், வேலாயுதன் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுபவன் ஆதிபராசக்தி ஆணவத்தை அழிக்க கொடுத்த வெற்றிவேலை வைத்திருப்பவன் குமரகுருபரர், அருணகிரிநாதர், ஔவை, நக்கீரர், கச்சியப்பர்க்கு அருள் ஈத்த நாயகன் முருகன் வீட்டுடைத் தலைவன் முருகன் தமிழின் தந்தை முருகன் தமிழுக்கோர் தெய்வம் முருகன் தமிழே வடிவானவன் அவனது பன்னிரு வழிகளும் உயிர் எழுத்துகளையும் ஆறுமுகமும் பன்னிரு கரங்கள் பதினெட்டு மெய்யெழுத்துகளையும் அவன் கையிலே தாங்கிய வேல் ஆய்த எழுத்தையும் குறித்து நிற்பன வேலின் பகுதி அகன்றும் ஒடுங்கியும் காணப்படுவது போல நம் அறிவும் பரந்தும் விரிந்தும் வேல்நுனியைப் போல் கூர்மையானதாகவும் இருக்க வேண்டும் இதனூடு முருகன் தமிழ்த் தெய்வமாகவும் தமிழே வடிவாகவும் உள்ளான் என்பது தெளிவு.

ஆயிரம் பல்லாயிரம் ஆலயம் கொண்டவன் முருகன் ஆறுபடை வீடுகளும் அவன் திருவிளையாடல்கள் ஆடிய இடங்கள் வேண்டிய மாம்பழத்திற்காக வெள்ளிப்பனித்தலையருடன் கோபங் கொண்ட வீடு பழனி பிரணவப் பொருளின் தத்துவத்தைக் குருவாய் தந்தைக்கு உபதேசித்த்து சுவாமி மலை . தேவர்களை மீட்டு சூர்ர்களை தவிடு பொடியாக்கி வெற்றி வாகை சூடிக் கொண்ட வீடு திருச்செந்தூர் தெய்வயானையோரு அருட்கடாட்சம் கொடுக்கும் குன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றம். வள்ளியுடன் காதல் மணம்புரிந்து அற்புதமாக அமர்ந்த வீடு திருத்தணிகை வள்ளி, தெய்வயானை சமே தராக அடியவர்க்கெல்லாம் கந்தன் கருணை புரியும் மலை பழமுதிரச்சோலை இவ் வாறு முருகனின் ஆறுமலை வீடுகளின் சிறப்பை நக்கீரர் திருமுருகாற்றுப்படை யில் சிறப்பாக்க் கூறியுள்ளார்.

இதுமட்டுமல்ல இலங்கையிலும் பல இடங்களில் கோயில் கொண்டு எழுந்த ருளியுள்ளான். தென்கிழக்கில் கதிர்காம நாயகனாயும் யாழ்ப்பாணத் தில் அன்ன தானக் கந்தனாக தொண்டமனாற்றிலும் அலங்கார கந்தனாக நல்லூர்ப் பதியிலும் அபிடேகக் கந்தனாக மாவையிலும் எனப் பல இடங்களில் எழுந்தருளியி ருப்பது சிறப்பாகும் வேண்டுவார் வேண்டு வதைக் கொடுக்கும் குழந்தையாக முருகன் உள்ளான்.

காலனுக்கு காலனாகவும் பாலனுக் குப் பாலனாகவும் உள்ள முருகன் பல அடியார்களுக்கு அருள் புரிந்துள்ளான். இந்துக்கள் மட்டுமல்ல வேற்று மதத்த வர்களும் வழிபடும் தெய்வமாக முரு கன் போற்றப்படுகின்றான். பிறப்பி லேயே ஊமையாக இருந்த குமரகு ருபரை பேச வைத்த பெருமைக்குரியவர் வேலன் வாழ்க்கையையே வெறுத்த அருணகிரிநாதர் வாழ்வை அலங்கரித் தவர் முருகன் திருப்புகழ் எனும் மாலை யைத் தொடுக்க அருள் கொடுத்தமையும் ஒர் அற்புதமே இவ்வாறு பலரை உன் னதமாக்கிய தெய்வம் முருகன்.

உலகம் தோன்றிய காலத்தில் இருந்து தோன்றி இன்ற வரை புகழுக்குரிய தெய் வமாக, குன்று தோறும் விளையாடும் குமரானாக நின்று நம் குறைகளை தீர்த்து வைக்கும் தெய்வம் முருகன் எனின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "சாமி" யார்?

**ச.சந்தோஷன்**
2ம் வருடம்
பொறியியற்பீடம்,

மக்கள் சபையிலே கதிரையில் அமர வென குதிரை போல் கிளம்பிவிட்ட கடந்த கால மனிதர்களோடு கைகோர்த்த போது முகங்கள் போல புதிசு புதிசாய் முழத்திற்கு மூன்று கோயிலென முழு ஊரும் முண்டியடிக்கின்றன. இருக்க இட மின்றி வீட்டுக்கு மேல் வீடு கட்டி அதன் மேலும் மாடி கட்டி அதுவும் போதாமல் சந்திரனிலும் சேவையர் சேவை சேர்ந்தே பார்க்கின்றார். இவ்வாறு ஒரு துண்டு காணிக்கே சிறுதுண்டே இடுப்பில் தங் கவில்லை சாமி பெயராலே சாமி யார் என்கிற சமராலே ஆலயங்கள் அதிகரிக்க அடவியை அழிக்காமல் என்ன செய்ய ?

இப்ப வீதியை அகலமாக்க விரைந் தவர்களது விரலுக்கு விலங்கு போட்ட விசயமெல்லாம் விடியலுக்கே விடியாத வெளிச்சம் உள்வீதி, வெளிவீதி கொண்ட ஒரு ஆலயம் ஊருக்கு போதாதா? தெருவுக்கே இரண்டென்றால் சாமி எங்கே இருப்பது? ஒரு சூரியன் இருப் பதால் தான் அவனுக்கு தைப்பொங்கல் விண்ணில் கண்சிமிட்டும் லட்சக்கணக் கான நட்சத்திரங்களுக்கோ ஒரு சோற் றுப் பருக்கையுமில்லை. அந்த நிலை ஆலயங்களால் ஆண்டவனுக்கு வராமல் இருக்கும் மட்டும் சரி.

கவின் பேசும் கதிரவன் உதயம் கம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூம் கமலத்திலும் கனதியான வாசத்தின் வாசனை வாசலினூடாக வாங்கில் கிடந்த ஆதித்தனின் நாசியை தழுவியது." ஆதித்தா....... ஆதித்தா.......... எழும்படா...." என அக்காள் செவிட்டுக் கத்து கத்தியது வானக் கடலில் கிடந்த ஆதித்தனுக்கல்ல வாங்கில் புரண்டு கிடந்த ஆதித்தனுக்குத்தான் என்பத அப்போது தான் எனக்கே புரிந்த்து." வெண்ணி லாவெ வெட்கித் தலை குனியும் வெள் ளையழகி என் அக்காள்" என அடிக்கடி ஐஸ் வைத்தே தன் காரியங்களை கச்சி தமாய் முடித்துக் கொள்வான். தன்னை மறந்து சிரிக்கும் அக்காளின் புன்னகைக் கான காரணத்தை யாரறிவாரோ? யானறி யேன். ஆனால் அந்த புன்னகைக்கு ஈடாக எந்த பொன்னகையுமில்லையென மெய் மறந்து ரசிப்பது தான் ஆதித்தனின் அன்றாட வேலையாக இருந்த்து. அக்கா ளின் அதிகார தொனியில் அவசரமாய் எழும்பியவன் காலைக் கடன்களை கச்சிதமாய் முடித்தான்.

வெள்ளிக்கிழமை கோயிலுக்கு போவோ மென வெளிக்கிட்ட ஆதித்தன் முற்றத் தில் நின்று நாலா பக்கமும் பார்க்க விழித்திரையில் வினாக்குறி , மாம்பழச் சண்டையில் பரிந்து வந்து மலையில் மனை யமைத்த பழனியாண்டவர் வடக்கிலே: வியாசருக்காய் தன் அங்கமான தந்தம் முறித்து காவியம் வரைந்த விநாயகர் கிழக்கிலே பகடைக் காய்களின் சூழ்ச் சியை வெல்ல பார்த்தனுக்கு சாரதியாக மாறிய கோவிந்தன் தெற்கிலே : இரு பாதி சேர்ந்த ஒரு சோதியாய் விஸ்வரூப மெடுத்த சிவசக்தி மேற்கிலே: அப்ப்ப்பா! அந்தக் கேள்விக் குறியின் சேதி! இந்த திண்டாட்டம் ஆதித்தனுக்கு மட்டுமல்ல ஐயருக்கு ம் வழக்கமான ஒன்றுதான் . கோவிந்தன் கோயிலில் அறுகம்புல் அர்ச்சனை நடந்ததெல்லாம் அரிக்கும் ஐயருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். என்ன செய்வது? நாலு கோயிலில் ஆறு வேளை பூஜை யென்றால் .நூலும் நழுவத்தானே செய்யும்.

கால் போன போக்கில் கண் போகாவிட்டாலும் வீதியை உரசியபடி உள்ளங்கால்கள் ஆதித்தனை ஏதோ ஒரு ஆலயத்தை நாடிக் கூட்டிச் சென்றன. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது தெரிந்தவன் போல உச்சிமேல் கைகளை கூப்பி கும்பிட்டான். "ஐயா! தர்ம பிரபுவே ,தர்மம் பண்ணுங்க ஐயா! என்ற குரல்கள் அவனுக்கு கிடைக் கவிருந்த கோடி புண்ணியத்தை தடுப்ப தாய் இருந்தன.சத்தம் வந்த திசையில் திரும்பியவனுக்கு சஞ்சலம் குடிகொண் டது. நாணயக் குற்றிகளை எதர்பாராத நாணயஸ்தர்களது தட்டுக்கள் பண நோட் டுக்களை எதிர்பார்த்தன. ஆலயங்களில் பக்தர்கள் வரவு இருக்கிறதோ, இல் லையோ இவர்களது வரவு நிறைவு ! அங் குள்ள அனேகர் வங்கியில் சந்தித்திருக்கி றான். சரி, நம்மால் முடிந்ததை கொடுப் போமென பொக்கெட்டை தேடியவ னுக்கு ஏமாற்றமே பதிலாய் அமைந்தா லும், கோயிலுக்குள் சேர்ட்டை கழட்டி விட்டு வேட்டி சால்வையுடன் வருவதன் தாற்பரியம் பொக்கட்டுக்களை தடை செய்வதே எனும் உண்மை புரிவதாய் இருந்த்து. தற்போது தன் நிலையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடுகையில் அவர்களும் செல்வந் தர்களாகவே தெரிந்தார்கள். இவர்கள் அதிகரிப்பதால் ஆலயங்கள் அதிகரிக்கி றதா? அல்லது ஆலயங்கள் அதிகரிப் பதால் இவர்கள் அதிகரிக்கிறார்களா? என்பது இன்று வரை விடுவிக்கபடாத விடுகதையாக தொடர்கிறது. இருப்பி னும் அவர்களுள்ளும் சில உண்மை முகங்கள் இருப்பதை அவனால் மறுக்க முடியவில்லை.

இந்தக் காலச் சாமியார்கள் போல ஆதித்தன் தெய்வ நம்பிக்கை குறைந் தவன். ஆனாலும் ஒரு வித அமைதிக் காகவே ஆலயம் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தான். ஆலய முன்றலுக்கு சென்றவனுக்கு மேலும் அதிர்ச்சி.தாயின் கருவறைக்கு நிகரான புனிதம் கொண்ட ஆலய கர்பக்கிரகத்தில் அவசர அவசரமாக பூசைகள் நடந்தேறின. மடத்தடி குருட்டுச் சாமியார் 100 வருடம் இமயமலையில் தவம் செய்து விட்டு இங்கே அரச மடத்தடிக்கு தன் பரிவாரங்களோடு வந் திருக்காராம். அவரது ஆசி பெறத்தான் ஐயர் முதல் அனைவரும் அல்லோல கல்லோலம். மாதா பிதா குரு தெய்வ மென சொன்ன எங்கள் சமயம் அதில் சாமியாரை எங்கு வைத்ததாக தெரிய வில்லை. கைலாயம் செல்வதற்காய் அவ்வை செய்த அவசர பூசையையே மறுத்த அறுகம்புல் நாயகன் இதை மட் டும் ஏற்பாரா? போன வருடம் கூட காசியிலிருந்து வந்த காமகோடியானந்தா கதவை திற காற்று வரும் என்று சொல்ல இந்த சனம் காணிக்கையை மலையாய் குவித்த்து. வாயிலிருந்து லிங்கம் எடுப் பது தான் சாமியாராவதற்கான முதல் தகுதி. ஆனால் அவரது அந்தரங்கம் எல் லாம் பகிரங்கமாகி இப்ப அவர் வரை யறை அற்ற அஞ்ஞானவாசம். அதே கதி தான் இந்த இமயமலை ஆசாமிக்குமோ? யாரறிவார். இந்த சனத்துக்கெல்லாம் ஒரு பெரியார் போதாதப்பா!

ஆதித்தன் இவ்வாறெல்லாம் யோசித் துக் கொண்டவாறே ஆலயப் பிரகா ரத்தை மும்முறை வலம் வந்தான். ஆல யக் குளப் படிக்கட்டில் அமர்ந்தவன் அருகில்கிடந்த கூழாங்கற்களை எடுத் துக் குளத்தில் வீசியவாறு நீரலைகளின் அசைவை அவதானித்துக் கொண்டிருந் தான். தன்னை மறந்து அவன் மனதில் ஐயப்பாடுகள் பல உதயமாகின. கடவுள் இருக்கிறாரா? இல்லை என்றால் புரா ணம், இதிகாசம் எல்லாம் கட்டுக் கதையா? இருக்கிறார் என்றால் எங்கே இருக்கிறார்? இத்தனை கொடுமைகள், உயிரழிவுகள் நடந்தும் இன்னும் சிலை யாகவே இருப்பது ஏன்? ஐந்தொழில் களில் காத்தலும், அருளலும் காணாமல் போனதேன்? இவ்வாறான கேள்விகள் அவனது மூளையால் எழுப்பப்பட்டா லும் அதற்கான விடைகளை மறுமுனை யில் இதயம் கூறிக் கொண்டே இருந்த்து "அந்த இருதயத்திலிருந்து பதிலளிக்கும் சக்தி யார்? என்பதை ஆதித்தன் உணர்ந்ததாக தெரியவில்லை "கண்டவர் விண்டிலர், விண்டிலர் கண்டவர்" என் பதும் உண்மைதானே இவ்வாறு சிந்தித் தவனுக்கு விஞ்ஞானம் , மெஞ்ஞானம் பற்றிய ஒரு தொடர்பு புதியதாய் புரி வதாய் இருந்த்து. விஞ்ஞானமானது படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் இறைவன் வைத்த இரகசியத்தை கண்டுபிடிக்கிறது. ஆனால் மெஞ்ஞானமோ அதைப் படைத்த இறைவனையே கண்டுபிடிக்க முனைகிறது. அது சாமான்ய காரியமல்ல என்பதும் அவனுக்கு தெரியும் அவ்வாறு கண்டுபிடித்து விட்டதாகக் கூறி பலர் காட்டும் கண் காட்டி வித்தைகளும் அவனுக்கு புரியும். ஆனால் இப்ப ஆதித்தனுக்கு தெரிவதெல்லாம் தொலைவில் நம்மட சனமெல்லாம் கூடி கடாவெட்டி படையல் செய்வது தான் இதை பார்த்தவனுக்கு அடக்க முடியாத சிரிப்புத்தான் வந்தது எத்தனையோ படையல்களை படைக்கிறார்கள் பின் அத்தனையையும் பிரசாதம் எனும் பெயரில் ஒன்றும் விடாமல் அமுக்கி விடுகிறார்கள் ஒரே ஒரு நாள் கடவுள் மட்டும் வந்து அந்த படையலை உண்டால் போதும் அதற்கு பிறகு ஒருத்தனும் படைக்கமாட்டான். ஒரு சிலரே விதிவிலக்கு.

இவற்றையெல்லாம் விட இவனது ஆழ்மனதில் ஆணித்தரமாய் ஒரு "சாமி யார்?" நல்ல கேள்வி என்று மட்டும் பதிலளிக்கும் பள்ளிக்கூட வாத்தியார் போல அவனால் இருக்க முடியவில்லை ஏனில் வினாவின் பிரம்மனும் அவனே அதற்கானபதிலைகூற வேண்டியவனும் அவனே ஏனேன்றால் அவனது மனசாட்சியை விட தீர்ப்பளிக்கும் சிறந்த நீதிமன்றம் வேறொன்றும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை உலகமே கதிகலங்கி செந்நீருடன் விழிநீரும் சோந்தே பெருக்கெடுத்த போதும் கல்லாகவே கற்பக்கிரகத்தில் இருந்த கடவுள் எனப்படும் அந்தச் சிலையைக் கூட அவனது அலை பாயும் மனம் ஏற்கவில்லை ஆனாலும், அவனது இருதயம் அதை மறுத்தது. மறுக்கப்பட்ட வேண்டியதை மறப்பது தானே மனிதத்தின் புனிதம் "சாமி யார்" என்கிற ஆதித்தனின் தேடல் மேலும் அகலமானது கடவுள் இருக்கிறார் என்பவனையும் நம்பலாம் இல்லை என்பவனையும் நம்பலாம் ஆனால் "நான் தான் கடவுள் என்னை வணங்கு" என்பவனை என்ன செய்வது ? அவன் தான் அப்படி சொல்றான் என்றால் அதை நம்பி பின்னால போறவங்களை என்ன பண்ணிறது? இவர்களெல்லாம் கடவுள் நம்பிக்கை எனும் பதத்தை மூலதனமாக்கி மூடநம்பிக்கைகளை பரப்பி இலாபம் ஈட்டுபவர்களாகவே அவன் மனதில் பட்டது. ஆக "சாமி யார்?" எனும் அவனது ஐயத்தில் தெளிவு சாமியார் அல்ல என்பது மட்டும் புலப்பட்டது.

இப்போது ஆதித்தன் தேடல் அறிவியல் சார்ந்த ஆன்மிக நோக்கில் விரிகிறது. கடவுளை ஏன் மக்கள் நாடுகிறார்கள்? ஏன் வணங்குகிறார்கள்? என்றால் தம் மன அமைதிக்காகவும் தம் துயர் துடைத்து உதவுவானென்ற நம்பிக்கையினாலேயே யாகும். ஆக எமது மனதுக்கு அமைதி தந்து எமக்கு உதவுபவனை சாமி எனலாமா? என்ற போது "ஆம்" என்று அவன் இதயமும் மூளையும் சேர்ந்தே உடன்பட்டன. இருள் செறிந்த மனதுக்கு இப்போது தீப்பெட்டி கிடைத்து விட்டது இனி அதைப் பற்ற வைத்து தீப மேற்றுவதுதான் வேலை ஆதித்தன் அதற்கும்' தயாராகி விட்டான். வரண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்திற்கு மழை சாமி, வழிக்கு இமை சாமி, விதிக்கு மதி சாமி, நடிகனுக்கு ரசிகன் சாமி, நோயாளிக்கு வைத்தியர் சாமி , சீடனுக்கு குரு சாமி, நண்பனுக்கு நல்ல நண்பன் சாமி, பிள்ளைக்கு பெற் றோர் சாமி, ஆனால் எனக்கு....... எனக்கு யார் சாமி? என தனக்கான சாமியை தேடியதுக்கு விடையாக வந்து நின்றது அவனது அக்காள் ஆம் சிறு வயதில் பெற்றோர் தென்புலம் சென்ற போதும் தன் உதிரத்தை வியர்வையாக்கி வியர் வையை மூலதனமாக்கி ஆதித்தனுக்காக தன்னையே அர்ப்பணித்தவள் அவனது அக்காள் ஆம் ஆதித்தனின் சாமி அவளது அக்காவே தான் இப்போது உலக நாய கனின் " நான் கடவுள் இல்லை என்று சொல்ல இருந்தால் நல்லாயிருக் குமென்டுதான் சொல்றன்" என்ற வசன மும் நினைவில் வந்தது. ஆம் எனக்கும் சாமி இருக்கு அது என் அக்கா தான்" என உலகநாயகனுக்கே பதிலளிப்பது போல் திருப்திப்பட்டுக் கொண்டான்.

ஆகா ஆதித்தனின் முகத்தில் என்ன வொரு பிரகாசம் நெடுநேர தேடலுக் கான தெளிவை பெற்றுக் கொண்டவ னாய் குளத்தில் அடுத்த கல்லை எறிவ தற்காய் தேடியவனுக்கு மண்ணே அகப் பட்டது. ஞாபகம் வந்தவனாய் வட்டை நோக்கி புறப்பட்டவன் மனதில் தன் குலசாமியான அக்காளின் புன்னகை மட்டுமே நிறைந்திருந்தது. ஆதித்தனின் தேடலில் பெற்ற தெளிவை உணர்ந்த பான்மை போல் மூலஸ்தான விக்கிரக மும் அசைவதாய், ஆதித்தனை அழைப் பதாய்,

**ஆம் அழைப்பதாய் ஒரு குரல்.......**
**ஆம் அது சாமியின் குரல்.............**
**ஆதித்தனின் சாமியின் குரல்..........**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துமதத்தின் அறிவியல் உண்மைகள்

**நி.ஜனலக்ஷன்**
3ம் வருடம்
பொறியியற் பீடம்

நீதிமன்றத்தில் செய்யும் சத்தியம் "சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை". உண்மை என்பது விஞ்ஞானம். விஞ்ஞானம் என்றால் அறிவியல் இந்த அறிவியல் உண்மைகளுடன் இரண்டறக் கலந்த மதம் இந்துமதம். நாம் இந்துக்கள் என்ற பெருமைக்குரியவர்கள் இதையே கவியரசு கண்ணதாசன் அவர்கள் ஒற்றை வரியில் அர்த்தமுள்ள இந்துமதம் என்ன சொன்னது? எனக்கேட்டு அதற்கு ஆயிரம் பதில்களை எடுத்துக்கூறியிருந்த போதிலும் அது அறிவியல் உண்மைகளை எடுத்துச் சொன்னது என்பதே மிகப்பொருத்தமான பதிலாகும்.

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சோதியை மூலமாக கொண்ட அநாதியான இந்துமதம் "வாழவிட்டு வாழ்கவளமுடன்" என்ற பாதையை உலகத்திற்கு வகுத்து தந்தது. இதற்காக அறிவியல் உண்மைகளை இந்து மதத்தின் கோட்பாடுகளாக சடங்குகள், சம்பிரதாயங்கள் நம்பிக்கைகள் வழிபாட்டு நடைமுறைகள் என அனைத்தும் ஊடாக பாமரர் முதல் அறிஞர்கள் வரை புரிந்தவர்களும் புரியாதவர்களும் ஏற்று நடக்கும் வழி முறைகளை மதத்தின் பெயராலும் தெய்வத்தின் பேராலும் வகுத்து தந்ததுள்ளது.

இது பிறப்பிற்கு முன்னால் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பிற்கு அப்பால் வரை ஏழேழு ஜென்மங்களுக்கும் மனித வாழ்வு மகத் தானதாக அமைய வழி சொன்னது. வாழும் போதே உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக வழி சொன்னது. வாழ்வும் வளமும் சிறக்க வழி சொன் னது, நிதானமும் நிம்மதியுமாக வாழ வழி சொன்னது. சொன்னவையெல்லாம் முட்டாள் தனமும் மூட நம்பிக்கை யுமல்ல முற்றிலும் அறிவியல் சார்ந்த உண்மைகள் என பகுத்தறிவாளர் களையும் பணிய வைத்தது இந்து மதம். இவை மட்டுமா? வீட்டுக்கும் கோயிலுக் கும் பொறியியல் விஞ்ஞானம் தந்தது. வயலுக்கும் வாழ்வுக்கும் விவசாய விஞ்ஞானம் சொன்னது. ஊனுக்கும் உடலுக்கும் மருத்துவ விஞ்ஞானம் தந்தது. வாழ்வுக்கும் வளத்திற்கும் நாள் கோளுடன் நற் சாஸ்திர விஞ்ஞானம் கூறியது. அளவிட முடியா அறிவிற்கு எட்டா அறிவியலை எங்கும் எதிலும் சொல்லி வைத்தது இந்து மதம்.

இந்த உண்மைகளை ஓர் இந்துவின் வாழ்க்கை நடைமுறைக்குள் அங்கிங் கெனாதபடி எங்கும் எடுத்துக் சொல்கி றதென அறியும் போதே ஆச்சரியமும் வியப்பும் மேலோங்க நாமெல்லாம் இந்துவாக வாழ்வதை எண்ணி பெருமைப் பட வைக்கின்றது.

இன்று உலகெல்லாம் உள்ளவர்கள் இந்து மத பழக்க வழக்கங்களை பின் பற்ற புறப்பட்டு விட்டனர். கைகுலுக்கி வரவேற்றோரெல்லாம் இரு கரம் கூப்பி வரவேற்க தொடங்கி விட்டனர். சிம் மாசனம் போல் கதிரைகளை விட்டு இறங்கி பத்மாசனம் போட்டு தரையி லிருக்க ஆரம்பித்து விட்டனர். சாப்பிட முன்னர் சோமபானமும் பின் தூக்கமும் கொண்டவர்கள் உண்ணமுன் தியான மும் உண்டபின் நடக்கவும் புறப்பட் டுவிட்டார்கள். இவையெல்லாம் பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதம் சொல்லி வைத்தவைதான். மேலே சொன்ன விடயங்களில் எல்லாம் விஞ்ஞானம் தான் பொதிந்துள்ளது. கையைத் தொடு வானேன் கவலைப்படுவானேன் என்று அன்றே இரு கரம் கூப்பி வணங்கினோம் கடும்நோயும் கொடுங் கிருமியும் கொண் டவனொடு கைகுலுக்குவது நலமா? இல்லை அவனைவிடுத்துஅடுத்தவனுக்குகைகொ டுத்தல்தான் பண்பா? ஏன் இந்த பாகு பாடு என இருகரம் கூப்பச் சொல்லியது இந்து மதம். முகத்திற்கு நேரே இருகரம் கூப்பி வணங்கும் போது இரண்டு உள் ளங்கைகளிலும் ஏற்படும் அழுத்தம் இரு கண்காளாலும் நேரே முகம் பார்க்கும் போது மூளையில் பதிவு பலமாகின்றது என தற்போதைய ஆய்வுகளில் தெரிய வருகின்றது. கைகுலுக்கி சென்றவர் களைவ விட நேருக்கு நேர் நின்று வணங் கியவர்கள் நீடித்து நீண்ட நினைவில் நிற்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கதிரையில் இருப்பதைவிட தரையில் சப்பாணி கட்டி அல்லது பத்மாசனம் போட்டு அமர்ந்திருப்பது உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கின்றது என்பது உணவருந்த முன்னர் உண்ண உணவும், உடுத்த உடை யும் கொடுத்த இறைவனை மனதில் இருந்தி உணவு உட் கொள்வதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுக் கால்வாய் தொகுதியின் தொழிற் பாடுகளை அதிகரிக்கின்றது எனவும், பசியெடுக்கவைத்து உணவு சமிபாட்டை ஏற்படுத்துகின்றது எனவும் முன்னால் தேவாமிர்தமே இருந்தால் கூட மனதை கட்டுப்படுத்தி உணவு உண்ண தியானமே உதவுகின்றது எனவும், உண்டவுடன் உறங்காது சிறிது நடந்தால்; ஆரோக்கியம் அதிகரிக்கின்றது எனவும் இன்று வைத்தியர்கள் தெரிவித்ததைதான் இறைவன் பெயரால் மத அனுஷ்டானங்களாக அன்றே இந்து மதம் சொல்லி வைத்ததது.

காலுக்கு மெட்டியும் காதுக்கு தோடும் அழகிக்கு அழகு சேர்க்கவா போட்டார்கள் நம் முன்னோர்கள் அழகனுக்கும் தான் கடுக்கன் போட்டார்களே ஏன் என நினைத்தோமா? கடவுளின் பெயரால் காது குத்தல், பறவைக் காவடி, தூக்குக்காவடி, அலகு குத்தல் என்றும் செம்பு, வெள்ளி, பொன் என பற்பல உலோகங்களால் உடலின் பல்வேறு இடங்களிலும் குத்தியது வெறும் வீர விளையாட்டிற்காகவா இல்லை இந்து மத ஞானிகள் எல்லாம் சாமானியர்கள் இல்லை இந்து விஞ்ஞானிகள் வெவ்வேறு உலோகங்களால் வேறுபட்ட நரம்பு முடிவிடங்களை குத்துவதால் மாறுபட்ட மின்தூண்டல்கள் எற்பட்டு தீராத நோயும் மாறுமென அக்கு பஞ்சர் வைத்திய முறைக்கு முன்பே கடவுளின் பெயரால் மனிதனின் சுகவாழ்வுக்கு வழிவகுத்தனர்.

உணவு முறைகளில்கூட உண்ணும் உணவிற்கும் உணவு உட்கொள்ளும் நடைமுறை ஒழுங்கிலும் அறிவியலை புகுத்தியவர்கள். ஆடி அமாவசைக்கு காத்தோட்டிக்காயென்றும் புரட்டாதி சனிக்கு நல்லெண்ணெய் என்றும் பிதிர்களுக்கான எல்லா திதிகளிலும் பாகற்காய் என்றும் கட்டாயப்படுத்தியதுகூட அறிவியலே. குடற்புழுக்களை முற்றாக அழிக்கும் காத்தோட்டி ஆடி மாதத்திலேயே காய்க்கும் என்பதால் தந்தையின் பிதிர் கடனுக்கு இது கட்டாயம் என்றார்கள். ஐப்பசி மாதத்தில் மாரி காலம் ஆரம்பிப்பதால் குளிர்காலத்தில் ஏற்படும் அதி சக்தி இழப்பிற்கு முன்னர் சற்று கொழுப்பு சத்து உடலில் சேமிக்கப்பட வேண்டும் என்றே புரட்டாதியில் நல்லெண்ணையை சனீஸ்வரனுக்குரியது என்றார்கள். சலரோகம் என்பது சகல ரோகத்திற்கும் மூலம் என அறிந்து இதைக்கட்டுப்படுத்துவதற்கு வைத்திய ஆலோசனைப்படி பாகற்காய் சாறு அருந்துகின்றார்கள் இன்று ஆனால் அன்றே எல்லாத் திதியிலும் பிதிர்களின் பெயரால் பாகற்காயை கட்டாயமாக்கினார்கள். இவை எல்லாவற்றையும் தரையில் சப்பாணி இட்டு வாழை இலையில் உண்ண வைத்தார்களே ஏன்? தரையுடன் தொடுகையில் இருப்பது பசியை தூண்டுகின்றது என்பதுடன் வாழையிலையில் உள்ள இரசாயனப் பொருட்கள் குடல் நோய்களிற்கு நிவாரணம் அளிக்கின்றது எனவும் நச்சுத் தன்மைகளை தானே உறிஞ்சுக்கொள்கின்றதெனவும் அறியக்கிடைக்கின்றது இதனோலேயே பாம்பு கடித்தவனையும் வாழை இலையில் படுக்க வைத்து வைத்தியம் செய்யும முறை பின்பற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப்படுகின்றது.

மங்கல அமங்கல காரியங்களில் எல் லாம் வாழையும் கற்பூரமும் இணைபிரி யாதிருப்பதன் காரணம் என்ன? வரு வோர் போவோரிடமிருந்து கிருமிகள் பரிமாறிக்கொள்வதை தடுத்து வாழை மரம் கிருமிகளை தன்னகத்தே ஈர்த்துக் கொள்கின்றது. காற்றில் உள்ள கிருமிக ளையும் நச்சு வாயுக்களையும் கற்பூர ஆவி காற்றில் பரவி இல்லாமல் செய் கின்றது. இவை சுத்தம் சுகாதாரம் பேணும் அறிவியல் முறைகளே அன்றி மூட நம் பிக்கைகள் அல்ல.

இந்துக்களின் அடையாளங்களும் தெய்வ வழிபாட்டு முறைகளும் கூட அறிவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்டதென் பதே உண்மை. சிவ சின்னமான வீபூதி, உருத்திராக்கம் அறிவியல் அடையாளங் களே. "ஆறில்லா ஊருக்கும் நீறில்லா நெற்றிக்கும் அழகுபாழ்" என்று ஔவை யார் சொன்னது ஒன்றும் புனைகதை அல்ல ஆழமான அறிவியல் முடிவாகும். திருநீறை தினமும் மார்பிலே, முதுகிலோ பூசாமல் ஏன் நெற்றியில் பூசுகிறோம்? இரு புருவங்களுக்கிடைப்பட்ட நெற் றிப்பிரதேசத்தை தொடும் போது மூளை நரம்புகள் தூண்டப்பட்டு புத்துணர்வு ஏற்படுகின்றுது, ஞாபக சக்தி அதிக ரிக்கின்றது எனவே வீபூதி அணிவதால் ஞாபகசக்தியையும் சிந்தனை ஆற்றலை யும் தூண்டுவதுடன் காண்போரையும் வசீகரிக்க செய்கின்றது. நெற்றித் திலக மிடுவதும் உச்சி முகர்வதும் இதன் அடிப்படையிலேயே ஆகும். அத்துடன் உருத்திராட்சம் அணியும் போது அதில் உள்ள முளைகளின் எண்ணிக்கையை கூட ஆய்வு செய்து அறிவியலுடன் தொடர்புபடுத்தியுள்ளார்கள். அதிக முளை களையுடைய உருத்திராட்சத்தை அணி யும் போது அதிலிருந்து வெளிவரும் மின்காந்த அலைகளால் ஆற்றல், அறிவு, திறன விருத்தியென 21 பயன்கள் கிடைப்பதாக அறியப்பட்டுள்ளது. சிவ சின்னங்களில் கூட அறிவியல் கண்ட இந்து மதம் வியப்பிற்குரியதல்லவா!

மஞ்சளும் சந்தனமும், வேப்பிலை யும் துளசியும், கோசலம், கோமயம் என்று தொன்று தொட்டு பயன்படுத்தி வருகின்ற அனைத்தும் சிறந்த கிருமிகொல் லிகள் என்று இன்று அறியப்பட்டுள்ளது. ஆண்கள் மார்பெல்லாம் சந்தனம் பூசுவ தும் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதும் தொற்று நீக்கும் செயற்பாடுகளே வீட் டில் மஞ்சள் நீர் தெளிப்பதும் முற்றத்தில் சாணி தெளிப்பதும் வாசலில் வேப் பிலை கட்டுவதும் துளசி நீர் அருந்துவது நோய்க்கிருமி பரவாது தடுக்கும் நடவ டிக்கையாகும். பிள்ளையாரை வணங் குவது என்ற பெயரில் சாணியிலோ, மஞ்சளிலோ பிள்ளையார் பிடித்து வைப் பது நச்சுக்கிருமிகள் அண்டாமல் செய்வ தற்கே என ஒவ்வோர் நடைமுறையும் ஒவ்வோர் அறிவியற்கோட்பாட்டை அடிப் படையாக கொண்டவையென அறிய முடிகின்றது.

தினமும் கோவிலுக்கு செல்வோம், கடவுளை வணங்குவோம் எனவும் கோவில் இல்லா ஊரில் குடியிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமெனவும் சிறுவயது பாடப் புத்தகங்களில்கூட குறிப்பிடுகிறார்கள் ஏன் கடவுளை வீட்டிலிருந்து வணங் ககூடாது என்ற கேள்வி கோவில் அமைப் பும் அது அமைந்துள்ள இடங்களும் நடைபெறும் அபிஷேக ஆராதனைக ளும் அறிவியலே! கோவிலைக்கட்டும் போது அருவியோ குளமோ கடலோ மலையோ இருக்கும் இடத்தில் அமைக் கின்றார்கள். அருவியில் குளிப்பதும் , குளத்தில் மூழ்குவதும், மலையேறு வதும் கோவிலுக்குள் செல்லும் முன் உடல் ஆரோக்கியத்திற்கான செயற்பாடு களாகும். இவற்றை வீட்டிலிருந்து வணங் கும் போது பெற முடியாது. தொடர்ந்து கோவிலுக்குள் செல்லும்போது கர்ப்பக் கிரகத்தில் செய்யப்படும் அபிஷேகங்க ளும் மந்திர உச்சாடனங்களும் கோவி லுக்குள்ளே இருக்கும் வளி மண்ட லத்தில் ஈரப்பதனையும் எதிர்மின்னோட் டத்தினையும் ஏற்படுத்துவதால் அதிக ளவு தூய ஒட்சிசன் உருவாக்கப்படு கின்றது. இது சுவாசத்தின் மூலம் இத யத்துடிப்பையும் இரத்த ஓட்டத்தையும் சீர் செய்வதால் கோவிலுக்குள் நிற்கும் போது எம்மை அறியாமேல நாம் ஒரு சுகானுபவத்தை உணர்கின்றோம் என் பது கூட அறிவியல் ரீதியான முடிவாகும். இதனாலேயே கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமெனவும் தினம் கோவிலுக்கு சென்று கடவுளை வணங் குவோம் என்றார்கள். வணங்கும் முறை யில்கூட உடற்கூற்று சாஸ்திரப்படி ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு முறைகளை சொல்லி வைத்தது இந்து மதம். இது உலகில் வேறு எந்த மதங் களிலும் காண முடியாது. இடமிருந்து வலமாக அங்கப்பிரதிஷ்டனம் செய்யச் சொன்னதும், பிள்ளையாருக்கு முன் னால் தோப்புக்கரணம் போட வைத்த தும் இன்று உலகில் மிகப்பிரபல்யமாகி வரும் சிறந்த உடற்பயிற்சி முறைகளா கும். இவற்றை அன்றே எடுத்துச் சொன் னது இந்து மதம். இந்து மதம் சொல்லும் அறிவியல் உண்மைகளை எழுத ஆயிரம் பக்கங்களே போதாது எனவே அன்றாட வாழ்வில் இந்து மதம் சொல்லும் அறிவியல் உண்மைகள் சில வற்றை மட்டும் இந்துதருமம் எனும் நூலில் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத் தமைக்கு இறைவனுக்கு நன்றி தெரிவித்து "இந்து மதம் சொன்னதெல்லாம் உண்மை உண்மையைத்தவிரவேறொன்றுமில்லை" எனக்கூறி நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து இளைஞரின் பார்வையில் இன்றைய உலகம்

**சிவகுமாரன் சாரங்கன்**
பொறியியற் பீடம்

உலகம் என்பது பரந்து விரிந்த பாரிய பிரதேசம். ஒரு சிறு பொருளையே ஒவ்வொருவரும் பல்வேறு வகையில் பார்க்கிறார்கள். அந்த வகையில் இயற்கை என்னும் விந்தையின் விசித்திரப் படைப்பான உலகத்தை பல்வேறு வகைகளில் பற்பலரால் உற்று நோக்கப்படலாம். நாம் தற்போதைய கால கட்டத்தில் யார் பார்வை உலகத்தை ஆள்கிறதோ ஆதிக்கம் செலுத்துகிறதோ அவர்களுக்கு முக்கியத்துவம் வேண்டியதாயிற்று . இதுவே உலகத்தின் நியதியாகும். அந்தவகையிலே இக்காலத்தை அல்ல எக்காலத்தை எடுத்துக் கொண்டாலும் அந்நிலையில் இளைஞர்களே முந்திக்கொண்டு முன்னிற்கின்றனர். அவர்களின் கையிலே பூமியின் வாழ்வும் சாவும் . அதே போல் மனிதன் ஆனவன் தன்னை நெறிப்படுத்த பல்வேறு வகை வழிகளை உருவாக்கி வைத்துள்ளான். அந்த வழிகளில் முதன்மை பெற்றது மதம். இவற்றுள்ளும் தொன்மையானதும் சிறப்புமிக்கதும் ஆனது இந்து சமயம். இதனால் உலகத்தின் மீதான பார்வை இந்து இளைஞனுக்கு சிறப்பாகவே இருக்கும்.

இயற்கை எழில் கொஞ்சும் உலகத்தில் இயற்கையின் இன்பத்தை சுவாசித்து வந்த எமக்கு செயற்கை எனும் செய்வினை வைத்தது யார் ? வேறு யார் தற்போதைய முதுமைகளாகிய அப்போதைய இளைஞர்கள் . எனவே நல்லதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டதோ இளைஞன் முந்தி அடிக்கிறான். ஏன் இந்து இளைஞன் இக் கட்டுரையில் சேர்க்கப்பட்டது என்றால் இந்து மதமே கட்டுப்பாடு குறைந்த சுதந்திரமான மதம். இதனாலேயே இளைஞன் சுகந்திரம் அடைந்து அவன் சுய பார்வை வெளிப்படும்.

இன்றைய இளைஞர்கள் உலகத்தை எவ்வாறு நோக்குகிறான் என்பதை பற்பலரும் கேள்வி எழுப்பத்தான் செய்கிறார்கள். அவ்வாறான கேள்விகளுக்கு இளைஞன் என்ற வகையில் விடையளிக்க விரும்புகிறேன். இளைஞன் என்பவன் யார்? என வினவினால் யார் துடிப்புடனும் உடனுக்குடன் திடகாத்திரமாய் முடிவெடுக்கும் முற்போக்கு தன்மை உடையவனோ அவனையே இளைஞன் என்பேன். இது எனது தனிப்பட்ட கருத்தேயாகும். சிலரிடம் வினாவினால் வயதெல்லையை வைத்து இளைஞனுக்கு வரைவிலக்கணம் தருவார். இது இவ்வாறு இருக்க இந்த பாரிய விரிந்த உலகத்தை வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு கோணத்தில் நோக்குகின்றனர். இதில் இளைஞர்கள் மட்டும் விதி விலக்கா என்ன? அவர்களும் வெவ்வேறு கோணத்தில் நோக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் பார்க்கும் பார்வை வெவ்வேறாகிறது. இதை நீங்கள் இவ் இளைஞனின் பேனா முனையில் எழுத்து எங்கு முடிகிறதோ அங்கு அறிவீர்கள்.

எந்த ஒரு இளைஞனுக்கும் தான் நினைத்ததை அடைவதற்கே முயற்சிப்பான். இவ்வாறு முயற்சிக்கையிலே அவனுக்கு பற்பல எண்ணங்களும் சிந்தனைகளும் மேலும் அவன் உற்று நோக்கும் பொருள் மீது வெவ்வேறு பார்வைகளும் உருவெடுத்து ஓடுகின்றது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இளைஞ்ஞனானவன் தற்போதைய காலகட்டத்தில் *17 -21* வயதான காலப்பகுதிகளில் காணப்படுகின்றான். இவன் அந்த காலப்பகுதியை எடுத்துக் கொண்டால் படிக்கும் காலப்பகுதியாகவே காணப்படுகின்றது. இது அவனுக்கு தற்போது சுமையாக மாற்றப்பட்டுள்ளது. ஏனெனில் அவன் கல்வி கற்பதை சுமையாக நினைக்கவில்லை. அவன் விரும்பிய கல்வியை கற்கமுடியாமையே அவனுக்கு சுமையாக இருக்கின்றது. அவன் வழியில் பெற்றோரும் விடுவதாய் இல்லை . அவன் சீர்கெட்டு அழிந்து விடுவான் எனப்பயப்படுகின்றனர். அவன் விரும்பிய பாதையில் விட்டு நன்னெறிப்படுத்த விரும்பவில்லை தமது ஆசையே திணிக்கின்றனர். அதனாலேயே தற்போதைய உலகத்தை வெறுத்துக் கொள்கின்றனர். இது இப்படியாக இருக்க வேலைத் தளத்தில் பார்த்தால் சுமை தலை விரித்தாடுகின்றது. அவனின் மன நிலைக்கு ஏற்றால் போல் வேலை இல்லை. அவனுக்கு தீடீர் மாற்றம் ஏற்படுகின்றது. அவனால் இதை சகித்துக்கொள்ள முடியவில்லை .திடீர் மாற்றம் என்பது இயலாத காரியமே. ஏன் எமது உருவாக்கத்தில் கூட பரிணாம வளர்ச்சியே முக்கிய இடம் வகிக்கின்றது. இது இக்காலகட்டத்தில் வேரோடு பிடுங்கி எறியப்படுகிறது. மாற்றம் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது இளைஞனுக்கு மட்டும் அல்ல எவருக் கும் திடீரென ஏற்படகூடாது. ஆனால் இது இளைஞனுக்கு மட்டும் தான் தொடர்ச் சியாக நடப்பது போல் உணரமுடிகிறது. இது அவனுக்கு பிரச்சனையானதே அவன் பார்வையில் உலகம் எதிரியாகின்றது

இந்த உலகத்தை அவன் விரும்பி யவாறு அமைக்கமுற்படுகின்றான். அல் லது அழிக்கமுற்படுகின்றான், இதில் எது இலகுவாக தெரிகிறதோ அதை செய்ய விரும்புகிறான். இதனாலோ தெரிய வில்லை இந்த உலகத்தில் வன்முறைகள் அதிகமாக உருவெடுக்கின்றது. இன்றைய உலகமானது இளைஞரை வருத்தி வளர வைக்க வேண்டும் என நினைக்கிறது. இதனால் இளைஞன் உலகை முன் னேற்ற வேண்டும் என்று விரும்ப வில்லை. அவன் தனக்கு சாதமாக மாற்றி அமைக்க முற்படுகின்றான். இதுவே உலக இளைஞர்களின் ஒட்டு மொத்த முடிவாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி விசாகம்



தைப்பூசம் 2014



தைப்பூசம் 2012



தைப்பூசம் 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருக்கு ஆனால் இல்லை...

**ப.கௌஷிகேசன்**
2ம் வருடம்
பொறியியற்பீடம்

ஏதோ ஒன்று இல்லாமல் எதுவுமே இல்லை..... இல்லவே இல்லை அந்த ஏதோ ஒன்றை இல்லை என இரு வர்க்கம் ஒன்று நாத்திகன் மற்றது ஆத் திகன். இங்கே நான் இல்லை என கூறி யது உருவத்தை கடவுளை நேரில் காட்ட முடியுமா என வாதாடும் கூட்டத்தை ஏழையின் சிரிப்பில் பார், மலர்களிலும், துள்ளித்திரியும் கன்றுக்குட்டியிலும் பார், குட்டிக்குழந்தையின் கொஞ்சும் சிரிப்பில் பார் என சமாளிக்க மட்டும்தான் முடி கிறது.

காந்தி என்று ஒருவர் இருந்தார் என் கிறார்கள். கடவுள் என்று ஒருவர் இருந் தார், இருக்கிறார் என்கிறார்கள். காந்தி அகிம்சைக்காக போராடினார் என்றார்கள் நம்பினோம். கடவுள் அற்புதங்களை புரிந்தார் என்றார்கள் நம்பவில்லை. அங்கே தான் அந்த இரு வர்க்கங்களின் பிறப் புக்கு ஓர் ஆரம்பம்.

பௌதீக இயற்பியல் விதிகளை ஆதார மாக கொண்டே எல்லா பொருட்களும், சக்தி வடிவங்களும் இயங்குகின்றன. இவற்றின் ஆரம்பநிலையை விபரித்து விட்டால் அதிலிருந்த அடுத்தடுத்த எல்லா நிலைகளையும் விபரிக்கலாம். அதேபோல் தான் மனிதப்படைப்பிலும் ஆரம்பத்தின் தோற்றம் எப்படி நடந்தது? முதலாவதாக தோன்றிய மனிதன் யார்? இந்த கேள்வியை கேட்டபோதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிரல்கள் இரண்டு சிரசில் போல் சேருகிறது. அத்தோடு கடவுள் இல்லை என்ற வர்க்கத்தில் சிலர் கட்சி மாறவும் வெளிக்கிறார்கள். *" science must provide a mechanism for the universe to come into being"* அதாவது பிரபஞ்சம் தோன்றுவதற்கு உண்டான வழிமுறைகளை அறிவியல் தரவேண்டும் என்று ஜான் வீலர் சொன்னது சரி அவர் சொன்ன அடிப்பொருள் கடவுளா? பிரபஞ்சமானது ஒரு நதிபோல, மொத்தமாக பார்க்கையில் நதி போல ஆனால் ஒவ்வொரு கணமும் புதுநீர் போல பிறப்பும் இறப்பும் நடக்கிறது. இதை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போதே உடலில் பல்லாயிரக்கணக்கான கலங்கள் இறக்கின்றன. பிறக்கின்றன. ஆகவே நீங்கள் நொடிக்கு நொடி இறந்து பிறக்கின்றீர்கள்.

ஆன்மீக ரீதியில் மறு பிறவி என்ற ஒன்று உள்ளது. அது மூடநம்பிக்கையா? விஞ்ஞானம் இதற்கு என்ன சொல்கிறது? விஞ்ஞான ரீதியில் *DNA* என்பது அழிவில்லாத ஒன்று . நாம் இறக்கும் போது நம் அடுத்தடுத்த பரம்பரை ஊடாக *DNA* தொடர்கிறது. இதைத்தான ஆன்மீகத்தில் ஆன்மாவுக்கு அழிவில்லை என்கிறார்கள் வெறும் ஆன்மாவின் மேல் போடப்பட்ட அட்டை ஆகிய உடலுக்கு மட்டுமே அழிவு *DNA*. ஊடாக பாவ புண்ணியங்கள் பரிமாறப்படுமா? அது இன்னும் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிக்கமுடியாதென்று இல்லை. ஆன்மாவில் பழைய ஞாபகங்கள் தனித்து இயங்குமென பலர் நம்புகிறார்கள். ஆகவே காதலர்கள் சொல்லும் வார்த்தை "செத்தாலும் உனை மறவேன்" என்பது விஞ்ஞானரீதியில் சரிதானே!! எல்லா மதங்களிலும் சொர்க்கம்–நரகம் என்ற ஒன்று உள்ளது. ஆனால் அவர்கள் தத்தமது கலாச்சாரத்துக்கு ஏற்றபடி கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள். அதாவது சொர்க்கம், நரகத்திற்கான நுழைவு சட்டத்திட்டங்களை *(Entrance rules and regulations )* தமக்கு ஏற்றபடி முன்மொழிகிறார்கள்.

அன்றைய காலத்தில் சாகாவரம் என்று ஒன்று இருந்ததாக கூறியபோது நம்ப முடியவில்லை. இன்று போகும் போக்கில் எத்தனை தடவையும் இதயம் மாற்றலாம், இரத்தம் மாற்றலாம் என்றால் சாகாவரம் வெகு சீக்கிரத்தில் போல .. குளோனிங் முறையை கண்டுபிடித்து கடவுளின் சுமையை குறைத்து வரும் விஞ்ஞானிகள். இனி படைப்பை விட்டு அழிப்பைதான் கடவுள் முக்கிய வேலையாக செய்ய போகிறாரோ??? "எல்லோரும் ஓர் குலம் ஒரினம் எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை " என்று அன்றே பாரதி கூறிவிட்டான். அது குளோனிங் முறையை தான் சொல்லாமல் சொன்னானோ பாரதி?

இறந்த பின் எப்படிப்பட்ட வாழ்க்கை என்பது விஞ்ஞானிகளுக்கு வெறும் எடுகோள்களை கொண்டே விளக்கமுடிகிறது. அத்தோடு சில செத்து பிழைத்தவர்கள் கூறியதை நம்பினாலும் மட்டுமே *Near death experience* என்ற புத்தகத்தில் சாவுக்கு அருகாமையில் நடந்த பல விடயங்களை கூறியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் செத்துப் போயிருக்கிறேன் எல்லோரும் அழுகிறார்கள், ஏன் அழுகிறீர்கள் என என்னால் கேட்க முடியவில்லை. நான் உடலை விட்டு வெளியே வந்து கொஞ்சம் மிதந்து கொண்டிருக்கிறேன் "அப்படி தமது அனுபவங்களை கூறியிருக்கிறார்கள். இதை நாங்களும் ஒரிரு நொடிகள் உணர்த்திருப்போம் . *'Sleep Parudicis'* என்ற ஒன்றில் குறிப்பாக மதியம் தூங்கும் போதே விழிப்பு கண்டு நினைவு வந்து விடும் ஆனால் கை, கால் அசைக்கமுடியாது.

பல ஆன்மிக கருத்துக்களை மூட நம்பிக்கை என்ற போர்வையில் மூடி மறைக்க வெளிக்கிட்டாலும் விஞ்ஞானம் வந்து கை கொடுத்து நிறுத்துகிறது. துளசி மரத்தை முற்றத்தில் நடு என்றனர். அது சரி வராது வீட்டுக்கு முற்றமே இல்லை விடு என்றோம். விஞ்ஞானிகள் சொன்னார்கள் துளசி மரத்தின் அயலில் சுத்தமான சுவாசக்காற்று கிடைக்கிறது. துளசி மரத்தின் அயலில் சுத்தமான சுவாசக்காற்று கிடைக்கிறது. துளசிக்கு நுளம்பு வராது. பாம்புகள் வீட்டை அண்டாது. பல நுண்ணங்கிகள் அழியும் என்று. இப்போது பல மேல்மாடி வீடுகளில் கூட நடு வீட்டில் துளசிமரம் பூந்தொட்டியில் தொங்குகிறது மூதையர்கள் சாதாரணமாகவே சூரிய நமஸ்காரம் செய்தனர். நாம் இன்று பணம் கொடுத்து வகுப்புக்கு சென்று அங்கே சூரிய நமஸ்காரம் செய்கிறோம். வடக்கு –தெற்கு முனையாக தூங்கவேண்டாம் என்றனர் . நாம் தூங்கினால் என்ன என்றோம்?? மின்காந்த புலத்தை வைத்து விளக்கம் கூறியது விஞ்ஞானம்.

தரையில் இருந்து வாழையிலையில் சாப்பிட்டார்கள் அவர்கள் .நாங்கள் மேசையில் இருந்து சாப்பிட்டுவிட்டு உடனடியாக தரையில் இருந்து எழும்பும் யோகாசனத்திற்கு வகுப்பிற்கு செல்கிறோம். சாப்பிட துவங்கும் போது இறுதியில் இனிப்பு கொடுப்பது வழக்கம். எங்களிடம் இல்லை அந்த பழக்கம். விஞ்ஞானம் செல்கிறது இனிப்பு என்றால் இலகுவாக சாப்பாட்டை சமிபாடு அடைய செய்ய முடியும் என்று.

குங்குமம் வைக்க வெட்கபடும் பெண்கள். ஆனால் இரண்டு கண் புருவங்களுக்கு நடுவில் *mid-brow region of face muscles.* எனும் இடம் உள்ளது. அதில் குளிர்மையான குங்குமத்தை வைத்தால் ரத்த ஓட்டம் சீராக இருக்கும் என்கிறார்கள். இதே காரணம் தான் காலில் அணியும் மெட்டிக்கு காரணம்.

கைகூப்பி வணக்கம் வைப்பதற்கும் கூட காரணம் உண்டு. அதன் போது எல்லா புலன்களின் அமுக்கமையம் ஒன்றாக காணப்படுவதால் அந்த நேரத்தில் மூளையின் செயற்பாடு அதிகரிக்கும் . ஆகவே அவரை நீண்ட காலம் ஞாபகத்தில் இருக்கும். இது மட்டுமா? உடலில் மகரதம் கட்டுவதால் உடலில் நீர்த்தன்மை , சர்க்கரை அளவு , தேவையற்ற கொழுப்பு உறிஞ்சப்படுகிறது. ஆகவே எல்லாவற்றையும் ஏதோ ஒன்று காரணமாக தான் செய்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் உணவுக்கட்டுப் பாடு என்ற ஒன்றை கடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பதை எம்மவன் 'விரதம்' என்று அன்றே கண்டுபிடித்துவிட்டான்.

ஆகவே ஏதோ ஒன்று இல்லாமல் எதுவுமே இல்லை. ஏதோ ஒன்றுக் காகவே எல்லாம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதேபோல் கடவுள் இருக் கிறாரா அல்லது இல்லையா என்றும் சொல்லமுடியாது. இராமகிருஷ்ணர் சொன்னதைப்போல், நீர்மேல் பனிக் கட்டியாக சிலருக்கு தெரியலாம் . நீரோடு சேர்ந்தால் யாருக்கும் தெரியாது எனவும் இருக் கலாம். அணு நகர்வு, சில நடனம் இப்படி என்று விஞ்ஞான கண்டுபிடிப்பு போய்க்கிட்டே இருக்கும். ஆண்டுக்கு ஆண்டு எமக்கும் கட்டுரைக்கும் புதுப்புது தகவல்கள் கிடைத்துக்கொண்டே இருக்கும் . "கடவுள் இருக்கிறாரா" என விஞ்ஞானக்கட்டுரை எழுத சுஜாதாக்கு பதில் யாரும் வரத்தான் வேண்டும். அல்லாவிடின் எனக்கு உசாத் துணை நூல் பற்றாக்குறை ஆகிவிடும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெய்ஞ்ஞானத்தின் வழியில் விஞ்ஞானம்

**சு.அனோஜன்**
பொறியியற்பீடம்

உலகம் எங்கும் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் மெய்ஞ்ஞானத்தினை அறிந்தவர்களே எனினும் நூற்றாண்டுகள் பல கடந்து செல்லச் செல்ல உலகில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும், விஞ்ஞான சிந்தனைகளும் பல்கிப் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இதனால் உலகம் மெய்ஞ்ஞானத்தினை மறந்து விஞ்ஞானத்தினை நோக்கித் தமது சிந்தனைகளை விதைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனால் சத்தியத்தினை அவர்கள் உணரவில்லை உலகில் ஆதிகாலந் தொட்டு முதன்முதலில் தோன்றி வாழ்ந்த இனமாக எமது திராவிட இனம் திகழ்கின்றது. அது மட்டுமல்ல இந்துமதமும் எமது சைவநெறியும் தொன்மைவாய்ந்தவை என்பதை நாம் மறுக்கமுடியாது "கல்தோன்றா மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்தகுடி" எமது சைவத் திராவிடர்கள் என்பதில் நாம் பெருமிதம் அடைய வேண்டும் எமது சைவநெறி கற்றுத்தந்த பல தொன்மையான சிந்தனைகளும் இன்று விஞ்ஞான உலகை வியக்கவைத்தருக்கின்றன.

மெஞ்ஞானம் என்பது எமது சமய நெறியுடன் தொடர்புபட்டது. திராவிடர்களின் கலாசார பாரம்பரியங்களும், வரலாற்றுக்கதைகளும் இம்மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கின்றன. முருகபெருமானைத் தொன்று தொட்டு வழிபட்டு வரும் சைவத் திராவிடர்களாகிய நாம் விஞ்ஞானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் சிந்தையைத் திருப்பாது அதன் அத்திவாரமாகத்திகழ்ந்த மெய்ஞ்ஞானத் தினைப் பற்றிச்சிந்தித்துப் பார்க்க வேண் டும் இன்றைய உலகில் அணு என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. பல உலக நாடுகள் அணு ஆயுதங்களை உருவாக் குவதில் அதீத ஆர்வம் காட்டி வருகின் றன. சடப்பொருட்களின் அடிப்படைத் துணிக்கையாக அறியப்படும் இவ் அணு இருபதாம் நூற்றாண்டில் உலகில் புரட்சியை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேக்கத் தைச் சேர்ந்த டிமோகிரட்டிஸ் என்ற மெய்ஞ்ஞானத்தத்துவ விஞ்ஞானியும், கல்விமானும் ஆனவரே "அணு" என்ற பதத்தை முதன்முதலில் அறிமுகம் செய் தார். அதன் பின்னர் பல்வேறு விஞ்ஞா னிகளும் தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந் தனர். அணுவின் அமைப்புப்பற்றி ஆய்வு உலகம் முழுவதும் நடைபெற்றது.

ஆரம்பத்தில் சடப்பொருட்களின் மிகச் சிறிய துணிக்கை அணு எனவும்; அதனை மேலும் பிரிக்க முடியாது எனவும் விஞ் ஞானிகள் கருதினர் பின்னர் ஜே.ஜே. தொம்சனின் பிளம்புடிங்மாதிரி போன்று பலஅணுமாதிரிகளும் முன்வைக்கப்பட் டன. இதன் பின்னர் அணுவைப் பிரிந்து இலத்திரன், நியூத்திரன், புரோத்தன் எனப் பல உப அணுத்துணிக்கைகள் கண்டறி யப்பட அணு விஞ்ஞானம் பல புதிய மாற்றங்களைக் கண்டது. இவ்விஞ் ஞானம் மெய்ஞ்ஞானத்தின் வழித்தோன் றலே ஆகும் பலநூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவைப்பிராட்டியார் "அணுவைப் பிளந்து ஏழ்கடலைத் துளைத்து.........." என்று தமது பாடல்வரிகளில் குறிப்பிட் டிருந்தார். விஞ்ஞானமே வளர்ச்சியடை யாத அக்காலகட்டத்தில் ஔவைப்பி ராட்டியாரின் இக்கருத்து இன்றைய நவீன விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் உறை யவைத்தது. மெய்ஞ்ஞான சிந்தனைக ளின் வழி விஞ்ஞானம் வளர்வதை அவர்களால் நம்பமுடியவில்லை பண் டைய புராண இதிகாசக் கதைகள் கூறும் மெய்ஞ்ஞான சிந்தனைகள் விஞ் ஞானத்தை மெய்ஞ்ஞானத்தின் வழித் தோன்றலாகவே நிரூபிக்கின்றன.

இன்று நாம் உலகில் பறந்து செல்லும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட் டது. ஆகாயவிமானத்தைக் கண்டறிந்த வர்கள் ரைட் சகோதார்கள் என்பது நாம் அறிந்ததே இவர்கள் வானில் பறந்த ஒரு பறவையைக் கண்டு அதைச் சாட்சியாக வைத்து நாமும் ஏன் அதனைப் போல் விண்ணில் பறக்க முடியாது என்று சிந்தித்து உருவாக்கப்பட்டதே இன்று நாம் காணும் ஆகாய விமானத்தில் வழித்தோன்றல் கதையாக்க காணப்படு கின்றது. எனினும் இராமாயண காவியத்தில் இலங்கேஸ்வரன் இராவ ணன் புஸ்பகவிமானத்தினைப் பயன்ப டுத்தி வந்தான் என்று கூறப்படுகின்றது. இங்கு விஞ்ஞானத்தின் விதையே விதைக் கப்படாத காலத்தில் மெய்ஞ்ஞான இதிகா சக்கதை ஒன்றில் மனிதன் விண்ணில் பறந்தான் என்று குறிப்பிட்டிருந்தமை இன்றைய காலத்து விஞ்ஞானிகளை வியக்கவைத்தது. இவ்வாறு மெய்ஞ்ஞா னத்தின் வழியில் விஞ்ஞானம் அமை வதை நாம் மறைக்கவோ, மறுக்கவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியை இன்று நாம் எடைபோட்டுவிட முடியாது ஆனால் விஞ்ஞானமே வளராத அன்றைய மெய்ஞ்ஞான காலத்தில் தமது மெய்ஞ்ஞான சிந்தனைகளால் வைத்தியம் பார்த்து இன்று மருத்துவர்கள் வியக்கும் அளவுக்கு வாழ்ந்திருக்கின்றார்கள்.

சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும் தமது யோகசிந்தனைகள் மூலம் அன்றையமக்களுக்கு இன்றைய விஞ்ஞானத்தைப் போதித்திருக்கின்றார்கள் என்று சொன்னால் மிகையாகாது. சேர். ஏட்வர்ட் ஜென்னர் மருத்துவ உலகில் நிர்ப்பீடனத்தின் தந்தையாக அறியப்படுகின்றார். அவர் வாழ்ந்த காலத்தில் மக்களைப் பெரியம்மை. சின்னம்மை போன்ற நோய்கள் ஆட் கொண்ட்டிருந்தன. அப்பொழுது ஜென்னர் அம்மைத் தடுப்பு மருந்தைக் கண்டறிந்து அனைவருக்கும் அம்மைப்பால் மருந்தை இலவசமாக்க் குத்தினார். அப்பொழுது அவர் இவ் நிரப்பீடத்தை வழங்குவதற்கு அடிப்படையாய் அமைந்த்து அக்கால மக்களின் மெய்ஞ்ஞான நம்பிக்கைகளும் , சிந்தனைகளுமே என்பது இன்று எம் அனைவரையும் ஆச்சரியத்தில் உறைய வைத்துள்ளது. இவ்வாறு விஞ்ஞானம் மெய்ஞ்ஞான வழியில் உருவாகியிருப்பதை பல்வேறு சான்றுகளும், வரலாற்று விடயங்களும் உறுதிபடத் தெளிவுபடுத்துகின்றன. இதுவே உண்மையின் பின்னணியாகும்.

இன்று சைவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எமது சைவநெறி கூறும் பல அறிவுரைகளையும், சிந்தனைகளும் பின்பற்றத் தவறுகின்றோம். எமது சமய நெறிசார்ந்த மெய்ஞ்ஞான சிந்தனைகள் ஒவ்வொன்றிற்கும் பின்னால் ஒரு விஞ்ஞானம் ஒளிந்திருக்கின்றது என்பதனை நாம் வெளிப்படையாக உணர்வதில்லை இவ்வாறு எமது சைவ நெறிசார்ந்த சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும் நமது விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்க்கின்ற போதுதான் அதிலுள்ள விஞ்ஞானம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தமுனைகின்றனர். ஆனால் அவர்களின் ஆராய்ச்சிகளுக்கு அடித்தளமிட்டதே மெய்ஞ்ஞானம் தான் என்பது அவர்கள் அறியமாட்டார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தரின் அருட் சிந்தனைகளும் உரைகளும் இன்றைய உலகம் முழுவதும் யோகாசனம் என்னும் கலை பரவுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. அதேபோலவே போதிதர்மன் என்பலர் உலகம் முழுவதும் தற்காப்புகலை பரவ காரணமாக அமைந்தார். இவ்வாறு யோகாசனம், தற்காப்பு கலைகளைத் தந்த மெய்ஞ்ஞானிகள் இன்றைய விஞ்ஞானிகளை இயக்க வைத்துள்ளனர். யோகாசனம் கூறும் ஆசனங்களில் பயிற்சி பெறுவதன் மூலமும்,தியானம் மேற்கொள்வதன் மூலமும், எமது உடல் உறுப்புக்களின் செயற்திறன்கள் சீராவதையும், ஆரோக்கியம் பெருகுவதையும் நாம் உணர்கின்றோம். இம் மெய்ஞ்ஞான போதனைகள் எம் வாழ்க்கையில் நாம் செல்ல வேண்டிய பாதையையும், வழிகாட்டு தல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும், எமக்கு போதிக்கிகின்றன. இன்றும் விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞான சிந்தனைகளை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். காலச்சக்கரத்தில் மெய்ஞ்ஞானத்தின் வழியில் விஞ்ஞானம் வளர்ச்சியடைவதனை நாம் உணரத்தான் போகின்றோம்.

எனவே எமது சமய நெறி போதிக்கின்ற மெய்ஞ்ஞானசிந்தனைகளை நாம் பின்பற்ற வேண்டும் விஞ்ஞான வளர்ச்சியில் விஞ்ஞானத்தின் பங்கினை உணர்ந்து கொள்ளவேண்டும். எமது சைவக்கோயில்களில் எமது கலாசார விடயங்களை சரிவரக் பின்பற்ற வேண்டும். " எல்லாம் நன்மைக்கே" என்று இறைவனை நாம் வழிபட்டு மெய்ஞ்ஞானத்தை பெற வேண்டும் பல்வேறு விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும், விஞ்ஞான ஆய்வுகளுக்கும் எமது சைவ நெறி சார்ந்த மெய்ஞ்ஞான சிந்தனைகளுக்கும் இடையிலான தொடர்புடைமையைப் புரிந்து கொண்டு "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று நாம் சமயம்சார் நெறிகளை எமது வாழ்க்கையில் ஒழுகுவதன் மூலம் விஞ்ஞானத்தை உணரமுடியும். இதுவே நிதர்சனம் .ஆகவே மெய்ஞ்ஞானத்தின் வழியில் வந்ததே விஞ்ஞானம் என்பது மறுக்கப்படமுடியாத சத்தியமாக இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். எமது சிந்தையில் தெளிவு பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசர் அபிஷேகம் 2015



நவராத்திரி 2015



தைப்பூசம் 2015



விநாயகர் சதுர்த்தி 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சியில் உறைந்திடும் குமரனே கடவுள்

**இளஞ் சைவப்புலவர் கனகதுர்க்கா கனகரத்தினம்**
விடுகைவருடம், தமிழ்த்துறை
கலைப்பீடம்

ஒருமுறை உன்திருக் கோயிலின் வாசலை
அணுகினேன் என்னுடைக் குமரா
உருகியே என்னுயிர் உடலினுள் கரைந்தோடி
என்னவோ செய்ததே குமரா
பெருகிய காதலால் பின்னையெப் போதுமுன்
திருவடி தேடியே வந்தேன்
இருவரின் நடுவினில் இருப்பதால் என்னவோ
ஏறிட்டும் பார்த்திலை முருகா

ஒருமுறை நின்தனை வணங்கிடாப் பிரமனை
ஏனடா சிறையிலே அடைத்தாய்
உருகியே நினைத்திடக் கண்டிடாய்; உன்செயல்
என்னடா நீதியென்; றுரைப்பாய்
தெருவிலே போனஅக் கிழவிக்கு நிழலும்
நாவலும் தந்துநீ உகந்தாய்
வருந்தியே தேடினேன் உந்தனை நாடினேன்
வாவென்றுங் கேட்டிலை முருகா

கருவிலே இருக்கையில் கனவிலே தோன்றினாய்
கள்வனே இருதயம் கவர்ந்தாய்
தருநிறை குறிஞ்சியிப் பேராதன் மீதிலும்
தலைவனாய் மனத்திலும்; உறைந்தாய்
வருகையில் தனியனாய் வந்தயான் நினைக்கண்டு
வல்லவள் ஆயினேன் முருகா
கருணையைப் பெறமுன்னர் கடந்ததே காலமும்
கடமையும் முடித்தனை முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்குற்றாய் கள்வனே கன்னியர் பலர்நின்னைச்
சூழ்ந்திருக் கின்றதால் தானோ
தருக்கொன்றை மலர்சூடும் பாகத்தோன் மூத்தவன்
தமையனென் றிருப்பதால் தானோ
உருக்கொண்டே யாடுவோர் உணர்வதே நீயென
உன்னையே தாங்கலால் தானோ
நெருப்பிலே புழுவொன்று விழுந்ததைப் போலவே
துடிக்கின்றேன் பாராதும் ஏனோ

அரும்பது நடுங்கிடும் அடிமரம் அசைந்திடில்
அப்பனே யானென்ன செய்வேன்
இரும்பென இருக்குதே உன்மனம் என்னையேன்
ஏனென்றும் கேட்டிலை முருகா
முருகனே செந்தில்வேல் முதல்வனே என்னுடை
முழுமுதல் தலைவனே என்பேன்
மருகியே அழுதுனை அழைக்கிறேன் முருகா
மறுபடி கண்டிடும் வரம்தா.

அருவமாய் நின்தனை எண்ணிடும் பக்குவம்
அற்றநான் அநாதையோ முருகா
உருவமாய் கண்முன்னே தோன்றிடும் உன்னையேன்
உணராமல் அலையணும் குமரா
திருவுரு கடவுளுக் குண்டென்று கூறிடின்
திண்ணமாய் கூறுவேன் முருகா
குருவுரு வாகியிக் குறிஞ்சியில் உறைந்திடும்
குமரனே கடவுளென் றுரைப்பேன் *(சிவகாமி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம்

**ஸ்ரீ . சரத்பவன்**
3 ம் வருடம்
பொறியியற்பீடம்

**வண்ண ஓவியம்,
சாலையோரச் சாதுக்களின்
கண் தீண்டும் கைவண்ணம்
வகை வகையாய் வானவில்
வட்ட நிலாவின் பரிதிவட்டம்
கடற்புறாவின் கருஞ்சிறகு
காலை நேரம் மாலை நேரம் என
வெளிச்சம் தின்ற நிற ஒளிகளின்
மஞ்சள் கீற்றின் வாசம்
பச்சை புல்வெளியில் பனித்துளி
பாய்ந்தோடும் நதிக்கரையின்
நீர்ப்படுக்கை என
சுட்டெரியும் வெயிலில்
வியர்வை சிந்தி அவன் வரைந்த
வண்ண ஓவியங்களை
புது விழிகாணும் முதல் விடியலாய்
பூரித்துப் பார்த்தன அந்-நகர்புற
கண்கள்
தூரிகை முனை துடைத்த அந்த
நிறங்கள்தான் எம் வாழ்க்கை
பச்சை தான் பாசம்
நீலம் உன் உணர்வு
சிவப்பு உன் சிறப்பு
மஞ்சள் உன் அறிவு
இப்படி நிறத்துக்கும்
நிலையுண்டு எம்மில்,
நிம்மதிக்கும் நிறமுண்டு –நாம் செய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரைக்கும் நிறமுண்டு
வெள்ளைத்தாளில் வரைந்த
வெண்புறா தான் இரண்டும்
தூய்மையில் தூய்மை
மாண்டவர்க்கும் உண்டு நிறம்
எமை ஆண்டவர்க்கும் உண்டு நிறம்
பற்றிப்படர்ந்த உன்
பதற்றத்துக்குண்டு நிறம்
புடைசூழ்ந்த மன்னனின்
புரட்சிக்கென்றொரு நிறம்
புத்தனின் நிலைக்கொரு நிறம்
பித்தனின் பிதற்றலுக்கு ஒரு நிறம்
சித்தனின் சிந்தனைக்கு ஒரு நிறம்
சின்னச் சின்ன சண்டைக்கு ஒரு நிறம்
சிறையில் வாடும் சிந்தைக்கு ஒரு நிறம்
ஆறு முதல் அறுபது வரை அடுத்தடுத்து வந்த
அன்பிற்கென்றொரு நிறம்
இத்தனை நிறமும்
மொத்தமாய் மொய்த்த
திகட்டும் தின்பண்டமாய்
திரைத் துணியில் வரைந்த
வண்ண ஓவியம் தான் வாழ்க்கை
துணி தான் எம் துணிவு
துணிந்து நில் உன் வாழ்வில்
துயர்தட்டும் எந்நாளும்
துடைத்தெறி அந்நாளை
படைத்தெறி புதுவாழ்வை
எத்தனை வருடம் தாண்டிற்று
அத்தனை ஓவியம் வரைந்தாயா!
உன் வாழ்வை படமாக்கு
வெள்ளை தாளை உன்தூரிகை தின்னட்டும்
பள்ளிக்கால நினைவை வரைய
பலகாலம் உனக்கெதுக்கு
பல்லி சொல்லிற்றென பதற்றப்பட்ட
திருமணங்களை படமாக்கு
பில்லி,சூனியம், தீண்டல் தூண்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தாண்டும் மனம் சலித்த
காதல்களை படமாக்கு
காமம் தின்ற உறவுகளால்
உடைந்து போன உள்ளங்களைப் படமாக்கு
பூவிதழ்முட்டும் புதுத்தென்றலைப் படமாக்கு
கம்பன் சொன்ன காவியத்தை படமாக்கு
காதல் செய்யும் கண்களை படமாக்கு
கடன் தந்த கைகளை படமாக்கு
உடன் பிறந்த உறவை படமாக்கு
உயிர் சுமந்த உன் தாயை படமாக்கு
துயர்தந்த உன்காயங்களை படமாக்கு
பார்க்கட்டும் உன் சந்ததி
படைக்கட்டும் புது விதி
நிஜவாழ்வில் நினைத்துப் பார்க்க
நிறைய வுண்டு
வரைந்து வை வண்ண ஓவியங்களாய்
உன் வாழ்வை –நீ
வெறுத்த நாட்களும் அழகான ஓவியமாகும்
வாழ்வை நிறமாக்கு
உன் நிலையை நிஜமாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரா

**ச.சுலக்ஷன்**
2ம் வருடம்,
பொறியியற் பீடம்

**குறிஞ்சி மலை உறையும் குமரா உன்
குணம் என்பது அருள்புரியும் கடலா
வள்ளியை மணம் புரிய வந்தாய்
கதிர்காமம் தனை உனதென்றாய்
வரம் கேட்க்கும் வாலிபங்கள் பலவும்
வந்து உன் தலமுறையும் இங்கு
கரம் அதினில் வேல் கொண்டு நீயும்
கருவினையை தகர்த்திடவே வாராய்
தமிழ் கடவுள் நீ என்பதாலோ
தன்மை இடம் தேடி வந்தாய் இங்கு
பண்பாடு காக்கின்றார் இங்கே
பரிவோடு பார்த்திடுவாய் பாலா
தொண்டு பல செய்திடுவோம் நாளும்
தொழுது உனை போற்றிடுவோம் வேலா
விண்டு உனை வியந்து நின்றோம் நாழும்
வீரமுடன் காத்திடுவாய் நீயும்
ஈர் ஆறு கரம் கொண்டு இருவினையை வென்று
பன்னிரு விழியாலே பாவங்கள் தனை கொன்று
பவள செவ்வாய் கொண்டு
பாரினை ஈர்ந்து
பாங்குடன் காத்திடும் உன்
அருளுக்கு நிகர் ஏது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுக்கு ஓர் விடையாய்...

ஸ்ரீ.சமித்யா
பல்மருத்துவபீடம்

எத்தனை மாற்றங்களின் மத்தியிலும்
இன்றளவும் ஓர் அதிசயமாய்....
அகிலம் அது அழிவின்றி அமைவது
விஞ்ஞானத்தின் விந்தை என் போரிற்கும்
இந்துமதம் அதன் அர்த்தமே
விஞ்ஞானம் என்னும் தொடர்கதையின்
முடிவிலிப் பொருள் அன்றோ...

வாழ்வின் அர்த்தம் தேடி
அத் தேடலிலேயே வாழ்வை தொலைத்திடும்
மானிடர்க்கு ஓர் சேதி....
விழிகளில் விம்பமாகாத
இறைவன் என நாம் காணும்
அருவ சக்தி அதில்
விடைகாணா வினாக்கள் என
எதுவுமில்லை...
இது நிதர்சனமே...

எண்ணங்கள் எல்லையில்லாது
விரிந்து செல்லும் மனங்களிலே...
நம்பிக்கை எனும் ஒளி கொண்டு
நிழல்களையும் நிஜங்களாக்க
அறநெறி எனும் ஆழியில்
எமது சுவடுகள் பதித்து
அர்த்தமுள்ளதாக்குவோம்
அழகான வாழ்வு தனை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திடுவாய் முருகா

**சி.சிறிகாந்தா**
விஞ்ஞானபீடம்
(2013/2014)

ஆழி சூழ் உலகில்
வேல் கொண்டு ஆளும் வேல் முருகா
வேண்டுபவருக்கெல்லாம் வினை தீர்க்கும்
விநாயகர் தமையனே...........
ஏழை குடிசைதனில் குறைதீர்க்க
குடிகொண்ட குறிஞ்சிக் குமரனே....

மண் உயர்காக்க விண்ணில்
மயி லேறி வந்தவனே
துயர் கொண்ட வேளைதனில் முருகா..........
கருணையோடு என்னில் உறைவா....
உன்னை நாடும் உறவிற்கெல்லாம்
உயிராய் விளங்கும் உருவமே...
காவடி ஏந்திய அடியவர்களையும்
கைவிட்டிடாத கருணைக் கந்தனே....

வன்முறையும், சாதிகளும் தலைவிரித்த போதிலும்
காடையர் கூட்டம் களவாடும் காலத்திலும்
கடல் தன்நிலை மீறி கரையேறும் வேலையிலும்
பாமறா வாழ்வே பசியென உற்றபோதும்
வேண்டு முன் வேல் கொண்டு விரைந்திடுவாய்
மகாவலியின் மடியில் பேரருள் புரியும்
பேராதனை முருகனே..........

மதயிழந்த மானிடராயினும்
மது அருந்திய மூடராயினும்
நெறியிழந்த நெஞ்சமாயினும்
நஞ்சுறையும் வஞ்சகனாயி னும்
திருநாவில் திருவேல் கொண்டு -குறைநீக்கி
முந்தியளித்திடுவாய்
குறிஞ்சியின் குமரனே.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கு நன்றி

**ஸ்ரீ.சரத்பவன்**
3ம் வருடம்
பொறியியற் பீடம்

கடிந்து வாழ்ந்தது
போதும்
கடந்து போகும்
நாட்கள் வந்தும்
கழிந்து போன
காலம்
நம்
கனவில் வந்து
சொ(கொ)ல்லும்
நம்மவர்
துயரம் தந்து
போகும் !

வேகம் குறைந்து
விவேகம் இழந்து
சோகம் மேகமாய்
நம்மேல்
புனல்மழை பொழிந்து
போனகாலம்
மறை(ற)ந்து போக
நம்
மாந்தர் தந்த
மா
வடுக்கள்
நிழலாடும்
ஆழ்கிணற்று விம்பமாய்!

அனலாய் மாறி
சிவந்துபோன கண்கள்
அவளின்
மணலாய் மாறி
புழுத்துப்போன
உடலின்
உரிமைகோரி நிற்க
நிலம் விழும்
நம்
நிழல் கூட
தனதென்று சொன்னால்
நியாயமாவெனக்கேட்டு?
குரல்சேர்த்து
கைகோர்க்க
யாரும் இல்லை!

முகம்மேல்
காறி
உமிழ்ந்து போன
நீரில்
நியாயம்
அநியாயமாய்ப் போக
நிர்க்கதியாய் நிற்கும்
கனல் கால
காய்ந்த மரமாய்
சரிந்து விழுந்த
உடலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் காத்த
குருதிக்கு
நன்றி !

மழலை ம(ண)னம்
மாறா மாந்தர்
வாழ்நிலம்
பாலைமணல்நிலமாய்
மாறுமென
நினைத்ததுண்டே ?
எம்மனம்
நிலைமாறா
நிலை வந்தால்
நிலைக்குமன்றோ!

முகவரிகள்
தொலைத்துவிட்டும்
முன்வரியில்
முகம்காட்டி
முகாமிட்டு
இருந்தவரில்
முதற்சோற்றுப் பொதி
வாங்கி
முடுவொன்றிருக்குமடா
நீ
வாய்மென்று
உண்டடா
எனச்சொன்ன
என் தாய் முகம்
ஒன்றா?
என்
தமிழ்த்தாய்
முகம்
ஒன்றா?

கால ஓட்டம்
அடித்துச் சென்ற
குருதி கறைகளும்
அவை
மறைத்துப்போன
காற்சுவடுகளும்
மற(றை)ந்துபோக
அதன்மேல்

அதிவேக ஓடுபாதை
பயணம் செய்ய
அதிசொகுசு உந்தூர்தி!

உயிர்
வயிற்றில் சுமந்தவளை
துயர் தவிக்க
விட்டுவிட்டு
களிசோறும்
உணவிட்டால்
மடிதேடும் மனம்
சொ(கொ)ல்லும்
மனிதநேயம்
எனைக்கொல்லும்!

நிலம்பறித்து
வழங்கிடலாம்
நிலாக்கூட
கொடுத்திடலாம்
நின்றுபார்
என்நிலம்
சொல்லும்
நிமிர்ந்து நின்ற
எம்வீரம்

தேசம் சொல்லும்
வேசம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கு
போட்டவரே!
கோசத்தில்
கையசைப்பார்!
கதைசொல்லிப்
பிழை செய்வார்!

வள்ளுவன்
சொன்ன வழி
வளர்பிறை முன்
வான்வெளியாய்
பரந்தும்
வெளித்தும்
படர்ந்திருக்க!
உன்மனம்
போகும்வழி
சென்றால்
பாதகங்கள் கூடிவிடும்!

உடைத்துப் போட்ட
உண்டியலில்
பணம் போட்ட
பேதைகளாய்!
பெற்றமகன்
நிலைதேடி
நிழற்படம்
உன்முகம் நீட்டி
கைகூப்பி
கேட்டுநிற்கும்
என்தாய்
முகம்
நீ பார்த்திருந்தால்
உள்ளுணர்வே
கொன்றிருக்கும்!

சதைகிழித்து
இரைதின்னும்
கழுகுக்கு
இரையாக்கி
எஞ்சிய
பிண்டத்தை எரித்து
சாம்பலாக்கும்
வெறி உன்னுள்
வந்தபின்பு
என் சாவொன்றின்
சாட்சியடா!
இதைச்
சரித்திரம்
பறைசாற்றுமடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Muruga! My Lord!

**Sivasothy Kesavan,**
Department of Tamil,
Faculty of Arts,

*Kurinchi Kumara Oh !My lord !*
*Talk with me now itself.*
*When You are with us,*
*Why do we suffer every day?*

*Why do human cheat others in this world?*
*Why do these people fight for land?*
*Why do we lose our peace in heart?*
*Why are you silent even when we plead?*

*Please Lord, come and talk with us.*
*Please help me to be a good boy.*
*You should love all of us.*
*This world should be filled with love.*

*Kurinchi Kumara! Please save us.*
*We all are your children.*
*Please Lord, come, give power us.*
*We should change this world.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி, பேராதனை

# அருள்மிகு குறிஞ்சிக் குமரன்

## திருப்பொன்னூஞ்சல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, மங்களம் முதலியவை

**இளஞ்சைவப் புலவர் கனகரத்தினம் கனகதுர்க்கா,**
விடுகை வருடம், தமிழ்த்துறை ,
கலைப்பீடம்

**காப்பு**

திருமேவு மீழவள நாட்டின் நாப்பண்
திருக்குமரன் இனிதுறையும் குறிஞ்சி தன்னில்
தருமேவு பொழில்கள்சூழ் பேரா வென்னும்
தரணிபுகழ் பல்கலையில் வாசம் செய்யும்
கருவண்ண மால்மருகன் கார்த்தி கேயன்
கங்கையணி சடையனுக்கு உபதே சித்த
குருநாதன் குமரன்மே லூஞ்சல் பாட
குஞ்சரமா முகவனையே போற்றி செய்வாம்.

**நூல்**

மின்னுமெழிற் தூண்களென வேதம் நாட்டி
விளக்கனைய ஆகமங்கள் விதான மாக்கி
பின்னுமரு வுபநிடதம் வளைய தாக்கி
பிறைநிலவே நின்தனக்குப் பீட மாக்கி
மன்னுபுகழ் தர்க்கமதை நாண தாக்கி
மதிகதிரோன் தன்னையெழிற் பூண தாக்கி
புன்னைமலர் சூடுமெழி லீசன் ஈந்த
புகழ்குறிஞ்சிக் குமரோனே யாடீர் ஊஞ்சல். (1)

தீங்கில்லாத் தழிழ்க்கலைகள் கொண்டு நின்மேல்
திகழுமெழில் அணிகலன்கள் பூட்டி மென்மே
லோங்கியுயர் விண்ணதனின் ஒளிகள் சேர்த்து
ஒண்ணியவெண் துகில்நெய்து ஆடை கட்டி
பாங்கியராய் வள்ளிதெய்வ யானை யோடு
பவனிவரு முன்னரிலிவ் வூஞ்ச லேறி
ஓங்குபுகழ் பேராவின் குறிஞ்சி மீதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பரிய குமரோனே யாடீர் ஊஞ்சல். (2)

இருசுடரும் நின்தனக்கு குடைகள் தாங்க
இந்திரனும் இமையவரும் ஏவல் கேட்ப
பெருமைசேர் பேராவின் மாண வர்கள்
பெம்மானே நினைப்பாடிப் பரவி ஏத்த
எருதினிலே ஏறிவரும் ஊமையாள் பங்கர்
எண்ணரிய ஆசியினை எங்கும் நல்க
பெருமைமிகு பேராவின் குறிஞ்சி தன்னைப்
பெரிதுவக்கும் குமரோனே யாடீர் ஊஞ்சல். (3)

கலைவல்ல நின்னடியார் கவரி வீச
கணிதவல்லோர் காவடிகள் தாங்கி நிற்க
தலையாய மருத்துவம்பல் முகாமைப் பீடம்
தாதியல்சேர் விஞ்ஞானம் விவசா யம்கல்
அலையில்கட லனையவறி வுடைய வேனை
அனைவருமே நின்னடியைத் தொழுது போற்ற
மலைகள்சூழ் பேராவின் குறிஞ்சி மீதில்.
மகிழ்ந்துறையும் குமரோனே யாடீர் ஊஞ்சல். (4)
நவபீட மாணவியர் நின்னைத் தம்பால்
நாயகனாய் எண்ணிமனஞ் சுற்றி மாய
நலமிக்க அவர்பீட மாணாக் கர்கள்
நண்பனென நினையணுகித் தோளிற் றாங்க
நயமாக நிதமுநினை வணங்குஞ் சான்றோர்
நலமுடைய சேயோனாய் நின்னை நோக்க
நறவஞ்சேர் தார்கடம்பைச் சூடும் வேல!
நண்ணரிய குமரோனே யாடீர் ஊஞ்சல். (5)

வேனில்சேர் காலமொன்றி லுச்சி வேளை
வெய்யிலுக்கு மிகநடுங்கித் தெருவி னோரம்
நானிலமும் புகழுமௌவை நிழலை வேண்டி
நாவலெனும் மரத்தினடி நின்றா ளன்றோ
ஆனிரையை மேய்க்குமொரு சிறுவன் போலே
அங்குற்றுச் சுட்டகனி யீந்து இன்று
வானிலமும் சேருமெழிற் பேரா நண்ணும்
வல்லதிருக் குமரேர்னே யாடீர் ஊஞ்சல். (6)

மாயையவள் காசிபரை மயக்கிச் செய்த
மாபெரிய தவமதனைச் சிதைத்துப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயைதனை யுடையநால் மக்கள் தாமும்
சாகாத வரம்பெற்றுக் கெடுதல் செய்தார்
பூஜைபல செய்தரனை அமரர் போற்ற
புரிகெடுதல் செய்சூரர் கொடுமை போக்க
தாயையனை ஈசனவன் ஈந்த செல்வ!
தார்கடம்பக் குமரோனே யாடீர் ஊஞ்சல். *(7)*

சிறுவனென நினைநினைவோர் யாபே ருந்தம்
சிறுமையினை யுணர்ந்துமிக நொந்து மீள
உறுவனென உனைவியந்து போற்றச் செய்து
உற்றவவர் துன்பமதை நீத்துப் பிற்றை
பொறுமையுடன் நின்னடியைப் பற்றீஇ நின்றால்
பொன்னனைய வாழ்வுதனைக் கொடுக்க வல்ல
மறுமைசேர் பேராவின் குறிஞ்சி நண்ணும்
மாதுமையாள் குமரோனே யாடீர் ஊஞ்சல். *(8)*

தைப்பூச நன்னாளில் தீர்த்த மாடி
தரணியிலுள் ளுயிர்களெலாம் மோட்சஞ் சேர
வைப்போனாய் உலகிலுந்தன் அநேக கோயில்
வல்லதிருநா ளிலுனைத் தீர்த்த மாட்ட
இப்பாரில் சிறந்ததிருப் பேரா வுற்று
இத்தினத்தில் குறிஞ்சியிலும் தீர்த்த மாட
ஒப்பான வெற்புகள்சூழ் பேரா நண்ணும்
ஒள்வேல்கைக் குமரோனே யாடீர் ஊஞ்சல். *(9)*

ஆறுமுக வேலவரே யாடீர் ஊஞ்சல்
ஆறீர்கண் ணுடையவரே யாடீர் ஊஞ்சல்
ஏறுமயில் வாகனரே யாடீர் ஊஞ்சல்
ஏரம்பன் இழையோனே யாடீர் ஊஞ்சல்
கூறுபட வெற்பிளந்தோ யாடீர் ஊஞ்சல்
குறத்திதனை மணம்புணர்ந்தோ யாடீர் ஊஞ்சல்
பேறுபெற குறிஞ்சிதனி லாடீர் ஊஞ்சல்
பெருமானே குமரோனே யாடீர் ஊஞ்சல். *(10)*

## வாழி

வேதசிவ ஆகமங்கள் வாழி வாழி
வெற்பிளந்த திருக்கைவேல் வாழி வாழி
பேதமிலா அன்புடைய மாந்தர் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றியுடைப் பல்கலையிப் பேரா வாழி
நாதமுடைத் தமிழ்சைவம் வாழி வாழி
நாற்குரவர் நாற்பாத நெறியும் வாழி
கோதையராம் வள்ளிதெய்வ யானை வாழி
கொற்றவனெம் குமரோனே வாழி வாழி

**எச்சரீக்கை**

தலைவனென எமையாளும் தகையாய் எச்சரீக்கை
தந்தையுமாய் மைந்தரெமை அணைப்பாய் எச்சரீக்கை
கலைகளெலாம் நயந்தூக்கும் நம்பா எச்சரீக்கை
கவலைகளைப் போக்கியருள் புரிவாய் எச்சரீக்கை
நிலைகுலையா மனதேற்ற மளிப்பாய் எச்சரீக்கை
நிருமலனின் குமரனென வந்தாய் எச்சரீக்கை
புலையரெமை ரட்சிக்கும் அருளே எச்சரீக்கை
புகழ்குறிஞ்சி தனிலுறையும் குமரா எச்சரீக்கை

**பராக்கு**

வேலதனைக் கைதனிலே உடையோய் பராக்கு
வேழமுக முடையானின் இளையோய் பராக்கு
கோலமயில் மீதேறி வருவோய் பராக்கு
கோதையர்தம் நடுவிருந்து அருள்வோய் பராக்கு
நீலகண்டர்க் குபதேசம் செய்தோய் பராக்கு
நீள்கெண்டைக் கண்ணுமையாள் மகனே பராக்கு
சாலவெழிற் குறிஞ்சிதனை உகப்போய் பராக்கு
சரவணனே குறிஞ்சியுறை குமரா பராக்கு

**மங்களம்**

ஆற்றங்கரை விரும்பியுறை ஐங்கரற்கு மங்களம்
அரியயற்கு மம்மையுமை அரனவற்கு மங்களம்
போற்றுமெழிற் பேராதனைப் பல்கலைக்கு மங்களம்
பொற்பதியில் கல்விகலை பயில்பவர்க்கு மங்களம்
ஊற்றனைய அறிவுநிறை உற்றவர்க்கு மங்களம்
உள்ளமதில் குமரனையே கொண்டவர்க்கு மங்களம்
வேற்படையை யுடையபிரான் வேலனுக்கும் மங்களம்
வேறுபடா வள்ளிதெய்வ குஞ்சரிக்கும் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அலங்காரத்திருவிழா 2015



மணவாளக் கோலம் 2015





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியாவும் பாரம்பரிய கண்ணகை அம்மன் வழிபாடும்

**சிவசோதி கேசவன்,**
தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

வவுனியா பல்வேறு சமூகங்களைக் கொண்ட எழில் மிகு பிரதேசமாகும். காலந்தோறும் ஏற்பட்ட மாறுதல்களாலும், பல இனக் குழுக்கள் வவுனியாவில் தஞ்சம் புகுந்தமையாலும் வவுனியாவின் பண்பாட்டம்சங்களில் பாரிய அதிருப்தி ஏற்படலாயிற்று. வழிபாட்டு முறைகளும் மாற்றமுறலாயிற்று. எந்தவழிபாட்டு முறையை வவுனியாப் பிரதேச மக்கள் பின்பற்றினர் என்றோ எத்தகைய வழிபாட்டு முறைகள் இப் பிரதேச மக்களால் தொன்மைக் காலத்தில் ஆதரிக்கப்பட்டதென்றோ அறுதியாகக் கூறவியலாதுள்ளது. எனினும், சில வரலாற்றாதாரங்களை வைத்து நோக்குகின்ற போது நரசிம்மர், நாகதம்பிரான், கண்ணகை அம்மன் வழிபாடுகள் தொன்று தொட்டு நிலவி வருவதனை அவதானிக்கலாம். அவற்றுள் ஒன்றான கண்ணகை அம்மன் வழிபாடு குறித்து ஆராய்வதாகவே இக் கட்டுரை அமைகிறது.

வவுனியாவில் அமைந்துள்ள தொன்மையான கண்ணகை அம்மன் ஆலயங்களாக பம்பைமடு கண்ணகை அம்மன் ஆலயம், கிடாச்சூரி கண்ணகை அம்மன் ஆலயம், வண்ணாங்குளம் கண்ணகை அம்மன் ஆலயம் போன்றவற்றை அடையாளப்படுத்த முடியும். இவை தொடர்ந்தும் ஆகம முறைசாரா வழிபாட்டு முறைக்குள் தம்மை ஓரளவு பிணைத்த வண்ணமுள்ளன. எனினும், "மேனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையாக்கம்" என்ற மாயை இவ்வாலயங்களையும் பீடித்துவிடவில்லை என்று கூறவியலாது. வவுனியாவில் கண்ணகை அம்மன் வழிபாடு எக் காலத்திலிருந்து வழிபாடாற்றப்பட்டது என்பது குறித்து அறுதியிட்டுக் கூறவியலாதுள்ளது. எனினும், சில தகவல்களைக் கொண்டு ஆராய்கையில், வன்னி மன்னன் பண்டார வன்னியன் காலத்தில் அரச ஆதரவு இவ் வழிபாட்டிற்கிருந்தமை தெளிவாகின்றது. எனவே, வன்னியர்களே வவுனியாவின் ஆளுமைகளாக இருந்திருப்பதனைக் கொண்டும், அவர்கள் தமிழரின் பூர்வீகப் பண்பாடுகள் மீது கொண்டிருந்த பற்றுறுதியைக் கொண்டும், பண்டார வன்னியன் ஆட்சிக்கு முன்பிருந்தே கண்ணகை அம்மன் வழிபாடு சிறப்பு நிலையில் வைத்து நோக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரமுடியும்.

## பம்பைமடு கண்ணகியம்மன் ஆலயம்

*"42 குடியிருப்பாளர்களைக் கொண்ட நல்லதொரு கிராமம்... இங்கு உள்ள குளம் பொதுவாக நல்ல நீர் பெறும் வசதி கொண்ட ஒரு பெரிய குளம். இது காட்டுக் கோழிகள் இனப் பெருக்கத்திற்குரிய இடமாகும். இங்கு சீமெந்திலான சுலுசு உண்டு"* என இக் கிராமம் குறித்த செய்தியினை ஜே.பி.லூயிஸ் தனது நூலில் *(The manual Of The Vanni Districts (1895)* குறிப்பிடுகின்றார். இவ்வழகிய கிராமமானது மன்னார் வீதியில், நாலாம் கட்டைக்கு அடுத்து வரும் செக்கட்டிப்புலவு வீதிக்கு எதிரேயுள்ள வீதியால் *2km* பயணிக்க வரும். ஜே.பி. லூயிஸின் தகவல்களின்படி *1817* இல் *20* பேரும், *1839*இல் *43* பேரும், *1881*இல் *41* பேரும், *1891*இல் *42* பேரும் இக் கிராமத்தில் வசித்துள்ளனர். இவர்களது காலத்திற்கு முன்பிருந்தே இவ் வழிபாடிருந்திருக்க வேண்டும்.

பம்பைமடு கண்ணகியம்மன் ஆலயத்தில் ஆரம்ப காலத்தில் வழி பாடாற்றியவராக "வைகாழி கந்தர்" என்ற சித்த மருத்துவரைக் குறிப்பிடுகின்றனர். இன்று வரை இவர்தம் வழி வந்த சித்த மருத்துவ குலத்தினரே இவ்வாலயத்தை நிர்வகித்து வருகின்றனர். இவ் வாலயத்திலுள்ள கண்ணகை அம்மன் சிலையையும், கண்ணகையின் பரிவாரத் தெய்வமாக விளங்கும் வைரவரையும் வைகாழி கந்தரே ஆரம்பத்தில் வழிபட்டார். பளை புதுக் குளத்திலிருந்து வைரவரையும், கரம்பகத்திலிருந்து கண்ணகையையும் தான் வழிபாடாற்றுவதற்காக கொண்டு வந்த இவர், முதலில் "விளாத்திக் குளம்" என்னும் இடத்தில் வைத்து வழிபாடாற்றினார் என்பர். இவர் மூலமே வவுனியாவில் கண்ணகையம்மன் வழிபாடு அறிமுகமாகின்றது என்ற முடிவிற்கு நாம் வர முடியும். (கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில்) வைகாழி கந்தருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் "கந்தர் ஆரியர்" என்ற ஆண் மகவு. இவர் பிரபல்ய சித்த மருத்துவராக இருந்திருக்கின்றார். இவரது சித்த வைத்திய வித்தாண்மையால் இவருக்கு அரச மட்டத்திலும் பேராதரவு நிலவியது. இவரது மருத்துவத் திறமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் போற்றிய பண்டார வன்னியன் இவர் எங்கு சென்றாலும் குறு நில மன்னருக்குரிய மரியாதை வழங்கப்பட வேண்டுமெனக் கட்டளை பிறப்பித் தான்,அக் கட்டளையை ஓலைச் சுவடி யில் பொறித்து கந்தர் ஆரியரிடமும் கொடுத் தான். அவ் ஓலைச் சுவடியில் பண்டார வன்னியன், வன்னி நாச்சியார், மாப்பா ணர் ஆகியோரது கையெழுத்துக்கள் காணப்படுகின்றன. அச் சுவடி வெளிப்ப டுத்தும் கட்டளை வருமாறு,

**"கந்தர் ஆரியர் என்னும் இவ் வைத் தியர் வைத்தியம் செய்யும் பிரதேசம், மா ந்தை, மதவாச்சி, பதவியா, மாங்குளம் ஆகிய பகுதிகளிற்கிடைப்பட்ட நிலப் பகுதியாகும். இவர் இராச வைத்தியரா வார். இவ் வைத்தியர் கிராமத்திற்கு வரும் போது,நில பாவாடை விரித்து, குடை, கொடி,ஆலவட்டம்,சாமரம் வீசி,நெய் விளக்குப் பிடித்து தாரை, தப்பட்டை, தம் பட்டம், உடுக்கு,சங்கு முதலிய வாத்தி யங்கள் இசைத்து,குறு நில மன்னர்க்குரிய அந்தஸ்து வழங்கிக் கிராமத்திற்கு அழைத்து வர வேண்டும்."**

காலவோட்டத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் இவருக்கான கௌர வம் குறையவில்லை.பண்டார வன்னி யன் தலை மறைவாய் வாழத் தொடங் குகிறான். அச் சமயத்தில் ஆங்கில ஆளு னரின் மனைவிக்குத் தீராத நோய் ஏற்படு கின்றது. ஆங்கில மருத்துவத்தில் கைதேர்ந்த வைத்தியர்கள் பல முயற்சிகளைச் செய் தும் நோயினைக் குணப்படுத்த முடிய வில்லை. இறுதியாக கந்தர்ஆரியர் தம் சித்த மருத்துவத்தின் சிறப்பு நிலையை அறிந்த ஆட்சியாளர், இவரை நாடுகின் றார். இவர் தனது சித்த மருத்துவத்தின் மூலமாக நோயினைப் பூரணமாக நீக்கி விடுகின்றார்.இதனால்,ஆங்கில ஆட்சி யாளர்களிற்கு இவர் குறித்த மதிப்பு அதிகரித்ததோடு, இவர் தடையின்றித் தனது சேவையைத் தொடர வசதிகளை யும் வழங்கினர். இவர் செல்லும் இட மெங்கும் உயரிய மரியாதை இவ ருக்கு வழங்கப்பட்டது. இவரது பெயரை நொச்சி மோட்டைக்கு அருகேயுள்ள குளத்திற்குச் சூட்டிய ஆங்கிலேயர், அதன் அருகேயுள்ள நிலப் பகுதிகளை யும் இவருக்கு அன்பளிப்புச் செய்தனர். இன்றுவரை இக் குளம் "ஆரியர் வேலன் குளம்" என்ற பெயரில் அழைக்கப்படு கின்றது. இவர் பின் நாட்களில் பம்பை மடுவிற்கு இடம் பெயர்கின்றார்.இவ் வாறு இவர் இடம் பெயர்கையில் தனது தந்தையார் போற்றி வணங்கிய கண்ண கையையும், வைரவரையும் கொண்டு வருகின்றார். கண்ணகையம்மனாக வழிபாடாற்ற இவர் கொண்டு வந்தது, "முகவராகம்" என அழைக்கப்படும் அம்மனது முக உருவத்தையே ஆகும். அது இன்றளவும் பேணப்படுவதனை அவதானிக்கலாம். இவர் சித்த மருத்து வத்தில் மாத்திரமின்றி மந்திர வித்தாண் மையிலும் சிறந்து விளங்கினார். ஒரு நபர் பாயிலே அமர்ந்திருந்தால் அவரைத் தொடர்ந்து எழ விடாத வண்ணம் செய் யக் கூடிய அளவிற்கு இவர்தம் மந்திர வித்தாண்மை காணப்பட்டது. தெய்வம் ஆடியே பூசைகள் நிகழ்த்தப்பட்டன. இன்றளவும் சித்த மருத்துவத்தினை இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் சந்ததிகள் தொடர்கின்றனர். துரதிஸ்ரமாக இவரது வழிவந்த "அருணாசலம்" என்பவர் இறந்தவுடன், காலம் காலமாகப் பேணப்பட்டு வந்த மந்திர மற்றும் மருத்துவக் குறிப்புக்கள் அடங்கிய ஓலைச் சுவடிகள் யாவற்றையும் அவரது பிரேதப் பெட்டியில் வைத்து அனுப்பி விடுகின்றனர் உறவினர்கள். மாந்திரீக ரீதியிலான மருத்துவக் குறிப்புக்கள் அதில் அடங்கி இருந்தமையினால் அதனை அவ்வாறு அனுப்பியதாகக் கூறுகின்றனர். எனினும், அவற்றின் இழப்பின் காரணமாக வரலாற்றுக் குறிப்புக்களும், தமிழ் மரபில் பேணப்பட்டு வந்த சித்த மருத்துவம் குறித்த அரிய செய்திகளும் இழக்கப்பட்டமை வேதனைக்குரிய தகவலாயுள்ளது.

இவ்வாலயமானது காலவோட்டத்தில் கிடாச்சூரி, செக்கட்டிப்புலவு ஆகிய பகுதிகளிற்கு இடம்பெயர்ந்து சென்ற இவர்களது பரம்பரையினரது மனங்களிலும் பாரிய தாக்கத்தினை உண்டாக்கியிருந்தது. இதன் விளைவாக, அவர்கள் தாம் காலம் காலமாக வழிபட்டு வந்த கண்ணகையம்மனைத் தாம் இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலும் வழிபடத் தொடங்கினர். காலவோட்டத்தில் அவை தனித்த பெரும் ஆலயங்களாக உருக் கொண்டன. அவ்வாறு உருக் கொண்ட ஆலயங்களாக கிடாச்சூரி கண்ணகையம்மன் ஆலயம், செக்கட்டிப்புலவு கண்ணகையம்மன் ஆலயம் ஆகியவற்றை அடையாளப்படுத்த முடியும். செக்கட்டிப்புலவிலுள்ள ஆலயத்திற்கு இன்றளவும் பம்பைமடுவிலிருந்தே பூசைப் பொருட்கள் செல்வதனை அவதானிக்க முடிகிறது. கிடாச்சூரி கண்ணகையம்மன் ஆலயம் ஆரம்ப காலத்தில் பம்பைமடு ஆலயத்துடன் தொடர்பினைப் பேணியிருந்தாலும், பின் நாட்களில் தனித்த ஆலயமாக அது வளர்ச்சி கண்டது எனலாம். தொடர்ந்து பம்பைமடு கிடாச்சூரி கண்ணகையம்மன் ஆலய வழிபாட்டு முறைகள் குறித்து நோக்குவோம்.

பம்பைமடு கண்ணகையம்மன் ஆலயத்தின் வழிபாட்டு முறைகளை நோக்குகின்ற போது இங்கே இருக்கும் நரசிம்மர் ஆலய வழிபாட்டு முறைகளுடன் ஒத்த வகையிலே அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இவ்விரு ஆலயங்களிலும் பூசை செய்வோர், ஆதரிப்போர் ஒரே பரம்பரையினர் என்பதனால் வழிபாட்டு முறைகளும் ஒத்திருக்கின்றன எனலாம். இவ்வாலயத்தினைப் பேணுவோர் வேளாள மரபில் வந்தவர்களாக இருப்பதனைக் காண்கிறோம். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் பூசை தவறாது இடம் பெறுகிறது. வருடாந்தம் ஒரு நாள் சிறப்பு நாளாகக் கணிக்கப்பட்டு வருடாந்த சிறப்புப் பூசை இடம் பெறுகிறது. வருடாந்தப் பூசையானது மாலை வேளைகளில் ஆரம்பமாகும். "மாலை முழக்கம்" என்று அழைக்கப்படும் பறை ஒலியே பூசையின் ஆரம்பமாக அமையும். கட்டாடி, பண்டாரம், பறையர், வேளாளர் என அழைக்கப்படுபவர்கள் பூசைகளுடன் தொடர்புறுவதைக் காண்கின்றோம். இவர்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த செயற்பாடுகளே பூசைக்கு அடித்தளமாக இருப்பதனைக் காண்கின்றோம். ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை முழக்கத்துடன் பூசைப் பொருட்களைக் கொண்டு செல்லும் நிகழ்வு ஆரம்பமாகிறது. பூசைக்காகக் கொண்டு செல்லப்பட்ட பூசைப் பொருட்களையும், பூசாரியின் ஆயுதங்களையும் கட்டாடியினால் விரிக்கப்பட்ட வெள்ளைத் துணியில் மாத்திரமே வைப்பர்.அவ்வாறு வெள்ளைத் துணி விரிப்பதனை "வெள்ளை விரித்தல்" என்பர். இவ்வாறு வைக்கப்பட்ட பொருட்களை மீண்டும் வெள்ளைத் துணியால் மூடி மறைத்து வைப்பர். பின்பு, பூசாரியார் கற்பூர தீபம் காட்டி மூன்று முறை பூசைப் பொருட்களைச் சுற்றி வருவார். அவ்வாறு அவர் சுற்றி வரும் போதே தெய்வமாடத் தொடங்கி விடுவார்.தெய்வமாடியவாறே, வளந்துப் பானைகளை(கோயில்களில் பொங்கல் பொங்குவதற்காகவென புதிதாகக் கொண்டு வரப்பட்ட பானை) உரித்துடையோரின் தோள்களில் வைப்பார். "உரித்து" என்பது பரம்பரை பரம்பரையாக வழங்கப்படுவதாகும். இவ்வாறு பூசாரியார் வளந்துப் பானைகளைத் தோள்களில் வைத்தவுடன் கட்டாடியார் வெள்ளைத் துணியால் பானையையும், பானையைச் சுமந்து நிற்கும் உரித்துடையோரையும் மூடிவிடுவார். அவ்வாறு மூடப்பட்ட வளந்துப் பானைகளைக் குறிப்பிட்ட இன்னொரு இடத்திற்கு மேள முழக்கத்துடனும்,பூசாரியாரின் வழிகாட்டலுடனும் எடுத்துச் செல்வர்.எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் வெள்ளை விரிப்பின் மீது வைக்கப்பட்டு வெள்ளையால் (வெள்ளைத் துணியால்) மூடப்படும். பூசைகள் ஆரம்பமாகும் வரை அவை அவ்விடத்திலேயே பேணப்படும். இரவு ஒன்பது மணியளவில் மடைபரவுதல் இடம்பெறும்.இதன் போது கட்டாடி வெள்ளையை (வெள்ளைத் துணியை) கோயில் வாசலில் விரிப்பர்(கட்டாடிக்கு கோயில் வாசல் மட்டுமே செல்ல அனுமதியுண்டு) பூசாரியானவர் தெய்வமாடி கடகப் பெட்டியில் உள்ள அரிசியை (பச்சை அரிசி) மூன்று முறை கட்டாடியினால் விரிக்கப்பட்ட வெள்ளைத்துணியில் போடுவார். அவ்வாறு பூசாரியார் போட்ட பின்னர்,ஏனைய பக்கதர்கள் பூசைப் பொருட்களை அதன் மீது பரவுவர். இதனை மடை பரவுதல் என்பர்.மடை பரவுதலின் பின்னர் இரவு பன்னிரெண்டு (12) மணியளவில் நிலத்திலே அடுப்பு வெட்டுவர். புதுவிறகுகளை வைத்து தீ மூட்டுவர்.இவ்வாறு அடுப்பு வெட்டுதலும்,தீ மூட்டுதலும் பக்தி பூர்வமாகவே மேற் கொள்ளப்படும். அனைவரும் இதனைச் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். வேளாள மரபில் வந்தவர்களே இதனைச் செய்வார்கள். வளர்ந்துக்கு உரித்துடையோரே பெரும்பாலும் இதனைச் செய்வதுண்டு. இவ்வாறு நிலத்தை வெட்டி, பயபக்தியாக மூட்டப்பட்ட அடுப்பிலே பொங்கல் பானையினை வைப்பர்.முன்பு வெள்ளைத் துணியினால் மூடப்பட்டுக் குறிப்பிட்டதொரு இடத்தில் பேணப்பட்ட வளந்துப் பானையே இங்கு பொங்கல்பொங்குவதற்காகஎடுக்கப்படுகிறது. இவ்வாறு பொங்கல் பொங்குவதற்காக வைக்கப்பட்ட பானையில் பூசாரியே முதன் முதலில் மூன்று தடவை அரிசியைத் தனது கையினால் எடுத்துப் போடுவார். இவ்வாறு இங்கு பொங்கலிற்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் அரிசியானது புத்தரிசியாக இருக்கும்.அதாவது புதிய நெல்லைத் தமது கையினால் உரலிலிட்டு இடிப் பதன் மூலம் பெறப்படும் அரிசியையே இவர்கள் பயன்படுத்துகின்றனர்.கண்ணகை, வைரவர் போன்ற தெய்வங்களிற்கு தனித்தனியே வளந்துப் பானை வைப் பர். இவ்வாறு இரவிரவாகப் பொங்கல் செய்யப்பட்டு,அதிகாலை ஆறு மணிக் குப் பூசைகள் இடம்பெறும்.பூசைகள் பறையொலி முழங்க,பூசாரியின் கலை யாடலுடன் நடைபெறும். பூசையின் இறுதி நிகழ்வாக "வழிவிடல்" எனும் நிகழ்வு இடம் பெறும்.அதாவது பூசை யின் ஆரம்பத்தில் துஸ்ர தேவதைகள், பரிவாரங்கள் என்பன மந்திரத்தினால் கட்டப்படுமாம். இவற்றை அவிழ்த்து விடுதலே "வழிவிடுதல்" எனும் நிகழ் வாகும்.பூசைகள் யாவும் நிறைவுற்ற பின்னர்,பூசாரியினை மேள தாளங்கள் முழங்க அவரது வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.தொடரும் நாட்களில், "வீட்டு வேள்வி" எனும் நிகழ்வு பூசாரியின் வீட்டில் இடம்பெறும்.இதன் போது ஆலயத் திருவிழாவின் போது பாடு பட்ட தொண்டர்கள், உறவினர்கள் அழைக் கப்படுவர். பூசாரியும் அவரது குடும்பத் தாரும் அவர்களை வரவேற்று "மாமிச உணவு" பரிமாறி மகிழ்வர். இந் நிகழ்வு டன் பூசைகள் யாவும் வைபவ ரீதியாக நிறைவெய்தும்.

## கிடாச்சூரி கண்ணகை அம்மன்

கிடாச்சூரிக் கண்ணகையம்மன் ஆலய வழிபாடுகளும் ஆரம்பத்தில் பம்பை மடுவை ஒத்ததாகவே காணப்பட்டது. எனினும், தற்போது இவ்வாலயம் ஆகம முறைசார் கட்டட அமைப்பிற்குள் தன்னை நுழைத்துக் கொண்டுள்ளது. இருப்பினும் பூசாரி மரபில் வந்தவர்களாலேயே வழி பாடுகளாற்றப்படுகின்றன. ஆரம்பத்தில் வருடாந்த பொங்கலின் முன்னர் "ஊர் சுற்றல்" எனும் நிகழ்வு இடம் பெறும். இதன்போது பூசாரியின் வாக்கிற்கிணங்க ஐந்து அல்லது ஏழு ஊரைச் சுற்றி வருவர். இதன் போது அம்மனின் முகவராகம் கடகப் பெட்டியில் மறைத்துக் கொண்டு வரப்படும்.வேற்று ஊர்களில் தெண்டப் படும் அரிசியை "முத்தரிசி" என்பர். இறுதி நாள் நிகழ்வின் போது "முத்தரிசி விளையாடல்" எனும் நிகழ்வு இடம் பெறும்.இதன் போது சுவாமியைச் சுற்றி முத்தரிசியையும் சில்லறைக் காசுகளை யும் எறிந்து விளையாடுவர். கொடி மரத்திற் காக ஒவ்வொரு வருடமும் எந்த மரத்தை வெட்ட வேண்டுமெனப் பூசாரியார் கன வில் காண்பாராம். ஒன்பது நபர்களுடன் காட்டிற்குச் செல்லும் பூசாரியார் கனவில் கண்ட மரத்தினை வெட்டுவார். மரம் விழும் போது அதனை நிலத்தில் விழ விடாமல் வெள்ளைத் துணியால் ஒன் பது பேரும் தாங்கிப் பிடிப்பர். பின்பு வரு டாந்தப் பொங்கலின் போது வேப்பிலை களால் சோடனை செய்து கொடிமரத்தின் உச்சியில் பாலை மரக் கொப்பினைப் கட்டி விடுவர். இங்கு பலியிடலும் இடம் பெறுகிறது.அம்மன் கோயிலுக்கு எதிரே யுள்ள நாவல் மரத்தடியில் காத்தவராயன் சுவாமிக்கு ஆடு, கோழி என்பன பலியி டப்பட்டு சோற்றோடு இறைச்சியும் சேர்த்து அவிக்கப்பட்டு இறைச்சிச் சோறு படைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படும். பூசைகள் யாவும் நிறைவடைந்த பின்னர் பூசாரியார் மேள தாளத்துடன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படும் நிகழ்வும் பூசாரியார்தம் "வீட்டு வேள்வியும்" இடம் பெறும் மரபினை இங்கும் அவதானிக்க முடிகிறது.

இவ்வகையில் வவுனியா மாவட்டத்தில் காணப்படும் ஆகம முறைசாரா கண்ணகை அம்மன் வழிபாடு குறித்து நோக்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் பல கண்ணகையம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றுள்ளதனை அவதானிக்க முடிகிறது. அவற்றுள் பெரும்பாலானவை ஆகம மரபு சார்ந்தவை. அவை குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பின்னணியைக் கொண்டவையல்ல. இதன் காரணமாக அவை குறித்து இங்கு ஆராயத் தலைப்படவில்லை. சில மரபுசார் வழிபாடுகள் ஆற்றப்பட்டு வந்த ஆலயங்கள் "மேனிலையாக்கம்" எனும் மாயைக்குள் தம்மைத் திணித்துக் கொண்டுள்ளதையும் அறிய முடிகிறது. இதன் காரணமாக அவை பற்றிய குறிப்புக்களும் தவிர்க்கப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், கிராமிய மரபுசார் வழிபாட்டு முறைகள் இற்றை வரை பேணப்படும் ஆலயங்களாக மேலே ஆராயப்பட்ட இரு ஆலயங்களையும் அடையாளப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணக்கோட்பாடும் அதன் சமூக விளைவுகளும்

**நா.சுஜீவன்**
புவியியல் துறை,
கலைப்பீடம்.

## அறிமுகம்

இந்துமதம் மனிதனை நெறிப்படுத்துதலை நோக்காகக் கொண்டு சிறப்பிற்குரிய பல கோட்பாடுகளை நமக்கு வழங்கியுள்ளது. அந்த வகையில் வழங்கப்பட்ட கோட்பாடுகள் இன்று பல வழக்கிழந்தும், சில மாறியும் பேணப்பட்டு வருவதை நாம் நோக்க முடிகின்றது. அந்தவகையில் இந்து மதத்தின் வழக்கு முறையில் இன்றை வரையில் பாரம்பரியத்தில் வழக்கு முறையாக பேணப்பட்டுவரினும் இதன் கொள்கைகள் காலங்காலமாக மாற்றமடைந்து வந்திருத்தலையே எம்மால் கவனிக்க முடிந்தது. அந்த வகையில் பண்டைய இந்து இலக்கணங்கள் வர்ணங்கள் பற்றிக்கூறிய கருத்துக்களும், இன்றுவரை அவை பெற்றிருக்கின்ற மாற்றங்களும், அதனால் சமுதாய ரீதியில் ஏற்பட்டுள்ள பூசல்களும் எவை என்பதை கீழே விரிவுபட நோக்குவோம்.

வர்ணம் என்றால் சாதாரண கருத்தில் நிறம் என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. ஆனால் இந்து மதத்தில் வர்ணம் என்றால் சாதி என்பதைக் குறிக்கும் சொற்றொடராக கொள்ள முடிகின்றது. இதற்குக்காரணம் யாது? என நோக்குவோமாயின் இந்துக்களின் ஆதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியினர் வாழ்க்கைக் காலமாக கருத்தில் கொள்ளப்பட்ட வரலாற்றுக்கு முந்திய காலம் எனக் கருதப்படும் திராவிட இனத்தவர்கள், வாழ்க்கைக்காலமாகிய சிந்துவெளி நாகரீக காலத்தில் வர்ண வகுப்புகள் பேணப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரம் காட்ட முன்வந்த அறிஞர்கள் பின்வந்த இலக்கியங்களை மேற்கோள் காட்டி அக்காலம் நிறங்களை அடிப்படையாகக் கொண்டும் மனித உருவ அமைவுகளை அடிப்படையாகக் கொண்டும் சாதிகளை கணித்தனர் என்பதற்கு ஆதாரம் தந்துள்ளனர்.

மனிதனது நிறத்தை அடிப்படையாகக் கொண்டு பண்டைய சாதி வகுப்பினை ஏற்படுத்திக் கொண்டனர். ஆகையால் சாதிகளை வர்ணம் என்று கொள்ளுவதிலே சிறப்பானது என கருதியபோதிலும் வர்ணம் என்ற சொல்லை சாதிகளுக்கு இட்டு அழைத்தனர். அதுவே தொடர்ச்சியாக நின்று நிலவி, சாதிகளை வர்ணம் என்றும் வர்ணத்தைப் பற்றிய கொள்கைகளைக் கொண்ட கோட்பாட்டினை வர்ணக் கோட்பாடு என்றும் குறிப்பிட்டனர் என அறியமுடிகின்றது.

இலக்கிய ஆதாரத்தின் படி ஆரியர் வரலாறும் பண்பாடும் என்ற நூலை நமக்கு வழங்கிய கைலாச பேராசிரியர் சிவசாமி அவர்களும், வடமொழி இலக்கிய வரலாறு என்ற நூலை நமக்குத் தந்த பேராசிரியர் நாதக் குருக்கள் அவர்களும் ஆரியர்கள் வாழ்க்கை முறைகளைப் பற்றி மிகவும் விரிந்து பரந்து வெளிப்படுத்திய நூல்களில் வர்ணங்கள் பற்றி வேத இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து கருத்து தருகையில் மாறுபட்ட காலங்களில் எழுந்து வியாசரினால் வகுக்கப்பட்ட வேதங்களில் வர்ணத்தைப்பற்றிய குறிப்பு திடப்படுத்திய வகையில் அமைவு பெறவில்லை என்பதை மட்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் இருக்குவேதத்தில் புருஷ சூக்தம் என்று சொல்லப்படும் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வர்ணங்களைப் பற்றிய தெளிவான கருத்தினை காண முடிகின்றது என்பது இவர்களது கருத்தாகும். அதன்வழியே இருக்கு வேதத்தின் புருஷ சூக்த பகுதியை எடுத்து நோக்குகையில் அங்கு வர்ணங்களை நிற அடிப்படையிலேயோ அன்றேல் உருவ அடிப்படையிலேயோ வகுக்கப்படவில்லை என்பது மட்டும் உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

## வர்ணப்பாகுபாடு இருந்தமைக்கான சான்றுகள்

தமிழருடைய சமுதாயத்தில் வர்ணப் பகுபாடு இருந்தமைக்கு எம்மால் சான்று கூறமுடிகிறது. ஏனெனில் பிராமணன், ஷத்திரியன், வைசிகன், சூத்திரன் எனும் நான்கு வர்ணங்களின் பெயர்களை அங்கு நாம் காண முடிந்தது. ஆனால் இந்த நால்வரது பிரிவுகளும் கூடுதலாக தொழில் வேறுபாட்டை கொண்டிருந்தமைக்கு சான்றுகளைக் கூறமுடிகிறது.

குறிப்பாக இயற்கைச் சக்திகளால் பயமடைந்த வேதகாலத்தில் இறைவனுக்குப் பிரீதி அல்லது கடமை செய்தற்பொருட்டு வேள்விகளை ஆற்றுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையும் வேதங்களை மந்திரித்து ஓதுத லையும் வழக்கமாகக் கொண்டிருந்த மக்களுக்கு அதனை ஊக்கமுடன் செயற் படுத்தும் நோக்கோடு பிராமணர்கள் முயன்றிருத்தலை நோக்க முடிகின்றது. ஆகவே பிராமணர்களுடைய தொழி லாக வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓது வித்தல் எனும் தொழிற்பாடுகள் வரன் முறையாக நடாத்தப்பட்டு வந்தமைக்கு சான்றுகளுள்ளன.

வேதகால சமுதாயத்திலே கோன் ஆட்சிமுறை நிலவிய பொழுது அவனே குடிகளின் பாதுகாவலனாக இருந்தான். அந்நிய படையெடுப்புகளின் வருகை யை தடுத்தும், நாட்டில் அதர்மம் தலை எடுக்காது பாதுகாத்தும், தர்மத்தை நிலை நிறுத்தும் நோக்கோடும் செயற்பட் டான். ஆகவே மன்னர்களாக செயற்ப டும் வர்ணத்தவர்கள் ஷத்திரியர்கள் என்ற நாமத்தைப் பெற்றும், அந்நியர்களிடமி ருந்தும் அதர்மத்திடமிருந்தும் நாட்டிற்கு பாதுகாப்பை வழங்கினர் என அறிய முடிகிறது. அடுத்து வேதகால சமுதாயத் தின் முக்கியத்துவமான தொழிற்பாடு விவசாயமும் கடல் வணிகமுமாகும். இத்தகைய செயற்பாட்டினால் நாட்டில் வறுமைத் தன்மையைப் போக்குவதற்கு விவசாயத்திலும் வணிகத்திலும் ஈடுபட் டவர்கள் வைசியர்கள் எனக் கணிக்கப் பட்டு வறுமையினிடம் நாட்டை அழி யவிடாது பாதுகாப்பைத் தேடியதாகச் சிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட மூவரது சேவைக் கும் ஒத்துழைப்பை வழங்கி அவர்களது தொழிற்பாட்டில் ஆதரவு வழங்கிவந் தோரை சூத்திரர்கள் என்றும் கணித்து சிறப்பித்தனர்.

ஆகவே நான்கு வர்ணங்களும் சமு தாய பாதுகாப்பு என்ற நோக்கை அடிப் படையாக வைத்துக் கொண்டு தொழில் ரீதியில் வகுக்கப்பட்டிருக்கலாம் என் பதை ஏற்றுக்கொள்ள முடிகின்றது. ஆனால் இந்தக் கொள்கையை முழுமை யாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்கும் வேதங்களிலிருந்து சில ஆதாரங்களை இங்கு நாம் முன் வைக் கமுடிகின்றது.

### வர்ணக்கோட்பாட்டினை ஏற்றுக்கொள்ள முடியாமைக்கான ஆதாரங்கள்

வேதகால ஆராய்வில் முன் நின்றவர் களாக கருதப்பட்ட மார்க்கஸ் மூலர் சாதி வகுப்பைப் பற்றிய கருத்துக்களை ஆழமாக ஆராயத் தவறிவிட்டது எமக்கு இடர்பாடே. ஆயினும் வடமொழி இலக்கியவரலாற்று ஆசிரியராகிய கைலா சநாதக் குருக்கள் வேதகால சமுதாயத்தில் சாதிப்பகுபாடு என்ற தலைப்பில் தனது கருத்தை வெளிப்படுத்துகையில் தொழில் ரீதியில் வர்ணங்கள் பிரிக்கப்பட்டது. வேதகாலத்தில் என்பதை வேத இலக் கியங்களால் சான்று காட்டும் நாம் சமு தாய நலனை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட இந்த வர்ணங்கள் உயர்வு தாழ்வுகளைக் கொண்டதாக இருப்பது நியாயமற்றது என்றும் அங்ஙனம் இருந் ததா? என்னும் கேள்விக்கு தீர்க்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் ஒன்றும் எம்மால் தரமுடியாது என அதற்கு உதாரணமாக நான்கு வர்ணங்களையும் வேள்வித் தீயில் இடப்பட்ட அவயங்களோடு ஒப்பிட்டுக் கருத்து கூறியிருந்தலை முன்வைக்கின்றனர். அதாவது பிராமணனை தலைக்கும் ஷத்திரியனை தோற்பட்டைக்கும் வைசிகனை தொடைக்கும் சூத்திரனை பாதத்திற்கும் ஒப்பீடு செய்கையில் ஒரு புறத்தே நின்று நாம் நோக்குகையில் தலைக்கு ஒப்பான பிராமணன் உயர்ந்தோன் என்றும் பாதத்திற்கு ஒப்பான சூத்திரன் தாழ்ந்தோன் என்றுமே கருத்து கொள்ள முடியும். மறுபுறம் நோக்கின் ஒரு மனிதன் நிறை மனிதனாக இருப்பதற்கு தலை எங்ஙனம் அவசியமானதோ அங்ஙனமே ஏனைய அவயவங்களும் அவசியமாதலால் தலைக்கு ஒப்பிட்ட பிராமணன் உயர்ந்தோன் என்றோ பாதத்திற்கு ஒப்பிடப்பட்ட சூத்திரன் தாழ்ந்தோன் என்றோ கருத்து கொள்வதும் ஏற்க முடியாததே எனக்கூறி வர்ணங்கள் மத்தியில் உயர்வு தாழ்வு இருந்ததோ இல்லையோ என்ற கேள்விக்கு தீர்க்கமான பதிலைக் கூறமுடியவில்லை என்ற கருத்தையே தமது விடையாக வழங்கியுள்ளார்.

வியத்தகு இந்தியா என்ற தலைப்பில் இந்தியாவின் முழுமையான வரலாற்றையும்வாழ்கைமுறைஅம்சங்களையும் நமக்கு வகுத்துத் தந்த பாடம் அவர்கள் தொழில் ரிதியில் வேத காலத்தில் வர்ணங்கள் வகைப்பாடடைந்திருந்தாலும் வருமான நோக்கம் கருதி தொழில்கள் வேறுபட்ட வர்ணத்தவர்கள் ஆற்றியிருந்தலை நோக்கின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிய கருத்துக்களை விபரித்துக்கூற முடியவில்லைஎன்கின்றார். ஆகவே மாறுபட்ட வர்ணங்கள் இருந்தது உண்மையெனினும் வர்ணங்கள் மத்தியில் உயர்வு தாழ்வு இருந்ததோ இல்லையோ என்பதை வேதகாலதில் எம்மால் கணித்துக் கொள்ள முடியவில்லை.

வேதகாலத்தில் வர்ணங்களின் வகுப்பானது தொழில் ரீதியில் வகுக்கப்பட்டதாக கருத்துக்கொள்ளப்பட்டு இருந்தாலும் வேதகால இறுதிப் பரப்பிலே வர்ண வகுப்பின் தன்மைகள் தொழில் அடிப்படை என்ற நிலை மாறி குண அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கலாம் என நம்பக்கூடிய வகையில் வேதகால இறுதிப் பரப்பு இலக்கியமாகக் கருதப்படும் உபநிடதங்கள் சான்று வழங்கியுள்ளன.

உபநிடதவாதிகள் கருத்தின்படி ஆராய்ச்சியும் ஆராய்ச்சி பூர்வமான முடிவுகளையும் கொண்டதான தத்துவ உண்மைகள் விளக்க வைத்ததோடு ஒழுக்கவியல் என்ற தலைப்பில் அக்காலத்து சமுதாயத்தோர் பேணப்பட வேண்டிய வழக்கு முறைகள் பல உபநிடதங்களில் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது கூறப்பட வேண்டியதாகும். இந்த வகையில் வர்ணம் பற்றிக் குறிப்பை நாம் நோக்குகின்ற போது இங்கு குணத்திலேயே வர்ணங்களைக் கணித்திருந்தனர் என நம்புவதற்கு பல சான்றுகள் காணமுடிகிறது.

இதன் அடிப்படையில் நோக்குவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயின் உபநிடத காலம் குண அடிப் படையிலேயே வர்ணங்கள் வகைப்ப டுத்தப்பட்டு இருந்தன என்பதை குறிப் பிட்டு கூற முடியும். அந்த வகையில் மனிதனுக்குரிய குணங்களை மூன்று பிரிவுள் அடக்கி கருத்து கூறியுள்ளனர். அதாவது செந்தண்மை மிக்க மேன்மை தங்கிய உயரிய குண இயல்புகளை சாத்வீகம் என்றும் உடல் வலிமையும் மன வலியும் மிகுதியான குண இயல் பினை இராஜகம் என்றும் தளர்ச்சி யடைந்த சோம்பல் நிலையினை தாம சம் என்றும் வகைப்படுத்திக் கூறி மேற் கூறப்பட்ட இந்த மூன்று குணவியல் புகளும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொ ருவரிலும் கூடியும் குறைந்தும் காணப் படும் எனவும் அங்ஙனம் விகிதாசார ரீதியில்கூடியும்குறைந்தும்காணப்படும் குண இயல்புகளே வர்ணங்களை நாம் வகைப்படுத்த உகந்தது என்பதை உபநிடத வாதிகளின் கூற்றுக்கள் சிலவற் றிலிருந்து அறிய முடிகிறது.

இந்த வகையில் செந்தண்மைமிக்க உயரிய மேன்மை தங்கிய குண இயல் புகள்யார்யார்வசம்காணப்பட்டனவோ அவர்களையே பிராமணன் என்கின்ற வர்ணம் என கணித்துக் கொண்டமைக் கான சான்றினைக் கூறமுடியும். உபநி டதக் கருத்திலே குருவினை நாடிச் செல் லும் சிஷயர்களை குண இயல்பை வைத்துக்கொண்டே அவர்களது வர் ணத்தை கணித்தமைக்கான சான்றாக பால உபநிடதத்தில் சத்தியகாமன் கதை அமைகிறது.

அதாவது சத்தியகாமன் எனப்படும் சிறுவன் சிறுவயதில் ஆன்மீக நாட்டம் உடையவனாகி ஆன்மீக அறிவைப் பெறுதல் பொருட்டு குருவை நாடிச் செல்கின்றான். குரு அவனது குலத்தை விசாரிக்க அவன் அதற்கு கொடுத்த விடை எனது தாயார் பல வீடுகளுக்கு சென்று சேவகம் புரிந்தவள் ஆகவே நான் யார் பொருட்டு உற்பத்தியானேன் என என்னால் கூறமுடியவில்லை என உண்மையை உரைத்தான். இதனைக் கேட்ட குரு உண்மையை மறைக்காது உரைத்தாய்ஆதலால்நீபிராமணனாகவே இருக்க வேண்டும் எனக்கூறிய இந்தக் கூற்று உபநிடத காலத்தில் குணங்களே சாதிகளை நிர்ணயிக்க உதவின என்பதை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. செந் தண்மைமிக்க குண இயல்பாக கொள் ளப்பட்டது என்பதற்கும் உபநிடதங்க ளில் நாம் விளக்கங்களைக் காண முடி கின்றது. அதாவது குருவை நாடிச்செல் வோரில் ஆன்மீகத்திற்கு தகுதி உடைய வர்களை, பிரித்தறிந்து தன்னகத்தே வைத்துக்கொண்டு வலிமை குணவி யல்பாகக் கொண்டவர்கள். நாடாளும் வல்லமை உடையவர்கள் என குரு ஆசீர்வதித்தமைக்கான சான்றுகளை ஆங் காங்கே நாம் காண முடிவதாக ஷத்திரிய வர்ணம் வலிமையுடையவர்கள் வர்ணம் என்பது கணிப்பிடப்பட்டது.

இதே போன்று வர்ணங்களில் வைசிக வர்ணம் சோம்பல் மிகுதியான வர்ண மாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும் தொழிலாள வர்க்கமாக இருந்த தால் நிறைவான எந்தவொரு இயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் பெற்றிராத ஒரு வர்ணமாக சூத்திர வர்ணம் கணிக்கப்பட்டிருந்த மைக்கும் சான்றுண்டு. எனவே குணங் களை உபநிடத காலத்தில் வர்ணங்களை வகுக்க உதவியது என்ற கருத்தை உப நிடதச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எம்மால் ஏற்றுக் கொள்ளமு டிகின்றது.

வேதங்கள் உபநிடதங்கள் என்பன இந்து மதத்தின் முதன்மைத்துவம் பெற்ற இலக்கியங்கள் ஆதலால் வேதங்களும் உபநிடதங்களும் வர்ணம் பற்றிக் கொண்ட கருத்துகள் இந்துமதம் வகுத்துத்தந்த வர் ணங்கள் எனசிறப்பிக்கப்டுகின்றன. ஆகவே பண்டைய இந்தியர்கள் பேணிய வர் ணக் கொள்கைகள் இவை என்றே நாம் கொள்ளமுடிகின்றது.

### வர்ணக் கோட்பாட்டில் ஏற்பட்ட மாற்றம்

இந்துமத நூல்கள் வகுத்துத் தந்த வர்ண வகுப்பானது தற்காலம்வரை அதே நிலைப்பாட்டில் பேணப்பட்டதா அல் லது காலத்திற்குக்காலம் நிலை மாறிக் காணப்பட்டதா என்பதனை நாம் ஆராய்ந்து நோக்குகையில் இந்துமதம் வகுத்துத் தந்த கோட்பாடு காலத்திற்கு காலம் குறிப்பிடத்தக்க பல மாற்றங்களை கொண் டிருந்தது எனக் கூறுவதற்கே சான்றுண்டு.

குறிப்பாக இந்துக்கள் வாழ்க்கையில் பேணப்படுவதாகிய வர்ண வகுப்பு இன்று எத்தகைய மாற்றங்களைப் பெற்றிருக்கின் றது என நோக்குவேமாயின் அடிப்படை யான மூன்று குறிப்பிடத்தக்க மாற்றங் களை எம்மால் நோக்க முடிகிறது.

அதாவது இந்து மதம் பிராமணன், ஷத்தி ரியன், வைசிகன், சூத்திரன் என வர்ணங் களை நான்காக வகுத்துத்தர இன்று நான்கு வர்ணங்களிலும் பிராமண வர் ணம் மட்டுமே வழக்கில் இருக்க ஏனைய மூன்று வர்ணங்களும் வழக் கொழிந்து அதற்குப் பதிலாக ஏராளமான வர்ணங்கள் இன்றைய நடைமுறையில் பேணப்பட்டு வருவதை நோக்க முடி கின்றது இதுவொரு மாற்றமாகும்.

அடுத்து இந்து மதமோவெனில் சமு தாய நலனைக் கருத்தில் கொண்டு சமு தாயத்தைப் பாதுகாப்பதை நோக்காகி வர்ணங்களை வகுத்திருந்த பொழுது இன்றைய தன்மையில் அந்நிலை மாறி வர்ணங்கள் உயர்வு தாழ்வுகளைக் கொண் டனவாக உயர்வு தாழ்வைக் கருத்திற் கொண்டு வகைப்பாடடைந்திருப்பது பிறி தோர் மாற்றம் எனலாம்.

இதுமட்டுமல்லாமல் இந்துமதம் தொழில், குணம் என்பவற்றை அடிப் படையாகக் கொண்டே வர்ண வகுப் பினை ஏற்படுத்திய பொழுது தற்காலத் திலோவெனில் வர்ண வகுப்பு பரம் பரை ரீதியாக வகைப்பாடடைந்திருத் தலையே நோக்க முடிகின்றது.

### வர்ணக் கோட்பாடு வலுவிழந்தமைக்கான காரணங்கள்

வர்ணக்கோட்பாட்டில் மாற்றங்கள் பிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் ஏற்பட்டமைக்கு காரணங் களை நாம் ஆராய முற்படுவோமாயின் முதற்தரமான காரணமாக சனத்தொகை யின் பெருக்கத்தையே குறிப்பிட முடி கின்றது. ஏனெனில் காலத்திற்குக் காலம் அதிகரித்துக்கொண்டிருக்கும் சனத் தொகை வர்ணத்தைப் பாகுபடுத்துவ தற்கு ஒரு தடையாக அமைந்தது எனலாம். ஏனெனில் வளர்ந்துவரும் சனப்பெருக்கத்தில் தனிப்பட்ட தொழில் களை வழங்கி வர்ணத்தை வகைப்ப டுத்துவது இயலாததாக அமைந்திருக் கலாம்.

இது மட்டுமன்றி காலத்திற்கு காலம் நாகரீக வளர்ச்சி சிந்தனை விருத்தியின் பயனாக ஏற்படத் தொடங்கிய பொழுது அந்த நாகரீக வளர்ச்சி மக்களுக்கு மிகுதி யான தேவைகளை ஏற்படுத்தித் தந்தது எனலாம்.

ஆகவே குறிப்பிடத்தக்க அந்த தேவை களைப் பூர்த்தி செய்வதற்கு தனிப்பட்ட தொழில்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த வகையில் அந்தந்தத் தொழில்களை ஆற்றுவதற் கென இலாப நோக்கில் தொழிலாளர்கள் தனித்துவப்பட்ட பல தொழில்களை உருவாக்க முற்பட்டனர். இதுவே காலப் போக்கில் தொழில் விருத்தியை ஏற்ப டுத்தி அந்தந்தத் தொழில்கள் ஒவ்வொன் றிற்குமென தனித்தினியான வர்ணங்கள் உருவம் பெறுவதற்குக் காரணமாக அமைந்த தெனலாம்.

சனத்தொகைப் பெருக்கம், நாகரீக வளர்ச்சித் தேவைகள் அதிகரித்தமை, தொழில்கள் அதிகரித்தமை தொழில் ரீதியான பல்வேறுபட்ட வர்ணங்கள் சமுதாயத்தில் உருவாகக் காரணமாகியது என்பதனை நாம் நோக்க முடிகிறது.

இந்த நிலைப்பாடு எக்காலம் வரை நீடித்தது என்பதே ஆராயத்தக்கதாகும். காரணம் இன்றைய நிலையில் தொழில் ரீதியில் வர்ண வகுப்பினை நாம் காணமுடிவதில்லை ஆனால் தொழில் ரீதியில் பேணப்பட்டு வந்த வர்ணங்கள் இன்று பரம்பரைரீதியாகப் பேணப் படும் நிலைப்பாடு காணப்படுவதற்கு காரணம் யாது? என நோக்குவேமாயின் இங்ஙனம் வர்ணங்கள் வகைப்பாட டைந்த நிலையானது அந்நிய வரு கையின் பின்னர் மாறுபாடடையத் தொடங்கியது எனலாம் இது எங்ஙனம் என நோக்குவோமாயின் அந்நியர்கள் வருகை சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற் றங்களில் முக்கியத்துவமான மாற்றம் வர்ண வகுப்பில் ஏற்படுத்திய மாற்றமா கும். அதாவது முற்காலப் பரப்பில் கடி னமாகப் பேணப்பட்டு வந்த கைத்தொ ழில்களை அந்நியர்கள் இயந்திரமயமாக் கினர். அதனையும் இலகுபடுத்துவதற்கு மின்சாரத்ததை அறிமுகப்படுத்தினர். இத னால் கைத்தொழில்களை தனிப்பட்ட ஒரு வர்ணத்தவனே உருவாக்க வேண்டு மென்ற நிலை மாறி இயந்திரத்தைப் பயன்படுத்தி கைத்தொழில்களை ஏனை யோரும் செய்வதற்கு வசதியளித்தது.

இதுமட்டுமன்றி தொழில்ரீதியானகல்வி வசதியை அந்நியர்கள் அறிமுகப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியமை பல்வேறுபட்ட துறைகளில் கல்வி விருத்தியைடைவதற்கு சாதக மாகியது. இதனால் கல்வி ரீதியிலான பல தொழில்கள் மேலோங்கிக் காணப் பட்டது. இந்நிலையில் தொழில்களைக் கொண்டு வர்ணங்களை வகைப்படுத்த முடியாத பொழுது வர்ணங்கள் பரம் பரை ரீதியாக வகைப்படுத்தப்பட்டது. அது எவ் வகையில் என்பதனை நோக் குவோம்.

அதாவது தொழில் அடிப்படையாகக் கொண்டு முன்னர் தொழில் ரீதியில் வர்ணங்கள் வகைப்படுத்தப்பட்போது அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வர் ணத்தின் பெயரே பிற்காலத்தில் இயந் திரங்கள் மூலம் தொழில்கள் விருத்தி யடைந்து அதன் பயன்பாடாக தொழில் கள் பெருகிய போதும் கல்வி ரீதியில் தொழில்கள் விருத்தியடைந்த போதும் தனித்தனியாக வர்ணங்கள் கற்பிக்க முடியாத பொழுது முன்னவன் செய்த தொழிலின் தன்மையைக் கருத்திற் கொண்டு அவனுக்கு எப் பெயர் வழங் கப்ட்டிருந்ததோ அவ் வர்ணத்தின் பெயரே பின்னர் வந்த சந்ததியினருக்கும் வழங் கப்பட்டது எனலாம்.

ஆகவே பிற்காலப் பரப்பில் வர்ணங் கள் பரம்பரை ரீதியில் வகுக்கப்பட்டு இன்றைய வரையில் நிலைபேறடைந்த தன்மையினை நோக்க முடிகிறது. இதுவே இன்றைய நிலையில் சமுதாயத்தில் பேணப்பட்டுவரும் வர்ணப்பாகுபாட்டு நிலையாகும். இந்த வர்ணங்களுக்கிடை யில் காலம் காலமாக உயர்வுகளும் தாழ்வுகளும் காணப்பட்டு சமுதாய சர்ச்சைகளும் தாழ்வுகளும் கலவரங்க ளும் சமுதாய ஒற்றுமையைக் குலைத்து வந்திருப்பதனைக் காண முடிகிறது.

எனவே தான் நவீன காலப் பரப்பில் தோற்றம் பெற்ற சீர்திருத்த இயக்கவா திகள் வர்ணப்பாகுபாட்டு முறை உயர்வு தாழ்வுகளைக் அடிப்படையாகக் கொண்ட தல்ல என்ற கருத்தை மக்கள் முன்னி லையில் உறுதிப்படுத்த முற்பட்டனர். அந்த வரிசையில் நவீன சீர்திருத்த இயக் கங்களின் முன்னோடியாகிய இராஜா ராம் மோகனராஜ் ஸ்தாபித்த பிரமசமா ஜம் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற தத்துவத்தை மக்களுக்காக செயற் படுத்த முற்பட்டது. காந்திய கொள்கைக ளுக்கு முக்கியத்துவம் கொடுத்த அஹிம்சை வாதியான மகாத்மா காந்தி தனது கருத் தில் இந்து மதம் வகுத்த வர்ணம் உயர்வு, தாழ்வுகளைக் கொண்டது என்ற கருத்து ஊர்ஜிதமானால் நான் ஒரு இந்து என்று சொல்வதற்கு வெட்கப்படுகின்றேன். இந்து மதத்தின் வர்ணமும் சமுதாய பாது காப்பை அடிப்படையாகக் கொண்டதே எனக்கூறுவதோடு மனிதர்கள் வேறுபட் டவர்களாக இருந்தாலும் எல்லோரு டைய உடலிலும் ஓடுகின்ற இரத்தம் செந்நிறமானதே என்ற உணர்வு பூர் ணமான ஆதாரத்தை முன்வைத்தார். இந்த சீர்திருத்தவாதிகளின் தோற்றம் மனிதர்களை சிந்திக்க வைத்ததே தவிர மரபு ரீதியாக பேணப்பட்டு வந்த வர்ணக் கொள்கைகளை நீக்குவதற்கு வழி செய்யவில்லை. கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நடைமுறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படவில்லை.

எனவேதான் அரசியல் ரீதியில் அற நெறியை சட்டமாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே வர்ண வகுப்பு ஒழிப் பிற்காக அரசியல் ரீதியாக சில சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவையாவன சம கல்வி, சமதொழில் வாய்ப்பு, ஆலயப் பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு என்பன வாகும்.

அதாவது பண்டைய இந்து சமுதாயம் பாகுபாடு காட்டியது. உயர் வர்ணத் தோன் என கணிக்கப்படுபவன் கல்வித் தகுதியுடையோன் என்ற கருத்தும் கல்வி கற்கும் அந்தஸ்தும் அவனுக்கேயுரியது என்ற கருத்தும் மரபு ரீதியாக பேணப் பட்டு வந்த பொழுது அரசியல் ரீதியில் இத்தகைய பாகுபாட்டை ஒழித்து சமகல்வி வாய்ப்பை அரசாங்கம் வழங்க முற்பட்டபோது மாணவ சமுதாயத்த வர்கள் மத்தியில் வர்ணப்பகுபாடு சற்று தளர்ச்சியடையத் தொடங்கியது.

இது மட்டுமன்றி உயர்ந்த தொழிலை யாற்றும் தகுதி உயர்ந்த வர்ணத்தோ னுக்கே உரியது தாழ்ந்த வர்ணத்தவன் கூலியாளனாகவும் எடுபிடி வேலையாள னாகவும் மட்டுமே தொழிற்பட வல்ல வன் என்ற நியதி சமுதாயத்தில் தொழிற் பாகுபாட்டை ஏற்படுத்திய பொழுது திறமை, கல்வி, உயர்வு என்பவற்றிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து எந்த வர்ணத்தவனும் எந்தத் தொழிலும் செய் யலாம் என்ற நிலை அரசாங்கம் வழங் கிய சமதொழில் வாய்ப்பின் மூலம் கிட் டப்பட்தாகும்.

இறைவன் உறையும் ஸ்தாபனங்களா கிய ஆலயங்கள் பொது ஸ்தாபனங்களாக அன்று காணப்படவில்லை தாழ்ந்தோர் மத்தியில் ஆலயங்களுள் காலடி எடுத்து வைக்கக் கூட அனுமதி வழங்கப்பட வில்லை. இந் நிலையில் இறைவன் முன்னர் மனிதர்கள் சமமானவர்கள் என்ற நிலைப்பாட்டினை அரசாங்கம் கொண்டுவந்து ஆலயப் பிரவேசத்தினை ஏற்படுத்தியது எனலாம்.

ஒதுக்கப்பட்ட வர்ணத்தவர்கள் ஒதுங்கி வாழ வேண்டிய நிலையை ஒழிக்கும் நோக்கமாக தீண்டாமை ஒழிப்பு முறையை அரசாங்கம் கொண்டு வந்தது.

இவையாவற்றையும் சட்டரீதியாக அமுல்படுத்திய அரசாங்கம் கலப்புத் திரு மணம் என்கின்ற வர்ணவகுப்பு மாறி மணம் செய்யும் முறைமைக்கு மிகுந்த ஆதரவை வழங்கியது. கலப்புத் திரும ணத்தை மேற்கொள்பவர்கள் கௌரவப் படுத்தப்பட வேண்டியவர்கள் என்ற நோக்கோடு அவர்களுக்கு அரசியல் கௌர வம் வழங்கி வீடு, பொருள் என்பவற்றை இலவசமாக வழங்கியது.

மேற்கூறப்பட்ட முறைமைகள் வர்ண வகுப்பு ஒழிப்பிற்காக வழங்கப்பட்டிருப் பினும் முழுமையாக வர்ணப் பாகு பாட்டை இன்றுவரை அழிக்க முடிய வில்லை. ஆனாலும் ஓரளவிற்கு தளர்ச்சி யடைந்தது எனக் கூறலாமே தவிர முற் றாக அழிக்கப்பட்டது என்று கூறமு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியவில்லை.

எனவே இந்து மதம் வகுத்த வர்ண மானது காலம் காலமாக குறிப்பிடத்தக்க மாற்றத்தைப்பெற்று இன்று வரை நிலைமாறி பேணப்பட்டு வரும் ஒரு கோட்பாடாக காணப்படுகின்றது.

## வர்ணக் கோட்பாடு ஈழத்தில் செலுத்தும் தாக்கம்

இந்து சமயம் உலகின் தொன்மை யான மதமாகும். இம் மதமானது மக் களை வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து முத்தியின்பம் அடைய நல்வழிகளைக் காட்டுகின்றது. அவ்வகையில் மனித னது வாழ்கையைச் செம்மைப்படுத்த கோட்பாடுகள் பலவற்றை மெய்ஞான வாதிகள் முன்வைத்துள்ளனர். அக் கோட் பாடுகளில் வர்ணக்கோட்பாடு, ஆச்சிரமக் கோட்பாடு, புருடார்த்தக்கோட்பாடு என்பன முதன்மை பெறுகின்றன.

தமிழர்களது வாழ்வில் கோட்பாடு கள் முதன்மை பெறுகின்றன. கோட்பா டுகள் பொதுவாக வாழ்கையைச் செம் மைப்படுத்த முன்வைக்கப்பட்டாலும் பாதகமான தாக்கங்கள் பலவற்றையும் ஏற்படுத்துவது தடுக்க முடியாததே. இதற்கு வர்ணக் கோட்பாடு போதுமான சான்றாகும். இக்கோட்பாட்டின் தாக்க மானது இந்தியாவை விட ஈழத்திலேயே ஏற்பட்டுவந்துள்ளதை காணமுடிகின்றது. அவ்வாறு வர்ணம்சாதியானது தாக்கம் செலுத்திவரும் துறைகளை நோக்கு வோம்.

### 01.திருமணம்

திருமணம் என்றவுடன் ஆண்,பெண் இணைதல் என்பதற்கு அப்பால் நமக்கு நினைவு வருவது சாதியாகும். தம்மை உயர்ந்த சாதியினர் எனக் கூறிக்கொள் ளும் ஒருசில கூட்டத்தினர் தம்மைவிட குறைந்த சாதியினர் என அடையாளப் படுத்தும் சாதிக் கூட்டத்தினருடன் திரு மண உறவுகளை ஏற்படுத்துவதை தரக்கு றைவாகவும், சட்டமீறல் போன்றும் நோக் குவதை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்நிலை ஈழத்தின் பல பகுதிகளிலும் தற்போதும் கடுமையாக பின்பற்றப்பட் டுவருகின்றது. இதைவிட திருமணம் முதலான மங்கல நிகழ்வுகளில் உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரின் பங்கேற் றலை ஆதரிப்பது மிகவும் குறைவு என்றே கூறவேண்டும். அவ்வாறு பங்கபற்றுவ தானாலும் மாலையில் அல்லது அடுத்த நாளிலேயே பங்குபற்றுகின்றனர்.

### 02.ஆலயம்

ஈழத்திலே ஆலயத்திருவிழாக்களில் கூட இன்று சாதியம் தலைதூக்கியுள் ளமை வேதனையளிக்கின்றது. ஈழத் திலே கோவில்களுக்கு குறைவில்லை எனக் கூறிச் சந்தோசப்பட்டுக் கொண் டாலும் அதன் காரணம் என்ன என்பது இன்றுவரைக்கும் யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு சாதியினரும் தம்மை உயர்ந்தோன் என அடையாளம் செய்து கொண்டு தத்தமது சாதியினருக்கு என்று கூறித் தனி ஆலயம் அமைத்து வழிபாடு நடாத்தி வருகின்றனர். உயர்சாதியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிக்கொள்வோர் தாழ்சாதியினருக்கு சில கொடுமைகளை ஆலயத்திலே செய்வதைக் கண்ணால் காணமுடிகின்றது. வெள்ளை கட்டும் தொழிலாளி, பறைமேளம் அடிப்பவன், போன்றோரைக் கூட ஆலயத்துள் நுழைய அனுமதிப்பதில்லை. அண்மையில் ஈழத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் பறை அடிப்பவர் ஒருவருக்கு நிகழ்ந்த அநீதியை நான் காண்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அத் தொழிலாளி வெளிவீதியில் அமைக்கப்பட்ட மதிலின் துளையின் ஊடாகவே பூசையை அவதானித்து மேளம் அடிக்க பணிக்கப்பட்டிருந்தார்.

### 03. பாடசாலைகள்கல்விக்கூடம்

ஈழத்திலே கல்வியை வழங்கும் கல்விக் கூடங்கள் கூட சாதியை மையப்படுத்தி தோற்றம் பெற்றிருக்கின்றது. குறிப்பிட்ட சில சாதிக்கூட்டத்தினர் தத்தமக்கென கல்விக்கூடங்களை உருவாக்கி தமது பிள்ளைகளுக்கு கல்வி வழங்க நடவடிக்கை எடுத்தனர். அத்தோடு அங்கு பணியாற்ற தமது சாதியினைச் சார்ந்த ஆசிரியர்களையே நியமித்தும் கொண்டனர் இந்நிலை இன்றும் ஓரிரு இடங்களில் வழக்கில் இருந்தாலும் இந்நிலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

### 04. ஏனையவை

கிராமத்தில் அமைக்கப்படும் சில சங்கங்கள், பொது அமைப்புக்கள் போன்றவற்றில் உயர்ந்த சாதியினரே அங்கம் வகிக்கவேண்டும் என எழுதப்படாத விதி இருப்பதாக இன்றும் பலர் நம்புகின்றனர். அதேபோல் சாதாரணமாக வீடுகளுக்கு வரும் குறைந்த சாதியினருக்கு உயர்ந்த சாதியினர் பழைய பாத்திரங்களில் தண்ணீர், உணவு பரிமாறுகின்றனர். அத்தோடு கிணற்றில் நீர் அள்ளத் தடை, வீட்டின் உள்ளே நுழையத்தடை போன்றவற்றுடன் வயது குறைந்த உயர் சாதியினர் வயதில் கூடிய தாழ்சாதியினருடன் மரியாதைக் குறைவாக உரையாடுகின்றனர்.

சிலசில சாதியினருக்கென கிராமப் பகுதிகளை முன்னோர் வகுத்திருந்தனர். அந்நிலமை தற்போதும் பின்னற்றப்பட்டு வருகின்றது. குருநகர், பாசையூர், நாவாந்துறை, கோவில் குடியிருப்பு, அளவெட்டி, துன்னாலை, மந்துவில், தவசிகுளம் போன்ற ஈழத்தின் கிராமங்கள் பலவற்றை ஒரு சில சாதியினருக்கு உரியதாகவே கருதி செயற்பட்டுவருகின்றனர்.

### முடிவுரை

முற்காலத்தில் வர்ணக்கோட்பாடானது வர்ணத்தை அடிப்படையாகக் கொண்டு சூத்திரர், வைசிகர், சத்திரியர், பிராமணர் போன்றோர் எனப் பாகுபடுத்தப்பட்டாலும் பிற்பட்டகாலத்தில் அது தொழிலை மையப்படுத்தியதாகவும் திரிவுபடுத்தப்பட்டது. மாற்றமுற்று வரும் உலகில் நாளாந்தம் புதிதுபுதிதாக பல தொழில்கள் உருவாக்கம் பெறுகின்றன அத் தொழில்களும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சாதிகள் உருவாக்கம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலத்தை பொறுத்த வரை சாதியை தொழிலை அடிப்படையாக வைத்துக் கணிக்க முடியாது போய்விட்டது. உயர்கல்வி, வெளிநாடு, அரசதொழில் வாய்ப்பு போன்றவற்றால் அனைவரும் அரச, தனியார் தொழில் கம்பனிகள், கைத்தொழிற்சாலைகளில் தொழில்புரிகின்றனர். இதன் காரணமாக தொழிலை அடிப்படையாகச் சாதியை வகைப்படுத்த முடியாது.

வர்ணக்கோட்பாடானது இந்து சமயத்தில் உருவாக்கப்பட்ட மிகவும் சிக்கல் நிறைந்த கோட்பாடாக மாறியுள்ளது. இருந்த போதும் இக் கோட்பாட்டை அடியொற்றிய ஒரு சிலர் தற்போதும் சாதியை மையப்படுத்தும் தன்மை, திருமணம் என்பதற்கு அப்பால் செயலிழந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்கள் பண்பாட்டில், வல்லிபுர ஆழ்வார் கோயில்

**இளஞ்சைவப்புலவர். கனகரத்தினம் கனகதுர்க்கா**
விடுகை வருடம், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஈழத்துச் சமயநெறி மரபில் சைவ நெறி மரபு என்பது இந்துமத மரபாகவே நோக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வகையில் இச்சமயமரபின் சிறந்த நிலைபேற்றிடமாக விளங்குவது யாழ்ப்பாணம் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. ஈழத்தின் வடபால் தலையெனத் திகழும் யாழ்ப்பாணம், தமிழர்களின் பூர்வீக வரலாறு, மற்றும் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டுள்ளது. இப் பண்பாட்டு அடையாளங்கள் யாவும் கோயில்களை மையப்படுத்திய பண்பாடாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. தமிழர் வாழ்வியலில் அதிக கூறுகளைத் தன்னகத்தே கொண்டு வளர்ச்சி பெற்ற இந்துமதம் காலந்தோறும் தன்னுள்ளே கொள்ளல் கொடுப்பினையை மேற்கொண்டு தமிழர்களின் தனித்துவமான மதமாக விளங்கி நிற்கின்றது. தமிழர் என்றால் மதம் இந்துதான் என்று எண்ணும்; வகையில் கருத்து நிலைபேறாக்கம் பெறுவதற்குக் காரணம் அம்மதநெறி தமிழ் மக்களின் சாதாரண வாழ்க்கைப் பண்பாட்டோடும் நிலைபெற்றிருப்பதேயாம்.

யாழ்ப்பாண மக்கள் பண்பாட்டில் சைவநெறி என்ற சமயக் கருத்தாக்கம் வலிமை பெற்றிருப்பினும் அது வெறுமனே சிவவழிபாடு சார்ந்தது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தெய்வங்களையும் காழ்ப்பு ணர்வு இன்றிச் சமயப் பொறையோடு வழிபடும் வழக்கம் இங்குண்டு. சைவர், சாக்தர், வைணவர் என்று தம்மைப் பாகுபடுத்திக் கொள்ளாமல் எல்லாத் தெய்வத்தையும் ஒரு சமமாக வணங்கும் மரபு இங்கு வெகுகாலமாகவே நிலவி வருகிறது. இதற்குக் காரணம் வழிபா டுகள் மக்களின் வாழ்க்கைப் பண்பாட் டோடு பின்னிப் பிணைந்துள்ளமையே எனலாம். ஆன்மீக நோக்கத்திற்கு அப் பால் நம்பிக்கை சார்ந்தும், தம் பண் பாட்டின் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதாகவுமே இச்சமய வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. இங்குள்ள மக்களின் வழிபாட்டின் நோக்கம் ஆறு முக நாவர் கூறியது போல "இந்தப் பிறவி கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட் டேயாம்" என்று கொள்ள முடியாது. இங்குள்ளவர்கள் வழிபாடுகளை இன்ன மும் தொடர்ச்சியாக மேற்கொள்வதற் குக் காரணம், சிவனை வழிபட்டு கைலா யம் போகவேண்டும் என்றோ அல்லது விஸ்ணுவை வழிபட்டு வைகுந்தம் செல்ல வேண்டும் என்பதோ அல்ல. பூலோக சுவர்க்கத்தை அனுபவிக்க வேண்டும் அல்லது இம்மை வாழ்வில் சுக வாழ் வைப் பெறவேண்டும் என்பதே. அதற் காகத்தான் தம் வாழ்வியல் பண்பாட்டை ஆலயத்தோடு கட்டமைத்துக் கொள்கின் றனர். அன்றியும் ஆலயத்தை வரலாற் றின் இருப்பிடமாகப் போற்றி அப்பண் பாட்டின் மூலம் தமிழர் வரலாற்றைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியும் இதனூடு நிலைபெற்றுள்ளது. அவ்வகை யில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஈழத் தின் ஏனைய பழமை வாய்ந்த ஆலயங் களோடு சேர்த்துப் பேசப்படும் அளவிற் குத் தனித்துவம் பெற்றுவிளங்கும் தல மான வல்லிபுர ஆழ்வார் தலத்தின் பின்ன ணியில் நிலைபெற்றுள்ள யாழ்ப்பாணப் பண்பாட்டை நோக்குதல் சாலச்சிறந்தது.

ஈழத்தில் புகழ்வாய்ந்த பழமையான ஆலயங்களில் விஷ்ணுவுக்குரிய தனித்துவ மான ஆலயமாக விளங்குவது வல்லிபுர ஆழ்வார் கோயிலாகும். இவ் ஆலயம் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் பருத்தித் துறையில் இருந்து செம்பியன் பற்றுக்குச் செல்லும் பாதையில் ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள் ளது. ஈழத்தின் புகழ்பெற்ற பஞ்ச ஈஸ்வ ரங்கள், முருகதலங்களைப் போன்று இவ் ஆலயமும் பழமையும் வரலாற் றுச்சிறப்பும் தனித்துவமும் கொண்டது.

சமயம் வாழவேண்டுமானால் சமூகம் வாழவேண்டும் என்ற விவேகானந்தரின் கொள்கைவழி இவ் ஆலயம் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுடன் தொடர்பு பட்டு; வளர்ச்சியும் முக்கியத்துவமும் பெற்றுள்ளது. சமயநெறி மரபினூடகப் பெற்றுள்ள முக்கியத்துவத்தை விட தமிழர் வாழ்வியலினூடக இவ் ஆலயம் பெற்றுள்ள முக்கியத்துவம் நோக்கற்பா லது. தமிழர்களின் தொன்மையான வரலாற்றுடனும், பாரம்பரிய வாழ்க்கை முறையுடனும் தொடர்புபட்டு

**மூர்த்தி யருளும் முறைசேர் தலநலமும்**
**தீர்த்தத் திருநிறைவும் சேருமருட் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீர்த்திமிகு**
**நல்லவோர் ஆலயத்தை நாடி நான்**
**போற்றுதற்**
**கல்லே னின்றோனே னறி**

எனக் கருடாழ்வார் புராணம் கூறுவதைப் போன்று மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் வாய்த்த கீர்த்திமிக்க தலங்களில் இதுவும் ஒன்று.

யாழ்ப்பாணத்தில் சைவம் வைணவம் என்ற பாகுபாடு எங்கும் இல்லை. வல்லிபுரமாழ்வாரை பாடும்போது அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்கள் சிவவிஷ்ணு என்றே குறிப்பிடுவார். பொதுவில் திருமால் ஆலயங்களில் மூலமூர்த்தி நின்ற கோலத்திலோ, அமர்ந்த கோலத்திலோ, கிடந்த கோலத்திலோ காணப்படும். ஆனால் வல்லிபுரத்திலோ சுதர்சனமே மூலமுர்த்தியாயுள்ளது. இத்தலத்தை பற்றிய வரலாற்றை தட்சிண கைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம் என்பவற்றிலும் காணலாம். சிங்கள மொழியில் 14ம் நூற்றாண்டில் எழுந்த தூது இலக்கியங்களிலும் இத்தலமகிமை பேசப்படுகின்றது. குறிப்பாக கோகிலவு சந்தேசம் பொன்னாலையில் இருக்கின்ற வரதராஜப்பெருமாளையும், வல்லிபுரம் ஆழ்வாரைப் பற்றியும் பாடியுள்ளது.

அவ்வகையில் ஈழத்தின் புராதன ஆலயமாக விளங்கும் இவ் ஆலயத்தினை யாழ்ப்பாணப் பண்பாட்டுடன் பொருத்திப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வல்லிபுர ஆழ்வார் தலத்தின் வழிபாட்டு முறைகளினூடு யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியப் பண்பாடும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை நாம் பின்வரும் கூறுகளின் அடிப்படையில் நோக்கலாம்

1. தமிழர் வரலாறு
2. தமிழர் வாழ்வியல்
3. இலக்கிய மரபு

## தமிழர் வரலாறு

தமிழர் வரலாறு என்று கூறுங்காலை அது சங்க இலக்கிய காலத்தில் இருந்தே ஒரு சிறப்பான பண்பாட்டுடன் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை சங்க இலக்கியங்களின் மூலம் அறியலாம். அக்கால வழிபடு கடவுளர்களில் மாயோன் முல்லை நிலக் கடவுளாகச் சித்தரிக்கப் பட்டுள்ளான். கிருஸ்ண அவதாரம் பற்றிய கதைகள் சங்க இலக்கிய காலத்தில் இருந்தே தமிழர் இலக்கியங்களிலும் நிலைபெறத் தொடங்கின. முல்லை நிலக் கடவுளான மால் வழிபாட்டோடு கிருஸ்ண அவதாரச் செய்திகளும் கலந்துவிட்டதைச் சங்கப் பாடல்களில் காணலாம். பரிபாடல், கலித்தொகை என்பன இம் மாயோன் பற்றிய செய்திகளை அதிகமாகத்தருகின்றன. தொன்மங்களோடு கட்டமைக்கப் பட்ட மாயோன் வழிபாடு தமிழகத்தில் அரசமரபினூடும் தெய்வமரபினூடும் சமஸ்கிருத செல்வாக்கினூடும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மாயோனுக்குச் சங்க இலக்கியத்தில் முல்லை நிலம்வழங்கப்பட்டுள்ளபோதும் காலப்போக்கில் மால்வழிபாடு சமஸ்கிருதக் கதைமரபின் இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் கோவர்த்தனக் குடைபிடித்த கண்ணனாக இந்திரனுக்கு நிகராகவும், பாற் கடலோடு தொடர்புபடுத்தி நெய்தல் இறைவனாகவும் வளர்ச்சியுற்று வழிபடப்பட்டுவந்ததை நோக்கலாம். வழிபடு கடவுளரைப் பல்வேறு இடங்களில் திரு நிலைப்படுத்தி தமிழர் வழிபட்டு வந் தனர்.

**"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**ஆறும் குளமும் வேறுபல......"**

களங்களிலும் கடவுளர்களின் இருப் பிடங்கள் தமிழர் வழிபாட்டு வரலாற்று முறையில் கட்டமைக்கப்பட்டன. அத்த மிழர் சமய மரபினூடு வல்லிபுரப்பதியி லும் கடலும், மணலும், காடும் சேர்ந்த இயற்கை வனப்பு நிறைந்த நிலத்தின் கண்ணே அம் மாயவன் சக்கரத்தாழ்வா ராக விரும்பி உறைகின்றான். அவ்வகை யில் தமிழர் சமயவரலாற்றுடன் தொடர்பு பட்டதாக இத்தலத்தை நாம் அடை யாளப்படுத்தலாம்.

மேலும் இராசதானியாக விளங்கிய சிங்கைநகர் எதுவென்பது தொடர்பாக இன்றும் வாதப்பிரதி வாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போதும் சில ஆய்வா ளர்கள் வல்லிபுரமே புராதன சிங்கைநகர் என்று அடையாளப்படுத்துவர். இதற்குச் சுவாமி ஞானப்பிரகாசரின் கூற்றும் வலுச் சேர்க்கிறது. சிங்கைநகர் எனப்படும் ஆரம்பகாலத்து யாழ்ப்பாணத் தலைநகரம் கடலலை சூழ்ந்த பகுதியில் அமைந்தி ருந்தது. எனவே ஆரம்பகால யாழ்ப்பா ணத்தில் தலைநகராக விளங்கிய சிங்கை நகர் இதுவே என ஆராய்ச்சியாளர்கள் நிறுவுவர். பிற்காலத்திலேயே இத்தலை நகரம் நல்லூரை மையமாகக் கொண்டு அமைவுபெற்றிருந்தது. எனவே ஆரம்ப கால யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற இடமாக வல்லிபுரம் விளங்கியமை அறி யக் கிடைக்கின்றது. எனவே யாழ்ப்பா ணத் தமிழர் வரலாற்றோடு தொர்புபட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதி யில் அமைந்த வகையில் இத்தலமும் வரலற்றுப் புகழ்மிக்க தலமாக விளங் குகின்றது.

## வாழ்வியற் பண்பாடு

வாழ்வியல் என்று கருதப்படுவது சமூகத் தோடு மனிதன் ஒன்றிவாழுந் தன்மை யைக் குறிப்பது. தமிழர் வாழ்வியல் ஆலயப்பண்பாட்டுடன் இணைந்ததாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வகை யில் சமூகத்தில் இருந்து வேறுபடாத சம யவழிபாட்டு முறையும் வாழ்வியல் அம் சங்களில் ஒன்றாகவே கொள்ளப்படுகின் றது. அவ்வகையில் வல்லிபுரஆழ்வார் என்னும் இவ் ஆலயத்தின் வழிபாட் டோடு ஈழத்தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த சடங்காசாரங்களும் நிலைபெற்று ள்ளது எனலாம்.

யாழ்ப்பாணமானது குடாநாடாக அமைந் தவகையில் மூன்றுபக்கமும் கடலால் சூழப்பட்டு, ஒரு சிறிய நிலத்திணிவு ஏனைய இலங்கைப் பாகத்துடன் இணைக்கும் வகையில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் வாழ்வாதாரமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலம் முதல் விவசாயம், மீன் பிடி ஆகியனவாகவே இருந்தன. பெரும் பாலான கோயிற் பண்பாடுகள் உள் நாட்டை நோக்கிய வண்ணம் விவசாய குடியினராலேயே பெரும்பாலும் வழிப டப்பட்டுவர இத்தலமானது இருபெருங் குழுமங்களை ஒருசேர இணைக்கும் தல மாக விளங்குகின்றது. செல்வச்சந்நிதி ஆலயமும் இதனை ஒத்ததே எனினும் அளவில் இவ் ஆலயம் பிரமாண்டமும் தனித்துவமும் கொண்டது. மேலும் வாழ் வாதாரமான விவசாயம் மற்றும் மீன்பிடி யினூடு கிடைக்கின்ற வருவாயைச் சேமித்து வைக்கும் மக்கள் இவ் ஆலயத்தின் பெருந்திருவிழாவுக்காகக் காத்திருப்ப தும் அத் திருவிழாக்காலங்களில் யாழ்ப் பாணப் பண்பாட்டுக்குரிய பனைசார் உற் பத்திப் பொருட்களே பெருமளவு விற் கப்படுவதும் இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடைக்கின்றன.

இலங்கையர்கோனின் "வெள்ளிப் பாதசரம்" என்னும் சிறுகதை இதற்குத் தக்க சான்றாகும். கதையின் தொடக்கமும் உயிரத்துடிப்புடனும் நிலைக்கும் களம் வல்லிபுரப்பகுதியே எனினும் கதையின் தொடக்கமே யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலை அப்படியே படம் பிடித் தக் காட்டி விடுகின்றது.

**"தன் வீட்டுக்கு ஒரு அடுக்குப் பெட்டி யும் தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங் கவேண்டும் என்று நினைத்து வந்தவளு டைய உள்ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்க ளும் மலைமலையாய்க் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி, தையற் பெட்டி, மூடற்பெட்டி, பின்னற்பெட்டி... ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி 'மாடு தன் பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ' என்று கெஞ்சினாள்."**

**வெள்ளிப்பாதசரம்:**
**இலங்கையர்கோன்**

அதேபோன்று வல்லிபுரத்தலத்தை மையமாகக் கொண்டு இன்னும் பல சிறுகதைகள் யாழ்ப்பாண மக்களின் வாழ் வியலைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றுள் அ.செ. முருகா னந்தனின் சிறுகதையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வல்லிபுரக் கோயிலின் பெருந் திருவிழவை ஒட்டி மக்கள் அங்குசெல் வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது கூட ஒரு காலத்துப் பண்பாடாக இருந்து வந்துள்ளது. வீட்டு விசேட நிகழ்வுகளில் கலந்து கொள்வதை விட உற்சாகமான ஒரு ஏற்பாடாக வல்லிபுரப்பகுதியில் சப் பறம் காணப்போகும் நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

**வல்லிபுரத்தெல்லையில் நடக்கும்**
**சப்பறவிழாவைத் தப்பற அடைய**
**தெளிந்த கள்ளை வலித்துப் பருக்கி**
**வெறிமிக் கேறிய காளை எருதை**
**சோடிசேர்த்துச் சோடினை செய்து**
**பூட்டி வண்டிலில் கால்களை நீட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனம் மீதில் அமர்ந்தான்

என வரும் பாடல் வல்லிபுரத்துக்கு மாட்டுவண்டிலில் செல்லும் யாழ்ப் பாண மக்களின் பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. கோயிலின் உற்சவத்தை யொட்டி மாட்டுவண்டிச் சவாரிகள் இடம்பெற்றுள்ளன. வண்டில் கட்டிப் போகும் வழக்காறு பெருமளவில் நிகழ்ந் துள்ளது. அதற்குச் சான்றாக மேற்கூறிய பாடல் தவிர, அ.செ.முருகானந்தனின் பின் வரும் கதைப் பகுதியையும் காணலாம்.

'அது கிடக்கட்டும் அண்ணே! வல்லி புரக் கோயிலுக்கு எப்போ வண்டில் பூட்டிறியள்? அல்லது இம்முறை பூட் டாமலே விடுகிற யோசனையோ....?'

'நல்லாயிருக்கு! வருசத்திலே ஒருக்கா வருகிற இதைக்கூட விட முடியுமோ? அதுவும் போக....'

'ஓ! சொன்னாப்போல இந்தமுறை சவாரிச் சங்கதி ஒண்டும் இருக்கு தல்லோ...?'

அவ்வகையில் வல்லிபுரம் என்னும் இப்பதியில் உறைகின்ற மாயவனை வழிபட யாழ்ப்பாண மண்ணின் பல தேசங்களில் இருந்தும் வண்டில் கட்டிக் கொண்டு வந்து இரண்டு மூன்று தினங் கள் தங்கி வழிபடும் மரபு ஆரம்பகாலங் களில் இருந்தது. தற்காலத்தில் வண்டில் கட்டி வரும் மரபு அருகிவிட்டாலும் வல் லிபுர கோயிலின் உற்சவ காலங்களில் யாழ்ப்பாணக் கிராம வீதிகளில் மாட்டு வண்டில்களை அதிகமாகக் காணமுடி கின்றது. அன்றியும் சிறியரக, பெரியரக உழவு இயந்திரங்களிலும் மக்கள் அலை அலையாகத் திரண்டு வருவதனை நாம் அவதானிக்க முடியும். யாழ்ப்பாண தேசத் தவரின் இப் பண்பாட்டை மேற்கூறிய கதையை விட ஈழத்துச் சிறுகதை முன் னோடிகளுள் ஒருவரான இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் என்னும் சிறுகதையும் பிரதி பலிக்கின்றது.

மேலும் இவ் ஆலயம் தொடர்பாக வழங்கப்பட்டுவரும் கர்ணபரம்பரைக் கதை கூட தமிழ் மக்களின் வாழ்விய லோடு தொடர்புடையதாகும். அதாவது தமிழர் வாழ்வியலில் குழந்தைப்பேறு என்பது இறை கடாட்சமாகவே கருதப் படும். பதினாறு பேறுகளில் ஒன்றாகக் குழந்தைப்பேறையும் கூறி கச்சியேகம் பரிடம் கவி காளமேகம் வேண்டுகிறார். எனவே குழந்தைப்பேறு என்பது கடவுள் அருளால் கிடைப்பது என்றும், அவ்வாறு பிள்ளை வரமற்றவர்கள் கடவுளிடம் நேர்த்திவைத்து குழந்தைப் பேறு பெறுவதையும் தமிழர் சமயம ரபினூடு அவதானிக்கலாம். அவ்வகை யில் வள்ளி என்பவளின் குறைபோக்க வந்துதித்த மாயவனே சக்கரமாகி வல்லிபுரப் பதியில் உறைவதாக வரும் ஐதீகக் கதைமரபு தமிழர் வாழ்வியற் பண்பாட்டை அடிப்படையாகக் கொண் டதே. இக்கதை மரபை ஒட்டிப் பிள் ளைச்செல்வம் இல்லாதவர்கள் வல்லி புர மாயவனை வழிபட்டு நேர்த்தி வைப் பதையும், கருவுற்ற காலத்திலிருளதே அக்கு ழந்தை சுகமாகப் பிறக்கவேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தலத்தில் நேர்த்தி வைப்பதையும், பிற் பாடு குழந்தை பிறந்தபின் அதனை எடுத்துச் சென்று ஆலயத்தில் நேர்த் திக்கடன்களை நிறைவேற்றுவதையும் அவதானிக்கலாம்.

மேலும் வெள்ளி, செவ்வாய்க் கிழ மைகள் யாழ்ப்பாணச் சைவமரபில் முக் கியத்துவம் பெறுமளவிற்கு ஞாயிற்றுக் கிழமையும், வடமராட்சிப் பகுதியில் பெருமளவும் ஏனைய பிரதேசங்களில் பரவலாகவும் முக்கியத்துவம் பெற்றுள் ளது. நேர்த்தி வைத்தல், பிள்ளை விற்று வாங்குதல் போன்ற வாழ்வியல் ரீதியான நம்பிக்கைச் சடங்குகள் இங்கு மேற் கொள்ளப்படுகின்றன.

கருவறையில் இருக்கும் சுதர்சனச் சக்கரத்தை சக்கரமாகவோ அல்லது விஸ்ணுவாகவோ மக்கள் கருதி வழி படுகிறார்கள் என்று சொல்ல முடியாத அளவிற்கு இறைவன் என்கின்ற சிந் தனை வேரூன்றி நம்பிக்கையுடன் மக் கள் வழிபடுகின்றனர். இந்த அளவிற்கு யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டதாக இவ் ஆலயம் விளங் குகிறது. சமூகத்தில் ஒரு குழந்தை கிடைத் ததும் அந்தக் குழந்தைக்குரிய நேர்த்தி களில் ஒன்று வல்லிபுரத்திலும் நிறை வேற்றப்படுவது மரபாகும். அன்றியும் ஆவணிதோறும் வருகின்ற ஞாயிற்றுக் கிழமைகளில் மாயவனை விரதமிருந்து வழிபடுவர். வெள்ளிக்கிழமையானது எல்லாக் கடவுளர்க்கும் உரிய நாளாக இருப்பினும் முருகனே அந்நாளின் அதி சிறப்புக் கடவுளாக வழிபடப்படுவது போல் ஞாயிறு என்பது சூரியனைக் குறித்திருப்பினும் இங்கு ஞாயிற்றுக்கி ழமை விஸ்ணுவுக்குரிய நாளாக வழி படப்பட்டு வருகின்றது. வெள்ளிக்கி ழமை விரதம் நோற்கும் பெண்கள் முருகன்போல் வெள்ளைக்கணவனைப் பெறுவர் என்றும், திருமால்போல் கரி யநிறக் கணவனைப் பெறவிரும்பும் பெண்கள் ஞாயிறு தோறும் வல்லிபுர மாயவனை நினைத்து விரதம் நோற் கவேண்டும் என்றும் அங்கதமாகக் கூறும் பண்பாடு கூட வல்லிபுரத்தை நிலைக்க ளனாகக் கொண்டுள்ளது.

அவ்வகையில் ஈழத்தில் பெரும்பா லான வேண்டுதல்கள், நேர்த்திக்கடன் கள் இவ் ஆலயத்திலேயே நிறைவேற் றப்படுகின்றன. நாகதோச நேர்த்தி வழி பாடு, குழந்தைகளுக்கான நேரத்திகள், ஏனைய வாழ்வியல் கருமங்கள் நோய், துன்பங்களுக்கான நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற பிரதி ஞாயிறு தோறும் அடியவர்கள் இவ் ஆலயத்தில் திரண்ட வண்ணம் இருப்பார்கள். திருமாலின் திருமண் பிரசாதத்தை வாங்கிச் சென்று அதனை புனிதப் பொருளாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுத்துப வர்கள் ஏராளம். புரட்டாதி மாதத்தில் வரும் இவ் ஆலயப்பெருந்திருவிழா இன் றும் கூட யாழ்ப்பாண மக்களின் வாழ்வி யலில் முக்கியத்துவம் பெறுகின்றது. வல்லிபுர மாயவனைத் தொழுங்கால் தொல்லைவினை அகன்று நல்லகதி பெறுவார் வல்லவரே என்று கூறத்தக்க வகையில் வல்லிபுரத் திருத்தல வழி பாடு வாழ்வியலோடு கலந்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப்பண்பாட்டில் ஆலயங்களை நிலைக்களனாகக் கொண்டு இலக்கிய முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாலயத்தின் பழமையான வரலாற்றோடு தொடர்புபட்ட நூல்களாக தட்சிணகைலாய புராணம், யாழ்ப்பாண வைபவமாலை என்பன விளங்குகின்றன. இவற்றை விட சக்கரத்தாழ்வாராகிய சுதர்சனமூர்த்தியின் திருவருளை வேண்டிப் பிரபந்த இலக்கிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் இலக்கியங்கள் ஆலயத்தின் சிறப்பை மட்டுமன்றி யாழ்ப்பாண இலக்கியப் பண்பாட்டுக்கும் வளம் சேர்த்துள்ளன. தமிழ் இலக்கிய முயற்சிகளின் வளர்ச்சி, மரபிலக்கியச் செழுமை, விஸ்ணுதத்துவம், புலவித்துவம், தலப்பெருமை என்பவற்றினூடு மக்களின் பண்பாடும் இப்பிரபந்தங்களினூடு வெளிப்பட்டு நிற்கின்றன. அவ்வகையில் இத் தலத்தின் மீது பாடப்பட்ட பிரபந்த இலக்கியங்கள் என்ற வகையில் வல்லிபுரத் திருவந்தாதி, குருக்கட்டுத் திருவந்தாதி, கருடன்தூது, மும்மணிமாலை, வல்லிபுரநாதர் பதிகம், சிங்கைநகர்ப்பதிகம் முதலான பிரபந்தங்களைக் குறிப்பிடலாம். அன்றியும் இவ்வாலயச் சூழல் மற்றும் பெருந்திருவிழா, யாழ்ப்பாண மக்களின் பண்பாடு என்பவற்றைத் தொடர்புபடுத்தி நவீன இலக்கிய வடிவங்களும் தோற்றம் பெற்றுள்ளன. மேலும் ஆலயம் தொடர்பான பண்பாட்டு ஆய்வு முயற்சிகளுள் இவ் ஆலயமும் தனித்துவமாக உள்வாங்கப்பட்டு ஆய்விலக்கிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றைய காலத்தில் ஆலயப் பெருந்திருவிழாகாலத்தில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில், வல்லிபுர மாயவனைப் போற்றும் இலக்கியத்தரம் வாய்ந்த செய்யுள்களும் வெளிவருகின்றன.

இவ்வாறு ஈழத்தின் விஸ்ணு ஆலயங்களில் பழமையும் தனித்துவமும் உடையதான இத் திருத்தலம் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டோடு மிக நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுவது கவனிக்க வேண்டியதாகும். ஆலயம் என்பது வெறுமனே சமய நிறுவனமாக அமையாமல் மக்களின் பண்பாட்டோடு நிலைக்கும்போதே மக்களின் கவனத்தையும் ஈர்க்கின்றது. அவ்வகையில் வல்லிபுர ஆழ்வார் திருத்தலமும் மக்களின் வாழ்வியலோடும் வரலாற்றோடும் இலக்கியமுயற்சிகளோடும் நிலைபெற்று விளங்குவதால் இவ் ஆலயம் யாழ்பாணப் பண்பாட்டின் ஒரு கருவூலமாக விளங்குகின்றது எனலாம். எனவே பண்பாட்டக் கருவூலமாகத் திகழும் இவ் ஆலயத்தின் பெருமையினை நிலைத்திருக்கச் செய்தலின் அவசியத்தால், வெளியிடப்படும் இத்தகைய இதழ் வெளியீட்டு முயற்சிகளும் இன்னுமின்னும் ஆலயத்திற்கும் சமூகத்திற்குமான உறவுகளை ஸ்திரத்தன்மையுடன் பேணும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலவோட்டமும் இந்து தருமமும்

**சிவசோதி கேசவன்**
தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

காலமாற்றமானது சமுதாயத்தின் கூறுகள் யாவற்றையும் மாற்றமுறச் செய்வதனைக் காண்கிறோம். காலந்தோறும் ஏற்பட்டு வந்த மாறுதல்கள் யாவும் சமுதாயத்தில் ஏதாவதொரு மாற்றத்தினை நிகழ்த்தியிருக்கிறது. அம் மாற்றம் எத்தகையதோ அதைச் சார்ந்தே இலக்கியங்களும் கருக் கொண்டதனைக் காணலாம். காலத்தின் பிரதிபலிப்பினை இலக்கியங்களில் தெளிவாக அவதானிக்கலாம். பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமானது "இந்து தருமம்" என்ற இதழினை *1954* ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்டு வருகின்றது. இவ்விதழானது ஒவ்வொரு வருடமும் வருகின்ற மகா சிவராத்திரி அன்று வெளியிடப்படுவது சிறப்பம்சமாகும். காலந்தோறும் இலங்கையில் ஏற்பட்ட சமுதாய மாற்றத்தினை இந்து தருமம் (இதழ்) பிரதிபலிப்பதனை அவதானிக்க முடிகிறது. துடிப்புள்ள மாணவர்களே இந்து மாணவர் சங்கத்தினை ஆரம்ப காலந்தொட்டு இயங்கு நிலையில் பேணுவதால், அவர் தம் சிந்தனையும்,துடிப்பும் இந்து தருமத்திலும் பிரதிபலிப்பதனை அவதானிக்க முடிகிறது. வடக்கு,கிழக்கு போன்ற பகுதிகளிலிருந்து மத்திய மலை நாட்டில் கற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மாணவர்கள் தமக்கெதிராக செய்யப்பட்ட அடக்குமுறைகளைக் கண்டு தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிடாது, உத்வேகத்துடன் தம் உரிமைசார் கொள்கைகளை வெளிப்படுத்த முயன்றமையையும் இந்து தருமம் ஊடாக அறிய முடிகிறது.ஆரம்ப காலத்தில் இந்து மதத்தினை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற பெரு வேட்கை இந்து மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் காணப்பட்டமையை இந்து தர்மம் புலப்படுத்தி நிற்கின்றது. காலவோட்டத்தில் இந்து தருமம் மீதும் தமிழ் மொழி மீதும் பற்றற்ற மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உருவாகினர் என்பதையும் இந்து தருமமே சுட்டி நிற்கின்றது. ஆரம்ப காலத்தில் மாணவர்களது ஆக்கங்களுடன் ஒப்பிடுகையில் விரிவுரையாளர்களது ஆக்கங்கள் அதிகமாகக் காணப்பட்டமையை அவதானிக்க முடிகிறது.ஆனால் அண்மைக் காலங்களில் ஒரு சில விரிவுரையாளர்களது ஆக்கங்களே இந்து தருமத்தில் காணப்படுகின்றமை கவனத்திற்குரியது.

இந்து தர்மத்தில் வெளியாகிய ஆக்கங்களை அவதானிக்கையில் அண்மைக் காலங்களில் வெளிவந்த ஆக்கங்களுள் பல படைப்புக்கள் காத்திரமற்ற படைப்புக்களாகவே காணப்படுகின்றன.இந்து மாணவர் சங்கமானது தனது செயற்பாடுகளைக் காலவோட்டத்தில் விரிவுபடுத்துவதற்குப் பதிலாக தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொள்வதனைக் காண்கின்றோம்.இவ்வாறு குறிப்பிடச் சான்று பகிர்வதாய் இதுவரை வெளிவந்த இந்து தரும இதழ்களது செயலாளர் தம் அறிக்கைகள், இதழாசிரியர்கள் உரைகள் போன்றவை அமைகின்றன.காலவோட்டத்தில் இந்து தரும இதழும் கரைந்து தன் காத்திரமிழப்பது வேதனைக்குரியது. அவ் வகையில் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படும் 'இந்து தருமம்" இதழினூடாகப் பிரதிபலிக்கப்படும் காலமாற்றத்தினால் உருவாகிய பதிவுகள் குறித்தே இக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

## ஏக்கத்தில் தொடக்கம்

இந்து தருமம் இதழ் ஆரம்ப முயற்சியாக வெளிவந்த சில ஆண்டுகளிற்குப் பின் வெளிவந்த மலர்கள்,அக் கால கட்டத்தில் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சமூகமும் இலங்கை இந்து சமூகமும்; எத்தகைய தன்மையுடையனவாய் இருந்தன என்பதை ஓரளவு பிரதிபலிப்பதாய் அமைவதனைக் காண்கின்றோம். இந்து மாணவர்கள் யாவரும் வெள்ளிக்கிழமைகளில் குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்குப் பிரசன்னமாகவில்லை என்ற ஏக்கம் இந்து அபிமானிகளிடத்தே நிலவியதனைக் காணமுடிகிறது. *1960/1961* ஆம் ஆண்டு இந்து தருமத்தின் இதழாசிரியர் இதனைத் தனதுரையில் இவ்வாறு பதிவுசெய்கிறார்.

"ஒவ்வொரு வெள்ளிக் கிழமை மாலையிலும் பிரார்த்தனைக் கூட்டம் நடந்து வந்த பொழுதும் இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களுக்கு எல்லா இந்து மாணவ மாணவிகளும் வருவதில்லை.இதற்கு முக்கிய காரணம் வெள்ளிக் கிழமை களில் ஏனைய சங்கங்கள் சொற்பொழி வுகளையோ அன்றி உபகாரப் படக் காட்சிகளையோ ஒழுங்கு செய்வதாகும். இதன் பயனாகக் கடவுளைத் தியானிக்க வருகின்றவர்களின் தொகை குறைந்து படக் காட்சிகளுக்குச் செல்பவர்களது தொகை அதிகரித்து வருகிறது.கூட்டுப் பிரார்த்தனைகளில் சேர்ந்து பாடுவதற்கு போதுமான மாணவர்கள் இல்லாக் குறை எத்தனையோ முறைகளில் ஏற்பட்டுள்ளது.எல்லா இந்து மாணவர் களும் ஒரு வெள்ளியாவது ஒருமித்துக் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வரமாட் டார்களா என்று ஏங்கும் நிலை உண்டா கிவிட்டதென்று சொல்ல வேண்டும். இந் நிலைமை மாற வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்"

இவ்வாறு 1960களில் ஏங்கிய ஏக்கம் இற்றைவரைத் தணியவில்லை என லாம். இன்றைய சூழ் நிலையிலும் அனைத்து மாணவர்களும் கூட்டுப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வ தில்லை என்பதுடன் சில பீடங்களில் மாணவர்களது பொதுக் கூட்டங்கள் வெள்ளிக் கிழமைகளிலேயே இடம் பெறுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கை இந்து சமுதாயத்தினை இந்து நெறிசார் சமுதாயமாக கட்டயமைக்க வேண்டும் என்ற பேரவா ஆரம்ப கால பேராதனை இந்து மாணவர்கள் மத்தி யில் காணப்பட்டமையையும் அவதா னிக்க முடிகிறது. ஒட்டு மொத்த இலங் கையின் இந்து சமூகத்திற்கான குரல் இந்து தர்மத்தின் மூலம் ஒலிப்பதனைக் காண்கிறோம். இதனை 1958/1959 ஆம் ஆண்டு இந்து தர்மத்தின் இதழாசிரியர் பதிவு செய்வதனைக் காண்கிறோம்.

"இன்றைய தேவைகளில் மற்றொன்று, எளிய இனிய தமிழில் பொது மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் சமய சம்பந் தமான நூல்கள் பல எழுதி மக்களி டையே பரப்புதலாகும். சென்ற அரை நூற்றாண்டு காலத்தில் ஈழத்தில் சிறந்த மத நூல்கள் பல தோன்றவில்லை என்பது உண்மை. தோன்றிய சில நூல்க ளும் தக்க பிரசாரமின்மையாலும் எளிய நடையில் எழுதப்படாமையினாலும் பொது மக்களிடையே பரந்து இந்து சமய உயர்வுக்கு வழிகாட்டாது மறைந் தன. சமய உண்மைகளை விளக்க இக் கால இலக்கியத்துறைகளாகிய சிறுகதை, நாவல்,நாடகம் என்பவற்றையும் பயன் படுத்துதல் வேண்டும்."

1958 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்து நாகரிகம்,இந்துப் பண்பாடு முத லிய கற்கை நெறிகள் பல்கலைக் கழக மட்டத்தில் போதிக்கப்பட வேண்டு மென்ற ஏக்கம் இந்து அபிமானிகளிடத்தே காணப்பட்டமையை அவதானிக்க முடி கிறது. இதனை 1958ஆம் ஆண் டின் இத ழாசிரியர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"பல்கலைக்கழகத்தில் இந்து மத தத் துவம், இந்து மத பண்பாடு முதலி யவற்றை ஒரு பாடமாக அமைத்தல் வேண்டும். அவை பல்கலைக் கழகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டத்தில் இதுவரை இடம்பெறாதிருப்பதுமிகவும்வருந்தத்தக்கதொன்று. இக்குறை விரைவில் நீக்கப்படுமென்றே எதிர்ப்பார்க்கிறோம். ஈழத்தில் உயர் தரக் கல்வி கற்ற இந்துக்கள் சமயத் துறையில் மகத்தான பணிகள் பல அன்றும் ஆற்றியுள்ளனர்; இன்றும் ஆற்றிவருகின்றார்கள். இவ்வழியைப் பல்கலைக் கழக மாணவர்களாகிய நாமும் எமது வாழ்வின் குறிக்கோள்களில் ஒன்றாகப் பின்பற்றித் தொண்டாற்றுதல் வேண்டும். கல்விச் சாலைகளை நடாத்துதல், சமயப் போதனை செய்தல்,சங்கங்களைப் பரிபாலித்தல்,கோயில்களை நிர்வகித்தல், நூல்களை வெளியிடுதல் மற்றும் சமய சீர்திருத்த துறைகளில் ஈடுபடுதல் முதலிய பணிகளைச் செய்வதற்கு வேண்டிய தொண்டர்கள் நம்மிடையே தோன்றினாலன்றி எமது சமுதாயம் விரைவில் முன்னேறமாட்டாது."

## கலவரமும் கலக்கமும்

இனங்களிற்கிடையேயான முரண்பாடுகள் பெரும் கலவரமாக உருமாறிய போது,அதன் தாக்கம் பேராதனைப் பல்கலைக் கழகத்தையும் விட்டு வைக்கவில்லை எனலாம். இரு தடவைகள் கோரமான தாக்குதலிற்குப் பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயம் இலக்கானமை குறிப்பிடத்தக்கது. *1977.08.19* அன்று வெறி கொண்ட காடையரின் தாக்குதலிற்கு குறிஞ்சிக்குமரன் ஆலயம் முதன் முதலாக இலக்கானது. இதன் போது ஆலயத்தில் வளர்க்கப்பட்ட பெண் மயில் இரு துண்டுகளாக வெட்டப்பட்டு பற்றைக்குள் வீசப்பட்டிருந்தது. ஆண் மயில் காடையர்களால் கவர்ந்து செல்லப் பட்டது. இக் கசப்பான சம்பவத்தையடுத்து *1977.11.14* அன்று முதலாவது புனராவர்த்தன கும்பாபிசேகம் இடம் பெற்றது. புனராவர்த்தன கும்பாபிசேகத்தை தொடர்ந்து பேராதனை இந்து சமூகம் புது மலர்ச்சியுடன் இந்து சமய வளர்ச்சிக்குச் செயலாற்றத் தொடங்கியது. இருப்பினும் அது ஒரு தசாப்தத்தை கடக்க முன்பே மற்றுமொரு கோரத் தாக்குதலினை எதிர்கொள்ள வேண்டிய சுழல் உருவானது. நாடெங்கும் பெருங் கலவரமாக வெடித்த *1983*ஆம் ஆண்டு இனக்கலவரம் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களை பாரியளவில் பாதித்தது எனலாம். இக் கலவரச் சுழலில் பேராதனைத் தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறியிருந்தனர். *1977*களில் எதிர் கொண்ட வன் செயல்கள் தந்த பாடங்களினால், இம்முறை பசுக்களும் மயில்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தன. இக்கலவரச் சுழ்நிலையில் ஆலயக் குருக்கள் வீட்டோடு சேர்த்து எரியூட்டப்பட்டார். எனினும் காவல் துறையினரது தலையீட்டினால் அவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டார். இந்துக்கள் மாத்திரமன்றி பௌத்தத்தைச் சார்ந்தோரும் முருகன், பிள்ளையார், விஸ்ணு, அம்மன் போன்ற கடவுளரை வழிபட்டு வருவதனால், ஆலய விக்கிரகங்களிற்கு அவர் ஊறு விளைவிக்கமாட்டார் என்ற காரணத்தினால் விக்கிரகங்கள் எவற்றையும் பாதுகாக்கும் எண்ணம் பேராதனை இந்து சமூகத்தினரிடையே காணப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கவில்லை. ஆனால் இன வெறியர்கள் முன்னர், கடவுளரும் கற்களாகவே தென் பட்டனர் போலும்! இதனால் விக்கிர கங்கள் உடைக்கப்பட்டு அதன் கீழேயி ருந்த இயந்திரங்கள் சூறையாடப்பட்ட னர். ஆலய நலன் விரும்பிகளது முயற் சியால் எஞ்சிய விக்கிரகங்களும், பூசைப் பொருட்களும் கட்டுக்கலை ஆலயத் திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன. புலமைச் சொத்துக்களின் ஆவணப் பதிவுகளாக இருப்பவை நூல்களே. இதனை நன்கறிந்திருந்த இனவாதிகள் பேராதனை இந்து சமூகம் பேணிவந்த நூலகத்தினை இலக்கு வைத்தது. பேரா தனை இந்து சமூகம் அரிய வகை நூல் களை சேமித்து வைத்திருந்த அறை யினை உடைத்து அங்கே பேணப்பட்ட நூல்கள் யாவும் மண்டபத்தில் குவிக்கப் பட்டுப் பின்னர் எரிக்கப்பட்டன. இது 1984ஆம் ஆண்டு கால கட்டத்தில் நடை பெற்றதாக அறிய முடிகிறது. காலந் தரும் வலிகளைத் தாங்கி உரிமைகளிற்காக உணர்வுடன் போராட வேண்டிய தேவை யினை தமிழ்ச் சமூகம் நன்குணர கல வரம் வழி சமைத்தது எனலாம். கல் வியே தமது நிலையான சொத்து என்ப தனை நன்குணர்ந்திருந்த பேராதனை இந்து சமூகம் மீண்டும் பேராதனை பல் கலைக் கழகத்தில் தனது செயற்பாடுக ளைத் திறம்பட ஆற்றத் தலைப்பட்டது. இதன் விளைவாக 1987ஆம் ஆண்டு இரண்டாவது புனராவர்த்தன மகா கும்பாபி சேகம் செய்யப்பட்டு குறிஞ்சிக்குமரன் ஆலயம் புதுப்பொலிவுடன் அருள் பாலிக்க தொடங்கிற்று எனலாம். தொடர்ந்த காலங்கள் தமிழ்ச் சூழலில் பாரிய தாக் கங்களை ஏற்படுத்தியிருந்த போதிலும், குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்குப் பாரிய பாதிப்பெதனையும் ஏற்படுத்தியிருக்க வில்லை எனலாம்.

## உரிமைப் போராட்டத்தில் இந்து தர்மம்

தமிழ்ச்சமுதாயம் தனது உரிமைகளை வென்றெடுக்க முன்னெடுத்த போராட்ட மானது வெறுமனே வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்குள் மாத்திரம் முடக்கப் பட்டிருக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலிருந்து மத்திய மலை நாட்டி லுள்ள பேராதனைப் பல்கலைக் கழகத் திற்கு கற்க வந்த இந்து மாணவர்கள், தமது சமூகம் சார்ந்து சிந்திக்காது இருக் கவில்லை. இந்து தரும இதழ்களை ஆழமாக நோக்குகையில், அது இந்து மாணவர்களைத் தாம் சார்ந்த சமூகம் சார்ந்து சிந்திக்கவும் செயலாற்றவும் தூண்டுவதாய் அமைந்திருப்பதனைக் காண்கிறோம். போராட்டத்திற்கு உந்து சக்தியளிக்கும் வகையில் சில இந்து தரும இதழ்களில் அடங்கிய கருத்துக்கள் அமைகின்றன. 1996/1997ஆம் ஆண்டு இந்து தரும இதழில் பெருந்தலைவர் தனது உரையின் மூலம் இந்து மாணவர் சமுதாயத்தை நெறிப்படுத்த முனைவ தனைக் காண்கிறோம்.

"எம் பல்கலைக்கழக இந்து மாண வர்களின் வெளியீடான இந்து தருமம் தற்பொழுது ஒரு வழமையான நிகழ் வாகிவிட்டது. இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வேண்டும். இந்து மாணவர் சங்கத்தினரின் தொழிற்பாடுகள் விரிவடைந்து போகும் இவ் வேளையிலே, அவர்கள் தம் சமூகத்தினருக்கும் தம்மைச் சார்ந்து நிற்கும் மக்களுக்கும் எந்த விதத்தில்; துணை போகலாம் எனச் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும். பல்வேறு காரணங்களினால் எம் சமூகம் பின்னடைந்து இருக்கும் இவ் வேளையிலே பல்கலைக்கழக மாணவர்களின் புதிய சிந்தனையினால் ஆக்கபூர்வமான நிகழ்வுகள் ஏற்பட வேண்டும். பல்கலைக்கழக வட்டத்தினுள் செயற்பாடுகள் முடங்கி விடாமல் நாட்டின் நாற்றிசைகளுக்கும் எம் மாணவர்களின் நற்பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இதனை அவர்களின் எதிர்காலக் கடமைகளில் ஒன்றாகக் கருதி அதன் வழி நடப்பது சாலச் சிறந்ததாகும்."

இதே இந்து தரும இதழில் *(1996/1997)* செயலாளர்களது உரையிலே,

"இன்றைய கால கட்டத்திலே இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் பல்வேறு வகையான தொல்லைகள், துன்பங்களிற்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. இவ் துன்பங்களுக் கூடாக இடையறாத பக்தி வைராக்கியத்தோடு ஓரளவேனும் எமது சங்கம் இத்தொண்டை சலிப்பும், களைப்பும் இன்றி ஆற்ற முனைந்து வருகின்றது."

இவ்வாறு அக் காலகட்டத்தில் நெருக்கடிகளிற்கு மத்தியிலும் இந்து மதத்தினை மேலோங்க செய்ய பேராதனை இந்து சமூகம் முயன்றமையை அவதானிக்க முடிகிறது. *1996/1996* ஆம் ஆண்டு இந்து தர்மத்தின் இதழாசிரியர் தனதுரையில் இதனைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் சிதறிப் போயிருக்கும் எமது சமுதாயமும், எமது சமயமும் ஒரு விடியலை நாடி நிற்பது கண்கூடு... பல்வேறு அகக் காரணிகள் இந்து மதத்திற்கும், இந்து சமுதாயத்திற்கும் இடையூறாக அமையலாம். இவற்றில் நின்று விடுபட வேண்டியது இன்றைய எமது தேவையாகும். இவற்றினைக் கருத்திற் கொண்டே "இந்து மத வளர்ச்சியும் மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும்" என்று இவ்விதழின் பிரதான கரு அமையலாயிற்று."

மேற்குறிப்பிட்ட இதழாசிரியர்தம் கூற்றானது பாதிக்கப்பட்ட சமுதாயமானது தனது பண்பாட்டுக் கூறுகளைக் கட்டியமைக்க முனைவதைச் சுட்டி நிற்கின்றது எனலாம். இந்து தர்மத்தினை வளர்க்க வேண்டும் என்ற பெரு வேட்கையினால், இந்து தருமத்தினை பிரச்சாரம் செய்யும் ஊடகமாக இந்து தருமம் இதழானது தொழிற்பட்டமையையும் அவதானிக்க முடிகிறது.

### வரப்பிரகாசின் மறைவு

"வரப்பிரகாஷ்" என்ற பொறியியற் பீட மாணவன் பகிடிவதை காரணமாக இறந்தமை பேராதனைப் பல்கலைக் கழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தையும், பேராதனை இந்து சமுதாயத்தினையும் பாரிய அளவில் பாதித்திருந்தது. பகிடிவதைக் கலாசாரம் தமிழ் மாணவர்களிற்கிடையே மிகக் கீழ்த்தரமாய் இருப்பதனை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் வரப்பிரகாஷின் மரணம் அமைந்தது. பேராதனைப் பல்கலைக் கழக இந்து சமுதாயம் வரப்பிரகாஷின் மரணத்தால் பாரியளவில் கலக்கமுற்றது என்பதை *1997* ஆம் ஆண்டு இந்துதருமம் புலப்படுத்தி நிற்கிறது. *1997* ஆம் ஆண்டு இந்து தரும இதழின் செயலாளர்களது அறிக்கையில் வரப்பிரகாஷ் குறித்து அதிகம் பேசப்படுவதைக் காண்கிறோம். அவை வருமாறு,

*"31.10.1997-* வரப்பிரகாஷ் மறைவை முன்னிட்டு ஆலயத்தில் அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது. அறிந்தோ அறியாமலோ பல்கலைக் கழகத்தில் பாரம் பரியமாககப் பேணப்பட்டு வந்த ஒரு மரபு யாரும் எதிர்பாராத வகையில் உற்றார், பெற்றோர் உடன் மாணவர்கள் பேராசிரியர்கள் எல்லோரையும் துன்ப சாகரத்தில் ஆழ்த்தக் கூடிய வகையில் ஒரு பரிதாபகரமான விளைவை ஏற்படுத்தி விட்டது. இது ஈடு செய்ய முடியாத இழப்பு. எங்களுடைய கண்ணீரை மட்டுமே அஞ்சலிக் கூட்டம் மூலம் வெளிப்படுத்த முடிந்தது."

*"11.11.1997-* வரப்பிரகாஷ் வார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 'அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள்? ஆர்வலர் புன்கண் பூசல் தரும்' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க எமது கண்ணீர் துளிகளையே சொரிய முடிந்தது. 'ஊழிப் பெரு வலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' "

இவ்வாறு வரப்பிரகாஸ் குறித்த தகவல்கள் பதிவாகியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

## செயலொடுக்கமும் இந்து மாணவர் சங்கமும்

இந்து மாணவர் சங்கமானது இந்து தருமத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பல செயற்பாடுகளை ஆரம்ப காலத்தில் மேற் கொண்டமையை இந்து தரும இதழ்கள் சுட்டி நிற்கின்றன. யுத்தத்தின் கோரக் கரங்கள் தமிழ்ச் சமுதாயத்தை நசுக்க முற்பட்ட போதெல்லாம் வீறு கொண்டெழுந்த இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளை இரட்டிப்பாக்கிக் கொண்டதெனலாம். ஆனால் அண்மைக் காலங்களில் இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொண்டுள்ளது எனலாம். இந்து தருமத்தின் மீது பற்றற்ற மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உற்பத்தியாகியுள்ளனரோ என ஐயமேற்படுகின்றது. பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கமானது தனது செயற்பாடுகளை ஒடுக்கிக் கொண்டமைக்கு இந்து தர்ம இதழ்களிலுள்ள செயலாளர்களது அறிக்கைகள் சான்று பகிர்வதாய் அமைகின்றன.

தியானம், சொற்பொழிவு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நிகழ்வுகளை வெளியேயுள்ள இந்து அமைப்புக்களுடன் இணைந்து இந்து மாணவர்சங்கம் நடாத்தியமையை *1995/1996* ஆம் ஆண்டு இந்து தரும இதழில் *(பக்-94)* செயலாளர் பின்வருமாறு பதிவு செய்வதனைக் காண்கிறோம்.

*"20.10.1996- பிரம்மகுமாரிகள் ராஜ யோகா நிலையத்தால் தியானமும் ஆன்மீகக் கண்காட்சியும் இடம் பெற்றது."*

வெளி மாவட்டங்களில் "குறிஞ்சித் தென்றல்" என்ற கலை நிகழ்வு தொடர்ந்து இடம் பெற்றமையையும் அறிய முடிகிறது. *1995/1996*ஆம் ஆண்டின் செயலாளர் தம் அறிக்கையில், *21.12.1996* இல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் குறிஞ்சித் தென்றல் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றமை குறித்துப் பதியப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

இந்துதருமத்தினைப் பேணுதற்பொருட்டு இந்து மாணவர் சங்கம் இரவு பகல் பாராது உழைத்தமையை அவதானிக்க முடிகிறது. *1994*ஆம் ஆண்டு இந்து தரும இதழில் தலைவர்தம் உரையில் பின் வருமாறு குறித்துள்ளதனைக் காண்கிறோம்.

*"இன்றைய நிலையில் இந்து சமயத்திலோ அல்லது வேறு எந்த ஒரு சமயத்திலோ சமயக் கிரியைகளுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப் படுகிறதே அன்றி,சமயத்திலுள்ள கருத்துக்களை அவற்றில் பொதிந்துள்ள உண்மைகளை வெளிக் கொணர்வதற்கோ இடமளிக்கப்படுவதில்லை என்ற பொதுவான குறைபாடு கூறப்படுகிறது. அவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு சிறு முயற்சியாகவே நாம் ஆன்மீகச் சொற்பொழிவுகள் சிலவற்றையும், இந்து சமயக் கருத்தரங்கொன்றினையும் ஒழுங்கு செய்திருந்தோம்.அது மட்டுமன்றி இந் நூலையும் 'இந்து தருமம் காட்டும் ஆன்மீக வழி' என்ற கருப் பொருளை மையமாகவைத்தேஅமைத்துள்ளோம்."*

இவ்வாறு துடிப்புடன் செயலாற்றிய இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொண்டமை வேதனைக்குரியது.அண்மைக் காலங்களில் வெளிவந்த இந்து தருமங்களிலுள்ள செயலாளர்தம் அறிக்கைகள் யாவும் பஞ்சாங்கத்தினைப் போல் அமைந்துள்ளன. விசேட தினங்களில் இடம்பெற்ற பூசைகள் குறித்து மாத்திரமே அவை பேசுகின்றன. இதற்குக் காரணம் ஆலயப் பூசைகளை மாத்திரம் திறம்பட ஆற்றினால் போதுமென்று புறநடையாக இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொண்டமையேயாகும்.

## நிறைவாக

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிடப் படும் 'இந்து தருமம்' ஆனது கால மாற்றங்களைப் பிரதிபலிப்பதாய் அமைவதனைக் காண்கிறோம். காலந் தோறும் இலங்கைத் தமிழ்ச் சமூகமும், இந்து சமூகமும் எதிர் கொண்ட பண்பாடுசார் சிக்கல்களிற்கும், உரிமைசார் கோரிக்கைகளிற்கும் தீர் வினைப் பெறுவதற்கு இந்து தருமமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பங்களிப்பினை வழங்கத் தலைப் பட்டுள்ளமையை அவதானிக்க முடிகி றது. இந்து தருமத்தினை வளர்ப்பதற் காகப் பல்வேறுபட்ட வகையில் இந்து மாணவர் சங்கம் முயன்றமையையும் இந்து தருமம் சுட்டி நிற்கின்றது.ஆரம்ப காலங்களில் வெறுமனே பல்கலைக் கழ கத்திற்குள் மாத்திரம் தனது செயற்பா டுகளை முடக்கி விடாமல்,பல்கலைக் கழகத்திற்கு வெளியிலும் இந்து மாண வர் சங்கம் தனது செயற்பாடுகளை விரி வு படுத்தியிருந்தது. இருப்பினும் அண்மைக் காலங்களில் அது தனது செயற்பாடுகளை ஆலயத்தினுள் மாத் திரம் மட்டுப்படுத்திக் கொண்டமை கவ னத்திற்குரியது.அண்மைக் காலங்களில் இந்து தரும இதழ்களில் பிரசுரமாகும் படைப்புக்களில் பல காத்திரமற்றவை யாகவே காணப்படுவதனையும் அவதா னிக்கலாம். விரிவுரையாளர்தம் ஆக்கங் களும் குறைவாகவே இந்துதரும இத ழில் பிரசுரமாவதும் கவனத்திற்குரியது. இந்து தருமத்தைப் பேணவும், இந்து தரும இதழில் வரும் ஆக்கங்களைச் செம்மைப்படுத்தவும் பேராதனை இந்து சமூகம் தலைப்பட வேண்டும். கால வோட்டத்தில் இந்து தருமம் (இதழ்) கரை வடைவது இந்து சமூகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமையக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதினோராந் திருமுறையில் விநாயகர்

**க.துசாந்தினி**
கலைப் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

சைவ திருமுறைகள் பன்னிரெண்டு ஆகும். இவற்றுள் பதினோராம் திரு முறையும் ஒன்றாகும். ஏனைய திருமுறை களுக்கு இல்லாதசிறப்பு ஒன்று இத் திரு முறைக்கு உள்ளது. ஆலவாய் இறைவர் இயற்றிய திருமுகப் பாசுரம் இந்தத் தொகை நூலின் முதலில் திகழ்கிறது. சிவபெருமானலே இயற்றப் பெற்றதா கச் சொல்லப்பெறும் தமிழ்நூல் ஒன்று இறையனாரகப்பொருள் என்ற அகப் பொருள் இலக்கண நூலாகும். அப்பெரு மானாலேதிருவாய்மலர்ந்தருளப்பெற்ற பாடல்கள் இரண்டு. ஒன்று "கொங்கு தேர் வாழ்க்கை என்பது. அது குறுந் தொகை என்ற சங்கநூலின் இரண்டாவது பாட்டாக அமைந்திருக்கின்றது. மற்றொன்று இந்தத் திருமுகப் பாசுரம் ஆகும். இந்தத் திருமுறையில் பன்னிரண்டு ஆசிரியர் கள் இயற்றிய நாற்பது நூல்கள் அடங் கியுள்ளது. இவற்றுள் கபிலதேவ நாயனா ரின் மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலையும், அதிராவடிகளின் மூத்த பிள் ளையார் திருமும்மணிக்கோவையும், நம்பியாண்டார் நம்பியின் திருநாரையூர் விநாயகர்திருவிரட்டைமணிமாலையும் விநாயகர் பற்றியனவாகும்.

இந்து மதத்திலே அறுவகைச் சமயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வகுக்கப்பட்டிருக்கிறது. சங்கரர் அறு வகைச் சமயங்களை வகுத்தார். இதனால் இவர் சன்மத பிரஸ்தாபகர் என அழைக்கப்படுகிறார். அறுவகைச்சமயங் களாக,

| | | |
|---|---|---|
| **1. சைவம்** | - | **சிவன்** |
| **2. சாக்தம்** | - | **சக்தி** |
| **3. வைணவம்** | - | **விஸ்ணு** |
| **4. காணாபத்தியம்** | - | **கணபதி** |
| **5.; கௌமாரம்** | - | **முருகன்** |
| **6. சௌரம்** | - | **சூரியன்** |

என்பன காணப்படுகிறது.

அறுவகைச் சமயங்களின் உள்ளே காணாபத்தியம் சிறப்பானதொரு இடத்தினைக் கொண்டுள்ளது. விநாயகரை முழுமுதற் கடவுளாளகக் கொண்டுள்ள சமயப் பிரிவே காணாபத்தியம் ஆகும். கணபதியை வழிபடுபவர்கள் காணாபத்தியர்கள் எனப்படுகின்றனர். இச்சமயம் காணாபத்தியர்களுக்கு மட்டுமன்றி இந்துக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். இதுமட்டுமன்றி பௌத்தர்களும் வேறு சமயத்தவர்களும் கணபதியை வழிபடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

விநாயகருடைய திருவுருவ அமைப்பினை நோக்கும் போது யானைமுகம், மூன்று திருவிழிகள், ஐந்து திருக்கரங்கள் உடையவர். மேலும் யானைத் தலை, தேவர் உடல், பூதக் கால்கள், ஒற்றைக் கொம்பு, பெரிய வயிறு, பெரியகாது மற்றும் சிவந்த மேனியுடையவர். வலது கையில் கொம்பும், இடது கையில் மோதகமும் ஏனைய கைகளில் பாசம், அங்குசம், பன்னியம் என்பன உள்ளன. இவருடைய வாகனமாகப் பெருச்சாளி உள்ளது.

விநாயகருடைய வடிவம் பல்வேறு தத்துவங்களை உணர்த்தி நிற்கிறது.

| | | |
|---|---|---|
| **1. பாசம் ஏந்திய கை** | - | **காத்தல்** |
| **2. தந்தம் ஏந்திய கை** | - | **படைத்தல்** |
| **3. துதிக்கை** | - | **மறைத்தல்** |
| **4. மோதகம் ஏந்திய கை** | - | **அருளல்** |
| **5. அங்குசம் ஏந்திய கை** | - | **அழித்தல்** |

மேலும் இவருடைய முக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களை குறிக்கிறது. இவருடைய சுளகு போன்ற பெரிய காது நாம் கேள்வி ஞானம் உடையவராக இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இவருடைய வாய் எமது கண்களுக்கு புலப்படுவதில்லை இது நாவடக்கத்தைக் குறிக்கிறது. இவருடைய பெரிய தொந்தி இவரே பூரணமானபொருள் என்பதைக் குறிக்கிறது. மோதகம் இன்பம் பகிருகின்ற ஞானத்தைக் குறிக்கிறது. யானை முகம் ஓம் எனும் பிரணவப் பொருளைக் குறிக்கிறது. இவருடைய வாகனமான பெருச்சாளி நமக்குள் இருந்து நம்மை அழிக்கின்ற பற்றுக்களைக் குறிக்கின்றது.

பதினோராம் திருமுறையியே வெறுமனே சிவன் குறித்த பாடல்கள் மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்படவில்லை. காணாபத்திய நெறியின் மூல மூர்த்தியான கணபதி குறித்த செய்திகளையும் அவதானிக்க முடிகிறது. பதினோராம் திருமுறையில் வெளிப்படும் கணபதி பற்றிய செய்திக ளையே இக் கட்டுரை ஆராய்கிறது.

## புராணங்களில் விநாயகரது ஜனனம்

முன்னொரு காலத்திலே இந்திரன் அசுரேந்திரனைப் போரில் வென்றான். அசுரேந்திரன் வருந்திச் சுக்கிராச்சாரியா ருக்கு விண்ணப்பித்தான். ஆசாரியார் "வசிட்ட முனிவர் மரபில் வந்த மாகதரி டம் ஓர் அசுர கன்னிகையை அனுப்புதி: அவள் அவருடன் சேரும் பொழுது ஒரு வன் தோன்றித் தேவர்களை வெல்வான்" என்று கூறினார். அசுரேந்திரன் விபுதை என்பவளை மாகத முனிவரிடம் அனுப் பினான். அவள் சமயம் பார்த்துத் தவஞ் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு களிற்றுயானை பிடியுடன் புணர, அதனை முனிவர் நோக்கி புணர்ச்சி மேல் மனம் வைத்தார். விபுதை பெண் யானையாகத் தோன்ற, முனிவர் களிரா கத் தழுவி இன்ப நுகர்தாசை நீங்கினர். அப்பொழுது கஜமுகாசுரன் என்பவன் தோன்றினான் பிடியானையின் அளவற்ற உரோமங்களினின்றும் அநேக அவுண வீரர் தோன்றினார்கள். மாகத முனிவர் பழைய உணர்வு தோன்ற, "பெண்ணே! இனிப்போகுதி" என்றார். விபுதை போயி னாள். கஜமுகன் உயிர்களை உண்டு இரத்தத்தைப் பருகித் திரிந்தான். அசுர குருவாகிய சுக்கிரர் கஜமுகனை அணு கித் சிவனை நோக்கித் தவஞ்செய்யும் படி உபதேசித்து அனுமதி கொடுத்தனுப் பினார். கஜமுகன் மேருவினொரு சாரிற் போய் மூவாயிரம் வருடம் தவம் செய் தான். சிவபெருமான் தோன்றிப் பல வரங்களைக் கொடுத்து மறைந்தருளி னார். கஜமுகாசுரன் ஆயுதங்களையும் பிறவரங்களையும் பெற்று, இந்திராதி தேவர்களை வென்று, மதங்கமாபுரம் என் னும் நகரத்தையமைத்து, ஏழுலகிலும் தன்கொடுங்கோலும் ஆஞ்ஞாசக்கரமுஞ் செல்ல, அரசு செய்திருந்தான். அரசு செய் யுங் காலத்து இந்திரன் முதலிய தேவர் களை நோக்கி "நீங்கள் தினந்தோறும் எம்முன் வரும்பொழுது; உங்கள் கைக ளாற் சிரசில் மும்முறை குட்டி, கைகளை மாறிக் காதுகளைப் பற்றித் தாழ்ந்தெ ழுந்து, அதன்பின் நம்பணிகளைச் செய்யு மின்" என்றான். தேவர்கள் அதனை மறுத் தற்கஞ்சி, முன்புநின்று, அவன் பணிந்த அப்புண்றொழிலையும், பிற பணிகளை யும் நாடொறுஞ் செய்து பழியின் மூழ்கி னார்கள். கஜமுகாசுரனுடைய ஏவலினால் வருந்திய தேவர்கள் திருக்கைலாய மலைக் குப் போய்ச் சிவபெருமானை வணங்கி னார்கள்.சிவபெருமான் தேவர்களது இடரை நீக்குவதற்குத் திருவுள்ளங்கொண்டு, திருக் கைலாச மலையிலேயுள்ள நந்தவனத் தில் உமாதேவியாருடன் சென்று, அதனி யல்புகளை அவரோடு திருக்கண்ணுற்று, ஓவியங்களுடைய ஒரு மண்டபத்துக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். உமாதேவியார் அதிலுள்ள ஓவியங்களெல்லாவற்றையுங் கண்ணுற்றார். சிவபெருமானது ஆஞ்ஞையினால் அம்மண்டபத்தினடுவே, ஒரு பிரணவ எழுத்தே இரண்டு திருவுருக் கொண்டு யானைகளின் வடிவாய்த் தோன்றிச் சேர்ந்தது. அதனைத் தேவியார் கண்ணுற்றுச் சிவபெருமானை வணங்கி, 'பிரணவ எழுத்து யானை வடிவாய்ச் சேர்வது என்ன? என்று வினாவினார். சிவபெருமான் அவரை நோக்கி, எவற்றுக்கும் மூல மாகிய பிரணவ எழுத்தானது நீ முன்பு விரும்பிப் பார்த்தமையினாலேயே இரண்டாகிய யானையுருக்கொண்டு சேர்கின்றது. காட்சி மாத்திரத்தால் இதனைச் செய்தற்குக் காரணமாயுள்ள உன்னுடைய மாட்சியை யாமன்றி வேறுயார் அறிய வல்லார். உன்னுடைய திருவருட்செய்கை வேதங்கட்கும் எட்டாததாகும்' என்றார். யானைகளிரண்டும் நிருமலமாகிய புணர்ச்சியை விட்டன. அப்பொழுது ஐந்து திருக்கரங்களையும், மூன்று திருக்கண்களையும், சந்திரனைத் தரித்த செவ்வானம் போலுந் திருச்சடையினையும், யானை முகத்தையும், மும்மதங்களையுமுடைய ஒரு பாலகர் தோன்றியருளினார். அவர் மெய்யன்போடு தியானிக்கின்ற அடியார் களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர். எங்கும் வியாபித்திருப்பவர், யாவராலும் அறியப்படாதவர், எவராலும் வணங்கப்படும் இயல்பினர், சிவபெருமான் இருவர் என்று சொல்லும் படி நின்றருள் செய்பவர், நான்கு வேதப்பொருளாயுள்ளவர், உலகிலுள்ளோருடைய அஞ்ஞானத்தையும், மனத்துன்பங்களையும் நீக்குதற்காக அருளுருக்கொண்டு அவதரித்தவர். இவ்வியல்புகளையுடைய புத்திரனாகிய விநாயகக் கடவுள் சிவபெருமானையும், உமாதேவியாரையும் நமஸ்காரஞ் செய்ய, அவர்கள் கருணை செய்தனர். சிவபெருமான் 'எக்கருமங்களிலும் முதலில் வணங்கப்படும் முதன்மையை அப்புத்திரனுக்குக் கொடுத்து கஜமுகனை சங்காரஞ் செய்து, விட்டுனுவினுடைய சாபத்தை நீக்குதி' என்று கிருபை செய்து, பூதங்களைச் சேனைகளாகக் கொடுத்து, உமாதேவியாரோடும் விநாயகரோடும் சோலையை நீங்கித் திருக்கைலாய மலைக்குச் சென்று விநாயகரை நோக்கித், 'நீ நம்முடைய கோபுர வாயிலிலே நாயகனாயிருக்குதி' என்று இருத்தித் தாம் உமாதேவியாரோடும் கோயிலி னுட் போய்வீற்றிருந்தருளினார். இவ்வாறாகவே விநாயகருடைய திருவுருவில் மனிதவுடலும் யானைத் தலையும் இணைந்துள்ளன. தொந்தி வயிறும், நான்கு கைகளும் உள்ளன. விநாயகர் முகத்திலுள்ள கண்கள் மிகச் சிறியவை. காதுகள் அகன்றவை. துதிக்கையுடன் சேர்த்து கரங்கள் ஐந்து என்பர். அவரது வலது கொம்பு ஒடிந்திருக்கும். அதனை வலது கரம் பற்றியிருக்கும்.

## பதினோராந் திருமுறையும் கணபதியும்

பதினோராந் திருமுறையில் கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் திருவுருவம் அழகாகச் சித்தரிக்கப் படுவதனைக் காண்கின்றோம். கபிலதேவ நாயனாரின் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையில் விநாயகரது தோற்றப் பொலிவு அழகாக எடுத்தியம்பப் படுகிறது. அது குறித்து நோக்குவோம்.

**'யானை முகத்தான் பொருவிடையான்**
**சேய் அழகார்**
**மான மணிவண்ணன் மாமருகன்.........'**
**'உளதள வில்லதோர் காதலென்**
**நெஞ்சில்வன் னஞ்சம் உண்ட**
**.....................................................**
**களகள மாமதஞ் சேர்களி யானைக்**
**கணபதியே'**

**'ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால்**
**எப்பொழுதும்**
**மாத்தனி வெண் கோட்டு மதமுகத்துத் -**
**தூத்தழல் போற்**
**செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்**
**அங்கை**
**முக்கட் கடாயானை முன்'**

**'பண்டந்த மாதரைத் தாமென்**
**றினியனவே பலவும்**
**கொண்டந்த நாள்குறுகாமை குறுகுவர்**
**கூருணர்விற்**
**நண்டந்த நீண்முடிக் கார்மத வார்**
**சடைகக் கற்றை ஒற்றை**
**வெண்டந்த வேழ முகத்தெம் பிரானடி**
**வேட்கையரே'**

**'பெருங்காதல் என்னோடு**
**பொன்னோடை நெற்றி**
**மருங்கார வார்செவிகள் வீசி – ஒருங்கே**
**திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள்**
**சோர**
**வருவான்றன் நாமம் வரும்'**

**'வருகோட் டருபெருந் தீமையும் காலன்**
**தமரவர்கள்**
**அருகோட் டருமவ ராண்மையும்**
**காய்பவன் கூர்ந்த அன்பு**
**தருகோட்டருமர பிறப்பத்தர் சித்தத்**
**தறியனையும்**
**ஒரு கோட்டிருசெவி முக்கட்**
**செம்மேனிய ஒண்களிறே'**

என்றவாறாககபிலதேவநாயனாரின் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையில் விநாயகரது தோற்றப்பொலிவு சித்தரிக்கப்பட்டுள்ளது.

அதிராவடிகளின்மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில்,

**'ஒரு நெடுங்கங்கை இருகுறும் பைம்புகர்**
**மும்முகச் செந்நுதி நாலிணர்**
**வெண்ணினக்**
**குடற்புலவு கமழும் அடற்கழுப்**
**படையலின்**
**மதலை மாமதற் துவன்றிய கதனுடைக்**
**கடதடக் கபோலத் தோரிட மருப்பிற்**
**.............................................'**

**'காலது கையது கண்ணது தீயது கார்மதநீர்**
**மேலுது கீழது நூலது வெற்பது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொற்பமை தீம்**
**பாலது தேனது தானது மென்மொழிப்**
**பாலை முப்பூண்**
**வேலது வாளது நான்மறைக் கீன்ற**
**விடுசுடர்க்கே'**

**செற்ற வெண் தந்தத் தவன் நம்மை**
**ஆட்கொண்டு செய்தவனே'**

என விநாயகர் குறித்த தகவல்கள் வெளிப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையிலும் விநாயகரின் திருவுருவம பின்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

**'முகத்தாற் கரியன் என் றாலும் தனியே**
**முயன்றவர்க்கு**
**மிகத்தான் வெளியனென் றேயெம்மை**
**உன்னும் விரும்படியார்**
**உகத்தா னவன்றன் உடலம் பிளந்த**
**ஒருகொம்பனே'**
**'பேசத் தகாதெனப் பேயெரு தும் பெருச்**
**சாளியும் என்**
**றேசத் தகும்படி ஏறுவ தேஇமை யாத**
**முக்கட்**
**கூசத் தகுந் தொழில் நுங்தையும் நீயும்**
**இந்தப்**
**தேசத் தவர்தொழு நாரைப் பதியுட்**
**சிவக்களிறே'**

**'களிறு முகத்தவனாய்க் காயஞ் செந்**
**தீயின்**
**ஒளிரும் உருக்கொண்ட தென்னே.........'**

**'வானிற் பிறந்த மிதிதவ ழும் பொழில்**
**மாட்டளி சூழ்**
**........................................................**
**மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ்**
**வையகத்தே'**

**'அவமதியா துள்ளமே அல்லலற நல்ல**
**துவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் -**
**நவமதியாம்**
**கொம்பன் விநாயகன்கொங்**
**கார்பொழில்சூழ் நாரையூர்**
**நம்பன் சிறுவன் சீர் நாம்'**

**'நாந்தன மாமனம் ஏத்து கண்டாய்**
**என்றும் நாண்மலரால்**
**தாந்தன மாக இருந்தனன் நாரைப்**
**பதிதன்னுள்ளே**
**சேர்ந்தன னே ஐந்து செங்கைய னே நின்**
**திரண் மருப்பை**
**ஏந்தின னே என்னை ஆண்டவ னே எனக்**
**கென்னையனே'**

திரிபுர சங்காரத்தின் பொருட்டுத் தேவர்களால் அமைக்கப்பட்ட பூமியாகிய தேரின் மீது சிவபெருமான் இருந்து, பிரமாவை நோக்கித் 'தேரை ஓட்டுக' என்றாஞ்ஞாபித்தார். பதுமாசனர் நான் மறைப் புரவியைச் செலுத்தினார். இரதம் நிலைபிரிந்திலது. பிரமர் மத்திகையினாற் குதிரைகளின் மீது அடித்தார். குதிரைகள் தங்களால் ஆன மட்டும் பாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல முயன்றும் தேரானது நின்ற நிலையினின்றும் அசையவில்லை. அங்குள்ள தேவர் முதலிய யாவரும் அதனைக் கண்டு மனத்தில் ஆலோசித்தவர்களாய், இது யானை வதனமுடைய கணேசப் பெருமான் செயலென்று மனம் வருந்தினார்கள். வருந்திய அமரர்கள் பிரமாவோடும் கணபதியைப் பூசித்தார்கள். முற்றறிவுள்ள கஜமுகப்பெருமாள் மூசிக வாகனத்தில் தோன்றியருளினார். அதனைப் பதினோராந் திருமுறை பின்வருமாறு பதிவு செய்கிறது.

**'நல்லார் பழிப்பில் எழிற் செம்பவளத்தை நாண நின்ற**
**பொல்லா முகத்தெங்கள் போதக மேபுரம் மூன்றெரித்த**
**வில்லான் அளித்த விநாயக னே என்று மெய்ம்மகிழ**
**வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே'**

**'அன்பு தவச்சுற்று காரழல் கொண்டெயில் மூன்றெரிய**
**வன்புத வந்துந்தை மாட்டுகின் றான் மதஞ் சூழ் மருப்பிற்**
**கன்பு தவக் கரத் தாளமிட டோடிக் கடுநடையிட்**
**டின்பு தவச் சென்று நீயன்று காத்த தியம்புகவே'**

மேலும், முன்னொரு காலத்து ஆயிரம் நரம்புகளையுடைய மகதி யாழில் வல்ல நாரதமுனிவர் சத்தியலோகத்தில் போய், பிரமாவை வணங்கி, மகதி யாழையெடுத்து அன்பிலாழ்ந்து, விரல்கள் நரம்புகளின் மீது தடவ, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், செருட்டல், அள்ளல், பட்டடை என்னும் உறுப்புக்கள் எட்டினாலும் பருந்தினியக்கமும் நீழலும் போலப் பாடினார். பிரமா தலையை அசைத்து, மகிழ்ந்து, தமது கையிலிருந்த மாம்பழத்தைக் கொடுத்தார். நாரதமுனிவர் அதனை ஏற்று இது சிவபெருமானுக்கே உரியது என்று கூறினார். பிரமா – 'நம் கருத்தும் அவ்விதமேயாகும்' என்று சொன்னார். நாரத முனிவர் அவ்விடத்தில் நின்றும் விடைபெற்றுச் சென்று சிவ சந்நிதானத்தில் அம்மாம்பழத்தை வைத்து வணங்கினார். சிவபெருமான் விருப்புடனெடுத்து நாரதருக்கு நல்லருள் புரிந்து விநாயகக் கடவுளையும், சுப்பிரமணியக் கடவுளையும் பார்த்துப் புன்னகை செய்தனர். விநாயகக் கடவுளும், சுப்பிரமணியக் கடவுளும் தமக்கு அப்பழத்தைக் கொடுக்கும் படி வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, 'உம்மிலெவர் ஒரு கணத்துள் பிருதுவி முதல் நாத மீறாகிய உலகங்களையெல்லாம் வலம் வருகின்றாரோ அவருக்கே இப்பழம் உரியதாகும்' என்று சொல்லியருளினார். சுப்பிரமணியக் கடவுள் மயில் வாகனத்திலமர்ந்து எல்லா உலகங்களையும் ஒரு நொடியில் கண்டு திருக்கைலாசத்தை அடைந்தார். சுப்பிரமணியக்கடவுள் உலகை வலம் வந்து கைலை சேர்வதன் முன்னரே, விநாயகக் கடவுள் சர்வலோகங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் பாலும் நீரும், வெளியும் காற்றும், உடலும் உயிரும், கண்ணொளியும் சூரியனொளியும் போலப் பிரிப்பின்றி அத்துவிதமாக வியாபித்து நிற்குந் தன்மையாரை வலம் வந்து, 'உலகங்களிலும் பலவகைப்பட்ட ஆன்மாக்களிலும் ஒருமித்து நிறைந்து விளங்கும் ஒரு பொருள் உண்டென்று சொல்லுவது தேவரீரல்லாமல் வேறொன்றுன்டோ, தேவரீரை வலம் வந்தது உலகத்தைச் சுற்றியதனோடொக்கும்' என்று கூறினார். கூறுதலும் சிவபெருமான் விநாயகக் கடவுள் கையில் தம் கையிலிருந்த மாங்கனியைக் கொடுத்தருளினார்.

இது பற்றிப் பதினோராந் திரு முறை பின்வருமாறு பதிவு செய்திருப்பதனை அவதானிக் முடிகிறது.

**'சுடர்ப்பிளம்பு தழைத்த அழற்றண**
**நெடுவேற்**
**சேய் மூவுலகம் வலம்வர வேய**
**கொன்றையம் படலந் துன்று சடைக்**
**கிடந்த**
**ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி**
**அள்ளற் றீஞ்சுவை அருந்திய**
**வள்ளற் கிங்கென் மனங்கனிந்திடுமே'**

*(மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை – அதிராவடிகள்)*

**'பேசத் தகாதெனப் பேயெருதும் பெருச்**
**சாளியும் என்**
**றேசத் தகும்படி ஏறுவ தே இமை யாத**
**முக்கட்**
**கூசத் தகுந் தொழில் நுங்கையும்**
**நுந்தையும் நீயும் இந்தத்**
**தேசத் தவர் தொழு நாரைப் பதியுட் சிவக்**
**களிறே'**

**'மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை**
**வலம் வருமம்**
**புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே**
**புரிசடை மேற்**
**சலஞ்செய்த நாரைப் பதிஅரன் றன்னைக்**
**கனிதரவே**
**வலஞ்செய்து கொண்ட மதக்களி றே**
**உன்னை வாழ்த்துவனே**

*(விநாயகர் திருவிரட்டை மணி மாலை – நம்பியாண்டார் நம்பி)*

பதினோராந் திருமுறையில் விநாயகருக்கு நைவேத்தியங்களைப் படைத்து வழிபடுகின்ற வழிபாட்டு முறை பின் வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது.

**'அடியமர்ந்து கொள்வாயா நெஞ்சமே**
**அப்பம்**
**இடி அவலோ டெள்ளுண்டை கன்னல் -**
**வடிசுவையில்......'**

**'வாழைக்கனி பலவின் கனி மாங்கனி**
**தாஞ் சிறந்த**
**கூழைச் சுருள் குழை அப்பம்**
**எள்ளுண்டை எல் லாந்துறுத்தும்**
**பேழைப் பெருவயிற்றோடும் புகுந்தென்**
**உளம் பிரியான்**
**வேழத் திருமுகத் துச்செக்கர்**
**விநாயகனே'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் விநாயகருக்கு விருப்பமான நைவேத்தியங்களும், அவரது திருவுருவ அமைப்பும் வெளிப்படுத்தப்படுகிறது.

துன்பங்களை வேரோடு நீக்க வல்லவன் விநாயகன் என எடுத்துக் காட்டப்படுவதனையும் நோக்க முடிகிறது.

**'விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து'**
**'கணங்கொண்ட வல்வினைகள்**
**கண்கொண்ட நெற்றிப்...'**
**'வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்...'**

(மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை – அதிராவடிகள்)

**'என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்**
**தன்னை நினையத் தருகின்றான்......'**
**வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி**
**வனசத்...'**

(விநாயகர் திருவிரட்டை மணிமாலை – நம்பியாண்டார் நம்பி)

**'போகபந் தத்தந்தம் இன்றி நிற்பீர் புனைதார் முடிமேல்**
**நாக பந் தத்தந்த நாளம் பிறை இறையான் பயந்த...'**

**'நாரணன் முன்பணிந் தேத்தநின்**
**றெல்லை நடாவியவத்**
**தேரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன் மகனே...'**

**'அல்லல் களைந்தான் அம்பொன் உலகத்தின்**
**........................................................**
**செங்கழுநீர் கட்குந் திருநாரை**
**யூர்ச்சிவன்சேய்...'**

என்பதன் மூலம் அரவை ஆபரணமாகக்கொண்டவனும் பிறைசூடியவனாகிய சிவனுடைய மகன் விநாயகன் என்றும்,

**'முன்னிளங் காலத்தி லே பற்றி னேன்**
**வெற்றி மீனுயர்த்த**
**மன்னிளங் காமன்றன் மைத்துன னே**
**மணி நீலகண்டத்...'**

என்பதன் மூலம் காமனுக்கு அத்தை மகன் கணபதி என்றும்,

**'தென்னிளங் காய்கனி றே இமை யோர்**
**சிங்க மே உமையாள்**
**தன்னிளங் காதல னே சர ணா உன்**
**சரணங்களே...'**

**'நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்**
**...............................................**
**காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து**
**மாமாரி ஈன்ற மணி'**

என்பதன் மூலம் உமையின் மகன் விநாயகன் என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

பதினோராந் திருமுறையானது சிவன் குறித்த தகவல்களை மாத்திரமன்றி காணாபத்திய நெறியின் கடவுளான கணபதி பற்றியும் பேசுவதனைக் காணலாம். எனினும் கணபதியை ஒரு சில இடங்களில் பிரம்மமாகவும், பல இடங்களில் சிவனது மகனாகவும் பாடப்படுவது குறிப்பிடத் தக்கது. உமை மகன், திருமால் மருமகன், முருகனின் தமையன், பிரணவத்தின் வடிவம் எனக் கணபதி சுட்டப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது. அதிகமாகப் புராணச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கணபதி பற்றிப் பாடப்படுவதனைக் காணலாம். வைதீக நெறிகள் யாவற்றையும் ஒன்றிணைத்து மாபெரும் இந்து சமூகத்தினைக் கட்டமைக்கும் முயற்சியின் விளைவாகக் கணபதி பற்றிய பாடல்கள் பதினோராந் திருமுறையில் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆலய முன்னைநாள் பிரதமகுரு காலஞ் சென்ற சிவஸ்ரீ பா.நித்தியானந்தக் குருக்கள் அவர்களுடன் நேர்காணல்

**ம.யேசுதன்**
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்

பேராதனைப் பல்கலைக்கழக அருள்மிகு குறிஞ்சிக்குமரன் கோவிலிலே சைவநாற்பாதங்கள் வழியே நின்று கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகள் பிரதம குருவாக இருந்து தன் பணியை செவ்வனே ஆற்றிய குறிஞ்சிக்குமர சேவா சிரோண்மணி சிவஸ்ரீ பா.நித்தியானந்தக் குருக்கள் இன்று எம்மிடையே இல்லை. அவர் காட்டிய வழியே இன்றும் ஆலயப்பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. என்பது கணக்கூடு *02.09.2015* அன்று முருகனடியினை சேர்வதற்கு சற்று முன்பதாக என்னுடன் கதைக்கும் போது கூட சற்று நாட்களுக்கு முன் நிகழ்ந்த மணவாளக்கோல சாத்துப்படி அலங்காரங்கள் தன்னுடைய காலஅலங்காரத்தைக் காட்டிலும் மிகவும் அழகானதாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அவர் முருகனடியை சரணடையும் வரை வெளிப்படையான உண்மை.

தொடரும் நேர்காணலானது அன்று ஐயா வீட்டிலே அவரது மனைவியார் ஸ்ரீமதி செல்வமதி நித்தியானந்த மற்றும் மகன் குறிஞ்சிக்குமரன் முன்னிலையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேர கலந்துரையாடலில் இருந்து முக்கியமான பகுதிகளை இங்கே பகிர்கின்றேன்.

**ஐயா உங்களுடைய பூர்வீகம் மற்றும் பின்னணி பற்றி சிறிது அறிமுகப்படுத்துங்கள்?**

நான் பிறந்தது *1948* இல் ஏறாவூரில் பிறந்தேன் படித்தது ஆரம்பத்தில் கெருடாவிலில் பின்னர் யாழ்ப்பாணத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்றேன். *1981.08.24* அன்று ஸ்ரீமதி செல்வமதி அவர்களை விவாகம் செய்தேன். நான் குறிஞ்சிக்குமரன் கோவிலுக்கு வரும் போது மூத்தமகன் வினோவிற்கு ஒரு வயதாகி இருந்தது. இங்கே வந்த பின்னரே என்னுடைய இளையமகன் *1989* இல் பிறந்தான். முருகனின் அருளால் அவனுக்கு குறிஞ்சிக்குமரன் எனப் பெயரிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராதனைப்பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோவிலுடனான தொடர்பு எப்பொழுது எவ்வாறு நடந்தது?**

1987 இல் நான் உடுப்பிட்டியிலே எனது மனைவி மக்களுடன் இருந்த காலத்தில் பேராசிரியர் நந்தகுமார் சொன்னார் இவர்தான் பொருத்தமானவர் தொடர்ந்து இருந்து சேவை செய்வார் என அவரது வாக்கு உண்மையிலேயே பலித்தது எனலாம் கிட்டத்தட்ட இங்கு 25 வருடங்களாக பணியாற்றி இருக்கிறேன்.

**இதற்கு முன்பே நீங்கள் இக்கோவில் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?**

எனது ஜாதகப்பலனின் படி எனக்கு பல்கலைக்கழகத்திலேதான் வேலை கிடைக்கும் என எனது தந்தை அடிக்கடி கூறுவார். (சிரிக்கிறார்) எனக்கு நம்பிக்கை இருக்கவில்லை ஆனால் ஒரு முறை எழுதுவினைஞர் தேர்வு எழுதுவதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்தபோது குறிஞ்சிக்குமரன் கோவிலிலே ஒரு இரவு தங்கியிருந்தேன். தேர்வு கலைப்பீட புவியியல் துறை மண்டபத்திலே நிகழ்ந்தது ஆனால் நான் சித்தியடையவில்லை ஆனால் அதே புவியியல் துறையிலிருந்து வந்த பேராசிரியர் நந்தகுமார் அவர்களால் தான் இங்கு பிரதமகுருவாக இருப்பதற்கான அழைப்பும் வந்தது என்பது முருகன் அருளே.

நான் பரீட்சைக்காக கோவிலுக்கு வந்த சமயம் சிரமதானம் நடைபெற்றுக் கொண்டிருந்தமை இன்னும் நினைவில் இருக்கிறது.

**நீங்கள் வந்த காலத்தில் கோயில் எப்படி இருந்தது.**

நான் 1987.08.19 அன்று பிரதமகுருவாக ஆலயத்திலே பணிகளை ஆரம்பித்தேன் உடுப்பிட்டியிலிருந்து பளைக்கு வந்து புகையிரதம் ஊடாக பொல் காவலை வந்து அங்கிருந்து பேராதனை வந்தேன் அப்போது யாழ்ப்பாணத்திலே தியாகி திலீபனின் உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நான் வரும் போது கோவில் தற்போதையஅமைப்பிலேயே தான் இருந்தது . நான் வந்த காலத்திலேயே வசந்த மண்டபத்தின் பண்டிகை கட்டப்பட்டது பின்னர் சமையலறை, திருமண மண்டபம், சமறி, வெளிப்படிகளில் அமைப்பு போன்றவற்றில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன. பின்னர் பொழிகற்களுக்குப் பதிலாக மாபிள்கற்கள்பதிக்கப்பட்டன. நான்இருந்தபோதே1998, 2010 இல் கும்பாபிஷேகங்கள் இடம் பெற்றன. இக்காலத்தில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் காலத்தில் கோவிலிலிருந்து பார்த்தால் பேராதனைப் பாலம், அக்பர் விடுதி, ஹில்டா விடுதி போன்றன தெரியும். தற்போது சுற்றுச்சூழல் நிறையவே மாறியுள்ளது. இப்போது அவ்வாறு இல்லை பக்கத்திலே நிறைய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரங்கள் பெரிதாக வளர்ந்துள்ளன.

***உங்கள் வருகையின் பின்னர் ஆலய கிரியை முறைகளில் இடம் பெற்ற மாற்றங்கள் எவை?***

அனேகமான உற்சவங்கள் நான் வர முன்பே பின்பற்றப்பட்டு வரப் பட்டிருந்தது. நான்கு நேரப் பூசை நாள் தோறும் நான் வர முன்பே இருந்தது. ஆனால் காலைப்பூசையில் விநாயகருக்குரிய பூசையை 1998 இலிருந்து நான் உருவாக்கினேன் தவிர மாசிமகம், விநாயகர் சஷ்டி , விஷ்ணுவாலய தீபம் சூரன் போர் நிகழ்வுகளை அறிமுகப்படுத்தினேன். மேலும் சில கிரியைகளின் அளவினை அதிகரித்தேன் முக்கியாமகத் திருக்கல்யாண வைபத்தைக் கூறலாம்.

***நீங்கள் இருந்த காலத்திலே ஏதாவது சவால்கள் அசௌகரியங்கள் எதிர்நோக்கியிருந்தீர்களா?***

குறிப்பிடும் படியாக எதுவுமில்லை ஆனால் தலதா மாளிகை தாக்கப்பட்ட போதிலும் பிரேமதாசா அவர்கள் கொலை செய்யப்பட்ட போதும் சற்றுப் பயத்துடன் இருக்க வேண்டியிருந்தது. தவிர இந்த வீட்டிலே ஒரு முறை கொள்ளை நிகழ்ந்தது. எனது உடமைகளே சேதமாக்கப்பட்டன. எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. ஆனால் நான் வர முதல் மற்றும் கலவரங்களால் கோவில் அதிகம் பாதிக்கப்பட்டது.

***பல்கலைக்கழக ஆளணியினர் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்பு எவ்வாறு இருந்தது?***

நான் இவ்வளவு காலம் தொடர்ந்து இங்கே இருந்தமைக்கு அவர்களும் ஒரு காரணமே. இந்த ஆலயத்தின் தனித்துவமே அவர்களின் பங்களிப்பு எனலாம் இல்லாவிடின் ஊரில் உள்ள கோவிலுக்கும் இக் கோவிலுக்கும் வித்தியாசம் இருக்காது. இங்கிருந்து சென்ற மாணவர்கள் உலகெங்கும் வியாபித்து இன்று வரை சமயத்தொண்டுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பல நாடுகளில் இருந்து வந்தும் இக்கோவிலுக்கு தரிசனம் செய்கிறார்கள். எனது பிள்ளைகளின் பூணூல் சடங்கிற்காக அழகிய பூச்சாத்துப்படி செய்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏதாவது மறக்க முடியாத சம்பவங்கள் பற்றி?**

நிறையவே இருக்கின்றன. முக்கியமாக மாணவர்களின் குறும்புகளை மறக்க முடியாது. இங்கே மாணவர்கள் சாமி அலங்காரம், சமையல், கலை நிகழ்வுகள் என பலவகையான தொண்டுகளைச் செய்கிறார்கள் பல வகையான மாணவர்க ளைப் பார்த்திருக்கிறேன். கோவிலுக்கு வந்து சமையற்பணி மட்டும் செய்து விட்டு செல்வோரும் இருந்தார்கள்.

ஆலயம் சார்ந்து ஒவ்வொரு திருவிழாவும் உற்சவங்களும் மறக்க முடியாதவை மேலும் கும்பாபிஷேக நிகழ்வுகள் எப்போதும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

**குறிஞ்சிக்குமரனின் அற்புதங்கள் பற்றி?**

நிறையவே இருக்கின்றன அவற்றை வெறும் வார்த்தையால் சொல்லி விடமுடியாது. பலரும் என்னிடம் சொல்லியிருக்கின்றனர் நானும் உணர்ந்திருக்கி றேன். என் குடும்பத்தினரும் உணர்ந்திருக்கிறார்கள்.

ஒரு சம்பவத்தை சொல்கிறேன். ஒரு முறை பல்மருத்துவ பீட மாணவி ஒருவர் மோதகம் செய்தவேளை அவருடைய மோதிரத்தை தவறவிட்டுவிட்டார். அது மோதகம் செய்து முடித்த பின்னரே உணர்ந்திருக்கிறார் என்ன அற்புதம்! பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட மோதகத்தினுள் அவருடைய மோதிரம் இருந்தது.

**மாணவர்களின் தலைமுறை மாற்றங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

காலத்திற்குக் காலம் மாணவர்களின் செயற்பாடுகள் நடத்தைகளில் வித்தியாசம் இருப்பது உண்மைதான். ஆனால், அது அவர்களின் தவறல்ல சூழல்தான் மாற்றுகிறது இன்று தொழில்நுட்ப வசதிகள் அபரிமிதமாக இருக்கின்றன. முன்பு நிறைய மாணவர்கள் சமறியில் தங்கியிருந்து படித்தார்கள். இப்போது அவ்வாறு இல்லை. சில பீட மாணவர்களின் பங்களிப்பு முழுமையாகக் குறைந்து விட்டது.

**கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்கள் சேவை செய்துள்ளீர்கள். ஏன் விலக வேண்டும் என நினைக்கிறீர்கள்.**

நான் வரும் போது எனக்கு வயது முப்பத்தொன்பது இப்போது வயதா கிவிட்டது. எனது நீண்ட நாள் கனவு எனது இறுதிக்காலத்திலே என் ஊரிலே ஒரு வீடு கட்டி அங்கே வாழ வேண்டும் என்பதாகும். இதுதான் உரிய நேரமென நினைக்கிறேன். அதனாலேயே இம் முடிவை எடுத்துள்ளேன் எனக்குப் பின்னர் இன்னொருவர் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய பொறுப்புகளை என்னை விடவும் சிறப்பாக செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

**நிறைவாக இப்போது கோவிலில் தொண்டு செய்யும் மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இன்றும் புதிதாக கட்டடங்கள் கட்டுவதோ கிரியைகளை அதிகரிக்கவோ வேண்டியதில்லை நாம் தொடர்ந்த மரபு மாறாது அவற்றை பின்பற்ற வேண்டும். இது மாணவர்களுக்கான கோவில் அவர்களின் பங்களிப்பு தொடர்வது அவசியம்.

முன்னர் செய்யப்பட்ட கலை நிகழ்வுகள், தலயாத்திரைகள், திரைப்பட விழா மூலமான நிதி சேகரிப்பு போன்றவை தொடர்ந்து செய்யப்பட வேண்டும். மாண வர்கள் தம்மால் இயன்றளவு சமூகத்தொண்டு செய்யலாம்.

திருமணங்கள் நடாத்துவதற்குரிய வசதிகளை அதிகரிக்க வேண்டும். கோவில் உபயங்களுக்கான நன்கொடையை சற்று அதிகரிக்கலாம். நிறைவாக, நான் விலகி னாலும் என்னால் முடிந்தளவு உதவிகளை நான் தொடர்ந்து செய்வேன். அதே போல் என்னுடைய பிள்ளைகளும் உதவி புரியத் தயாராக இருக்கிறார்கள் .

**நன்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பதிப்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தணிகாசலமும் என் கண்ணுற்றதே'

**பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி**

இந்து தருமம் 1978

குன்று தோறாடும் குமரப் பெருமான் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் புரியும் திறனை ஐந்தாவது படை வீட்டில் வைத்து விளக்குகிறார் நக்கீரர். சேயோன் மேயமை வலர உலகமெனப் பாடிய தொல்காப்பியமும் முருகப் பெருமானை குன்றக்குடியானாகக் காட்டுகிறது. இத்தகைய குன்றுகளில் தனிச்சிறப்புப் பெற்றது தணிகை மலையாகும் . இதுவே கந்த புராணத்தில் மிகச் சிறப்பாக பேசப்படும் மலையாகும். முருகப் பெருமான் வள்ளிநாயகியாரை அழைத்துக்கொண்டு திருத்தணிகை மலையை அடைந்தார். அப்பொழுது, வள்ளிநாயகியார் இம்மலையின் பெருமைகளை தமக்குக் கூறும்படி வேண்டினார். அதற்கிசைந்து பெருமான் கூறுகிறார்: "போர்க்கோலம் தணிந்து சினம் தணிந்து தாம் வீற்றிருந்தமையால் செருத்தணி என்ற நாமம் ஏற்பட்டது என்பதையும், மலர்களில் தாமரையும், ஆறுகளில் கங்கையும், பதிகளில் காஞ்சியும் சிறந்து விளங்குதல் போன்று மலைகளில் இந்தச் திருத்தணி சிறந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

**விரையிடங்கொளும் போதினுள் மிக்க**
**பங்கயம் போல்,**
**திரையிடங்கொளும் நதிகளிற் சிறந்த**
**கங்கையைப் போல்,**
**தரையிடங் கொளும் பதிகளில்**
**காஞ்சியந்தலம் போல்,**
**வரையிடங்களில் சிறந்த்தித் தணிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாமலையே",**

என்பது கந்தபுராணம்

ஆறுமுகமான பொருள் அமர்ந்தமலை தணிகைமலை. இங்கே தணிவது என்ன? பணிவார்குப் பசி தணியும். பாடுவர்க் குப் பயந்தணியும். திருநாமம் பாடிப் பணிபர்க்குப் மிடி தணியும் நினைப் பார்க்கு வினை தணியும். நினைந்தவை அனைத்தும் குறை வின்றி நிறைவேறும்!

செந்தமிழ் முனி அருணகிரியார் எவ்வ ளவு அழகாகப்பாடுகிறார் நினைத்தது எத்த னையில் தவறாமல் நிலைத்த புத்தித னைப் பிரியாமல் கனத்த த்த்துவமுற்று அழியாமல் கதித்த நித்திய சித்து அருள் வாயே...

திருத்தணிப் பதியிற் பெருமாளே."

வள்ளலார் தமது பிள்ளைப் பராயத் தில் திருத்தணி முருகனைக் கண்ணாடி யிற் கண்டு களிப்புற்றார். அவருடைய காட்சி அனுபவத்தைக் காண்போம்.

**"சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்**
**திகழ்கடப்பம்**
**தார்கொண்ட பன்னிருதோள்களும்**
**தாமரைத்தாள்களுமோர்**
**கூர்கொண்ட வேலும் மயிலும் கோழிக்**
**கொடியுமருட்**
**கார் கொண்ட வண்மைத் தணி காசலமும்**
**என் கண்ணுற்றதே"**

முருகக் காட்சியினால் முழு மனித ராக மாறியவர் வள்ளலார். பிற் காலத்தில் அவருடைய ஞான வாழ்வுக்கு அடிகோ லியதனைத்தும் இளமையிற் கண்ட தணிகைமலை முருகனுடைய காட்சியி னாலேயே ஏற்பட்டது என்றால், அதில் மிகையொன்றுமில்லை.

தணிகைப் பெருமானை அகத்தில் எழுந்தருளச் செய்தார்க்கு ஞானப் பசி யுண்டாகும். அருளின்மை என்ற வறுமை நீங்கும். பிறவிப் பிணி ஒழியும் தியான நேரம் கணப்பொழுதிலிருந்து அரை நிமிஷ மாகி ஒரு நிமிஷமாகி , ஒருமணியாகி, ஒரு நாளாகி முந்நூற்றி அறுபத்தைந்து நாள் என்று முதிர்ந்த ஒரு வருட அனு பவமாய் உயரும் சிறப்பை விளக்கு வதற்கே திருப்படிகள் உள்ளன என்பதும் தியானமுடை யோர்க்கு அந்த உயர்வு கிடைத்து ஆண்டவன் தரிசனமுண்டாகும் என்பதும் மலைக்கோயில்கள் மூலம் நாம் பெறும் அருளனுபவமாகும்.

இத்தகைய நிலையில் பேராதனை முருகன் கோயில் அமைந்துள்ளது. எம்பெ ருமான் முருகனைப் போற்றி நற்புலமை பெறுபவர் பேராதனை வளாகத்தினர் என் பதை யாவருமறிவர். எனவே மேலும் மேலும் எம் பொருமானின் திருக்கோயில் பொலிவுறவும், இந்து சமய பீடம் நற் பணியாற்றுவும் திருவருளை வழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் சமுதாயமும்

**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

இந்து தருமம் 1962

சமயம் என்பது மனிதர் கூட்டமாக வாழ்கின்றபொழுது தோன்றுகின்ற ஒரு சமயம்சார்ந்த நிறுவனமாம். ஒவ்வொரு மனிதனையும் அவனது குழுவுடன் அல்லது சமுதாயத்துடன் இணைத்துப் பின்னர் சமுதாய வாழ்வைத் சூழலுடன் இணையச் செய்து வாழ்விலொரு நெறிப்பாட்டை ஏற்படுத்துவது மதம்.

மதம் எனும் இந்நிறுவனம் உலகில் வாழுகின்ற எல்லா மனித கூட்டங்களிடையேயும் காணப்படுகின்றது. மதமுறைமைகளும், வழிபாட்டு முறைமைகளுமற்ற ஒரு மனிதகூட்டத்தினரை இது வரை எவரும் காணவில்லை . எனவே மதம் என்பது மனித வாழ்வுடன் கூடப் பிறந்தவொரு நிறுவனம் என்பதை நாம் அறியலாம்.

மதம் எல்லா மக்கட் கூட்டத்திடையேயும் உண்டெனினும், அது எவ்வாறு தோன்றியதென்பது பற்றிக் கருத்துவேறுபாடுகள் உள. வாழுகின்ற பரம்பரையினர் இறந்த மூதாதையருக்குக்காட்டும் மரியாதையினடியாகவே மதம் பிறந்தது என்பது இஸ்பென்சர் என்பாரது கொள்கை. கனவிலும் மனிதரை இயக்க நிலையிற் காண முடியுமாதல் , அவ்வாறு சக மனிதரைக் கனவில் கண்ட பூர்வீக மனிதன், மனிதனுக்குள்ளிருந்து மனிதனை இயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிவிக்கும் சக்தியொன்றுண்டென்று நம்பினான் என்றும், இதனால் பேய் , பிசாசு போன்றவற்றில் நம்பிக்கை தோன்றிற்று என்றும், அந்த மதம் தோன்றிற்று என்றும் நம்பிக்கையனடியாகவே மதம் தோன்றிற்று என்றும் தைலர் என்பவர் கூறுவார். உலூயி என்பவர் மதம் பண்பாட்டு சின்னம். ஹோவர் என்பவர் மதம் என்பது ஒரு சமுகத்தில் வாழும் ஒரு சிலரது மறை பொருளனுபவம் என்றும், அவ்வனுபவம் சமுதாயத்திலுள்ள மற்றெல்லா அனுபவங்களிலும் உயர்ந்து விளங்குமென்றும் கூறுவர். ஒரு கூட்டத்தினை சேர்ந்த மக்கள் ஒன்று கூடிபரவசப்பட்டு நிற்கும் நிலையில் தோன்றும் உணர்வினடியாகவே மதம் தோன்றிற்று என்பார். துர்க்கேம் எனப் படும்பெரிய அறிஞர், ஒரு குலக்குறியைக் கொண்ட இனத்தினர் கூடும் பொழுது அக்குல நியதிகளுக் கேற்ற முறையில் விதிக்கபட்டவை, விலக்கபட்டவை என நடவடிக்கைகள் இரு புறமாக வகுக்கபடும் என்றும் அவர் விரித்துக் கூறுவர் .ஆத்மார்த்த இலட்சி யப் பொருட்களை உணர்வு நிலையில் நின்று வேண்டும் பொழுது மதம் தோன்றுமென்பது பிறேசர் என்பவருடைய கருத்தாகும். மறெற் என்வா, மதமென்பது மனிதனைப் பந்தித்து நிற்கும் உருவற்ற சக்திகளுக்கு உயிரும் உடம்பும் கொடுத்து வழிபடும் முறையே என்பார்.

மதத்தோற்றம் தன்மை பற்றிய இக் கருத்துகள் யாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் பொழுது மதத்தின் இரு முக்கியமான பங்குகள் புலப்படும் ஒன்று புறத்தே தெரியத்தக்கனவான சில நடவடிக்கைகள் ஆகும். இவை காரணங்களாகவோவழிபாட்டுமுறைகளாகவோ அமையலாம் மற்றது மனித மனத்துள் தோன்றும் ஒர் உணர்வுநிலை மனிதனது உணர்ச்சிகள் அவன் வாழ்கின்ற சூழ்நிலையாலும் அவனுக்கும் புறவுலகுக்குமுள்ள தொடர்புகளாலும் பாரம்பரிய உணர்வுகளாலும் தீர்மானிக்கபடுபவை யென்பது எல்லாருக்கும் ஒப்ப முடிந்தவோர் உண்மையாகும் எனவே மக்கட் தொகுதி முழுவதையும் இறுகப்பிணைத்து அக் கூட்டதினரிடையே ஒரு வாழ்க்கை நெறியை நிலை நாட்டும் முறைமையே மதத்தின் அடிப்படை அம்சம் என்பது புலனாகின்றது. மதவாழ்வு தனி மனித சுகந்திரம் என்பது அரசியலிலும் பொருளியற்றுறையிலும் தனி மனித வாதம் பேசப்படும் காலங்களிற்றோன்றியதேயன்றிப் பூர்வீக மக்கட்கூட்டத்தினரிடையே காணப்படாதவொரு கருத்தாகும் கிரேக்க உரோமநாகரிகங்களிலும் இடைக்கால நாகரிக்கத்திலும் இவ்வுண்மையை நாம் காண்கின்றோம். சமயமும் சமுகமும் நன்குவளர்ந்துள்ள இன்றைய நிலையிலும் இந்து மதமுறைமைகள் சமூதாயத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியாக விளங்குவதைபுதுயுகத்தின்யந்திரத்தாக்கத்தினை யறியாத தூரத்துக் கிராமங்களிலே இன்றும் காண முடியும்.

புறத்தே தெரியத்தக்கனவாகவிருக்கும் ஒழுக்கங்களே சமய வாழ்வின் மிக முக்கியமானவை. பூர்விகக் குடிகளின் மதமுறைகளை ஆராய்ந்தோர் சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளிற் காணப்படும் சடங்குகளை அனுட்டிப்பதிலேயே மதவொழுக்கம் காணப்படுமென்பர். இன்றும் இது உண் மையேபிற்காலத்தில்வளர்ந்தவைபோன்ற தத்துவார்த்த விளக்கங்கள் எதுவும் பூர் வீகமத முறைகளிற் கிடையாது. இருக்கு வேதத்திலும் சங்க இலக்கியங்களிலும் மதம் பற்றிய தத்துவக் கருத்துக்கள் மிகக் குறைந்தவையாகவே காணப்படு கின்றன. இலக்கியம் தோன்றிய காலத்தி லேயே இவ்வாறானவொரு நிலைமையி ருப்பின் எழுத்தறியாக் காலத்தில் சமய மென்பது முற்றிலும் கரண அநுட்டானத் திலேயே தங்கியிருந்தது என்பதை நாம் உய்த்தறிந்து கொள்ளலாம். கரணங்களை நன்கு அநுட்டிக்கிறவனே சமய நெறி தவறாது வாழ்ந்தவனென்ற கருத்து நில விற்று.

கரணங்கள் யாவும் வாழ்க்கையினடி யாகத் தோன்றுவன என்பது உண்மை. ஒருவருக்கு ஏதாவதொன்று நேர்ந்துவிட் டால் ஒரு சில கரணங்களை முழு நம்பிக்கையுடன் செய்தல் வேண்டும் இதுவே அக் கால மதமுறைமையாக விளங்கிற்று. சங்ககால இலக்கியங்களிற் குறிக்கப்படும் வெறியாட்டு குரவை முதலியன இத்தகைய கரணங்களேயாம். தாராள நம்பிக்கையே அவற்றிற்குப் புனி தப் பண்பை அளிக்கின்றன. கரணங்கள் எளிதிற் புலனாகாது நிற்கும் மறு உலக மீது மனிதனுக்குள்ள நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றன. அதுமாத்திரமல்லாது மத உணர்வு வெளிப்பாட்டின் சின்னங்க ளாகவும் கரணங்கள் விளங்குகின்றன. அறிவு நிலையில் நின்று ஆத்மார்த்த தத்துவங்கள் பேசுமிந்நாட்களிலும் மதம் என்பது ஒரு சில கரணங்களை அநுட்டிப்பதிலேயே தங்கியுள்ளது. என்பதை நாம் உணர்வோ மானால் இவ்வுண்மைகள் நன்கு புலப்ப டும் கரணங்களையும் கரணங்களின் மீது தளரா நம்பிக்கையையம் கொண்டுவி ளங்கும் மதத்தின் பண்புகள் மக்கள் வாழ் கின்ற இடத்தைக் கொண்டே தீர்மனிக் கப்படுகின்றன என்பதை நாம் காண லாம். முதன் முதலில் ஒரே கூட்டத்தி னராகவிருந்த ஆரியர் கூட்டங்களாக பிரித்து பாரசீகத்திற்கும் இந்தியாவிற்கும் சென்ற பின்னர் அந்நாடுகளின் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ற முறையில் அவர்க ளது மதமுறைகளும் மாறியமையை இதற்கு உதராணமாக காட்டுவர் இந்தியப் புலபெ யர்ச்சிக்கு முன்னர் ஆரியரிடத்துக்காணப் பட்ட புலம் பெயர் பண்பு சாதனை வேட்கை பாரசீகத்து மதத்தில் காணப் படுகின்றது. ஆனால் கங்கை நதிதீரத்தின் வளமும் கடினமற்ற வாழ்வையளித்த சூழ் நிலையும் இந்தோ ஆரியர்களை அமை தியானசிந்தனையோட்டமுள்ளவர்களாக மாற்றிவிட்டது.

இந்திய தத்துவ முறைகளையும் மேலை நாட்டுத் தத்துவ முறைகளையும் ஒப்புநோக் கியராய்ந் பெற்றி ஹைமான் எனும் பேராசி ரியை இவ்விரு தர்சனங்களுகுமிடையே யுள்ள வேறுபாடு இரு நாடுகளுக்கு மிடையேயுள்ள தட்ப வெட்ப வேறுபா டுகளின் காரணமாக அமைவது என்றும் இந்தியாவின் புவிய்யியற் கூறுகளின் படி அங்கு இயற்க்கை மாபெரும் சக்தியாக விளங்கிற்று. மனிதனால் இயற்கையை மீறி நிற்க முடியவில்லை இதனால் அண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம்பற்றிய சிந்தனைகள் இந்தியாவில் அதிகம் காணப்பட்டது. ஆனால் மட்டமான தட்ப வெப்பமுடைய மேற்கு நாடுகளில் மனிதன் இயற்கையின் போக்கினை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. அறிவாலும் சாதனைகளாலும் சூழலை வென்றனர். ஆனால் இந்தியாவிலோ அமைக்க முடியாதிருக்கும் சூழலால், அகண்ட கண்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கிற்று. இவ் வேறுபாட்டால் காணப்படும் தத்துவ வேறுபாடுகள் ஒரு புறமிருக்க, இவ் அடிப்படை வேறுபாட்டினைத் தெய்வ அமைப்பிலும் நாம் காண்கின்றொம். இந்த உருவில் இயற்கையின் வலிமையைக் காட்டுவனவாக விளங்க, கிரோக்க மதச் சிலைகளோ மனித அழகினதும் மனித பலத்தினதும் தலை சிறக்க வடிவங்களாக விளங்குகின்றன.

வாழும் சூழலுக்கேற்ப வழிபடும் தெய்வம் தோன்றும் என்பதைத் தமிழரின் புராதன மதமுறையில் நாம் காணலாம். நானிலங்கட்குமுரிய தெய்வங்களைப் பார்க்கும் பொழுது, ஒவ்வொரு தெய்வமும் எவ்வா அவ்வப் பகுதிகியன் பொருளியற் பண்புக்கேற்றவாறு அமைகின்றது என்பதைக் காணலாம். வேலுடன் விளங்கும் முருகன் வேட்டையாடிச் சீவிக்க வேண்டிய குளிர்ச்சிக்குத் தெய்வம். மாடு புரப்பதையே தனது முக்கிய பண்பாகக் கொண்ட பண்ணன், மிருக வளர்ப்பே முக்கியப் பொருளாதார நடவடிக்கையாகவுள்ள முல்லைக்குத் தெய்வம். மைக் காலமுகிலூர் தியாகி, மழை பெய்தற்குக் காரணமாக விளங்கும் இந்திரன், நீர் வளத்தை நம்பி இயங்கிய விவசாய முறையிருந்த மருதத்தின் கடவுள். கடலையே நம்பி வாழும் நெய்தனில மக்களுக்கு கடலின் தெய்வமாம் வருணனே கடவுள்.

செமித்திய மதங்களில் சந்திரன் போற்றுதற்குரிய இடத்தைப் பெறுவதற்கும் அப் பகுதியின் புவியியற் கடவுளே முக்கிய காரணமாகும். வெயிலைக் கண்டஞ்சி இவரை வரவேற்கும் புலம்பெயர் மக்கள் வாழும் இப் பகுதியில் இத்தகையவொரு முறைமை பிரதேசத் தேவையாகவே அமைந்து விடுகின்றது.

மேலும், சமுகத்தில் காணப்படும் அரசியற் பொருளாதாரப் பண்புகளுக்கிணைத்த முறையிலேயே மதமுறைமையுமிருப்பதை நாம் காணலாம். தெய்வங்களைக் குறிக்கும் சொற்களை நாம் ஆராய்வோமானால் அவை சம்ந்தப்பட்ட சமுகத்தின் ஆட்சி முறையைப் பண்பை ஓரளவு உணர்வனவாகவே விளக்குவதை நாம் அறியலாம். ஆரிய மதத்திலே காணப்படும் அரசுர் என்னும் கோட்பாடு அரசியலடிப்படையில் தோற்றியதே. ஆரியருக்கு அரசியற்றுறையில் பகைவர்ளாக விளக்கியவர்கள் பெயர், மதத்திலும், கெட்டவற்றின் பெயராகி விடுகின்றது. அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் தொடர்களில் அரசனுக்குரிய பண்புகள் தெய்வத்தின் மீதேற்றப் பட்டுச் சொல்லப்படுவதை நாம் காணலாம்.

சமூகத்தில் தோன்றும் ஆட்சிமுறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்பவே தெய்வ முறைமையும் சுமைந் திருப்பதை நாம் புராதானப் பெண் வழிபாட்டிலிருந்தும் அறியலாம். பண் டைய சமுதாயத்துள் சில தாய்மை வழி பாட்டு அடிப்படையிலேயே அமைந்தி ருந்தன. அச் சமுதயாங்களில் தாயே வணங்கப்பட்டு வந்தாள். பின்னர் ஆண திகார முறைமை ஆட்சியேற்பட்ட பொழுது வழிபாட்டிலும் மாற்றம் காணப்படுவதை நாம் அறியலாம்.

சமூகத்தில் தோன்றும் அரசியல் மாற்றக் கட்சிடையைத் தெய்வங்கள் மாறுவதும் மரபு. பழைய தெய்வங்கள் முக்கியத்துவத்தை இழப்பதையும், புதிய தெய்வங்கள் தோன்றுவதையும் நாம் காணலாம். முன்னர் இந்துமதம் கடவுளர் இடம்பெறுவதை அப் பகுதி வரலாற்றில் காணலாம். இந்தியாவுக்கு வந்த ஆரியரிடையே நிறுவன முறையில் நிலையான அரசு தோன்றியபொழுது அவர்கள் வந்த காலத்தில் முக்கியத் துவம் பெற்றிருந்த இந்திரன் முக்கியத்து வமிழ்ந்து புராதன சிந்துநதிப்பள்ளத்தாக் கில் காணப்பட்ட பசுபதிவணக்கத்திற்கா ணப்படும் பல பண்புகளைக் கொண்ட சிவவணக்கம் வளருவதையும் நாம் காணலாம் மேலும் விரிக்கிற்பெறாகும்.

பல புதிய மதங்கள் சமுதாய இலக்கியங்களாகவே தோன்றி வளர்ந் தமையையும் நாம் காணலாம். கிறிஸ் தவம் தோன்றிய காலத்தில் ஒடுக்கப் பட்ட மக்களின் இயக்கமாகவே இருந்த தென்பதையும் முதன் முதலில் அது அடிமைகளதும் தலையறுத்த அடிமை களதும் உரோம சாம்ராச்சியத்தால் உரி மைகள் மறுக்கப்பட்ட மக்களதும் இயக் கமாகவே தோன்றி வளர்ந்தது என்பது வரலாறு. இஸ்லாமும் ஆரம்பத்தில் சமூக, அரசியற், பொருளாதார சீர்திருத்த இயக்கமாகவே தோன்றிற்று. பௌத்தம் சீரழிந்திருந்த இந்து மதமுறைமைகட் கெதிராகத் தோன்றியதை யாவருமறிவர்.

இதனால் மதங்களும் மத இயக் கங்களும் அவ்வச்சமுதாயத்தின் பொரு ளாதார அமைப்பினைக் கருத்திலும் கரணங்களிலும் பிரதிபலிப்பதாகவே அமையுமென்ற உண்மையைக் கண் டோம். வேடுவநிலையில் வாழும் சமுதாயத்துவமதம், வேட்டை பற்றிக் குறிப்பதாகவே அமையும். மனிதனுக் கும் அவன் வாழும் சூழலுக்குமிடையே யுள்ள தொடர்பு உணவே . உணவைப் பெறுவதிலே தான் அவன் தெய்வத்தை யும், விதியையும் உணருகின்றான் என்பார் பேராசிரியர் மலினோவ்ஸ்கிய உணவு தேடுவதிலுள்ள சிரமம் அதைப் பெறுவதிலுள்ள மகிழ்ச்சி முதலியனவற் றையடிப்படையாகக் கொண்டே கர ணங்கள் பல தோன்றியுள்ளனவாம் பெருக்க கொண்டாடப்பட்ட இந்திர விழா "புதிதுதின்னுதல்" விழா போன்றவை இவ்வுண்மையை நிலைநிறுத்துகின்றன. சமூக வாழ்வில் ஆண்-பெண் உறவு சமூகவிருத்திக்கும் தொடர்ச்சிக்கும் அத் தியாவசியமானது. பூர்வீகச்சமுகங்களிலே இது மிகவும் முக்கியமான மதச்சடங்கா கவே கருதப்பட்டது. இன்றும் அவ் வாறே மதச்சடங்குகளிலும் இப் பண்பு காணப்படுகின்றது. கருவளத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் ஒவ்வொரு சமயத்திலும் உள்ள எல்லாச் சமுதாயத்திலும் திருமணம் என்பது சமயச்சார்பான ஒரு சடங்காகவே கருதப்படும்.

மதமும் அதன் கரணங்களும் சமூக நிலையடிப்படையில் தோன்றுபவையாதலால், பரிசுத்தமானவை தீண்டத்தகாதவை என வகுக்கப்பட்டுள்ள பொருட்களும், அவ்வச் சமுதாய வாழ்வில் பெறும் முக்கியத்துவத்தைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. உதராணமாக இந்துகளால் பசு புனிதமானவொரு பிராணியாகக் கருதப்படுகின்றது. புலம் பெயர் வாழ்வுக்காலத்தில் அதற்கிருந்த பொருளாதார முக்கியத்துவமே இதன் காரணமாகும்.

மத அநுட்டானத்தில் 'தீட்டு' ப் பொருட்கள் என ஒதுக்கிவைக்கப்படுபவையும், சமூகத்தேவைகளின் காரணமாகவே அவ்வாறு குறிக்கப்படுகின்றன. தீட்டு என விலக்கப்பட்ட செயல்களைச் செய்தாலோ, பொருட்களைப் பயன் படுத்தினாலோ, அவ்வாறு செய்தவன் தண்டிக்கப்படுவான் என்பது எழுதாக்கிளாவியாகவுள்ள மதவிதி சமுகத்தில் வாழும் யாவரையும் சமுக நியதிகட்கும் முறைமைகட்குமெதிராகப் போகாது தடுப்பதற்காகவே இத்தீட்டு முறைமை தோன்றிற்று. சமூகவாழ்வின் அடிப்படை இடையறாது தொடர்ந்து செல்வதற்கு இத்தகைய கட்டுப்பாடுகள் இருக்க வேண்டுமென்றும் அவை சமூகத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவே மதத்துள் காணப்படுகின்றன என்றும் இருட்கிளிப் பிறெலண் சொல்வார்.

மத அனுட்டான முறைகள் மாத்திரமல்லாது மதத்தின் முக்கிய பண்பாகும் தெய்வநம்பிக்கை போன்றவையே சமூக அமைப்பைப் பிரதிபலிப்பனவாக உள்ளன எனபர் மதத்திற்கும் சமூகத்திற்குமுள்ள அத்தியந்த தொடர்பை நன்கறியப் பல ஆராய்ச்சிகள் நடாத்திய கைசுவான்சன் என்பர் ஏகதெய்வக் கோட்பாடு, பல தெய்வக்கோட்பாடு, முற் பிறப்புக் கோட்பாடு முதலியன சமூகத்தினடியாகவே பிறப்பன என்றும் சமூக அமைப்பிலுள்ள சில அம்சங்களைப் பிரதி பலிப்பன என்றும் கூறியுள்ளார். ஏக தெய்வக்கொள்கையின் தோற்றம் பற்றி முன்னர் ஆராய்ச்சி நடத்தியோர், அது மிக்க வலிமையுடைய ஒருமுகப்படுத்தப்பட்ட ஓர் ஆட்சியாளனுள்ள சமுகத்திலேதான் தோன்றுமென்றும் மிக்க எளிய வாழ்வுமுறையைக் கொண்டுவிளங்கிய பூர்வீக மக்கட் கூட்டத்திலேயே தோன்றுமெனவும் பலவகையாளர் கூறியுள்ளனர். ஆனால் சமீபகால ஆராய்ச்சிகளின் படி ஏகதெய்வக் கொள்கையானது மூன்று அல்லது அதற்குமேற்பட்ட ஆட்சிப்படிகள் உள்ள சமுதாயத்திலே தான் தோன்றுமெனக் கூறப்படுகின்றது. பூரண ஆட்சி அதிகாரமுள்ள குழுக்களைக் கொண்டு சமுதாயத்திலேதான் ஏகதெய்வக் கொள்கை தோன்றும்.

பல தெய்வ முறைமையின் படி ஒரு சமுகத்தில் பல தெய்வங்கள் வணங்கப் பெறும். தமிழர் சமுதாயம் நல்ல உதாரணம். இக்கோட்பாடானது பல பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கொண்ட சமூகத்தில் காணப் படும் ஆட்சி நிறுவனத்தில் காணப்படும். சிறப்புப்பண்புகளின் எண்ணிக்கைக்கி யையவே தெய்வங்களின் தொகையு மிருக்கும்.

சிறிய ஊர்மனைகள் உள்ள விடத்தும் கூட்டுக் குடும்ப முறைமையுள்ள விடத் தும் சிறிய புலம் பெயர் மக்கட் கூட்ட முள்ள விடத்தும் அயலில் அங்கொன்று இங்கொன்றாகச் சிதறிக்கிடக்கும் ஊர் மனைகளைக் கொண்ட கிராமபுறத்தும் மறுபிறப்பக் கோட்பாடு தோன்றுமெ னச் சொல்வர். இந்திய மக்களிடையே இக் கோட்பாடு தோன்றுவதற்கு ஆரம்ப காலத்திருந்த பரந்துபட்ட சனத்தொகை சாதிக்குழுக்கள் முதலியன காரணமாக அடையலாமென்பர்.

சட்டரீதியான கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லாதமுறையில் மக்கள் ஒருவருடன் ஒருவர் மோதும் பொழுதுதான் செய் வனை, சூனியம் போன்ற மந்திர நடவடிக் கைகள் தோன்றுகின்றன.

இவ்வாறு சமுகத்தினடியாகத் தோன்றி அதன் தேவைகளையும் பண்புகளையும் பிரதிபலிக்கும் மதம், சமூகத்தையே பாதிக் கின்றது.

ஒவ்வொருவரும் சமூகவாழ்விலாற்ற வேண்டிய கடமைகள் பற்றிக்குறிப் பிட்டு, சமுக உளவுமுறையின் பண்பை யும் பொருளையும் தீர்மானிப்பது மதமே. இவ்வாறு சமூக வாழ்வுமுறையை நெறிப்படுத்துவதன் மூலம் சமுக இயக்கத்திற்கான ஒருகோட்பாட்டை மதம் நமக்களிக்கின்றது.

அடுத்து, மதம், மரபுகட்கும் மதிப்புக் கொடுத்து அவை தொடர்ந்து இயங்குவ தற்கேற்ற வழிவகைகளையும் ஏற்படுத் துகின்றது.

மேலும் வாழ்வில் ஏற்படும் நெருக் கங்களைத் தாங்கிக் கொள்வதற்கான பண்பை மதம் மக்களிடத்தே வளர்க்கின்றது. இத னால் தனி மனிதவாழ்வு சமூக வாழ் வுடன் இணைந்து செல்வதற்கு பெரிதும் உதவுகின்றது. அதாவது எந்தக் கஷ்டகா லத்தும் சமூகத்தடன் இணைந்து செல் லக்கூடிய ஒரு தெம்பினை மதம் மனி தனுக்கு அளிக்கின்றது. இத்தகைய நெருக் கடிகள் தோன்றும் பொழுது பலர் பல மந்திரக்கிரியைகளைச் சொல்வர். இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் பெறுவதே இத்தகைய சடங்குகளின் பயன் என்பார் பேராசிரியர் மலினாவ்ஸ்கி.

மக்கள் கூட்டம் கூட்டமாக இத் துணை வாழ்வதற்கு மதம் பெரிதும் உதவுகின்றது. ஆனால் இணைந்தவாழ் விற்கடிகோலும் அதேவேளையில் மதங் கள், சமூகத்திலுள்ள மக்களைப்பிரிப்ப தற்கும் துவேஷ உணர்வை வளர்ப்பதற் கும் காரணமாக இருந்திருக்கினறன.

மதம், சமுதாய சக்திகளினடியாகத் தோன்றுவதன் காரணமாகவும், மரபிற்கு மதிப்புக் கொடுப்பதாலும் ஒவ்வொரு காலத்தும் குறிப்பிட்ட ஒரு பொருளாதார அமைப்பினைப் பாதுகாத்தற்கும் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நிலையில் மக்களை நிரந்தரமாக வைக்க மதம் முனைந்தமையாலேயே, மதத்தை மக்களின் போதைப் பொருள் என்றனர் சிலர்.

மதத்தின் முக்கியத்துவம் சமூகத்தின் வளர்ச்சி நிலைக்கத்தக்க முறையில் மாறுபாட்டுத் கொண்டே போகின்றது. எழுத்தறிவற்ற மதமே சகல சக்தியாகவும் விளங்குகின்றது. அத்தகைய சமூகங் களில் பொருளாதார நடவடிக்கை முதல் சமூக உறவு வரை எல்லாமே சமயச் சடங்குகளாகவே நடத்திமுடிக்கப்படு கின்றன. மேலும் அச்சமூகங்களில் குடும் பம் எனும் நிறுவனம் நன்கு வளர்ந் திருக்கமுடியாதாகையால் மதமே தனது கரண அநுட்டானங்கள் மூலம் சமூகத்தி லுள்ளோர் யாவரையும் இணைக்கின் றது. இன்னும் ஒவ்வொருதனிமனிதனை யும் சமூகத்துடன் தொடர்புறுத்துவதும் மதமே பிறப்புக்கலைக்கரணங்கள், பூப்புச் சடங்குகள், மரணச்சடங்குகள் முதலி யனவற்றை இதற்கு உதராணமாக காட்டலாம்.

பூர்விகப் பொருளியலமைப்பிலிருந்து நிலையான விவசாய அமைப்பைக் கொண்ட சமூகத்திற்கு வருவோமேயா னால் அங்கு சமயம் சமூக வாழ்வு முழுவதையும் தன்னுள் அடக்கியதாக விளக்குவதைக் காணலாம். சமூக வாழ்வு முழுவதுமே சமய நெறிக்குட்பட்டதோ என ஐயுறும் வகையில் சமயம் பரவி மேலோங்கி நிற்பதைக் காணலாம். அதேவேளையில் சமய நிறுவனம் தனிப்பட்ட ஒரு நிறுவனமாகவும் வளர்ந் துவிடும். அரசியல் நிறுவனத்திற்கும் மத நிறுவனத்திற்குமிடையில் போட்டியு ணர்வுகளும் தென்படலாம். இனக்கால ஐரோப்பியப் பேரரசுகளை யும் இந்தியப் பேரரசுகளையும் இத் தகைய சமூதாயத் திற்கு உதராணமாகக் காட்டலாம்.

ஆனால் கைத்தொழிலமைப்புக் கொண்ட மதச்சார்பற்றதற்காலச் சமுகங்களிடையே மதம் தனது செல்வாக்கை இழந்துவரு கின்ற தென்பதுண்மை மத நிறுவனர்கள் பலவாகப் பிரிந்து சென்றமையாலும் அச்சமய நிறுவனத்திற்கும் முந்தியகாலங் களி லிருந்த தொடர்பு விடுபட்டுப் போனபடி யாலும் பொருளாதார மாற்றங்கள் வாழ்வு முறை மாற்றங்கள் காரணமாக மதச்சார் பற்ற கொள்கைகள் வளருவ தனாலும் மதம், தனது வரியை இழந்த நிற்கின்றது. சமுகத்தில் வாழ்கி ன்ற மக்க ளைப் பிணைக்கின்ற அதன் சக்தி பலவீ னமுற்று விட்டது. ஒரு குறிப் பிட்ட மத முறையினருக்குள் ஒற்றுமை யிருப்பினும் தனிமனித வாதத்தால் அதுவு ம்அழிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரத் தலயாத்திரை 2015




திருக்கேதீச்சரத் தலயாத்திரை 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983 இல் ஆலயம் இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015-2016 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்கம் 59 வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

***02/01/2015*** - வெள்ளிக்கிழமை அன்று எமது செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டது.

***15/01/2015*** - தைப்பொங்கல் அனைத்துப்பீட மாணவர்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டதோடு தைப்பொங்கல் தின விஷேட பூசையும் இனிதே இடம்பெற்றது.

***24/01/2015*** - அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் சிரமதானம் செய்யப்பட்டது

***25/01/2015 - 02/02/2015*** - அலங்கார உற்சவம் தினமும் அபிஷேக விஷேட பூசை மற்றும் வசந்தமண்டப பூசையுடன் திருவீதியுலா வருதலும் இடம்பெற்றது.

***31/01/2015*** - பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் காலை 8.00-4.00 மணி வரை புனரமைப்பு செய்யப்பட்டது.

***15/02/2015*** - மகாசிவராத்திரியை முன்னிட்டு ஆலய அடியார்களினால் சிரமதானம் செய்யப்பட்டது.

***17/02/2015*** - வழமை போல இம்முறையும் நான்கு ஜாமப்பூசைகளோடு இடையிடையே கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்துடன் இந்து தரும இதழ் வெளியீடும் சிறப்பாகவே நடைபெற்றது.

***14/04/2015*** - மன்மத வருட பிறப்பானது திருவிழா அபிஷேக பூசைகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது

***05/07/2015*** - காலை 8.00 மணி முதல் பிற்பகல்2.00 மணி வரை சகல பீடங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்களால் ஆலய சுற்றுபுற சூழலில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் ஆலய பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய மாணவர்கள் அனைவரும் மதிய போசனமும் வழங்கி வரவேற்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*21/08/2015* - பேராதனை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் ஒருவரின் அனுசரணையுடன் பிற்பகல் *6.30* மணியளவில் ஆலய அடியார்களுக்கு இசை நிகழ்ச்சி ஒன்று அரங்கேற்றப்பட்டது.

*22/08/2015* - திருத்தல யாத்திரை நள்ளிரவு *12.00* மணிக்கு எமது குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் இருந்து குறிஞ்சி முருகன் துணையோடு எமது யாத்திரை இனிதே ஆரம்பமானது. காலை *7.30* மணியளவில் தலை மன்னாரின் திருக்கேதீச்சர தலத்தை அடைந்து அடியார்கள் பாலாவி தீர்த்தக் கரையில் நீராடி திருக்கேதீச்சர தலத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. அதனை தொடர்ந்து மூன்று மணி நேரங்கள் அடியார்களின் பிரார்த்தனை இடம்பெற்றது. தொடர்ந்து அன்னதான நிகழ்வு நடைபெற்றது. மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு மாலை *7.00* மணியளவில் மீண்டும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை வந்தடைந்தோம்.

*30/08/2015* - மணவாளக் கோல நிகழ்வினை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்களால சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

*01/09/2015* - மணவாளக் கோலத்தின் சங்காபிஷேகம் குறிஞ்சிக்குமரன் கும்பாபிஷேக தினமான இத் தினத்தில் காலை *1009* சங்குகளுடன் நவோத்திர பூசையும் மதியம் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றன. மாலை திருஊஞ்சலும் தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் திரு வீதியுலா இடம்பெற்றது. அதேவேளை தவில் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெற்றது.

*09/10/2015* - பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் ஒருவரின் அனுசர ணையுடன் ஆலய அடியார்களுக்கு இசை நிகழ்ச்சி ஒன்று அரங்கேற்றப்பட்டது.

*13/10/2015 - 22/10/2015* - பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் கொலு வைக்கப்பட்டு விஷேட பூசைகள் இடம்பெற்றது. இறுதி நாள் விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் வைபவம், மானம்பூ உற்சவம், இராப்போசனம் முதலியன நடை பெற்றன.

*12/11/2015 - 17/11/2015* - கந்தசஷ்டி தினமும் எம்பெருமானுக்கு விஷேட பூசை இடம்பெற்று கந்த சஷ்டி கவசம், பஞ்ச புராணம், பாராயணம் செய்யப்பட்டது. இறுதி நாளன்று சூரசம்ஹாரமும் சிறப்பாக இடம்பெற்று அடியார்களுக்கு இராப் போசனம் நடைபெற்றது.

*17/12/2015 - 25/12/2015* - திருவெம்பாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் அதிகாலையில் சிவகாமசுந்தரி சமேத நடராஜ பெருமானுக்கு விஷேட பூசை ஆராதனைகளுடன் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பனவும் ஓதப்பட்டன. இறுதி நாள் ஆருத்ரா அபிஷேக தரிசனத்துடன் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் ஜயவருட மற்றும் மன்மத வருட விஞ்ஞா பனங்களில் உள்ளவாறாக கார்த்திகை உற்சவங்கள் , நடேசர் தரிசனங்கள், மாசிமகம், பங்குனி உத்தரம், கிருஷ்ண ஜெயந்தி, சுவர்க்கவாயில் ஏகாதசி போன்றனவும் பிரத் தியேக அபிஷேகங்கள், பூசைகள் என்பனவும் இனிதே நடைபெற்றன.

சில பல தடங்கல்கள் காரணமாக எமது மாணவர் சங்க மாதாந்த கூட்டம் வருடத்தின் சில மாதங்களே கூட்டப்பட்டதோடு சில தடங்கல்கள் காரணமாக திரைப்பட விழாவும் நடத்தமுடியாமல் போனதையிட்டு மனம் வருந்துகின்றோம். அத்துடன் இக்குறைகளை அடுத்த செயற்குழுவினர் இனிதே செயற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

இணைச்செயலாளர்கள்
**செல்வன் ம.அர்ச்சயன்**
**செல்வன் இ.நிதர்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| *1952-57* | பேராசிரியர் ரி. ஆர்.வீ.மூர்த்தி | |
| *1957-58* | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| *1959-62* | | |
| *1962-63* | பேராசிரியர் த.நடராஜா | திரு. க.சிவஜோதி |
| *1963-64* | பேராசிரியர் த.நடராஜா | |
| *1964-65* | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏஸ்.நவரட்ணராஜா |
| *1965-66* | பேராசிரியர் த.நடராஜா | திரு. மு.கனகரட்ணம் |
| *1966-67* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. து.அப்புலிங்கம் |
| *1967-68* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. கு.சண்முகநாதன் |
| *1968-69* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க.கிருஷ்ணானந்தசிவம் |
| *1969-70* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. ந.சுகுமாரன் |
| *1970-71* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க.ஜெயபாலன் |
| *1971-72* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| *1972-73* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| *1973-74* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. பா.பத்மநாதன் |
| *1974-75* | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க.குமரேசன் |
| *1975-76* | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| *1976-77* | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| *1977-78* | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. இ.கைலாசநாதன் |
| *1978-79* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. எஸ்.சிவனந்தன் |
| *1979-80* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. கு.சிவகணேசன் |
| *1980-81* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. போ.யுசீலாந்தன் |
| *1981-82* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. ச.தயாபரன் |
| *1982-83* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| *1983-84* | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| *1984-85* | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| *1985-86* | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| *1986-87* | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| *1987-88* | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| *1988-89* | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. எஸ்.குகநேசன் |
| *1989-90* | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. இ.சந்திரகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1990-91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. செ.இரவீந்திரநாதன் |
| 1991-92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. க.வல்லபவானாந்தன் |
| 1992-93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு. தி.நவநீதன் |
| 1993-94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கணேசநாதன் |
| 1994-95 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.நந்தகுமார் |
| 1995-96 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. பா.சஞ்சயன் |
| 1996-97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997-98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. உதயசீலன் |
| 1998-99 | கலாநிதி; செ.திருச்செல்வம் | திரு. க.இராகவன் |
| 1999-00 | கலாநிதி; செ.திருச்செல்வம் | திரு. நே.ராஜரூபன் |
| 2000-01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கருணாநிதி |
| 2001-02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. இ.மயூரன் |
| 2002-03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ச.சிவஜோதி |
| 2003-04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. து.அரவிந்தன் |
| 2004-05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ப.தயாபரன் |
| 2005-06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நெ.நந்தகுமார் |
| 2006-07 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. சா.மோகனஜீவ் |
| 2007-08 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. சி.திவாகரன் |
| 2008-09 | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி | திரு. செ.ஜெயசுதன் |
| 2009-10 | திரு. வ.தர்மதாசன் | திரு. ந.சிந்துஜன் |
| 2010-11 | திரு. வ.தர்மதாசன் | திரு. த.கோபிராம் |
| 2011-12 | திரு. சிவயோகலிங்கம் | திரு.ச.சசிக்குமார் |
| 2012-13 | திரு. சிவயோகலிங்கம் | திரு. கு.ஜெயமோகன் |
| 2013-14 | திரு. சிவயோகலிங்கம் | திரு. சி.வினோஜ் |
| 2014-15 | திரு. வ.தர்மதாசன்; | திரு. கு.அபிராம் |
| 2015-16 | திரு. வ.தர்மதாசன் | திரு. தி.தர்ஷன் |
| 2016-17 | திரு. வ.தர்மதாசன் | திரு.த.வெங்கடேஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இதழுக்கு உதவிய இணையற்ற இதயங்களுக்கு இதயபூர்வமான நன்றிகள்.

இந்து தர்மம் இதழ் 59 எவ்வித இடையுறும் இன்றி வெளிவர அருள்பாலித்த குன்றினில் ஆடும் குறிஞ்சி முருகனுக்கு முதற் கண் நன்றிகள் .

ஆலய நித்திய நைமித்தய கிரிகைகள் ஆற்றிவருகின்ற ஆலய சிவாச்சாரியார் க.வரதராஜாசர்மா அவர்களுக்கும் ஆலய திருப்பணிகள் நடந்தேற தங்களை அர்பணித்த எமது செயற்குழு உறுப்பினர்களுக்கும் போதனாசரியர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் எமது நன்றிகளை கூறக் கடமைப்பட்டிருக்கிறோம் .மேலும் ஆலய சிரமதானங்கள், உற்சவங்கள், திருவிழாக்கள் போன்றவற்றிற்கு உபயம் செய்யும் ஆலய அடியார்களுக்கு முன் நின்று நடாத்தும் பல்கலைக்கழக போதனாசிரியர்கள் மற்றும் அனைத்து பீட மாணவர்களுக்கும் கோடான கோடி நன்றிகளைத் தெரிவிக்கிறோம் .

இதழுக்கு அழகு சேர்த்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனாசரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் விளம்பரங்கள் தந்துதவி விழிப்பாய் இவ்விதழை வளம் பெற செய்தமைக்காய் அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

மேலும் நூல்வடிவமைப்புக்கு ஆலோசனை வழங்கிய பழைய பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள். மேலும் இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய யாழ்ப்பாணம் தேவி அச்சகத்தினருக்கும் உள்ளங்கனிந்த நன்றிகள்.

ஏனைய நன்றி கூற மறந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**ம.அர்ச்சயன்**
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59வது இந்து மாணவர் சங்க செயற்குழு - 2015/2016




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர்சங்கம் - செயற்குழு - 59

**நிற்பவர்கள் - (இடமிருந்து வலம்)**

பா.பாலினி

பு.டிசாந்

தி.கோபிராஜ்

செ.தாரங்கன்

த.கஜன்

த.வெங்கடேஸ்வரன்

தே.பிரசன்னா

ந.பார்த்திபன்

கு.யசோதரன்

சி.சிவராம்

த.தர்சிகன்

ம.அனுஜன்

தே.தேலக்ஷன்

யோ. ஸ்ரீபிரணவன்

ப.சுஜீந்திரன்

நா.சுஜீவன்

மு.கதிர்காமத்தம்பி

ச.மருதராஜன்

ஸ்ரீ.சரத்பவன்

வை.கிருசாந்தி

**இருப்பவர்கள் - (இடமிருந்து வலம்)**

வீ.கஜரூபன்

தி.தர்ஷன்

திரு.வ.தர்மதாசன்

பேராசிரியர் உபுல். பி.திஸ்ஸநாயக்க (உபவேந்தர்)

பேராசிரியர் த.சிவானந்தவேள்

திரு.ந.அகிலன்

ம.அர்ச்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு 2015/2016



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாண்மைக்குழு 2015/2016

**நிற்பவர்கள் - (இடமிருந்து வலம்)**

ம.அர்ச்சயன்

த.வெங்கடேஸ்வரன்

வீ. கஜரூபன்

**இருப்பவர்கள் - (இடமிருந்து வலம்)**

திரு.வ.தர்மதாசன்

பேராசிரியர் வ.மகேஸ்வரன்

பேராசிரியர் வை. நந்தகுமார்

பேராசிரியர் உபுல். பீ.திஸ்ஸநாயக்க

திரு.இரா.மகேஸ்வரன்

கலாநிதி த.சிவானந்தவேள்

தி.தர்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பட்டதாரிகள் மன்றம் 2015/2016



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்துப் பட்டதாரிகள் சங்கம் 2015/2016

**இருப்பவர்கள் - (இடமிருந்து வலம்)**

திரு.வ.தர்மதாசன்
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
பேராசிரியர் வை.நந்தகுமார்
திரு.இரா.மகேஸ்வரன்
கலாநிதி த.சிவானந்தவேள்
கலாநிதி தி. விநாயகதாசன்
வைத்திய கலாநிதி கோமதி மகேஸ்வரன்
திரு.த.ஜேயசுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESWARAN'S BOOK DEPOT

**Wholesale,Retail Dealers in all kind of Books, Wedding Cards Stationary & Internet Cafe With type setting**



**No 126/1,COLOMBO STREET,KANDY.**
**T.P 0812 220 820**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sridaran Stores

No. 64 King Street
Kandy
Srilanka

T.P - 081 222 4132

# PIRAKANT

*Photo copy center*



11,Palaly Road,
Thitunelvely
Jaffna
T.P: 021 222 3152


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LINGAN
## COOL BAR



52, Clock Tower Road,
Jaffna, Sri lanka.

# LINGAN
## CREAM HOUSE



526, Point Pedro Road,
Nallur, Jaffna, Sri lanka.
009421 222 4945

119, Kasthuriyar Road,
Jaffna, Sri lanka.
009421 222 7327

E-mail: Shagilan@gmail.com www.facbook.com/ lingancoolbar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

KIRUBAA LEARNERS

*Government Approved A Grade Driving Training School*

## பெண் ஆசிரியரால் பெண்களுக்கு வாகனப் பயிற்சி வழங்கப்படும்

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப் பயற்சி
- எழுத. வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணை முறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 06.00pm - 09.00pm

**யாழ்ப்பாணம்**

முனைம் கட்டைச்சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201, 071 454 6961

இல. 227/6, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம். (மருதனார் அண்மையில்)
021 224 2022, 071 454 6956

பிரதான வீதி,நெல்லியடி.
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550, 071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202, 021 227 0700

யாழ்கச்சேரியடி, யாழ்ப்பாணம்
39, கச்சேரி நல்லூர் வீதி.
021 222 6699, 076 722 5292

ஓம் பிளாசா,
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்
021 222 6688, 077 242 2622

**கிளிநொச்சி**

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 6955

வாடியடிச்சந்தி,
பூநகரி.
021 320 1818, 071 454 6955

புளியடிச்சந்தி,
முல்லை வீதி, விசுவமடு
021 320 1515, 071 454 6955

நாச்சிகுடா சந்தி,
மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544, 071 454 69

**வவுனியா**

216, A9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777, 077 710 0444

**மன்னார்**

இல. 94, பிரதான வீதி,
மன்னார்.
023 225 1656, 077 847 2732



**தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 4353 / 021 492 3200 / 0777 225 292**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments From:**

# PALAYAKATS

Maga Store



T.P-081 4951314
Fax- +94 081 2223654
Mail- palayakats@gmail.com

NO- 76 Colombo Street
Kandy
Srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Diomand Traders
# டையமன் ரேடர்ஸ்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்

T.P 021 2240002






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kumara Koddam Pictures

**video and audio editing**
**making album**
**songs and films**



Tel - 0778153111,
0772245004
Address - kumarakoddam,
kondavil








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# EIM

## Construction and consultant(Pvt)ltd



5 th Mile post,
Kopay Center,Kopay,Jaffan
T.P - 0212230039, 0773126616

N 1/10,Soysapura Flats
Moratuwa.
T.P - 071 836 3923


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றில் குடியமர்ந்து

பேராதனைப் பல்கலைக்கழகம்

50

இந்து மாணவர் சங்கம்

1966 - 2016

தேவி Printers, Jaffna
021 300 3030

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org